விவேகானந்த புத்தகசாலை

ஜெயஸிங்

அல்லது

தேவபுரி ஜெமீந்தார்

ஆக்கியோன் :

N. சோமசுந்தரம்.

ஓம்.

ராமகிருஷ்ண

விவேகானந்தர் சங்கம்

காரைக்குடி

நன்கொடையாளர் ....

ஊர் ....

புத்தக எண்..................   பதிவு எண்..................

ஜெயஸிங்

அல்லது

தேவபுரி ஜெமீந்தார்.

ஆக்கியோன்:

N. சோமசுந்தரம்,
ஷண்முகநாதபுரம்.

வெளியிட்டவர்:
அரு. வி. விஜைதீர்த்தான் செட்டியார்,
ஷண்முகநாதபுரம்.

முதல் பதிப்பு.

மதுரை, ராஜேஸ்வரி பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

 1937. [விலை அணு 8.

முன்னுரை.

வாசகநேயர்களே!

மக்கள் வாழ்க்கை, காலத்திற்கேற்ற சீர்திருத்தம் பெற்று முற்போக்கடையவேண்டி அறிவுமிக்க அனுபவசாலிகள் பலர் பலவிதமான கற்பனைக் கதைகளை எழுதி நாட்டுக்குப் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு நாளும் எண்ணிறந்த நூதனக் கதைகள் பத்திரிகைகளின் வாயிலாக வெளி வருகின்றன.

இத்துறையில் ஈடுபட்டுவரும் சண்முகநாதபுரம் திருவாளர் N. சோமசுந்தரமவர்கள் இயற்றியுள்ள "ஜெயஸிங் அல்லது தேவபுரி ஜெமீந்தார்" என்னும் நூதனக்கதை மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைந்திருக்கின்றது. இந்நூலில் அறிவிலாச் செல்வந்தரின் அக்ரமங்கள் யாவும் அங்கையின் நெல்லிக்கனிபோல் விளங்குகின்றன.

இந்நவீனமானது, ஜெயஸிங் என்பவன் ஒரு ஜெமீனின் முதல் புதல்வனாய், ,ஜெமீன் பட்டத்திற்கு உரிமையைப் பெற்றிருந்தும் பிறந்தது முதல் எளிய குடும்பத்தில் வளர்ந்தும் அவன் முடிவாகப் பட்டத்தை ஏற்கும் வரையில், தான் ஒரு ஜெமீந்தாரின் குமாரன் என்பதைத் தெரியாமலேயேயிருந்தும் அக்காலத்து மிகுந்த அட்டூழியங்களைப் புரிந்துவந்த ஜெமீந்தாரை அடக்கித் தாழ்ந்த குலத்தவர்க்கும், ஏழைகட்கும் பெண் சமூகத்திற்கும், பலவகையில் நன்கைளப் புரிந்தும், முடிவாகத் தனது ஜெமீனை ஏற்றுக்கொள்வதாக முடிந்திருப்பது மிகவும் போற்றத்தக்கதாயிருக்கின்றது.

திருவாளர் N. சோமசுந்தரமவர்கள் மிகவும் இளைஞராயிருந்தும் இந்நூலை இயற்ற முன்வந்ததின் காரணம் அவரது பொதுநல வேட்கையே என்பது கூறாமலே விளங்குவதாகும். இந்நூலைத் தமிழ் நாட்டுப் பெரியோர் யாவரும் அன்புடன் ஆதரித்து ஆசிரியரை மேன்மேலும் இத்துறையில் பல நூதனக் கதைகளை எழுதிப் பணிசெய்யுமாறு ஊக்குவாராக.

பள்ளத்தூர்,	}	வித்துவான் கு. மாணிக்கம் பிள்ளை.
4—9—37.		தமிழ்ப்பண்டிதர் A. C. ஹைஸ்கூல்.

ஜெயஸிங்
அல்லது
தேவபுரி ஜெமீந்தார்.

அத்தியாயம் 1.

"என்ன? கள்வர் தலைவன்! கேவலம் அடிமை ஆகிய என்னையா ஓர் ஜெமீந்தாரின் புதல்வி காதலிக்கிறள்?"

"ஏன் மீண்டும் மீண்டும் இதையே சொல்லுகிறீர்கள்? காதலுக்கு ஏற்றத் தாழ்வேது? காதல் தோன்றும் வழியைக் கண்டவர்கள் யார்? அது எந்த இடத்திலும் எவ்வழியிலும் தோன்றும்."

" இருக்கலாம், ஆனல், இந்த ஜெமீனிலில்லை. இந்த ஜெமீனில் இவ்வித வரம்பு கடந்த செய்கைக்கு இடமில்லை"

"அன்பரே!"

"ஜெயா!"

"எனது இப்போதைய மன நிலை........"

"ஆம்! அகத்தின் அழகு முகத்தில் தெரியவில்லையா? இது மனத்தாலும் நினைக்க முடியாததென்று நான் அப்பொழுதே கூறி இருக்கிறேனே."

"அன்பரே!"

"என்ன?"

"நீங்கள் விஷயம் இன்னதென்று அறிந்துகொண்டு தானே இருக்கிறீர்கள்?"

"ஆம்! முற்றும் அறிவேன். நான் மட்டுமா? இல்லை, இந்த ஊரே அறியுமே"

"என் மனக்கோவிலில் வீற்றிருக்கும் அந்த இன்ப வடிவிற்குப் புறம்பாகவா?"

"ஆம். அவ்விதம்தானே முடிவுசெய்யப் பட்டிருக்கிறது"

"முடிவு செய்து விட்டால் மட்டும்........."

"முடிவு செய்தது மட்டுமல்ல,நடக்கப்போவதுமதுதான்"

"இதில் அவர்களது ஆவலும் பிரயாசையும் வீணுகி விடும்"

"ஜெயா! அவர்களுடைய பலத்தை நீ யறியமாட்டாய்."

"இவ்விஷயத்தில் அவர்கள் பலமற்றவர்களாவார்கள்."

"ஜெயா! மோசம் போய்விடுவாய், அவர்களது ஒவ்வொரு வார்த்தைக்கும் நீ கட்டுப்பட்டுத்தானுகவேண்டும். வேண்டாம், உன் மனதை மாற்றி........"

"என்ன? உங்கள் வாயினின்று இந்த வார்த்தைகள்? ......என்......மனதை......மா......ற்றிக்......கொள்வதா? இல்லை......இல்லை......அவர்கள் முடிவு எதுவாய் வேண்டுமானுலுமிருக்கட்டும். இவ்வுயிர் இவ்வுடலில் இருக்கும்வரை அந்த என் முடிவு மாருது."

"ஜெயா! நீ உன் தந்தையின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் நடக்க அவர் இடங்கொடுக்கப் போவதில்லை. அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்தால்..........நீ கொடூரமாய் நடத்தப்படுவாய். இம்சிக்கப் படுவாய்-அதைத் தாங்கமுடியாது-கதறுவாய்-அப்பொழுது உன் மனோ திடமும் உறுதியும் சிறிது தளர்வடையும்........"

"இல்லை, ஒருக்காலுமில்லை, என்னை சித்திரவதை வேண்டுமானாலும் செய்யட்டும், என் உயிர் சிறிது சிறிதாக வேண்டுமானாலும் பறந்து செல்லட்டும், அப்பொழுதும் என் மனம் அசையாது."

"ஜெயா! வீணாக உன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளாதே. நீ துன்புறுவதைக்கண்டு நான் எவ்விதம் சகித்திருக்க முடியும்? வேண்டாம், நான் சொல்வதைக்கேள், நானும் என் குடும்பத்தாரும் இந்த சமஸ்தானாதிபதியின் அடிமைகள், ஆணவம் நிறைந்த இந்தக் கோஷ்டியினரின் இரும்புக் கால்களால் நசுக்கப்பட்டவர்கள். அவர்களின் வசை மொழிகளைக் கேட்டு மனம் புழுங்கிச் சாகவேண்டியவர்கள். எங்களுக்கு விடுதலை கிடையாது. அவ்விதம் ஒன்றிருக்குமாயின், அது எங்களுடைய சாவுதான். கல்வி கற்கவும் உரிமையற்றவர்கள். நான் கல்வி கற்றதன் பயனாய் என் பெற்றோர்கள் நெருப்பில் வெந்து மடிந்தனர். நான் ஸிலோனில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். இதைச் செவியுற்ற உன் தந்தையின் பிரதானி என் பெற்றோரை அழைத்துக் கண்டபடி பேசி இன்னும் ஒரு வாரத்திற்குள் என்னை ஸிலோனிலிருந்து அழைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவ்விதம் செய்யா

விட்டால் தலைத்தோலை உரித்து விடுவதாகவும், கூறியனுப்பி ஞனும். எனது பெற்றோர்கள் அவனுடைய வார்த்தையை அலக்ஷியம் செய்து மௌனமாயிருந்து விட்டனர். ஒருவாரம் தவணையும் முடிந்தது. மறுநாள் இரவு என் பெற்றோர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது, எங்களுடைய குடிசை நெருப்பிற் கிறையாக்கப் பட்டது. என் பெற்றோர்களும் உயிருடன் வெந்து மடிந்தனர். அவர்களது உயிர் சுதந்திரத் திற்கும், என் கல்விக்கும் தியாகம் செய்யப்பட்டது. இதைப் பிரதானியின் மூலம் கேள்வியுற்ற உன் தந்தை அலக்ஷியத் துடன் "வேண்டும் அந்த அற்ப நாய்களுக்கு" என்றனும். மறுநாள் வீட்டிலுள்ளவர்களின் அஜாக்ரதையினல் வீடு பற்றிக்கொண்டதென்ற வதந்தி கிளப்பப்பட்டு அதுவும் மறைந்துபோய் விட்டது. இவை நடந்த 6 மாதங்களில் எனது கலாசாலைப் படிப்பு முடிவடைந்து விட்டபடியால், நானும் என் மாமனும் இவ்வூரை யடைந்தோம். இறக்குந்தருவாயி லிருந்த என் தாயாதிகளில் ஒருவரால் இந்த உண்மைகளெல்லா மறிந்தேன். என் மனதில் ஆத்திரம் பொங்கி எழுந்தது. என் பெற்றோரை இவ்விதம் வேகவைத்த சண்டாளனைக் கொன்று பழி தீர்க்கவேண்டுமென்று உறுதிகொண்டேன். அதற்காகவே இவ்வேடம் புனைந்து சந்தர்ப்பத்தை எதிர் பார்த்து அலைந்து கொண்டிருந்தேன். இந் நாளிலேதான், உன்னைச் சந்திக்கவும், உன் மனோ நிலையை அறியவும், நேரிட் டது. நீ என் எதிரியின் புத்திரி என்பதை அறிந்ததும் உன்னைக் கொன்றுவிடலாமா என்றுகூட நினைத்தேன். உன் ....களங்கமற்ற உள்ளம்........ஆம்........நான் கள்வர் தலைவன் என்பதை அறிந்தும், நீ என்னை முழு மனதுடன்

நேசிக்கிறுயல்லவா? உன் அன்புததும்பும் பார்வைக்கு முன் மனத்திலிருந்த வஞ்சமெல்லாம் பறந்தோடி விட்டன...... உம்.........நம்மிருவருக்கும் இடையே அவ்விதமானதோர் தொடர்பு ஏற்படும் என்பது வெறுங்கனவாகவே முடியும். ஆகையால்தான் அன்றும் உன்மனதை மாற்றிக்கொள் ளென்று கூறினேன், இன்னும் கூறுகிறேன். அன்று நீ கள்வர் தலைவனைக் காதலித்தாய், இன்று அவன் கேவலம் உன் ஜெமீனின் அடிமை என்பதை அறிகிறுய், எனது உண்மை நிலையறிந்த உன் மனம் இப்பொழுது கலங்கி இருக்கும், உன் மனம் குழப்பமடைந்திருக்கும், ஏன்? ஒரு சிறிது மாற்றமுமடைந்திருக்கும்."

"அன்பரே! உக்கிரமசிங்கன் இவ்வளவு கொடூர சிந்தையை உடையவன் என்பதைநான் இப்பொழுதுதானறிந்தேன். எனது தந்தையும் அவனுடைய பசப்பு வார்த்தைகளில் சிக்கி அவன் வாக்கையே தேவ வாக்கென மதித்து கிஞ்சிற்றும் இரக்கமின்றி அவனது செய்கைக்கு ஆதரவளித்ததுபற்றி என்மனம் சொல்லொணு வேதனையடைகிறது. இதிலிருந்து என் விஷயத்திலும் அவர்கள் கொடூரமாகவே நடந்து கொள்வார்கள் என்பது முழுதும் உண்மையேயாகும். ஆயினும், என் உடலை வேண்டுமானுல் அவர்களிஷ்டப்படி செய்து கொள்ளலாம், என் மனதை மட்டும் அவர்களால் அசைக்க முடியாது. அதோடு உங்கள் உண்மை நிலையை அறிந்த என் மனம் மாற்றமடைந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்......... உம்.........நான் அவ்வளவு கேவலமானவளல்ல, என் மனம் அவ்வளவு இழித்தகைமை யுடையதல்ல, என் ஹிருதயம் பச்சோந்தியல்ல, என் காதல் நிலையுள்ளதுதான். நான் முதன்

முதலில் உங்களைச் சந்தித்தபொழுது உங்களைப்பற்றி எனக்கொன்றுமே தெரியாது, உங்களது அபரிமிதமான சங்கீதம் என் மனதைப் பரவசப் படுத்தியது. அழகும் கம்பீரமும் தவழும் உங்கள் வதனம் என்மனதைக் கொள்ளை கொண்டது, நீங்கள் என் ஹிருதயத்தில் குடிகொண்டு விட்டீர்கள். அதன் பின்தான் நீங்கள் "கள்வர் தலைவன்" என்பதை அறிந்தேன். இப்பொழுது என் ஜெமீனின் அடிமை எனவும் கூறுகிறீர்கள். ஆனால் நான் ஏற்கனவே உங்களடிமையாகி விட்டேன். அதோடு எனது தந்தையும், உக்கிரமசிங்கனும் உங்கள் குடும்பத்திற்குப் புரிந்த சதிக்கு, நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வது அவர்களுக்குத் தக்க தண்டனையாகும். உங்களுடைய வஞ்சமும் ஒருவாறு தீர்ந்துவிடும்."

"கண்ணே! ஜெயா! நான் செவியுற்றவைகளெல்லாம் வெறுங்கனவு போலவே தோன்றுகிறது."

"இல்லை, கனவல்ல, நீங்கள் செவியுற்ற ஒவ்வொரு வார்த்தையும் உங்கள் காதலியின் வாயினின்று வெளிவந்த உண்மையான வார்த்தைகளே யாகும்."

"என்ன? கள்வர் தலைவன்! கேவலம் அடிமையாகிய என்னையா ஓர் ஜெமீன்தாரின் புதல்வி காதலிக்கிறாள்!?"

"ஏன் மீண்டும் மீண்டும் இதையே சொல்லுகிறீர்கள்? காதலுக்கு ஏற்றத்தாழ்வேது? காதல் தோன்றும் வழியைக் கண்டவர்கள் யார்? அது எந்த இடத்திலும் எவ்வழியிலும் தோன்றும்"

"இருக்கலாம், ஆனால் இந்த ஜெமீனினில்லை. இந்த ஜெமீனில் இவ்வித வரம்பு கடந்த செய்கைக்கு இடமில்லை." *என்னறொரு கனத்த குரல் ஒலித்தது.*

காதலரிருவரும் கதி கலங்கினர்.

அத்தியாயம் 2.

"என்ன அக்ரமம்? எனது குலமென்ன? கௌரவமென்ன? மதிப்பென்ன? கேவலம் கொடுஞ் செயல்கள் புரியும் கள்வர் தலைவனையா என் புதல்வி காதலிக்க வேண்டும்? சீச்சீ துஷ்ட ஜென்மம் குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்புதான் அவள். என் பெயரைக் கேட்டாலே நடுநடுங்கும் ஜனங்கள் நிறைந்த இந்த சமஸ்தானத்தில் சமஸ்தானாதிபதியின் புதல்வியைக் காதலிக்கும் அவ்வளவு நெஞ்சுத் துணிவு கொண்ட அந்த அற்ப நாயை..........."

"பிரபோ! நான் சில மாத காலங்களாக தங்கள் புதல்வியின் போக்கில் சந்தேகங்கொண்டேன். மாலை வேளைகளில் அடிக்கடி வெளியே போய் அதிக நேரம் பொருத்து வருவதாகவும் கேள்விப்பட்டேன் ஆனால்........இவ்வளவு தூரம் நடக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இன்று தற்செயலாக நான் அரண்மனைப் பூந்தோட்டத்தின் வழியாக வந்தேன். யாரோ இருவர் சம்பாஷிப்பதை யறிந்து சற்று நின்று கேட்டேன் "கள்வர் தலைவன், கேவலம் அடிமை ஆகிய என்னையா ஓர் ஜெமீந்தாரின் புதல்வி காதலிக்கிறாள்"? என்றான் ஆடவன். "ஜெமீந்தாரின் புதல்வி, கள்வர் தலைவன்" என்றதும் நான் விழிப்படைந்தேன் விஷயத்தை முற்றும் கவனிக்க வேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்டு அருகில் நெருங்கினேன். அந்த ஆடவனுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த பெண்ணின் முகத்தைக் கண்டதும் திடுக்குற்றேன். நானடைந்த ஆச்சரியத்திற்கும் வியப்பிற்கும் அளவில்லை.

கோபத்தால் என் கரங்கள் துடித்தன. ஒரே அடியில் அவனைக் கொன்றுவிடலாமா என்றுகூட நினைத்தேன். அப்பொழுது நம் ஜெயா :'ஏன் மீண்டும் மீண்டும் இதையே சொல்லுகிறீர்கள்? காதலுக்கு ஏற்றத்தாழ்வேது? காதல் தோன்றும் வழியைக் கண்டவர்கள் யார்? அது எந்த இடத்திலும் எவ்வழியிலும் தோன்றும்?" என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் மேலும் என்னால் பொறுக்க முடியவில்லை ரிவால்வாருடன் அவர்கள் மத்தியில் தோன்றினேன். ஜெயா பயத்தால் மூர்ச்சையாகி விட்டாள். பின் நான் அவனைக் கைது செய்து நிலவறையில் அடைத்துவிட்டு வேலைக்காரியின் உதவியால் ஜெயாவை அவர்களது படுக்கையறையில் சேர்த்த பின் இங்கு வந்தேன்......உம்...... அன்னியர்கள் யாராவது இதைக் கண்டிருந்தால் இவ்வளவு நேரம் என்னென்ன விதமான வதந்திகளைக் கிளப்பிவிட்டிருப்பார்கள்? நம் சமஸ்தானத்தையும் நம்மையும் யார் மதிப்பார்கள்? எவ்வளவு தலை குனிவு? அதோடு நம் சமஸ்தானத்தில் பல கொள்ளைகளை நடத்திய கள்வர் தலைவன் நம்மிடம் அகப்பட்டிருக்கிறான், இதோடு அவனைத் தொலைத்து விட்டால்தான் இந்த விஷயமும் நீடிக்காதொழியும்" என்று கூறினான் ஜெமீந்தாரின் அன்பிற்குப் பாத்திரமானவனும் முக்கிய பிரதானியுமான உக்கிரம சிங்கன். பெருத்த வெற்றிகண்ட வீரனுக்கேற்படும் மமதை அவன் முகத்தில் தாண்டவமாடியது.

"உக்கிரமசிங்கா! நீதான் எனது உற்ற தோழன், என் குல தர்மத்தைக் காத்த தீரன், என் சமஸ்தானத்தின் கௌரவத்தைக் காப்பாற்றிய வீரன், உக்கிரம! உனது உதவி மிக்கப் பெரிது. அதற்கு கைமாறாக நான் என்ன செய்ய முடியும்? என் உடன் பிறந்த சகோதரனாகவே பாவிப்பேன்."

என்று தழதழத்த குரலுடன் கூறி அவனே வாஞ்சையுடனும், அவளுடனும், சேர்த்தணைத்துக்கொண்டார் ஜெமீந்தார் விக்ரம ஸிங்.

சில நிமிஷங்கள் கழிந்தது.

"பிரபோ! நான் உங்கள் ஊழியன், இவ்வித அக்கிரமங்கள் ஒன்றும் இந்த சமஸ்தானத்தில் நடவாது காக்கவேண்டியவன், எனது கடமையை நிறைவேற்றினேன். எப்பொழுதும் தங்கள் ஊழியனுகவே இருந்து அதற்காகவே இவ்வுயிரையும் தியாகம் செய்ய உறுதி கொண்டவன், ஆனல், தங்களுடைய அவ்வளவு புகழ் வார்த்தைக்கு அருகதையற்றவன்" என்று தன்னுள்ளெழுந்த ஆனந்தத்தை மறைத்துக்கொண்டு கூறினன் உக்கிரமசிங்கன்.

"உக்கிரம! நீ கடமையைத்தான் செய்தாய், அது என் மானத்தையும், சமஸ்தானத்தின் கௌரவத்தையும் காப்பாற்றியது. ஓர் உண்மையுள்ள ஊழியன், இதைவிட வேறு என்னதான் செய்யமுடியும்? உம்......ஒரு விஷயம், அவன் கள்வர் தலைவன்தான் என்பதை நிச்சயமாக நீ அறிவாயல்லவா? எனக்கேட்டார் ஜெமீந்தார்.

"இதிலென்ன சந்தேகம்? அவன் ஜெயாவிடம் கூறிய வார்த்தைகளால் அவன்தான் கள்வர்தலைவன் எனத் தெரியவில்லையா?" என்ருன் உக்கிரமசிங்கன்.

"என்ன அக்கிரமம்? எனது குலமென்ன? கௌரவமென்ன? மதிப்பென்ன? கேவலம் கொடுஞ் செயல்கள் புரியும் கள்வர் தலைவனையா என் புதல்வி காதலிக்க வேண்டும்? சீச்சீ! துஷ்ட ஜென்மம். குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்பு

தான் அவள். என் பெயரைக் கேட்டாலே நடுநடுங்கும் ஜனங்கள் நிறைந்த இந்த சமஸ்தானத்தில், சமஸ்தானதிபதியின் புதல்வியை காதலிக்கும் அவ்வளவு நெஞ்சுத் துணிவுகொண்ட அந்த அற்ப நாயை, மரத்துடன் சேர்த்துப் பிணைத்து உயிர் போகும்வரை சவுக்கினுலேயே அடித்து சித்திரவதை செய்யுங்கள்" என்று முகத்தில் கோபத்தனல் வீசக் குமுறினர் ஜெமீந்தார்.

"பிரபோ! இது சரியான தண்டனையே. நாளை அதிகாலையிலேயே இதை நிறைவேற்றி விடுகிறேன்......ஆனல்...... ஒரு விண்ணப்பம், தங்கள் குழந்தை ஜெயாவிடம் மட்டும் சிறிது இரக்கங்காட்ட வேண்டும், அது அறியாக் குழந்தை, தெரியாத்தனமாய் நடந்துவிட்டது. நாம் சமாதானமாகவே சொல்லி மனதைத் திருப்பி விடலாம்" என்று பணிவுடன் கூறினன் உக்கிரமசிங்கன்.

"ஆம்....அவள் உலகமறியாச் சிறுபெண். அத்திருட்டுப் பயல் அவள் மனதைக் கெடுத்துவிட்டிருக்கிறன். சரி, நீ போய் நாளைக் காலையில் தவருமல் என் கட்டளையை நிறைவேற்றி விடு" எனக்கூறவும் உக்கிரமசிங்கன் அவ்விதமே செய்வதாகக் கூறி விடைபெற்றுச் சென்றன்.

ஃ ஃ ஃ ஃ

திடுக்குற்றெழுந்தாள் ஜெயா. தான் தன் படுக்கையறையிலிருப்பதை அறிந்தாள். தானும்தன்காதலனும் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது திடீரென உக்கிரமசிங்கன் தோன்றி

யதும், தான் பயத்தால் மூர்ச்சையானதும், அவள் ஞாபகத்திற்கு வந்தது. மயக்குற்ற தன்னை உக்கிரமசிங்கனே அறையில் சேர்த்திருக்க வேண்டுமென்று நினைத்தாள். அவன் கையிலகப்பட்ட தன் காதலனின் கதி யாதாயிற்றோ, என்பதையறியாது கலங்கினள். கடியாரத்தை பார்த்தாள், மணி இரவு 8 ஆகி இருந்தது. தன் காதலனை உக்கிரமசிங்கன் சிறை செய்திருக்கின்றானா? இல்லையா? என்ற விபரங்களை அறியவேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்டு, அரண்மனைக் காவலாளிகளை விசாரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தன் அறையை விட்டு வெளிப்பட்டு அவள் தந்தையின் அறையின் பக்கமாகச் சென்றாள். அந்த அறையில் யாரோ இருவர் சம்பாஷிப்பதை யுணர்ந்து அருகில் நெருங்கி ஒற்றுக்கேட்டாள். அங்கே தன் தந்தையும், உக்கிரமசிங்கனும், தன் விஷயமாகவே சம்பாஷித்துக்கொண்டிருப்பதை யறிந்து, அவர்கள் சம்பாஷணையைக் கவனித்தாள். அப்பொழுது ஜெமீந்தார், கள்வர் தலைவனை மரத்துடன் சேர்த்துப் பிணைத்து உயிர் போகும்வரை சவுக்கினால் அடித்து சித்திரவதை செய்யும்படி கூறினர். இத் தண்டனையைச் செவியுற்ற ஜெயா புழுவெனத் துடித்தாள். உக்கிரமசிங்கன் காலையிலேயே தண்டனையை நிறைவேற்றி விடுவதாகக்கூறி, விடைபெற்று வெளியில் வருவதையறிந்து ஜெயா, விரைந்து தன் அறையை அடைந்தாள். மனமோ கட்டிலடங்காது தவித்தது. தன் காதலனைக் காப்பாற்றுவதற்கு எதாவது வழி இருக்கிறதாவென யோசித்தாள். எவ்வழியிலாவது, அவரைக் காப்பாற்றியே தீரவேண்டுமென்று உறுதியும் கொண்டாள். நீண்ட யோசனைக்குப் பிறகு எதோ ஓர் முடிவான தீர்மானத்திற்கு வந்தவள்போல் தோன்றினள். அவ்வமயம் ஓர் பணிப்பெண் வந்து, அவளை இராப்போஜனத்

திற்கழைக்கவே, ஜெயா எழுந்து சென்று சிறிது போஜன முண்டு, திரும்பி வரும்போது சாமான்கள் போட்டுவைக்கப் பட்டிருந்த அறையின் சமீபம் வரும்போது சற்று நின்று சுற்றுமுற்றும் பார்த்து அங்கு வேறொருவரு மில்லையெனக் கண்டு, அவ்வறையில் புகுந்து ஒரு நீளமான கயிற்றை எடுத்துக்கொண்டு தன் அறையை அடைந்தாள்.

ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. பலவித யோசனைகளால் அவள் மூளை குழப்ப மடைந்தது. உக்கிரமசிங்கன் தன் காதலரின் பெற்றோர்களை உயிருடன் வேகவைத்த பயங்கர செயலே அவள் சிந்தையில் தோன்றி வதைத்தது. அதோடு, இப்பொழுது அவள் காதலனுக் களிக்கப்போகும் நரக வேதனையாகிய அநீதத் தண்டனையை நினைக்கும்போது அவள் தேகம் நடுங்கியது. ஆனாலும், அவள் தைரியத்தை முற்றும் இழந்துவிடவில்லை. இவ்விதம் பலவித யோசனைகளால் குழம்பிக்கொண்டிருந்த ஜெயா மணியடிப் பதை யுணர்ந்து கடியாரத்தை நோக்கினாள், மணி 10½ ஆகி யிருந்தது. எங்கும் ஒரே நிசப்தம். மஞ்சத்தை விட்டெழுந்து, தான் எடுத்துவந்த கயிற்றின் நுனியை தன் மஞ்சம் போடப் பட்டிருக்கும் இரும்புக்கட்டிலின் காலில் பிணைத்துவிட்டு, மற்ற பகுதியை அரண்மனையை அடுத்துள்ள மைதானத்தின் பக்கமாக, தனதறையிலிருக்கும் ஜன்னலைத் திறந்து வெளியில் எறிந்தாள். பின் தான் வேட்டைக்குச் செல்லும்போது அணியும் ஆடையை எடுத்து அணிந்துகொண்டு, கண்ணாடிப் பீரோவைத் திறந்து ஏதோ சிலவற்றை எடுத்துக்கொண்டு, அச்சன்னலின் மீதேறி, கயிற்றின் உதவியால் மைதானத்தை யடைந்தாள். அங்கு சற்று நின்று சுற்றுமுற்றும் பார்த்து,

ஒருவருமில்லை எனக் கண்டதும், ஷண்முகபுரியின் மேற்குத் திக்கிலிருக்கும் "பூனை மலை" காட்டை நோக்கி நடந்தாள். இவ்விதம், தன்னந்தனியாளாய் அவ்விருளில் ஒரு மணி நேரம் நடந்துசென்று, அக்காட்டின் ஆரம்பத்தை யணுகியதும், தான் கொண்டுவந்திருந்த ஊது குழலை எடுத்து ஊதினாள்.

அச்சப்தத்தைக் கேட்டு எங்கிருந்தோ ஒரு மனிதன் அவ்விடம் தோன்றினான். வந்த அம்மனிதன் ஜெயாவைப் பார்த்ததும் திடுக்குற்றவனாய், தன் ரிவால்வாரை வெளியிலெடுத்து பிடித்துக்கொண்டு ஜெயாவை நோக்கி "நீ யாரையா? உண்மையைச் சொல்லிப்புடு; இந்த ஊது குழாய் உனக்கு எப்படிக் கிடச்சுச்சு, உம்......சொல்லையா சிக்கிரம்" என்று கூறியவண்ணம் அவளருகில் நெருங்கினான்.

அவனின் மிரட்டல்களுக்காக ஜெயா பயமடைந்துவிடவில்லை. சிறிது புன்சிரிப்புடன் "கந்தா! நீ ரொம்ப உஷாராயிருக்கிறாய் போலிருக்கே, பேஷ்," என்று சாவதானமாகக் கூறினாள்.

அவளின் குரலொலியைச் செவியுற்ற கந்தனென்னும் அந்த ஆள் வியப்படைந்தவனாய், தன் செய்கையால் நாணமடைந்தவன்போல அசட்டுச் சிரிப்புடன் அடே! அம்மாவுங்களா! நானு யாரோன்னுல்லோ நினைச்சுபூட்டேன், இந்த நேரத்திலே ஏம்மா வந்திங்க? எங்க எஜமான் உங்களைப் பார்க்கிறதிற்குன்னு வந்தாங்களே, உங்களை பாத்துட்டாங்களா?' அவங்ககூட இன்னும் திரும்பிவரலீங்களே." என்று மடமடவெனக் கூறிக்கொண்டே போனான். ஜெயா இடைமறுத்து

"கந்தா! நான் சொல்வதைக் கவனி. உன் எஜமான் பெரிய தொரு ஆபத்தில் சிக்கி இருக்கிறார்." என்று கூறியதுதான் தாமதம், கந்தன் ஆவேசம் கொண்டவனாக, அதிக பதட்டத் துடன் "என்னம்மா இது, எங்க எஜமானுக்கா ஆபத்து, எங்க எஜமானுக்கு ஆபத்து உண்டுபண்ணுறவன் இந்த உலகத்தி லெவன், நீங்க சும்மா சொல்லுறீங்களா?" என்று வினவினான் கந்தன்.

ஜெயா:—கந்தா இந்த அர்த்த ராத்திரியில் உன்னிடம் பொய்யான ஒரு சமாசாரத்தைச் சொல்லவா வருவேன்? இன்று சாயந்திரம் நாங்களிருவரும், அரண்மனைப் பூங்காவில் சந்தித்து சம்பாஷித்துக் கொண்டிருந்தோம், அப்பொழுது எங்கிருந்தோ உக்ரமசிங்கன் தோன்றி உங்கள் எஜமானரைக் கைது செய்துவிட்டான்.

கந்தன்:—என்ன? உக்ரமசிங்கன்? அந்த அற்ப பயலா என் எஜமானரைக் கைது செய்து பூட்டான்?

ஜெயா:—கைதுசெய்தது மட்டுமல்ல, நாளைக் காலையில் அரண்மனையின் பக்கத்திலுள்ள மைதானத்தில் சித்திரவதை செய்துவிடும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறது.

கந்தன்:—அவங்க கெட்டாங்கம்மா! அவங்களே சித்திர வதைசெய்யிராமா? அவங்க எங்கெஜமானரை சித்திரவதை செய்யுராங்களாண்ணு, நாளை காத்தாலே பாருங்களே. எங்களை யாருண்ணு அவங்க அறிஞ்சுக்கல்லேன்னு நினைக்கிறேன். நீங்கோ இப்போவந்து சொன்னது தானுங்க ரெம்ப நல்ல தாச்சு. இனிமேலே நாங்க பாத்துகிரங்க. நீங்க பயப்படாமே வீட்டுக்குப் போங்க. நானுவேணும்ணு கூட வரட்டுங்களா? என்றான் கந்தன்.

அவனின் தைரியமொழிகளைக் கேட்ட ஜெயா ஒருவாறு மன அமைதியுற்றவளாய் அவனை நோக்கி, "வேண்டாம் தனியாகவே போய்விடுகிறேன். என்னிடம் ரிவால்வார்கூட இருக்கிறது. நீங்கள் வரச் சிறிது தாமத மேற்படினும், உங்கள் தலைவன் உயிருக்கு ஆபத்துத்தான்," என்று கூறினாள்.

"நீங்க யோசிக்காமலே போங்கம்மா, எங்க கிங்கத்தைக் கொல்லுறதுன்னு சாமான்ய மில்லீங்க. நீங்க தைரியமா போங்க," என்று கூறவும் ஜெயா அங்கிருந்து புறப்பட்டு அரண்மனை அடைந்தாள்.

அத்தியாயம் 3.

"இதிலுமா சந்தேகம்? தந்தையிடம்தான் பேசுகிறேன் என்பதை நான் அறிவேன்."

"உம் ஹாம், உன் தந்தையின் முடிவில் மாறுபாடில்லை என்பதை நீயுணரவேண்டும்."

"ஆ! ஹா!! என் தந்தையின் முடிவு என் தந்தைக்குத்தான்."

மறுநாள் காலை மணி 6. உக்கிரமசிங்கனின் பராக்கிரமத்தால் திருடர் தலைவன் பிடிபட்டான், காலையில் பகிரங்கமாகத் தண்டனை அளிக்கப் போகிறார்கள், என்ற வதந்தி காட்டுத்தீ போல் நகரில் பரவியது. இச் செய்தியைச் செவியுற்ற தனவந்தர்களின் மனம் அமைதியுற்றது. உக்கிரமசிங்கனைப் பலவாறு புகழ்ந்தனர். அவர்களில் சிலர் தூக்குத் தண்டனையே அவனுக்கு விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். பலர் அவனைக் காண ஆவல் கொண்டனர். இவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்த கள்வர் தலைவன் நம்மைப்போல் மனிதன்தானா? என்பதைக் கண்டறிய ஆவல்கொண்டு ஓடிவந்தனர் மற்றும் பலர். இவ்விதமாக ஓர் பிரமாண்டமானதோர் கூட்டம் மைதானத்தில் கூடிவிட்டது. ஆயிரக்கணக்கான கண்கள் மேடையின்மீது நாட்டப் பட்டிருந்த கம்பத்தையே நோக்கி நின்றன. அப்பொழுது உக்கிரமசிங்கன் மேடையின் மீதேறி அப் பெருங் கூட்டத்தை நோக்கி, "மகா ஜனங்களே! இந்நகரில் சில காலமாக பல பெருங் கொள்ளைகளை நடத்தி, உங்களுக்கெல்லாம் பயத்தை விளைவித்துக் கொண்டிருந்த திருடர் கூட்டத்தை

பிடிப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தோம். எங்களுடைய பெருத்த முயற்சியின் பயனுய், அக்கள்வர் கூட்டத் தலைவன் எங்களிடமகப்பட்டான். அவனுடைய கூட்டத்தாரைப் பிடிப்பதற்கு நாலாபக்சமும் சிப்பாய்களை அனுப்பி இருக்கிறேன். அதிக சாமர்த்தியம் வாய்ந்த இந்த கள்வர் தலைவனையே பிடித்தபின், அவன் கூட்டத்தினரைப் பிடிப்பது சிரமமில்லை. கூடிய விரைவில் அவர்களையும் சிறைசெய்து விடக்கூடுமென்று நம்புகிறேன். தவிர, இக் கள்வர் தலைவன் புரிந்த பல கொடுஞ்செயல்களுக்கு, அவனுடைய உயிர்பிரியும் வரை சித்திரவதை செய்யும்படி கட்டளை பிறந்திருக்கிறது. உங்கள் முன்னிலையில் நம் ஜெமீந்தார்வர்களின் கட்டளை நிறைவேற்றப்படும்." என்று மமதை கலந்த தொனியுடன் கூறிவிட்டு தன் சிப்பாய்களை நோக்கினன். அவனின் குறிப்பையறிந்த அச்சிப்பாய்களும் உடனே சென்று கைதியை அழைத்துவந்து, அம் மேடையின்மீது நாட்டப்பட்டிருந்த கம்பத்துடன் சேர்த்துப் பிணைத்துவிட்டு அவ்விடம் விட்டகன்றனர். கரங்களில் சவுக்குதாங்கிய இரு கொலையாளிகள், கைதியின் பக்கத்தில் வந்து நின்றனர்.

உக்கிரமசிங்கன், கைதியை நோக்கி "கைதியே! நீ உன் கூட்டத்தாருடன் பலகொள்ளைகளை நடத்தியதற்காக, உனக்கு உன் உயிர் பிரியும் வரை சித்திரவதை செய்யும்படி உத்திரவிடப்பட்டிருக்கிறது. நீ சொல்லிக்கொள்ள வேண்டியது ஏதாவதிருக்கிறதா?" எனக் கேட்டான்.

இவன் கூறியதைச் செவியுற்ற கைதி, நிமிர்ந்து அப்பெருங்கூட்டத்தை ஒரு முறை நோக்கினன். அவனுடைய வதனத்தில் பயமோ, கலக்கமோ எதுவும் காணப்படவில்லை.

கம்பீரமும், புன்சிரிப்பும் வதனத்தில் தாண்டவ மாடியது. அவனது அழகிய தோற்றம், அங்கு கூடியிருந்தவர்களை வசி யப்படுத்திவிட்டதெனவே கூறலாம்.

"ஐயா! உக்கிரமசிங்கரே உமது பராக்கிரம மிருக் கிறதே, அதைக்கூறி நீர்தான் பெருமை யடையவேண்டும். ஒரு கைதியைத் தீரவிசாரிக்காது, அவன் குற்றவாளிதான் என்பதையும் நிச்சயிக்காது, இவ்விதமொரு தண்டனையை அளித்ததுபற்றி நான் என்ன கூறுவதென்பது, எனக்கு விளங்கவில்லை. இச் செய்கையானது "தான் ஜெமீந்தார், இந்த சமஸ்தானத்திற் குட்பட்டவர்களெல்லாம் தன் அடி மைகள், அவர்களை தான் என்னவேணுமானாலும் செய்யலாம், என்ற ஆணுவ மனப்பான்மையையே வெளிப்படுத்துகிறது. நீ சொல்லிக்கொள்ளவேண்டியது ஏதாவதிருக்கிறதாவென என்னைக் கேட்டீரல்லவா? இருக்கிறது. நான் கூறி இம்மகா ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது ரொம்ப இருக்கி றது." என்று கூறி மேலும் கூறுவதற்குள், உக்ரமசிங்கன் இடைமறுத்து. "சட், அது பற்றி எல்லாம் இங்கு பேச்சில்லை. நீ உன் குடும்பத்தாருக்கு ஏதாவது சொல்ல வேண்டுமா? அவ்விதம் ஏதாவதிருந்தால் தெரிவி. அதை உன் குடும்பத் தாருக்கு தெரிவிக்க பிரையாசைப்படுகிறேம்," என்றான்.

கள்வர் தலைவன், "ஐயா! உம் தயாள குணத்தை பிரயோ ஜனப்படுத்திக்கொள்ள, நீர் கூறுவதுபோல் குடும்பமொன்றும் எனக்கில்லையே என்று வருந்துகிறேன். அதோடு, நான் எதுவும் கூறலாகாதென வாய்ப்பூட்டுச்சட்டம் போட்டு விட்டீர், ரொம்ப சரி, தண்டனையை நிறைவேற்றலாம்." என்று கம்பீரத்துடன் கூறினன்.

"உம்......சாகப்போகிற காலத்திலும் உன் துடுக்கான வார்த்தைகள் அடங்கவில்லைபோலும்" என்று கூறிவிட்டு கொலையாளிகளை முறைத்துப் பார்த்தான் உக்ரமசிங்கன்.

கள்வர்தலைவனைப்பற்றி தாம் தாம் நினைத்திருந்ததற்கு முற்றும் மாருக, அவன் கட்டழகுமிகுந்த வாலிபனுக இருக்கக் கண்டு, ஜனங்களெல்லாம் வியப்படைந்தனர். புன்சிரிப்புடன் கூடிய கெம்பீர தோற்றத்தைக்கண்ட ஜனங்களுக்கெல்லாம், அவன் பால் இரக்கமேற்பட்டது. இவ்வளவு அழகுள்ள வாலிபனு கள்வர்தலைவன்? என ஐயுற்றனர். அவன் எவ்வளவு கொடிய காரியங்களைச் செய்திருப்பினும், அவைகளெல்லாம் ஒரு பெரிதாகத் தோன்றவில்லை அவர்களுக்கு, அவனுக் களித்திருக்கும் கொடிய தண்டனையே சகிக்க முடியாததாயிருந்தது. அவனடையப்போகும் பரிதாப முடிவிற்காக வருந்தினர். கண்களில் நீர் பெருக, கூட்டங்கூட்டமாக அவ்விடத்தைவிட்டுச் செல்லலாயினர். சிலநிமிஷங்களில் அக் கூட்டத்தின் பெரும்பகுதி கலைந்துவிட்டது. சில கல்நெஞ்சத்தினர்களும், சமஸ்தான சிப்பாய்கள், உத்தியோகஸ்தர்களும், தவிர வேருெருவரும் அங்கில்லை.

"பளீர், பளீர்" என்ற சவுக்கின் சப்தம் மிகவும் கொடூரமாக ஒலித்தது. கைதியின் தேகத்தில் பல ரத்த ஊற்றுகள் தோன்றி, தேகமெங்கும் ரத்த மயமாகியது. பிரக்ஞை தவரி கைதியின் சிரம் ஒருபுறம் சாய்ந்தது. "உம்.....உம்....."... என்று கொலையாளிகளை ஊக்கிக்கொண்டிருந்தான் உக்கிரமசிங்கன். இந்நிலையில் இன்னும் சிறிதுநேரம் சென்றிருக்குமாயின் கைதியின் உயிர் பிரிந்தே இருக்கும். அப்பொழுது "தட தட" வென்ற குதிரைகளின் குழம்புச் சத்தமும்,

அதைத் தொடர்ந்தே "பட் பட்" என்ற துப்பாக்கிச் சப்தமும் கேட்டது. மேடைமீதிருந்த சவுக்குத்தாங்கிய சொல்லையாளிகளிருவரும், "ஐயோ" என்ற கூக்குரலுடன் கீழே விழுந்தனர். உக்கிரமசிங்கன் வகையறாக்கள் திடுக்குற்று. திருப்பி நோக்க, தங்கள் ஒவ்வொருவர் எதிரிலும் ஒவ்வொரு முசமூடி மனிதன், கையில் ரிவால்வாருடன் நிற்பதைக்கண்டு, செயலற்றவர்களாய், கைகளை மேலே தூக்கவேண்டியவர்களானார்கள். இதற்குள் அம்முசமூடிகளில் சிலர், கைதியின் சட்டுகளை அவிழ்த்து ஓர் புரவியின் மீது கிடத்த, இதர முசமூடி மனிதர்களெல்லாம் தத்தம் புரவியின் மீதமர்ந்து வேகத்துடன் பறந்து சென்றனர். இவைகளெல்லாம் சில விநாடிகளுக்குள் நடந்தேறினவாகையால், உக்கிரமசிங்கன் வகையினர் இன்னது செய்வதென்பதை அறியாதவர்களாய் மெய்மறந்து, சற்சிலைகளாய் விட்டனர்.

ஃ ஃ ஃ ஃ

"உக்ரம! நீங்கள் ரொம்ப அஜாக்ரதையா யிருந்திருக்கிறீர்கள்" என்றார் ஜெமீந்தார்.

"பிரபோ! இதில், நான் என்ன சொல்லுவதென்பதே விளங்கவில்லை. எல்லாம் கண்கட்டி வித்தைபோல் ஒரு நிமிஷத்தில் நடந்தேறின. ஆயினும் பிரபோ! அவன் தப்பிச் சென்றதால் இனி, அவனால் நமக்கெதுவும் கெடுதல் நேரிடாது. அவனது உயிரில், முக்கால் பாகமும் போய்விட்டது. அவர்கள் இருப்பிடத்தை அடையுமுன் உயிர் முழுதும் போய்விடும் என்பது திண்ணம். அவனைப்பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம். ஆனாலும், ஜெயாவின் திருமணத்தை

விரைவில் நடத்திவிடுவது நலம்.'' என்று பணிவுடன் கூறி ஞன் உக்கிரமசிங்கன்.

"ஆம், விரைவில் திருமணத்தை முடித்துவிட வேண்டிய தும் அவசியந்தான். பிள்ளை வீட்டார் குறிப்பிட்டெழுதிய சுபதினத்தில் திருமண வைபவத்தை நடத்திவிடுவோம். நீ உடனே தேவபுரி சென்று, அவர்களிடம் நமது சம்மதத்தை தெரிவித்துவிட்டு வந்து, திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடு களைச்செய், நான் போய் "ஜெயா"வின் மனநிலையை அறிந்து வருகிறேன்.'' என்று கூறி, அவனை அனுப்பிவிட்டு,ஜெயாவின் அறையை அடைந்து, அங்கே தனித்திருந்த "ஜெயா"வை நோக்கி, "கண்ணே ஜெயா!'' என்று பரிவுடனழைத்தார் ஜெமீந்தார்.

"அப்பா"

"உன்னிடம் ஓர் சந்தோஷ சமாச்சாரத்தையல்லவா சொல்லவந்தேன்."

"என்ன? எது விஷயமாக?"

"எல்லாம் உன் திருமண விஷயமாகத்தான்."

"இதை நான் முன்னமே அறிவேனே"

"அப்படியா! சந்தோஷம்!! இன்னும் சில தினங்களில் உன் திருமணத்தை நடத்திவிடுவதென, முடிவு செய்திருக் கிறேன்.

"ஹூம்"

"மணமகன் தேவபுரி ஜெமீந்தாரின் குமாரன், "பிரதாப ஸிங்" தான்."

"உம்-ஹூம்."

"நல்ல அழகுள்ளவன், வீரதீர பராக்ரமம் நிறைந்தவன், கல்விக்களஞ்சியம், அவனுடைய தாயார் காந்தாமணி அம்மாள் குணத்தில் தங்கக் கம்பிதான்."

"ஹூம்."

"எல்லா விஷயத்திலும் உனக்கேற்ற வரன் அவன்தானெனத் தேர்ந்தெடுத்தேன்."

"சரிதான்"

"உனக்கேற்ற ஒரு மணாளனை அடைந்து, இல்லறவாழ்வில் இன்புற வேண்டுமென்பதுதான் எனது அவா."

"உம்! எனக்கேற்ற மணாளர் இவர்தான் என்பதை நீங்கள் எவ்விதம் நிச்சயித்தீர்களோ?"

இக்கேள்வி ஜெமீந்தாரைத் திடுக்குறச் செய்தது. "ஏன்? உன் குண ஒழுக்கத்திற்கேற்ப, சகல நற்குணங்களும் நிறையப் பெற்ற ஒருவன் உனக்கேற்றவன்தான் என்பதில் என்ன சந்தேகம்?"

"ஆமாம்! அது உங்களைப் பொருத்தவரையில்தானே?"

"அப்படியானால்........?

"எனக்கிதில் இஷ்டமில்லை"

"என்ன? உனக்கிதில்......இஷ்டம்......இல்லையா? நீ யாரிடம் பேசுகிறாய் என்பது உன் நினைவிலிருக்கட்டும்." என்று அதிகாரமும், கோபமும், நிறைந்த குரலில் கூறினார்.

"இதிலுமா சந்தேகம்? தந்தையிடம்தான் பேசுகிறேன் என்பதை நான் அறிவேன்."

"உம்-ஹூம். உன் தந்தையின் முடிவில் மாறுபாடில்லை என்பதை நீ யுணரவேண்டும்"

"ஆ! ஹா!! என் தந்தையின் முடிவு என் தந்தைக்குத் தான்."

"இல்லை, நீ தவறாக உரைக்கிறாய். இந்த சமஸ்தானத்தின் பிரஜைகளில் ஒவ்வொருவரும் உன் தந்தையின் முடிவிற்கு கட்டுப்பட்டே யாகவேண்டும்."

"வேண்டுமானால்........அதிகாரம் நிறைந்த கொடுங்கோன்மையால் அடக்கி யாளலாம்" என்றாள் ஜெபா.

ஜெபாவின் ஒவ்வொரு பதிலும், எறியும் நெருப்பில் எண்ணெயை வார்த்ததுபோலாயிற்று ஜெமீந்தாருக்கு. கைகள் பதறின. கண்கள் சிவந்து பயங்கரத் தன்மையை யடைந்தன. மீசை துடித்தது. பற்களை நறநறவெனக் கடித்தார். "என்ன? நான் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் விஷமமான பதில்கள்? ......ஹே! துஷ்டப்பேயே!! உனது அடாத செய்கைக்கு ஒழுக்கமற்ற செய்கைக்கு, பலரும் எள்ளி நகையாகும் இழிந்த செய்கைக்கு, ஒருக்காலும் இடங் கொடேன். நமது கௌரவ மென்ன? செல்வாக்கென்ன? குலமென்ன? நாம் யார்? அவன் யார்? திருடன், சிச்சி உனக்கு வெட்கமில்லை, உன் மனங் கூசவில்லை, பிரதாபசிங்கனும் அழகு மிக்கவனும், ஒரு ஜெமீனின் அதிபதியுமான ஒருவன் உன்னை மணக்கக்காத்திருக்க, கேவலம், கள்வர் தலைவனையா நாடவேண்டும்? உன் காதலன்—சட்-காதகனுக்கு, தண்டனை கொடுக்கப்பட்டு அவனுடைய உயிர் சிறிது சிறிதாகப் போய்க்கொண்டிருக்கிறது. உன்மனம் மாறாவிட்டால், உனக்கும்-அதைவிடப் பெரிய தண்டனையே கொடுக்கப்படும். உம்-ஏதோ அறியாத பெண், தெரியாத் தனமாய் செய்து விட்டது, எல்லாம் நாளாவட்டத்தில் சரிப்பட்டு வந்துவிடும், என்று பேசாதிருந்தால், தலைக்கு மிஞ்சி

விடுகிறதோ? உன் மனம் எவ்விதமிருப்பினும், இன்றைய 20-ம் நாள் திருமணம் நடைபெறுவது நிச்சயம்........... வேண்டாம்......ஜெயா......புத்திரிஎன்ற பாசம் பறந்தோடும்படி செய்யாதே." என்று கூறி சிறிது கோபந் தணிந்த பார்வையில் தன் புத்திரியை நோக்கினர் ஜெமீந்தார்.

"தந்தையே! புத்திரி என்ற பாசம் தங்கள் மனதிலிருந்தாலல்லவா அது பறந்தோடும். அன்று, உக்கிரமசிங்கனுல் விஷயம் உங்களுக்கு அறிவிக்கப்பட்டு தெரிந்துகொண்டிருப்பீர்கள் என்றும், இனிமேல் என் விஷயமாக நீங்கள் கொண்டிருக்கும் முடிவும், அதற்காக நீங்கள் கைக்கொள்ளப் போவதின்ன தென்பதையும். நான் அறிந்தே ஓர் முடிவான தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். என் தீர்மான முடிவு உங்களது முடிவிற்குச் சற்றும் பின்வாங்கியதல்ல? உங்களது முடிவைத் தொடர்ந்தே அதுவும் வெளிப்படும்" என்று சிறிதும் அச்சமின்றி கூறினள் ஜெயா.

"என்ன? இன்னுமா உனக்கு அவ்வளவு நெஞ்சழுத்தம்? இனி உன் விஷயமாக என் நெஞ்சம் இரக்கமடையாது. இனி நடக்கப்போகும் ஒவ்வொரு காரியாதிகளும், உனக்குப் படிப்பினையாகும். பின் நீ தானுக வழிக்கு வந்துவிடுவாய். உன் வைராக்கியமெல்லாம் என்னிடமல்ல." என்று கூறி, முறைத்தொரு பார்வை பார்த்துவிட்டு, அவ்வறையைவிட்டுச் சென்றுர் ஜெமீந்தார்.

அத்தியாயம் 4.

"நான் அந்த வீதி வழியாக வந்தேன், அப்பெண் வாயலில் நின்றுகொண்டிருந்தாள். அவள் என்னைக் கண்டதும் மான்போல் மருண்டு "பளிச்"சென்று மறைந்துவிட்டாள். இந்த நிகழ்ச்சியானது, வானவெளியில் ஓர் ஜோதி தோன்றி மறைவதை ஒத்திருந்தது. எனக்கு..........."

நேயர்களே! நாம் இப்பொழுது, ஜெயாவிற்கு மணாளனாக வரிக்கப்பட்டிருக்கும் பிரதாபனைப்பற்றி சிறிது கூறவேண்டியது அவசியமாகிறது.

தேவபுரி ஜெமீந்தார் சாந்தலிங்கருடைய இரண்டாம் மனைவியான காந்தாமணிக்குப் பிறந்தவன் பிரதாபஸிங். அவனுக்கு தற்பொழுது வயது 22 தானாகிறது. நல்ல அழகுள்ள வாலிபன்.

தனக்கு பிற்காலம், தன் குடும்ப விருத்திக்கு ஓர் ஆண் குழந்தை இல்லையே என்று வருந்திக்கொண்டிருந்த காலையில், தன் மனக்குறையை அகற்றப் பிறந்த பிரதாபன்மீது அளவற்ற வாஞ்சை கொண்டார் ஜெமீந்தார்.

சிறு வயதிலிருந்தே செல்லக் குழந்தையாய் வளர்ந்து வந்தான் பிரதாபன். தன்னிஷ்டம் எதுவாயினும், அதை நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற பிடிவாத மனப்பான்மை கொண்டவன். அவன் பள்ளியில் பயிலும் காலத்தில், பல

உற்ற தோழர்களும் ஏற்பட்டனர். அவர்களின் கூட்டுறவால், நாளாசிறுதியில் பல கெட்ட வழிகளிலும் பிரவேசித்துக் கணக்கற்ற பணத்தை சிலவு செய்து வந்தான். இதையறிந்த ஜெமீந்தார், இரண்டொருமுறை கண்டிக்க ஆரம்பித்தார். அப்பொழுதெல்லாம் காந்தாமணி ஜெமீந்தாரிடம் வந்து, "நமது அருமைக் குழந்தையை நீங்கள் இவ்விதம் கண்டிக்கலாகாதென்றும், நமக்கிருக்கும் ஏராளமான செல்வத்தில், அவன் சிலவழிப்பதால் என்ன குறைந்துவிடப் போகிறதென்றும், ஏதோ சின்னஞ்சிறுசு இப்போ அப்படித்தானிருப்பான், பெரியவனாகிவிட்டால் சரிசியம் ஏற்பட்டுவிடுமென்றும், அடிக்கடி கோபித்துக்கொள்வதால், அவன் மனம் வருத்தமடையு மென்றும்" கூறி அவர் வாயை அடக்கி விடுவாள்.

தன்னிளைய மனைவியின் வார்த்தைக்கு, எதிர்த்துப் பேசத் தைரியமற்ற ஜெமீந்தாரும், அவள் நோக்கப்படி விட்டு விட்டார்.

இந்த நிலையில், பிரதாபனும் வயதுவந்த வாலிபனாகி விட்டபடியாலும், தனக்கு அதிக வயதாகிவிட்ட காரணத்தினாலும், ஜெமீன் காரியங்களை எல்லாம் அவனையே கவனித்து வரும்படி விட்டுவிட்டார்.

பிரதாபனுடைய துஷ்க்ருத்யங்கள் பெருகி வருவதற்கு கேட்பானேன். தன் காரியங்களுக்குச் சாதகமாக, தேவபுரிக் காட்டின் ஆரம்பத்தில் ஷண்முகபுரிக்குச் செல்லும் ரோட்டிற்கு, சற்று தூரத்தில் "காட்டு மாளிகை" என்ற ஓர் அழகிய பங்களாவைக் கட்டி முடித்தான். காட்டு மாளிகை

யில், எப்பொழுதும் கூத்தும் கேளிக்கையும் நடந்துகொண்டே இருக்கும். குடியும், கூத்தியும், சதா சர்வகாலமும், இவனைக் குடிகொண்டன. எங்கெங்கே, அழகியபெண்களிருக்கின்றனரோ, அவர்கள் இஷ்டத்திற்கு உள்ளாகவோ, அல்லது புறம்பாகவோ, கொண்டுவந்து தன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்வான். இவனின் காமக்கண்களில் சிக்கி, இவனால் காட்டு மாளிகைக்கு பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டு, கற்பழிந்த காரிகைகளோ பலர். பெண்களுக்கு உயிரினும் சிறந்ததான, கற்பென்னும் பூஷணத்தைப் பறிகொடுத்து, மனத்துயரால் தற்கொலை செய்துகொண்ட பெண்களோ பலர். யாரோ சில துஷ்டர்கள், பெண்களைத் தூக்கிச் சென்று கற்பழித்து வருகின்றனர், என்ற வதந்தி, நகரில் பரவி, பெருத்த பரபரப்பையும், பீதியையும், உண்டுபண்ணியது. நகரிலுள்ள பெண்களெல்லாம் வீட்டைவிட்டு வெளிவரவும் பயந்து நடுங்கினர். நகரில் பலர் சேர்ந்து இந்த அக்ரமத்தைப் பற்றி ஓர் மகஜர்யெழுதி, ஜெமீந்தாருக்கு அனுப்பவேண்டுமென்று தீர்மானித்து, அவ்விதமே "இந்நகரில் சில காலமாக யாரோ சில துஷ்டர்கள் பருவமடைந்த பெண்களை எல்லாம் தூக்கிச்சென்று-கற்பழித்து வருகின்றனரென்றும், அவ்விதம் கற்பழிக்கப்பட்ட பெண்கள், இன்னின்னரென்றும், தங்களுக்குத் தெரியாது இன்னும் எவ்வளவோ பெண்கள் என்றும், அவர்களில் தங்களுக்குத் தெரிந்தவரையில் இன்னின்னர், அவமானத்தாலும், மனோவேதனையினாலும், தற்கொலை புரிந்து கொண்டனரென்றும், அத்துஷ்டர்களை உடனே கண்டுபிடித்து தக்கபடி தண்டிக்காவிட்டால் நாங்களெல்லாம் நகரில் வசிப்பதற்கு யோக்கியதையில்லை என்றும், ஆகவே, எங்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு உங்களுடையதா

பிருப்பதால், அத்துஷ்டர்களைக் கண்டுபிடிக்கத் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்" என்ற விபரங்களடங்கிய ஒரு மகஜரைத் தயார் செய்து, நகர மாந்தர்களிடம் கையொப்பம் வாங்கி, ஜெமீந்தாருக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த மகஜரைப் பார்த்த பிரதாபன், முதலில் திடுக்குற்றுயினும், அந்த மகஜரிலிருந்து தன்னுடைய செய்கையானது, சில துஷ்டர்களின் பேருல் பாவி வருவதையறிந்து, தைரியங் கொண்டவனுய் சமஸ்தான பிரதானி தர்மஸீலரை அழைத்து, மகஜரை அவர் கையில் கொடுத்து "ஐயா! என்ன அநீதம் பாருங்கள்? நம் சமஸ்தானத்தின் கௌரவமே போய் விடும்போலிருக்கிறதே? மனத்தாலும் நினைக்கமுடியாத இக் கொடுஞ் செயலைப் புரியும் அக்கூட்டத்தினரை இன்னும் சில தினங்களுள் சிறை செய்ய வேண்டும்" என்று உத்திரவிட்டு, ஆடு திருடிக் கூடிக்குலாவினுன் பிரதாபன்.

"நான் சில தினங்களுக்கு முன்பே இதைப்பற்றிக் கேள்விப் பட்டேன். அக் கூட்டத்தினரைப் பிடிப்பதற்கு பெருத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரம் அவர்களை கைது செய்ய முயற்சிக்கிறேன்" என்று பணிவுடன் கூறினர் பிரதானி தர்மஸீலர்.

பின் தர்மஸீலரை அனுப்பிவிட்டு, அவ்வறையிலிருந்து அடுத்த அறையின் கதவைத் திறந்துகொண்டு, அவ்வறையில் நுழைந்தான் பிரதாபன். அங்கே பிரதாபனுக்கும் தர்மஸீலருக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த பிரதாபனின் அத்யந்த தோழனுன நஞ்சப்பன், பிரதாபனைக்

கண்டதும் தன் சந்தோஷ மிகுதியால், அவனின் தோட்களைக் குலுக்கி "சபாஷ்! பிரதாப்!! நல்ல வேலை செய்தாய். வயசாளியான தர்மஸீலருக்கு அதிக தொந்தரவு கொடுத்து விட்டாய். பாவம்! அவருக்கு என்ன தெரியும்? ஏதோ கூடிய சீக்கிரம் பிடித்துவிடுவதாகக் கூறினரே தர்மஸீலர், இவரைப்போல் எத்தனை தர்மஸீலர் பிறந்து வந்தாலும் நம்மை பிடிக்க முடியுமா?" என்றான் நஞ்சப்பன்.

பிரதாபன்:—நம்மையாவது? இவர்கள் பிடிப்பதாவது? இப்போ நகரில் யாரோ சில துஷ்டர்கள் செய்துவருவதாக வதந்தி உலாவி வருகிறது, அதை நாம் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

நஞ்சப்பன்:— ஓ! அப்படியே செய்யலாமே, ஷண்முகபுரியில் பூனைமலைக் காட்டில் ஒரு கள்வர் கூட்டமிருக்கிறது. அக்கூட்டத்தினரே இவ்விதம் அடாத செய்கையை செய்து வருகின்றனரென்ற வதந்தியை, நமது ஆட்கள் மூலமாக நகரில் பரப்பிவிடுகிறேன்.

பிரதாபன்:—அடேடே! இது ரொம்ப நல்ல யோசனையாயிற்றே, அவ்விதமே செய்துவிடு. இதை செவியுற்ற தர்மஸீலரும் அந்த கள்வர் கூட்டத்தினரைப் பிடிப்பதற்கு முயற்சிப்பார்- நாம் நிம்மதியாய் நமது காரியத்தை நடத்தலாம்" என்று கூறி எழுந்து சென்று ஒரு பீரோவைத் திறந்து, ஒரு பாட்டிலையும் இரண்டு கிளாஸ்களையும் எடுத்து வந்து, கிளாஸ்கள் நிறைய பாட்டிலிலிருந்த "விஸ்கி"யை ஊற்றி ஒன்றை நஞ்சப்பனிடம் கொடுத்து, மற்றொன்றை தான் எடுத்து அருந்திக்கொண்டே மேலும் சம்பாஷிக்கலாயினர்.

பிரதாபன்:—இதோ பார் நஞ்சப்பா இவ்வளவு நாளும் எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறேன் ஆனல், கோகிலத்தைப்போல ஓர் அழகியை நான் இதுவரைப் பார்த்ததே இல்லை.

நஞ்சப்பன்:—அதிலென்ன சந்தேகம்? ஓர் தெய்வலோக மாதைப்போன்ற அழகு படைத்தவள்தான்.

பிரதாபன்:—நான் அந்த வீதி வழியாக வந்தேன். அப் பெண் வாயலில் நின்று கொண்டிருந்தாள். அவள் என்னைக் கண்டதும் மான் போல் மருண்டு பளிச்சென்று மறைந்து விட்டாள். இந்த நிகழ்ச்சியானது, வான்வெளியில் ஓர் ஜோதி தோன்றி மறைவதை ஒத்திருந்தது. எனக்கு அவளைப் பார்த்ததிலிருந்து ஒன்றிலும் புத்தியோடவில்லை.

நஞ்சப்பன்:—இதற்காக நீ ஏன் புத்தியை குழம்ப விட வேண்டும்? நான்தான் ஒருவனிருக்கிறேனே, காரியத்தை முடித்துவிட மாட்டேனு? இன்று இரவு வியாபார நிமித்தம் வெளியூர் போய் நாளைக்காலையில்த்தான் திரும்பி வருவானும் கந்தசாமி.

பிரதாபன்:—உம்! அப்படியானல்......இன்றிரவு......

நஞ்சப்பன்:—அதைத்தானே சொல்ல வந்தேன், இன்று இரவு எப்படியும் காரியத்தை முடித்துவிடவேண்டும்.

பிரதாபன்:—இன்று இரவு என் அபேக்ஷையை நிறைவேற்ற வேண்டியது உன் பொறுப்பு.

நஞ்சப்பன்:—இதென்ன பிரமாதம்? இன்று இரவு 10-மணிக்குமேல் 12-மணிக்குள் காரியத்தை முடித்துவிடுகிறேன்.

நீ நிம்மதியாய் இங்கேயே இரு. நான் சரியா 11-மணிக்கு பெண் சகிதமாய் இங்கு வந்துவிடுகிறேன்.

பிரதாபன்:—நீ சொன்னபடி செய்வாய் என்பதை நான் அறிவேன். இன்னொரு விஷயம் உன்னிடம் கேட்கவேண்டுமென்று நினைத்தேன். சண்முகபுரியிலிருந்து தகவல் ஒன்றும் வரவில்லையே.

நஞ்சப்பன்:—கண்டிப்பாக இன்னும் இரண்டொருதினத்தில் கிடைக்கும். நமது உக்ரமசிங்கர் இருக்கும்போது நமக்கு அதுபற்றி என்ன கவலை? உனது தாயாரும் அவரிடம் ரொம்ப சொல்லியனுப்பி இருக்கிறார்கள். அதோடு அவரும் உறுதியாக கூறிச் சென்றிருக்கிறாரல்லவா?

பிரதாபன்:—சரி. இன்னும் மூன்று தினங்கள்வரை அவருடைய பதிலை எதிர்பார்ப்போம். அதற்குள் தகவல் ஒன்றும் வரவில்லையானால், பின் யோசிப்போம். இப்பொழுது மணி 6 ஆகிறது. நீ சென்று ஜெபத்துடன் திரும்பிவா" என்றுகூற, நஞ்சப்பன் எழுந்து சென்று விட்டான்.

தனியா யிருந்த பிரதாபன் போதை மிகுதியால், இன்றிரவு தம்மையில் சிக்கப்போகும் எழிலரசியாம் கோகிலத்தைப் பற்றிப் பல பல இன்பக் கனவுகள் காணலானான்.

ஃ ஃ ஃ ஃ ஃ

கந்தசாமிபிள்ளை என்பவர், தேவபுரி மார்க்கெட் வீதியில் ஜவுளிவியாபாரம் செய்துவரும் ஓர் வியாபாரி. நாணயஸ்தர். அவர் மனைவி அமிர்தாம்மாளோ, பெயருக்கேற்ப நற்குண நல்லொழுக்கத்தில் சிறந்து, பதிக்கேற்ற பதிவிரதையாய்,

கணவனையே தெய்வமெனக் கருதி, உத்தம பத்தினியாய் வாழ்ந்து வருபவள். இத்தம்பதிகளுக்கு "கோகிலம்" என்னும் பெண்ணைத்தவிர, வேறு பிள்ளையோ பெண்ணோ இல்லையாகை யால், கோகிலத்தையே பிள்ளையாகவும் பெண்ணாகவும் கருதி, அளவற்ற வாஞ்சையுடன் வளர்த்து வந்தனர் கோகிலமோ இயற்கையிலேயே நல்ல அழகைப் பெற்றிருந்ததோடு குணசா லியாயும் விளங்கினாள். கந்தசாமிக்கும் அமிர்தம்மாளுக்கும், பருவமடைந்த தம் பெண்ணை நல்ல அழகுள்ளவனும், கல்வி யறிவுள்ளவனும், குடும்பத்தை நடத்தும் சக்திவாய்ந்தவனு மான, ஓர் யுவனுக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று, எண்ணினர். அநேக தனவந்தர்கள், இரண்டு மூன்றாந்தாரமாக, கோகிலத்தை மணக்க எண்ணி, கந்தசாமி பிள்ளைக்குச் சொல்லி யனுப்பினர். ஆனால், அவர் பணத்திற்காசைப்பட்டு, கிழங் கட்டைகளுக்கு மண முடிக்க ஒவ்வாது நிராகரித்துவிட்டார்.

•

இது இவ்வாறிருக்க, கோகிலத்தின் அழகைப்பற்றிக் கேள்வியுற்ற பிரதாபன், தான் எவ்விதமும் அவளைச் சுகிக்க வேண்டுமென்று, துர்எண்ணங்கொண்டான். அதற்கு அனு கூலமாக, ஒருநாள் அவன் கந்தசாமி பிள்ளையின் வீட்டின் வழியாக, பீட்டனில் வந்துகொண்டிருக்கும்போது, வீட்டின் வாயல் கதவோரமாக, நின்றுகொண்டிருந்த கோகிலத்தைப் பார்த்ததும், அவளின் அதி அற்புத அழகைக்கண்டு, அவளைத் தான் எவ்விதமும் அடைந்துதானாகவேண்டுமென்ற, துர் எண்ணம் ஊர்ஜிதமாயிற்று. தன் எண்ணம் பூர்த்தியாவது வெகு எளிதானதென்பதை அவன் அறிவான். எப்படி யெனில், கந்தசாமிபிள்ளையோ வியாபாரத்தினிமித்தம் அடிக் கடி வெளியூர் சென்று, சில சமயங்களில் இரண்டு மூன்று

நாட்கள்கூட தாமதித்து வருவார். அவ்விதம் அவர் வெளியூர் சென்றிருக்கும் சமயம் பார்த்து, தன் ஆட்களை அனுப்பி, கோகிலத்தை தூக்கி வரும்படிசெய்து, தன் எண்ணம் பூர்த்தியானதும் மீண்டும் அதே இரவில், அவள் வீட்டில் கொண்டு வந்துவிட்டு விடுவது என்று எண்ணி, கந்தசாமியின் வெளியூர் பிரயாணத்தை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தான்.

நிற்க, கந்தசாமி பிள்ளை அன்று வெளியூர் போவதாகவும், மறுநாள்தான் திரும்பி வருவாரென்றும், ஆகையால் அன்று இரவே தங்கள் எண்ணம் பூர்த்தியாகும்படி செய்கிறேனென்று, நஞ்சப்பன் பிரதாபனிடம் கூறிவிட்டுச் சென்றான் என்று முன் கூறினோமல்லவா? மேலே என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்.

அன்று இரவு கந்தசாமி பிள்ளை வெளியூர் போய்விட்டபடியால் தாயும் சேயும், சீக்கிரத்திலேயே இராப்போஜனமுண்டு துயிலிலாழ்ந்தனர்.

மணி இரவு 11 இருக்கும். ஓர் கார் வேகமாக ஓடிவந்து அவ்வீட்டின் முன் நின்றதும், காரிலிருந்த ஒருவன் இறங்கி வந்து, "அமிர்தம்! அமிர்தம்!!" என்றுகூறி, கதவை இடித்தான். இவன் போட்ட சப்தத்தால் விழித்தெழுந்த கோகிலம், வெளியூர் சென்றிருந்த தன் தந்தைதான் திரும்பி வந்து விட்டார் என்று எண்ணி எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

கதவை இடித்த அம் மனிதன் திடீரெனப் பாய்ந்து, அவள் சப்தம் போடாவண்ணம் வாயை அடைத்து, அவள் மூக்கில் ஏதோ ஒன்றை வைக்கவும், கோகிலம் மயக்கமுற்றாள்.

மயக்கமடைந்த கோகிலத்தை தூக்கிவந்து காரில் வைத்ததும், கார் புறப்பட்டுச் சென்றது. கார் அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும் கந்தசாமிபிள்ளை வீட்டிற்கு எதிரிலிருந்த ஓர் பெரிய மரத்தின் மறைவிலிருந்து ஓர் முகமூடி உருவம் வெளிப்பட்டு, காரின் பின்புற முள்ள பம்பரில் தொத்திக்கொள்ள கார் வேகமாக ஓடியது.

அத்தியாயம் 5.

"உமது கௌரவம் மட்டும் காப்பாற்றப்படவேண்டும். உம்மால் கற்பழிக்கப்பட்டுத் தவிக்கும் அப் பெண்ணின் கௌரவ மட்டும் காற்றில் பறக்க வேண்டுமோ? பேஷ்! உள்ளுக்குள் அகௌரவம் நிரம்பிய செய்கையைச் செய்யும் உமக்கு வெளியில் மட்டும் என்ன கௌரவம் வந்தது?"

காட்டு மாளிகையில் நன்ருக சிங்காரிக்கப்பட்ட ஓர் சயன அறையில், பிரதாபன் அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். மனிதனுக்கு விரகதாபத்தை அதிகப்படுத்தும் நிலையிலுள்ள படங்கள், அவ்வறையில் எங்கும் காணப்பட்டன. ஒரு புறம் தந்தக் கட்டிலில் போடப்பட்டிருந்த மஞ்சம், நறுமணம் கமழும் மலர்களாலும், உயர்ந்த பாரிஸ் சென்ட் தெளிக்கப்பட்டும், "கமகம" வென்ற சுகந்தவாசனை கிளம்பி, அவ்வறை முழுமையும் வியாபித்தது.

பிரதாபன், அடிக்கடி தன் கடியாரத்தைப் பார்த்து சலிப்புற்ருன். அவனின் தேகமும், மனமும், கட்டிலடங்காது தவித்தது "என்ன? மடையன் இன்னும் வரவில்லை" என்று கூறிக்கொண்டான். சிறிது நேரம் மஞ்சத்திலமர்ந்தான். இருக்கை கொள்ளவில்லை. எழுந்து "எனக்கு இன்று கிடைக்கப்போகும் சிற்றின்ப சுகம் வேறு யாருக்குத்தான் கிட்டும்?" என்று கூறியவனுய் மேஜை மீதிலிருந்த ஓர் கிளாஸ் நிறைய சாராயத்தை ஊற்றி அருந்திவிட்டு, ஆனந்தமாக ஓர் சிகரெட்டைப் பற்றவைத்தான். அப்பொழுது வெளியில்

ஓர் கார் வந்து நின்ற சப்தத்தைச் செவியுற்று பரபரப்புடன், கண்ணுடியின் முன் சென்று தன் அழகை ஒருமுறை பார்த்துவிட்டு, ஒருமுகமூடியை எடுத்து அணிந்துகொண்டு, அவ்வறையின் கதவையணுகி அதைத் திறந்ததும், எதிரே வரும் மனிதனைக்கண்டு குதூகலத்துடன் "நஞ்சப்பா! எங்கே இன்று விஷயம் முடியாது போய்விடுகிறதோவென்று சந்தேகங் கொண்டேன்" என்று கூறினுன். இதற்குள் நஞ்சப்பன் தன் கரங்களில் தாங்கி வந்த கோகிலத்தை மஞ்சத்தில் கிடத்திவிட்டு பிரதாபனை நோக்கி "நான் போயுமா முடியாது போய்விடும்? உம். சரி நான் போய் வெளி அறையிலிருக்கிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றுன்.

அவன் சென்றதும் பிரதாபன் அவ்வறையின் கதவை உட்புரம் தாளிட்டுவிட்டு, திரும்பிவந்து மஞ்சத்தில் மயக்குற்று கிடக்கும் கோகிலத்தை நோக்கினுன். அவனது விரக தாபம் அதிகரித்தது. "கோகிலம்! அடடா என்ன அழகான பெயர், உன் பெயரைக் கூறியமாத்திரத்திலேயே ஓர் இன்பம் தோன்றுகிறதே. வானுலக மாதும் உன் எழிலைக்கண்டு நாணமடையும்படியான, அவ்வளவு எழில்படைத்த உன்னை தபோதனர்களும் கண்டு மதிகலங்குவரென்றுல் நான் எம்மட்டும். நான் மதிகலங்கியதில் என்ன வியப்பு? நீ மயக்குற்றிருக்கும் காலத்து, எனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதிருக்கிறதே என்ற வருத்தந்தான் என் மனதைக் கஷ்டப்படுத்துகிறது" என்று கூறிக்கொண்டே அவள் வதனத்தில் முத்தமிடப் போனுன். அப்பொழுது "விர்" என்று ஓர் சப்தம் கேட்டது. பிரதாபன் திடுக்குற்று திரும்பி நோக்குவதற்குள், அவன் கழுத்தில் ஏதோ ஒன்று சுற்றி இறுக்குவதை யுணர்ந்து அதை அகற்ற முயன்றுன்,

ஒன்றும் பிரயோசனமில்லை. வரவர வேதனை அதிகரித்தது. சப்தம்போட்டு உதவிக்கு ஆட்களை அழைப்பதற்கும் முடியவில்லை. அதிக பிரயாசையுடன் தன் கழுத்தை இறுக்குவது ஒரு கயிறு என்பதை யுணர்ந்து—கயிற்றால் சுற்றி இறுக்குவது யாரென்பதையறிய எண்ணியவனாய்த் திரும்பினான். தன் சமீபமாக ஒரு முகமூடி மனிதன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். பயத்தால் சர்வாங்கமும் வெடவெடவென நடுக்குற்றது.

தன் கையிலுள்ள சவுக்கால் அவனது கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த அம்முகமூடி மனிதன், அவன் கழுத்தில் சுற்றி இருந்த சவுக்கை விலக்கி கையில் வைத்துக் கொண்டு, ரிவால்வாரை அவன் முகத்திற்கு நேரே பிடித்த வண்ணம் "வாலிபரே! எங்கே உம் முகமூடியை எடும், நீர் யாரென்பதைப் பார்ப்போம்"? என்று அதிகாரத்தோடு கூறினான்.

பிரதாபன் முகமூடியை எடுக்கச் சிறிது தயங்கியதைக் கண்ட அவன் "முகமூடியை அகற்றவேண்டிய சிரமத்தை நீர் எடுத்துக்கொள்ள வேண்டாம், நானே எடுத்துவிடுகிறேன்" என்று கூறியவண்ணம் அவனின் முகமூடியைக் கழற்றியதும் ஆச்சரியமடைந்தவனாய் பிரதாபனை நோக்கி "அடடா! வாலிப ஜெமீந்தாரா! பேஷ் ஜெமீந்தாரே!! உம்முடைய ஜமீனுக்குட்பட்ட குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு வகிக்கும் நீரே, கேவலம், மனத்தாலும் நினைக்க முடியாததான இச்செய்கையைச் செய்ய முற்பட்டீரானால், உம் குடிகளுடைய நிலைமை என்னவாகும்? பிரஜைகளுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து, அவர்களுக்கு

வேண்டிய உதவி செய்யவேண்டிய நீர், இவ்வித அடாத செய்கையிலீடுபட உம் மனம் அஞ்சவில்லையா? உம்முடைய சமஸ்தானத்தில் எவ்வித கொடுஞ் செயலும் நடைபெருது தடைசெய்ய வேண்டிய நீரே, இவ்விகத பாதகச் செயலைச் செய்து வந்தால், ஜனங்கள் எவ்விதம் க்ஷேமமடைய முடியும்? குடிகளுடைய தலைவன், தந்தையென்ற உன்னத ஸ்தானங்களை வகிக்கவேண்டிய நீர், உமது கருமத்தை மறந்து, கேவலம் ஓர் அபலைப்பெண், உமது கருணைமிகும் இருதயத்திலிருக்க வேண்டிய பெண், இவளை, காமநெஞ்சத்திலிருத்திக் கஷ்டப் படுத்துவது எவ்வளவு அநீதம்? தங்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்க ஒருவனிருக்கிருன், அவனிடம் கூறினல் நம் வறுமை நீங்கும், தங்களை எவ்வித ஆபத்தும் அணுகாவண்ணம் காப்பாற்றுவான் என்று, உம்மையே கடவுளென நம்பியல்லவா, இன்று உமக்கு, சிலகாலமாக இந்நகரில் நடந்துவரும் அக்ரமங்களை வெளியிட்டு, அக்கூட்டத்தாரைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஒரு மகஜரை அனுப்பினர். அம்மகஜரைப் பார்த்ததும் பிரதானி தர்மஸீலரை அழைத்து, எவ்விதமும் இன்னும் 15 தினங்களுக்குள் அக்கூட்டத்தாரைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று கண்டிப்பாய் உத்தரவிட்டீர்: ஏன்? உம்முடைய செய்கையைக் கண்டுபிடிக்க முடியாதென்ற எண்ணமா? நீர்தான் இப்பாதகச் செயலை புரிந்து வருபவர் என்பதை ஜனங்கள் அறிவார்களானல், அவர்கள் உம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? உம்மை யார்தான் விரும்புவர்? நீர் ஜெமீந்தார். என்ற முறையில் உம்முடைய செய்கையை மறைக்க பிரயர்சைப் படலாம். அவ்விதம் உம்மை இழிவாகப் பேசும் மக்களை அடக்கிக் கொடுமைப் படுத்தலாம், அவர்களெல்லாம் வீறுகொண்டெழுவார்களாயின் நீர் என்ன செய்ய

முடியும்? ஒரு நிமிஷத்தில் உம் அரண்மனைத் தரைமட்டமாகி விடாதா? உம்மை உயிருடன் விடுவார்களா? நீர் வேண்டு மானல் நம்மை சுண்டிப்பவர்கள் யார்? என்று மமதை சொண்டிருக்கலாம். உம்முடைய செய்கையைப்பற்றிக் குறை கூறுகிறவர்களைப் பிடித்து வேறு காரணத்தைக்கூறி ஜெயிலில் போடலாம். ஆனல், உம் நாட்டிலுள்ள எல்லோரையும் அவ் விதம் செய்ய முடியுமா? என்பதை நீர் சிந்திக்கவேண்டும். உம்மை ஒன்று கேட்கிறேன்; நீர் இப்பொழுது எவ்வித உதவியுமின்றி என்னிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர், உம்மை இப்பொழுது என்னவேண்டுமானலும் செய்யலாம். என்? உம்மைக் கொன்று ஜனங்களுக்கு நிம்மதியை உண்டு பண்ணவும் முடியும். ஆனல்.....நான் அவ்விதம் செய்ய நினைக்கவில்லை. நீரும் என்னைப்போல் ஓர் வாலிபன். துஷ்ட சகவாசத்தால் நீர் கெட்டழிந்துகொண்டு வருகிறீர். உமது நிலைமையும், பொறுப்பையும், நீர் அறிந்து விடுவீராயின், மேலும் இவ்வித விஷயங்களில் பிரவேசிக்க மனந்துணியீர். இதோ கட்டிலில் கிடக்கப்பட்டிருக்கிறதே இந்தப்பெண், இவள் கல்யாணமாகவேண்டிய ஓர் யுவதி. நாணயமான குடும் பத்தில் பிறந்தவள். நான் இச்சமயத்தில் இங்கு வந்திராவிட் டால், இப்பெண்ணைக் கெடுத்து மீளாத்துயரடைந்து, தற் கொலை செய்துகொள்ளும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்திருப்பீர். நீர் இவ்விதம் செய்வதால் உமது காம வேட்கைபடங்கி மகிழ்வீர்—அதே நோக்தில் அந்தப் பெண் ணின் நிலைமை என்னவென்பதைக் கவனித்தீரா? உம்மால் களங்கமடைந்த பெண்கள் எத்தனைபேர் என்பதை நானறி வேன். அவர்களில் தற்கொலை புரிந்துகொண்டவர்கள் நீங்க லாக, இன்னும் ஒரே பெண்தான் உயிருடனிருக்கிறுள். அவள்தான் தங்கம்மாள் என்ற ஓர் கிழவியின் புதல்வி

"முனியம்மாள்" அவளும் இப்பொழுதுநடைப்பிணம்போன்று தானிருக்கிருள். இன்றே நாளையோவென்றிருக்கும் அக்கிழவி இறந்துவிடுவாளாயின், உம்மால் கற்பழிக்கப்பட்ட அந்த முனியம்மாளின் கதி என்ன? இவ்வளவு நாளும் அப்பெண் கிழட்டு அன்னைக்காகவே உயிர் வாழ்ந்தாள். அக்கிழவியும் இறந்துவிட்டால், அப்பெண் தற்கொலை செய்துகொண்டு மனத்துயரை ஒழித்துக்கொள்வாள். ஆனல், நீரோ இது வரை பல தற்கொலைக்கும் காரண கர்த்தாவாயிருந்ததுட னில்லாது, மேலும் அக்கொடிய காரியத்தை நடத்திக் கொண்டே போகிறீர். உம்முடைய இப்பாப காரியங்களுக் கெல்லாம் மன்னிப்பளிக்க முடியாது. அயோக்ய ஜமீந்தாரே! என்னிடம் உம்முடைய அதிகாரமும், மமதையும், செல்லா தென்பதை நீர் அறிந்துகொள்ளவேண்டும் நான் நினைத்தால் உம்மை தொலைத்துவிடவும் முடியும். உம்முடைய விஷயங்கள் வெளியாகாதிருக்க வேண்டுமெனில், உம்மால் கற்பழிக்கப் பட்டு மனம் வெதும்பிக்கொண்டிருக்கும் அந்த முனியம்மாளை, நீர் மணம் புரிந்துக்கொள்ளவேண்டும். மேலும் இவ்வித விஷ யங்களில் தலையிடாது, ஒழுங்கான முறையில் நடந்துகொள்ள வேண்டும். நீர் இப்பொழுது ஷண்முகபுரி ஜெமீந்தாரின் புதல்வி "ஜெயா"வை மணம்புரிய நிச்சயித்திருப்பதிலிருந்து விலகிக்கொண்டு, அவர்களுக்கு தெரிவித்து விடுவதுடன் அதே சுபதினத்தில் இந்த மாளிகையில் பல பிரமுகர்கள் முன்னிலை யில், முனியம்மாளை மணம் புரியவேண்டும். என்ன சொல்லு கிறீர்" என்று கோபத்துடன் கேட்டான் அம்முகமூடி மனிதன்.

தன்னுடைய காரியாதிகளை எல்லாம் நேரில் பார்த்தது போல், முழு விபரங்களுடன் அம் முகமூடி மனிதன் கூறி

யதைச் செவியுற்ற பிரதாபன், இன்னது செய்வதென்பதை யறியாது திகைத்தான். அவனையறியாமலேயே ஓர் பயம், அவன் மனதில் புகுந்துகொண்டது. பயத்தால் தேகமெங்கும் வியர்வை வெள்ளம் புரண்டோடியது. மூளை குழம்பியது. சிறிதுநேரம் ஒன்றும் பேசாது மௌனமாயிருந்தான். இவ் வறிய சந்தர்ப்பத்தில் எமன்போல் வந்துதித்த அம்முகமூடி மனிதன் மீது அதிக ஆத்திரங் கொண்டான். கொஞ்சநேரம் யோசித்தபின், ஏதோ ஓர் முடிவான தீர்மானத்திற்கு வந்த வன்போல் தோன்றினான். மனதை திடப்படுத்திக்கொண்டு அம்முகமூடி மனிதனை நோக்கி "ஐயா! நீர் யார் என்பதை நான் தெரிந்துகொள்ளலாமா?" என்று குழம்பிய மனதுடன் வினவினான்.

"நான் யாரென்று கேட்கிறீர்? உம்மைக் கண்டுபிடிப்ப தற்காக, உம்மால் கட்டளையிடப்பட்ட தர்மசீலனின் ஏவலாட் களில் ஒருவன் என்று நினைத்துக்கொள்ளுமே" என்றான்.

தர்மசீலரின் ஆள், என்பதைக் கேள்வியுற்றதும் அவ மானத்தால் தேகங்குன்றி, மனம் இடிந்துபோய் விட்டான். நம் சமஸ்தான சிப்பந்திகளில் ஒருவனுக்கு நம்மை இவ்வளவு உதாசீனமாகப் பேசி, அவனின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று கூறும் அவ்வளவு துணிவு ஏற்படுமா?" என்று ஐயுற்றான். இவன் இவ்வித யோசனைகளால் மனங் குழம்பித் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, அம்முகமூடி மனிதன் "ஜமீந்தாரே! என்ன ரெம்ப பலமான யோசனை யிலாழ்ந்திருக்கிறாப் போலிருக்கே! அதிக நேரம் தாமதிப்ப தற்கு எனக்கு அவகாசமில்லை. நான் கூறியபடி நடக்கப்

போகிறீரா? இல்லையா? சீக்கிரம் சொல்லும்" என்று துரிதப் படுத்தினன்.

"ஐயா! நீர் யாரா இருந்தாலும் சரி. நான் இப்பொழுது உமது கையிலகப்பட்டிருக்கிறேன், என்னுடைய ரகஸ்யங்கள் ஒன்றும் பாக்கி இல்லாது நீர் அறிந்திருக்கிறீர். என்னுடைய கௌரவம் இப்பொழுது உமது கையிலிருக்கிறது. நீர் என்னை என்னவேண்டுமானலும் செய்யலாம். என்னுடைய காரியாதிகளை எல்லாம் கண்டுபிடித்த அவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்த நீர் யார்? என்பதையறிய என் மனம் ஆவல்கொள்கிறது. ஆயின், உமது விருப்பம் தெரிவிக்க முடியாதென்றிருந்தால், நான் அதுபற்றி வற்புறுத்துவதற்குமில்லை" என்று கூறி மேலும் கூறுவதற்குள்.

"நான் கேட்டதற்கு நேரிடையான பதில் கூருது என்னென்னமோ கூறுகிறீர், என்னைப்பற்றி நீர் அறிந்து கொண்டு ஆவதென்ன? சீக்கிரம்" என்ருன் முகமூடி மனிதன்.

"ஐயா! நான் ஓர் சமஸ்தானதிபதி என்பது உமக்குத் தெரிந்ததுதான். அப்படியிருக்க, ஓர் எளிய குடும்பத்துப் பெண்ணை மணந்துகொண்டால் பலரும் கேவலமாகப் பேசுவார்களே...........?"

"உமது கௌரவம் மட்டும் காப்பாற்றவேண்டும். உம்மால் கற்பளிக்கப்பட்டு தவிக்கும் அப்பெண்ணின் கௌரவம் காற்றில் பறக்கவேண்டுமோ? பேஷ்! உள்ளுக்குள் அகௌரவம் நிரம்பிய செய்கையைச் செய்யும் உமக்கு வெளியில் மட்டும் என்ன கௌரவம் வந்தது"?

"ஐயா! இல்லை நான் அவ்விதம் நினைக்கவில்லை. எனது மூடமதியால் செய்துவிட்ட காரியாதிகளுக்காக நான் மனப் பூர்வமாக வருந்துகிறேன். நான் அவளைத் தவிக்கவிடவும் நினைக்கவில்லை;........ஆனல்........."

"ஆனல் இன்னுமென்ன?"

"அவளை என் ஆசை நாயகியாக ஏற்றுக்கொண்டால்...... எனது கௌரவமும் பாதிக்கப்படாது, அப்பெண்ணுக்கு அவமானச் சொல்லும் ஏற்படாது. இது இருசாருக்கும் பாதகமளிக்காத ஓர் வழி என்று எண்ணுகிறேன்"

"ஓர் குடும்பப்பெண் உமது ஆசை நாயகியாக இருப்ப தற்கு எவ்விதம் சம்மதிப்பாள்? அவள் தாசியல்லவே, நீர் அவளைக் கல்யாணம் செய்துகொள்வதை தவிர வேறு வழியே இல்லை. உமது யோசனை பயனற்றதாகும். அப்பெண்ணைப் பலரும் அறியும்படி மணந்துகொள்வதுதான் முடிவாகும்" என்று கூறி பிரதாபனின் பதிலை எதிர்பார்த்தான் முகமூடி மனிதன்.

பிரதாபன் சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருப்பது போல் பாசாங்கு செய்தான். பின் அம்முகமூடி மனிதனை நோக்கி "சரி அவ்விதமே அப்பெண்ணை மணம்புரிந்து கொள்ளுகிறேன். மணம் புரிந்தபின் அப்பெண்ணுடன் வேறெங்காவது தூரதேசம் போய்த்தான் ஜீவிக்கவேண்டும். ஓர் ஜெமீந்தார், எளிய குடும்பத்துப் பெண்ணை மணம்புரிந்து கொண்டான். என்ற அவச்சொல்லை செவியுற்று இந்நகரில் வசிக்க நான் விரும்பவில்லை" என்று மனம் சோர்ந்தவன் போல் கூறினன்.

"ஜெமீந்தாரே! உம்மைப்போல் ஒழுங்கு முறையற்ற ஒருவர் ஜெமீந்தாரா யிருப்பதைவிட, ஜெமீனைத் துறப்பதே மேல். இந்த சமஸ்தான மக்களும் க்ஷேமமுறுவர். சல்யாணத்திற்குப்பிறகு நீர் உமதிஷ்டப்படி நடந்துகொள்ளும் முதலில் உமக்கு மனைவியாக வரிக்கப்பட்டிருக்கும் ஜெயாவின் தந்தைக்கு, நான் தங்கள் புதல்வியை மணம் புரிய விரும்பவில்லை என்று ஒரு கடிதமெழுதி என்னிடம் கொடுக்க வேண்டும்" என்று கூறினன்.

"அவ்விதமே எழுதித்தருகிறேன். ஆனல், ஒருவிஷயம். முனியம்மாளின் திருமணத்தை நகரில் நடத்தினல் பெருங் கிளர்ச்சியும் எதிர்ப்பும் ஏற்படுமாகையால், இதே பங்களாவில் அந்த நாளில் ஒரு விருந்து ஏற்பாடு செய்து, அவ்விருந்துக்குப் பல பிரமுகர்களை அழைத்து, அவர்கள் முன்னிலையில் நான் அவளை மணம்புரிந்து கொள்ளுகிறேன். தயவுசெய்து அவ்விதம் செய்வதற்குமட்டும் அனுமதியளிக்க வேண்டும்" என்று கெஞ்சி மன்றுடினன் பிரதாபன். இவனுடைய பரிதாபகரமான வார்த்தையைச் செவியுற்ற அம்முகமூடி மனிதன், உண்மையிலேயே இவன் மனப்பூர்வாக தன் செய்கைகளுக்காக வருந்துகிறுன், என்று நினைத்து அவனை நோக்கி "ஜெமீந்தாரே! இவ்விஷயத்தில் உம்மிஷ்டத்திற்கு ஓரளவு இணங்குகிறேன். எவ்வழியிலும் என்னை ஏமாற்றிவிடலாமென்றும் கிஞ்சிற்றும் நினைப்பீரானல்? நீர் அழிவது திண்ணம்" என்று கண்டிப்புடன் கூறி, ஒரு காகிதத்தையும் பேனவையும், பிரதாபனிடம் கொடுத்து ஜெயாவின் தந்தைக்கு ஓர் கடிதமெழுதும்படி கூறினன்.

பிரதாபனும், அம்முகமூடி மனிதன் கூறியபடி ஓர் கடிதமெழுதி அவன் கையில் கொடுத்தான்.

அக்கடிதத்தை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டதும், பிரதாபனை நோக்கி "சரி எல்லா வேலைகளும் முடிந்து விட்டது. இப்பொழுது கோகிலத்தை அவள் இல்லத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். நீர் இனிமேல் கோகிலத்தைப்பற்றிக் கனவிலும் நினைக்கக் கூடாது—உம்—தெரிகிறதா?......ஆனாலும் உம்மை முற்றும் நம்புவதற்கில்லை" என்று கூறியவண்ணம் தான் கொண்டுவந்திருந்த கயிற்றால், அவனது கரங்களை உடம்புடன் சேர்த்துப் பிணைத்து, அவன் வாயிலும் துணிப்பந்தை திணித்து சப்தம் போடாவண்ணம் செய்துவிட்டு, அவனை நோக்கி "ஜெமீந்தாரே! ஒருக்கால் வேதாளம் பழையபடி முருக்கமரமேறிக் கொண்டது என்பதுபோல் வந்துவிட்டால் என்ன செய்வது? அதற்காகத்தான். நான் போகும்போதே உம்முடைய காரியஸ்தனாகிய நஞ்சப்பனிடம், உம் கட்டுகளை அவிழ்த்துவிடும்படி சொல்லிவிட்டுச் செல்கிறேன்" என்று கூறி ஏளனமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, கட்டிலில் கிடந்த கோகிலத்தைத் தூக்கிக்கொண்டு ஜன்னலின் வழியாக அவ்வறையை விட்டு வெளிப்பட்டான்.

ஏதோ அவன் கொஞ்சம் ஏமாந்திருக்கும்போது சப்தம் போட்டு நஞ்சப்பனை அழைத்துவிடுவோம், என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, தன்னைக் கட்டிப் போட்டதோடு நில்லாது, வாயிலும் துணியை வைத்தடைத்து விட்டதை எண்ணி, அவன்மேல் அளவற்ற ஆத்திரங்கொண்டான்.

ஆத்திரமடைவதால் ஆவதென்ன?

கோகிலத்தைத் தூக்கிக்கொண்டு வெளிப்பட்ட அம் முகமூடி மனிதன், அப் பங்களாவின் முன் நின்றுகொண்டிருந்த ஜெமீந்தாரின் காரில் கோகிலத்தைக் கிடத்திவிட்டு, அப் பங்களாவின் முன் ஹாலை அடைந்து, அங்கு ஒரு சோபாவில் சாய்ந்து ஆனந்தமாக சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த நஞ்சிப்பன் முன், ஒரு துண்டு கடிதத்தைப் போட்டுவிட்டு காரை அடைந்து கோகிலத்துடன் சென்ருன்.

தன் முன் திடீரென்று ஓர் முகமூடி மனிதன் தோன்றி, ஓர் கடிதத்தை வீசிவிட்டுச் சென்றதைக் கண்டதும் திக்பிரமை கொண்டவனுய், அக்கடிதத்தைக் கையிலெடுத்துப் பார்த்தான். அப்பொழுது வெளியே கார் இயங்கும் சப்தம் கேட்கவே, பரபரப்புடன் எழுந்து சென்று நோக்கினன். அதற்குள் கார் மறைந்துவிடவே, விஷயம் விளங்காதவனுய் மீண்டும் ஹாலுக்குள் வந்து அக்கடிதத்தை நோக்கினன். அக்கடிதத்தில் "உமது எஜமானர் மேல் மாடியிலுள்ள அறையில் கட்டுண்டு கிடக்கிருர்" என்று எழுதி இருந்ததைக்கண்டதும் பரபரப்புடன் ஓடி மேல்மாடியை அடைந்து பிரதாபன் இருந்த அறையைத் திறந்தான். கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தபடியால் கதவு திறக்கவில்லை. பிரதாபனைக் கூவியழைத்தான் பதிலில்லை. கதவின் பூட்டுத்துவாரத்தின் வழியாக உள் நோக்கினன். உள்ளே பிரதாபன் கட்டிலின் பக்கத்தில் கட்டுண்டு கிடப்பதைக்கண்டு, மனம் பதறியவனுய் ஓடோடியும் சென்று, ஒரு இரும்பு ஆயுதத்தை எடுத்துவந்து கதவைத் திறந்துகொண்டு சென்று பிரதாபனின் கட்டுகளை அவிழ்த்து வாயில் திணிக்கப்பட்டிருந்த துணியையும் அகற்றி "என்ன சமாச்சாரம்? உன்னை யார் இவ்விதம் செய்தது?"

என்று கேட்டுவிட்டு சுட்டிலே நோக்கினான். இங்கு கோகில மில்லாதிருப்பதைக் கண்டு திடுக்குற்றவனாய் "கோகிலம் எங்கே? அவளை யார் கொண்டு சென்றது?" என்று மேலும் பல கேள்விகளை வரிசையாக அடுக்கினான்.

"நஞ்சப்பா! நான் என்ன சொல்வதென்பது எனக்கே விளங்கவில்லை. நான் கட்டுண்டு கிடப்பதை நீ எவ்வித மறிந்தாய்?"

"நான் கீழ் ஹாலிலிருந்தேன், திடீரென்று ஓர் முகமூடி மனிதன் தோன்றி ஒரு கடிதத்தை என்முன் போட்டுவிட்டு, நான் திரும்பிப் பார்ப்பதற்குள் பளிச்சென்று சென்று மறைந்து விட்டான். வெளியே கார் இயங்கும் சப்தம் கேட்க, வெளியே சென்று பார்த்தேன். அந்த முகமூடி மனிதன் நம் காரை ஓட்டிக்கொண்டு பறந்து சென்றான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை, அக்கடிதத்தைப் பார்த்தேன். அதில் நீ இங்கு கட்டுண்டு கிடப்பதாக எழுதி இருந்தது, ஓடி வந்தேன்."

"அந்த முகமூடி மனிதன்தான் என்னை இவ்விதம் கட்டிபோட்டுவிட்டு கோகிலத்தை தூக்கிச் சென்றவன்."

"அவன் யார்? எவ்வழியாக இங்கு வந்தான்? ஆச்சரிய மாகவல்லவோ இருக்கிறது?"

"அவன் யாரென்றுதான் எனக்கும் விளங்கவில்லை. அவன் ஜன்னலின் வழியாகவே இவ்வறைக்குள் வந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஏனெனில், போகும்போது இச்சன்னலின் வழியாகவே சென்றான். நாம் இப்பொழுது அவன் கையில் பூரணமாக சிக்கி இருக்கிறோம்."

"ஏன்? கோகிலத்தை காப்பாற்றியதாலா?"

"அது மட்டுமில்லே; நாம் இதுவரை செய்துவந்த ஒவ்வொரு செய்கையையும், தான் நேரில் பார்த்ததுபோல் அறிந்திருக்கிறுன்."

"நம் காரியாதிகளில் தலையிட ஓர் மனிதனுமா இருக்கிறுன்?"

"நம்முடைய கௌரவமே அவன் கையிலிருக்கிறது."

"இங்கு அவன் வந்ததும் என்ன நடந்தது?"

பிரதாபன் அம் முகமூடி மனிதன் வந்ததும், அவன் கூறியதுமாகிய விஷயங்களை ஒன்றும் பாக்கியில்லாமல் கூறி முடித்து மேலும் "எனக்கு ஒன்றுமே விளங்கவில்லே, இப்பொழுது நாம் என்ன செய்வதென்பதுதான் கேள்வி?" என்றுன்.

நஞ்சப்பன் சிறிதுநேரம் யோசனையிலாழ்ந்தான், ஏதோ தீர்மானித்தவனுய் "பிரதாப்! இனிமேல்த்தான் நாம் தைரியத்துடனிருக்க வேண்டும். அவன் "நான் தர்மஸீலரின் ஆள்" என்று கூறியதில் உண்மை இருக்குமா என்று சந்தேகப் படுகிறேன். இருந்தாலும், இனி அவருடைய காரியாதிகளைக் கவனிப்பதற்கு நமது ஆட்களை நியமித்து விடுகிறேன். அதோடு, அம்மனிதனைக் கண்டுபிடிக்கவும் முயற்சி எடுத்துக் கொள்ளுகிறேன். அவனிடம் நீ ஷண்முகபுரி ஜெமீந்தாருக்கு எழுதிக் கொடுத்திருக்கும் கடிதத்தைக் கைப்பற்றியே தீர வேண்டும். நீ அதைரியப்பட வேண்டாம். நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேன். இதோ இதைச் சாப்பிடு.

அதிக களைப்படைந்திருக்கிறாய்'' என்று கூறி ஒரு கிளாஸ் நிறைய சாராயத்தை ஊற்றிக் கொடுத்தான். பிரதாபன் அதைக் கையில் வாங்கிப் பருகிய வண்ணம் "நஞ்சப்பா! அதே சுபதினத்தில் முனியம்மாளை மணம்புரிய ஒப்புக்கொண்டிருக்கிறேனே'' என்றான்.

"அதற்காக என்ன? அன்றுதினம் காலையில் விருந்தை ஏற்பாடு செய்து விடுவோம், இன்று வந்த முகமூடி மனிதன் அன்றும் இங்கு வந்தே தீருவான். அப்பொழுது நான் அவனை சிறைபடுத்துவதுடன், முனியம்மாளையும் ஒழித்து விடுகிறேன்."

"அதெப்படி முடியும்?"

"ஓ! முடியும். மிகவும் பயங்காமானதாகும்'' என்று கூறி அவனிடம் ரகஸ்யமாக ஏதோ கூறினான்.

அவன் கூறியவற்றைச் செவியுற்ற பிரதாபன் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. வியப்புடன் நஞ்சப்பனை நோக்கினான்.

அத்தியாயம் 6.

காந்தா! என் மனம் எவ்வளவு ஆனந்தமடைகிறது தெரியுமா? எப்போழுதும் உன் கடைக்கண் பார்வை மட்டும் என் மீதிருக்க வேண்டும். அது தா.........

ஷண்முகபுரி ஜெமீந்தாரின் உத்தரவின்படி தங்களுடைய சம்மதத்தைத் தெரிவிப்பதற்கு உக்கிரமசிங்கன் தேவபுரியை அடைந்து ஜெமீந்தாரின் இரண்டாந்தாரத்து மனைவியான காந்தாமணிக்குத் தன்னுடைய வருகையைக் கூறியனுப்பினன். இவன் வரவையறிந்த காந்தாமணி நேரில்வந்து முகமன்கூறி அவனை அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தபின், தானும் அமர்ந்து "நானும் பிரதாபனும் உங்களுடையவருகையை ஒவ்வொருநிமிஷமும் எதிர்பார்த்தே இருந்தோம். பிரதாபனுக்கு எப்போ பார்த்தாலும் "ஜெயா" வின் நினைப்புத்தான்" என்ருள்.

உக்ரமசிங்கன்:—அப்படியா! நான் கூறிச் சென்றபடி இன்று வந்துவிட்டேன்.

காந்தாமணி:—ஆமாம் நீங்கள் கூறியபடியே வந்துவிட்டீர்கள். இருந்தாலும், மனது சேட்கிறதா? ஜெமீந்தார் என்ன சொன்னர்?

உக்ரமசிங்கன்:—ஜெமீந்தார் என்ன சொல்லுவது? நான் தான் ஜெமீந்தார், ஜெமீந்தார் தான் நான். நான் ஒன்று சொல்லிவிட்டால் எப்பொழுதுமே அவர் அதை மறுத்துக் கூறமாட்டார். உங்களுடைய அபிப்பிராயப்படியே அந்த

சுபதினத்தில் திருமணத்தை நடத்தி விடுவதற்கு, நாங்கள் முழு மனதுடன் சம்மதிக்கிறோம்.

சாந்தாமணி:—அப்படியா! சந்தோஷம் நீங்களிருக்கிற வரையில் எங்களுக்கென்ன குறைவுவரப்போகிறது. தவிரவும், இது யாருடைய காரியம், எல்லாம் உங்களுடையதுதானே. உங்களுக்கில்லாத அக்கரை எனக்கென்ன வந்தது? இதுவரை நீங்கள் செய்திருக்கும் உதவிக்கு நான் என்ன கைமாறு செய்வதென்பதே எனக்குத் தோன்றவில்லை.

உக்ரம:—நான் விரும்புவது எது என்பதை உன்னுள்ள மறியும், அது ஒன்றுமட்டும் மங்காதிருக்குமாயின், அதைவிட உலகில் எனக்கு வேறொன்றுமே இல்லை.

சாந்தா:—என்னுள்ளத்தையும் நீங்களறிவீர்கள், அதற்கு சில இடையூறுகளிருக்கிறதே அவைகளை ஒழித்துவிட்டால் நிம்மதியாயிருக்கலாம்.

உக்ர:—அதென்ன? சொன்னால் முடித்துவிடுகிறேன். எதுவாயிருப்பினும் நான் முடித்துவிட மாட்டேனா?

சாந்தா:—அப்படியொன்றும் பிரமாதமில்லை........... அந்தக் கிழமிருக்கிறதே, அதிருப்பதால் பெருத்த இடைஞ்சலாக இருக்கிறது நமதிஷ்டப்போல் நடப்பதற்கும் முடிகிறதில்லை.........

உக்ரம:—அப்ப..............இதற்குத்தானா இவ்வளவு பிரமாதப் படுத்தினாய்? இதைப்பற்றித்தான் நாம் முன் யோசித்தோமே அதற்குத் தக்க ஏற்பாட்டுடனேயே வந்திருக்கிறேன்.

காந்தா:—ஆ!........எவ்வித ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?

உக்ர:—(ஒரு காகிதப் பொட்டலத்தை அவள் கையில் கொடுத்து) இதற்குள் 10 மாத்திரைகளிலிருக்கின்றன. இரவு ஆகாரத்திற்குப் பின் அவர் அருந்தும் பாலில் கலந்துவிடு. ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை வீதம் இந்த 10 மாத்திரைகளையும் கொடுத்து விட்டால் போதும் ஆளைச் சரிபண்ணி விடும்.

காந்தாமணி:—கல்யாணத்திற்குள் ஆகிவிட்டால் அது தடைப்பட்டு விடுமே?

உக்ர:—இன்னும் 15 தினங்கட்குள் ஒன்றும் நேரிடாது. அதற்குள் கல்யாணமும் முடிந்துவிடும்.

காந்தா:—சரி ஒன்று தொலைந்தது. இன்னொரு தடியனிருக்கிறானே?

உக்ர:—முதலில் இந்த கிழவனைச் சரிபண்ணி விட்டால், பின் பிரதாபனைக் கொண்டே அவனைத் தொலைத்துவிடலாம்.

காந்தா:—அதெப்படி?

உக்ர:—அவனை வேலையை விட்டு நீக்கி விடலாமல்லவா?

காந்:—அது கொஞ்சம் சிரமம். அவன் நீண்டகாலமாக இந்த சமஸ்தானத்தில் வேலைபார்த்து வருகிறான். இந்த ஜமீனிலுள்ள குடிமக்களெல்லாம் அவனிடம் அன்புடையவர்கள். அவனை வேலையினின்று நீக்கிவிட்டால் ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு கிளர்ச்சி செய்ய ஆரம்பிப்பான். பின் கஷ்டமாக முடியுமல்லவா?

உக்ர.—எப்படி இருந்தாலும் நீ பெண்தானே, ஆகவே நீ பயப்படுவது சகஜம். நம் கையில் அதிகாரமிருக்கிற வரையில் அவனல் என்ன செய்ய முடியும்? அவ்விதம் அவன் ஏதாவது செய்ய முயன்றால் நம் சிப்பாய்களைக் கொண்டு கலகத்தை அடக்குவதுடன், அவனையும் சிறை செய்து சதி செய்ய முயன்ற குற்றத்திற்காக பெரும் தண்டனை அளித்து விடலாமல்லவா? எங்கள் சமஸ்தானத்தில்பார், என் பெயரைக் கேட்டாலே ஜனங்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனந்தான். கொஞ்சம் இடங்கொடுத்தால்......நம் தலையில் உட்கார்ந்து விட மாட்டார்களா? சமஸ்தானத்தை நிர்வகிப்பதென்றால் சும்மாவா இருக்கிறது. அந்தத் தடியனுக்காக நாம் பயந்து கொண்டிருந்தால் மோசமாகவல்லவா முடியும்?

காந்தா:—எனக்கொன்றும் பயமில்லை, நீங்களிருக்கும் போது எனக்கென்ன பயம்? அவனைப்பற்றி நீங்கள் தெரிந்து கொண்டால் அதற்கு தக்கபடி நாம் நடந்துகொள்வதற்கு சாதகமா யிருக்குமல்லவா? அதற்காகத்தான் சொன்னேன்.

உக்ர:—அது சரி, என்னிடம் அவனுடைய பாச்சா ஒன்றும் பலிக்காது. ஷன்முகபுரியிலே இவனைப்போலதான் ஒருதருதலை இருந்தான். அந்தப்பயல் கேவலம் ஒருவண்ணான், நமக்கு அடிமை வேலை செய்பவன், அவன் படித்து நம்மைப் போல் மேதாவியாவதானல் நாம் எப்படி சும்மா இருக்க முடியும்? உடனே நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்த வண்ணானைக் கூப்பிட்டு கொழும்பிலே படித்துக்கொண்டிருந்த அவன் மகனை உடனே ஊருக்கழைத்துத்துக் கொள்ளும்படி கூறி, அதற்காக ஒருவாரம் தவணை கொடுத்தேன். அந்த வண்ணாரப்பயல் ஒரு வாரத்திற்குள் அவன் மகனை

அழைத்துக் கொள்ளவில்லை. நான் கட்டளையிடுவது, அவன் என் கட்டளையை உதாசினப் படுத்துவதென்றால்........... அந்தப் பயலுக்கு எவ்வளவு நெஞ்சத் துணிவிருக்கவேண்டும். அவனுடைய மமதையை அடக்காது விடுபவன் நானா? எட்டாவது நாளிரவு ஆட்களை அனுப்பி, அவனும் அவன் மனைவியும் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவர்கள் குடிசைக்கு நெருப்பு வைக்கும்படி செய்துவிட்டேன். நான் அவ்விதம் செய்ய மாட்டேன்..............நான் அவனிடம் கட்டளையிட்ட பிறகு என்னைப்பற்றித் தூற்றுதலாகப் பேச ஆரம்பித்து விட்டான். எனக்கு எவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிருக்கும்?

காந்தா:—ஆத்திரம் ஏற்படாமலா இருக்கும்? அவ்விதம் செய்தால்தான் அவர்கள் அடங்குவார்கள்.

உக்ர:—அவ்விதம் செய்த எனக்கா இந்தத் தடியனை யடக்க முடியாது. நீ அதுபற்றி யெல்லாம் ஒன்றும் யோசிக்க வேண்டாம்.

காந்:—எல்லாவற்றையும் உங்கள் பொறுப்பில் விட்ட பின் எனக்கு என்ன கவலை இருக்கிறது? என் குழந்தை ராஜ போகமாக வாழவேண்டும்.

உக்ர:—அத்துடன் நமது வா........

காந்:—அதுதானிருக்கிறதே, நாம் இவ்வளவு தூரம் முயற்சி எடுப்பது எதற்காக? அதற்காகத்தான். இருந்தாலும் வெளிக்கு ஒரு காரணம் வேண்டுமல்லவா?

உக்ர:—காந்தா! என் மனம் எவ்வளவு ஆனந்தமடைகிறது தெரியுமா? எப்பொழுதும் உன் கடைக்கண் பார்வை

மட்டும் என் மீதிருக்கவேண்டும். அதுதான் நான் உன்னிடம் கேட்டுக் கொள்வதாகும்.

காந்:—நான் தான் உங்களை முதன்முதலில் சந்தித்த போதே என் மனதைப் பறிகொடுத்து விட்டேனே. எனது விருப்பத்திற்கு மாருக என்னைப் பெற்ருேர்கள் பணத்திற் கடிமையாகி கிழத்தினிடம் தள்ளிவிட்டனர். அவ்விதமிருந்தும் என் மனம் உங்களை மறக்கவில்லை. நான் உங்கள் பால் கொண்ட காதல் குன்றியதா? இல்லை. அதை உங்கள் மனமறியும். அதோடு அதற்கு சாக்ஷியாக, நமது அன்பின் பொக்கிஷமாக ஒருவனிருக்கிருன். நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைத்திருக்கிறீர்களோ நானறியேன். நான் இந்தக் கிழத்தினிடம் வந்த அன்றுமுதல் இன்றுவரை ஒரு நிமிஷ நேரமாவது இந்த கிழவரிடம் சந்தோஷமாகப் பேசி இருப்பேனு? அவரின் முகத்தையாவது நன்ருகப் பார்த்திருப்பேனு? இல்லை. நான் கர்ப்பவதியான பின், அவரின் மனதில் சந்தேகமுதிக்கா வண்ணமும், நீங்கள் கூறியதற்காகவும், என் மனதிற்குப் புறம்பாக என் தேகத்தை ஒப்புவித்தேன். அதற்காக நானடைந்த வேதனை சொல்லி முடியாது. இனி மேலும் என்மனதை அடக்கிக்கொண்டிருக்க முடியாது. நாம் முதலில் முடிக்கவேண்டியவைகளை முடித்துவிட்டுப் பிரதாபனுக்கும் நம் தீர்மானப்படி "ஜெயா" வை மணமுடித்து வைத்துவிட்டால், நமது கவலைகள் ஒழிந்துவிடும். பின் நம் இஷ்டந்தானே.

உக்ரம:—"சாந்தா! அவைகளை எல்லாம் நான் விரைவில் முடித்துவிடுகிறேன், இதற்காக நீ உன் மனதைக் குழம்ப விடவேண்டாம்" என்று கூறியவண்ணம் அங்கொரு மேஜை

யின் மீது வைக்கப்பட்டிருந்த பிராந்தியை இரு கிளாஸில் ஊற்றி ஒன்றை அவள் கையில் கொடுத்து மற்றொன்றைத் தான் அருந்தினான்.

மதிமயக்கமும், மதுமயக்கமும், மங்கையின் விழி மயக்கமும் ஒன்றுகூடிடின் சேட்பானேன்.

ஃ ஃ ஃ ஃ

"என்ன? நான் நாற்பது வருஷகாலமாக இந்த சமஸ்த்தானத்தில் வேலை பார்த்து வருகிறேன், இதுவரை இம்மாதிரியான அக்ரமத்தை என் காதாலும் கேட்டதில்லையே. இந்தக் கூட்டத்தாரை நான் கண்டுபிடித்து இவ்வக்கிரம செயலை யொழித்து ஜனங்களை திருப்திப்படுத்தா விட்டால், நான் இதுவரை இந்த சமஸ்தானத்திற்கு உழைத்து ஜனங்களிடமிருந்து பெற்ற நன்மதிப்பை இழந்து விடுவேனல்லவா? இளைய ஜெமீந்தாராம்! ஓர் மடையன்.........அவனை இளைய ஜெமீந்தாரென்று எவ்விதம் என் மனம் எண்ணும்? இல்லை. அவனுடைய அக்ரமங்களோ நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அவனுடைய நடத்தையைப்பற்றி ஜெமீந்தார் ஏதாவது கண்டித்தால் அந்தப் புண்ணியவதி அவனுக்குப் பரிந்துபேச வந்துவிடுகிறாள். ஜெமீந்தாருக்கோ ....அவளைக் கண்டவுடன் நடுக்கமேற்பட்டு விடுகிறது. கஜானாவிலிருந்த பணத்தில் பெரும்பகுதியை சிலவழித்ததோடு நில்லாது, தன்னுடைய அனுவசியச் சிலவுகளுக்குப் பணம் போதாமல் வரியையும் உயர்த்திவிட்டான். ஜனங்களும் ஆங்காங்கே கிளர்ச்சி செய்ய ஆரம்பிப்பார்கள் போல் தோன்றுகிறது. இந்த நிலையில் இம்மாதிரியான ஓர் அக்ரமம் நடந்து வந்தால் அவர்கள் மனம் எவ்வளவு கொதிப்படையும்?

..........இன்றுடன் இருபத்தி ஒன்று வருஷங்கள் பூர்த்தியாகிவிட்டது, எங்கிருக்கிறார்களோ? அவர்கள் உயிருடனிருக்கிறார்களோ? என்னவோ? அதுவும் தெரியவில்லை. நாம் அவனிடம் 21 வயது முடிந்ததும் ஊருக்குள் வந்து மறைந்திருந்துகொண்டு எனக்குத் தெரிவிக்கும்படி கூறி இருக்கிறேன். பெரிய ஜெமீந்தாரும் இன்றோ நாளையோவென்று சந்தேகிக்கும் நிலையிலிருக்கிறார். அவர் இறப்பதற்குள் அவர்கள் வந்தாலல்லவா?......உம்......நான் அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பேனா?......இந்நகரில் உலாவிவரும் கற்பழிக்கும் கூட்டத்தாரைக் கண்டு பிடிப்பேனா?......என்ன செய்வது ...." என்று எண்ணி மனம் சோர்ந்தவராய் தனது காரியாலயத்தில் ஒரு சோபாவில் அமர்ந்திருந்தார் பிரதானி தர்மஸீலர்.

அப்பொழுது ஓர் வேலையாள் வந்து "யாரோ ஓர் வாலிபன் தங்களைக் காணவேண்டுமென்று வந்திருக்கிறார்" எனக் கூறி அவரின் கட்டளையை எதிர்பார்த்து நின்றான்.

"யார்? வாலிபனா?........போய் அழைத்து வா" என்று கூறவும் அவன் சென்றான், அவன் சென்ற மறு நிமிஷம் சுமார் 22 வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபன் அங்கு வந்தான். அவன் இயற்கையிலேயே நல்ல அழகுள்ள வாலிபனாயினும் அவனது கரிய மீசைகள் அவனழகைப் பன்மடங்கு அதிகப் படுத்திற்று. அவ்வாலிபன் வந்ததும் அவனைவரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தபின் அவனுடன் சம்பாஷிக்கலானார்.

தர்மஸீலர்:—வாலிபரே! தாங்கள் யாரோ? எது விஷயமாக என்னைப் பார்க்க வந்ததோ?

வாலிபன்:—தயவுசெய்து நான் யாரென்பதையறிந்து கொள்ளப் பிரயாசைப் படவேண்டாம்.

தர்மஸீலர்:—(ஆச்சரியமடைந்தவராய்) சரி. உங்களைப் பற்றித் தெரிவிக்க இஷ்டமில்லா விட்டாலும் நீங்கள் இங்கு வந்த விஷயம் இன்னதென்பதையாவது தெரிவிக்கலா மல்லவா?

வாலிபன்:—ஆஹா! பேஷாய்!! நீங்கள் ஒரு கூட்டத் தாரைப் பிடிப்பதற்கு பிரயாசைப் படுகிறீர்களல்லவா?

தர்மஸீலர்:— (வியப்புடன்) ஆ.........ம்......அதற் கென்ன?

வாலிபன்:—நீங்கள் அக்கூட்டத்தாரைப்பற்றி ஏதாவது அறிவீர்களா?

தர்மஸீலர்:—இதுவரை ஒரு தகவலும் அவர்களைப்பற்றி எனக்கு கிடைக்கவில்லை.

வாலிபன்:—சரி அவர்களைப்பற்றிய விபரங்களை கூறுவ தானால், நீங்கள் என் நிபந்தனைக்கு கட்டுப் படுவீர்களா?

தர்மஸீலர்:—என்ன? அவர்களை நீர் அறிவீரா? நீர் மட்டும் அவர்கள் யாரென்பதையும் அவர்களிருப்பிடத்தை யும் தெரிவிப்பீரானால்.........சமஸ்தானத்தில் விளம்பரஞ் செய்திருக்கிற ரூ. 10000 மும், நான் ரூ. 5000 மும் தருகிறேன்.

வாலிபன்:— நான் பணத்தைக் கருதி வந்தவனில்லை. இது சம்பந்தமாக நான் கூறுகிறபடி நீங்கள் நடப்பதானால், ...நடப்பதாக உறுதி கூறினால், அவர்களைப் பிடித்து உங்கள் கையில் ஒப்புவிக்கிறேன்.

தர்மஸீலர்:— வாலிபரே! பெருந்தொகையான பணத்தையும் கருதாது உதவி செய்ய முன்வரும் உமது சொல்லுக்கு மாருக நடப்பேனு? இவ்விஷயத்தில் உம்மிஷ்டம் எதுவோ அவ்விதமே நடக்கச் சித்தமாயிருக்கிறேன். உமது நாமதேயத்தை நான் அறிந்துகொள்ளலாகாதா?

வாலிபன்:—எனது பெயரா? "ராம்". நீங்கள் அக்கூட்டத்தாரைப் பிடிக்கவேண்டுமானல்........உங்கள் இளைய ஜெமீந்தாரின் கல்யாணத்தன்று காலையில் 8-மணிக்கு "காட்டு மாளிகை"க்குச் செல்லும் வழியிலிருக்கும் "பளிங்கு மண்டபத்"திற்கு வந்து காத்திருங்கள், மேலே செய்யவேண்டியதை அங்கு தெரிவிக்கிறேன். தவிர உங்களை பெரியதொரு ஆபத்து சூழ்ந்திருக்கிறது. நீங்கள் ஜாக்ரதையாக இருந்துகொள்ளவேண்டும்.

தர்மஸீலர்:—(திடுக்குற்று) ஆபத்தா? எனக்கா? யாரால்? நீர் கூறுவது எனக்கொன்றும் விளங்கவில்லையே. எனக்கு என்ன ஆபத்து வரப்போகிறது?

ராம்:—உங்களுக்கு மட்டுமல்ல, இந்த சமஸ்தானத்தின் பெரிய ஜெமீந்தாருக்குங்கூட.........

தர்மஸீலர்:—ராம்! நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறது. எங்களுக்கு யாரால், என்ன ஆபத்து ஏற்படப்போகிறது? தயவுசெய்து விபரமாகச் சொல்லுங்கள்.

ராம்:—நீங்கள் இளைய ஜெமீந்தாரைப்பற்றியும், அவர் தாயாரைப் பற்றியும் எந்தவிதமான அபிப்பிராயத்துடனிருக்

கிறீர்கள் என்பதை நான் அறிவேன்......நீங்களும் பெரிய ஜெமீந்தாரவர்களும் இல்லாவிட்டால்......இந்த சமஸ்தானத்தில் நிம்மதி நிலவாது. இளைய ஜெமீந்தாரின் ஆட்சியில் ஜனங்கள் அதிக கஷ்டமடைவார்கள்......நீங்கள் உயிருடனிருப்பதால் இளைய ஜெமீந்தாருக்கும் அவர்களின் தாயாருக்கும் இடைஞ்சலாக இருக்கிறதென்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

தர்மசீலர்:—அவ்விதமானால், அவர்களே எங்களுக்கு ஆபத்து விளைவிப்பார்களென்று எண்ணுகிறீர்களா? நாங்கள் அவர்களிஷ்டப்படிதானே நடக்கிறோம், அப்படி இருக்க......

ராம்:—சமஸ்தான காரியாதிகளைப் பொறுத்தவரையில், பிரதானி என்ற முறையில், அவர்களிஷ்டப்படிதான் நடந்து வருகிறீர்கள். ஆனால் காந்தாமணி அம்மாள் காரியாதிகளுக்கு நீங்களிருப்பது பெருத்த இடைஞ்சலாக இருக்கிறது. இவ்விஷயத்தில் அவர்களுக்கு உதவிபுரிவதற்கு ஷண்முகபுரி பிரதானி உக்ரமசிங்கன் தயாராயிருக்கிறான்.

தர்மசீலர்:— (அதிக கோபத்துடன்) அயோக்யன், அவனால் இந்த சமஸ்தானத்திற்கு எவ்வித கெடுதல்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்துவிட்டான். எங்கள் ஜெமீந்தாரவர்களின் குணத்திற்கு நேர்மாறாக ஒரு ராக்ஷசி வந்து வாய்த்தாள். அவள் செய்யும் அக்ரமத்தை வெளியில் சொன்னால் ஜெமீந்தாருக்கும், ஏன்? சமஸ்தானத்திற்குமே பெரிய அவமானமாக முடியும்..... உம்......

ராம்:—ஐயா! நீங்கள் இப்பொழுது அதுபற்றியெல்லாம் சிந்திப்பதில் பிரயோசனமில்லை. நீங்கள் கௌரவ அகௌரவத்

தைப்பற்றி நினைப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. அக்ரமம் புரிபவர்கள் யாராயிருந்தாலும் அவ்வப்பொழுது அவர்களுக்கு தண்டனை அளிப்பதே முறையாகும். அது உங்களுடைய கடமையுமாகும். ஜெமீந்தார் அவர்களுக்கும் அதிக வயதாகி விட்டது. நீங்களும் அவர்களுக்கு அஞ்சுவதானால்......அவர்களுடைய துர்க்ருத்யங்கள் நாளுக்கு நாள் பெருகி நாடே அல்லோல கல்லோலப்படும்படி யாகி விடும். இந்த சமயத்தில் நீங்கள் சற்று அஜாக்ரதையாக இருப்பீர்களாயின் நீங்களும் ஜெமீந்தாரும் இறப்பது திண்ணம்.

தர்ம:—நீதிக்கு எதிராக நடப்பவர் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அஞ்சுபவன் நானல்ல. இந்த மாதிரியான இழி செயல்கள் செய்துவரும் இவர்களின் கீழ் பிரதானியாயிருந்து வேலை பார்த்து வருவதற்கும் எனக்கு விருப்பமில்லை. ஆயினும், சில காரணார்த்தமாகவே நான் உத்யோகம் வகித்து வருகிறேன். என் மனதில் புதைந்து கிடக்கும் அந்தக் காரியங்களெல்லாம் முடிவடையும்வரை நானிங்கு இருந்துதானாகவேண்டும். ஜெமீந்தாருக்கு எவ்வித ஆபத்தும் அணுகா வண்ணம் காப்பாற்றவேண்டும்......இவர்கள் எங்களைக்கொல்ல சதியாலோசனை செய்ததை நீங்கள் எவ்விதமறிந்தீர்கள்?

ராம்:—உக்ரமசிங்கன் இன்று இங்கு வந்திருக்கிறானென்பதை நீங்களறிவீர்களல்லவா?

தர்ம:— ஆம். அவன் வந்திருப்பதை நானறிவேன், அவன் என்னைப் பார்க்கவில்லை.

ராம்:—அவன் எதற்காக இன்று வந்திருக்கிறான் என்பதை நீங்களறியீர்களோ?

தர்ம:—எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் இளைய ஜெமீந்தாரின் கல்யாண விஷயமாக வந்திருக்கலாமென்று யூகிக்கிறேன். நான் நினைப்பது சரியாக இருக்குமானால், இன்னும் சிறிதுநேரத்தில் எனக்கு விஷயம் அறிவிக்கப்படும்.

ராம்:— ஆம். அவன் அதற்காகவே வந்திருக்கிறான். அவனுக்கும் காந்தாமணி அம்மாளுக்கும் நடந்த சம்பாஷணைகளைக் கொண்டே அவர்களின் சதியாலோசனையையறிந்தேன். அதோடுமட்டுமல்ல, இயந்திர மூலமாக அவர்கள் சம்பாஷணை முழுவதையும் பதிவு செய்திருக்கிறேன். ஜெமீந்தாரவர்கள் இராப்போஜனத்திற்குப் பின் அருந்தும் பாலில் விஷம் கலந்து கொடுத்து விடுவதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களால் கொடுக்கப்படும் பாலை ஜெமீந்தார் அருந்தாவண்ணம் நீங்கள் செய்துவிடவேண்டும். அவர்களின் சதியாலோசனையை நீங்கள் அறிந்திருப்பதாக அவர்கள் சந்தேகப்படாவண்ணம் நடந்துகொள்ள வேண்டும்.

தர்ம:—(வியப்பும் திகைப்புமடைந்தவராய்) ராம்! நீங்கள் செய்த இப்பெரும் உதவிக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும்? இவ்வளவு தீவிரமாக இவ்விஷயத்தில் தலையிட்டு அரும்பெரும் காரியாதிகளைச் செய்யும் நீங்கள் யாரென்பதையறிய என்மனம் தவிக்கிறது.

ராம்:—மன்னிக்க வேண்டும், நான் இந்த சமஸ்தானத்தின் பிரஜைகளில் ஒருவன்தான். உங்கள் பாலும் ஜெமீந்தார் பாலும் கொண்டுள்ள அன்பே என்னை இவ்விஷயத்தில் தலையிடும்படி தூண்டியது. நான் ஆரம்பத்தில் இவ்விஷயத்திலும் தலையிடுவேன் என்று நினைக்கவில்லை. இந்நகரில் சிலகாலமாக

கற்பழிப்பதான கொடிய அக்ரமத்தைச் செய்துவரும் கூட்டத்தாரைக்கண்டு பிடிப்பதில் முனைந்தேன். அதிலிருந்துதான் இவ்விஷயத்திலும் தலையிட நேரிட்டது. இவ்வளவுதான். எனக்கு வேலைகள் அதிகமிருக்கிறது, நான் போய் வருகிறேன், எனக்கு விடை கொடுக்கவேண்டும்.

தர்ம:—நண்பா! எவ்விதமிருந்தாலும் நீ ஓர் அதிசய மனிதனே. நான் நாள் முழுவதும் இவ்வரண்மனையிலேயே இருக்கிறேன், இங்கு நடக்கும் விஷயங்கள் எனக்கொன்றும் தெரியவில்லை. நீ வெளியிலிருந்து அரண்மனையுட் புகுந்து தைரியமாகவும், சாமர்த்தியமாகவும் இவ்வளவு உண்மைகளையும் கண்டுபிடித்திருக்கிறாய். உனது சாமர்த்தியம் போற்றத்தக்கதே. இவ்வளவு எளிதாக அரண்மனையுள் எவ்விதம் புகமுடிந்ததென்பதுதான் எனக்கு ஆச்சரியத்தையுண்டு பண்ணுகிறது.

ராம்:—இதிலொன்றும் ஆச்சரியமில்லை. இவ்வரண்மனையில் தலைமை வேலைக்காரனாக இரண்டு தினங்கட்கு முன் மாடசாமி என்பவனை வேலைக்கமர்த்தினீர்களல்லவா? அவனை அழைத்துக் கேட்டால் விஷயமுற்றும் விளங்கும். அவனிடம் அதிகார தோரணையில் கேட்டால் பயந்து ஒன்றும் கூறமாட்டான். அவனுடைய செய்கையை ஆதரிப்பதுபோலவே நீங்கள் அவனிடம் பேசவேண்டும். எனக்கு நேரமாகிறது நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். நல்யானைத்தன்று காலையில் “பளிங்கு மண்டபத்தில்” உங்களைச் சந்திக்கிறேன்.

தர்ம:—ஒரு விஷயம், கல்யாணத்திற்கு இரண்டு தினத்திற்கு முன்பு நான் ஷண்முகபுரி செல்லவேண்டுமே, நான் எவ்விதம் அன்று இங்கு வரமுடியும்?

ராம்:—அங்கு சென்ருலென்ன? காலை நாலு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டால் ஆறு மணிக்கெல்லாம் இங்கு வந்துவிடலாம். முகூர்த்த நேரத்திற்குள் மீண்டும் அங்கு போய்விடலாம்.

தர்ம:—சரி, அவ்விதமே வந்து விடுகிறேன். அக்கூட்டத்தாரைப் பிடிக்கவேண்டியது மிகமிக அவசியந்தான்.

என்று கூறவும், ராம் அவரிடம் விடைபெற்றுச் சென்ருன்.

அவன் சென்றதும், தர்மஸீலர் யோசனையிலாழ்ந்தார். "உம்......அவன் கூறியவைகளெல்லாம் உண்மையாக இருக்குமா? அல்லது அக்கூட்டத்தாரின் சூழ்ச்சியா? அவன் உண்மையிலே நமக்கு உதவிபுரிய வந்தவனுனல்,ஏன் அவனைப் பற்றிய உண்மைகளை என்னிடம் கூற மறுக்கவேண்டும்? இவன் அவர்களுடைய ஆளானல், அவர்களின் சதியாலோசனையை என்னிடம் வெளியிடுவானு? இவன் ஒருக்கால் கற்பழிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவனுயிருந்தால்......? அதெப்படி முடியும்? அக்கூட்டத்தாருக்கு காந்தாமணியின் விஷயத்தில் தலையிட என்ன பிரமேயமிருக்கிறது? இவ்விதம் நமக்கு உதவி புரிவதுபோல் பாசாங்கு செய்து அழைத்துச் சென்று நம்மைக் கொன்றுவிட நினைத்திருப்பார்களோ? நம்மைக் கொல்லவேண்டுமென்று நினைத்திருப்பின், இன்ருே நாளையோ வரும்படி அவன் கூறலாமல்லவா? கல்யாணத்தன்று ஏன்

வரும்படி கூறவேண்டும்? தவிர நானென்ன கற்கோட்டைக் குள்ளா இருக்கிறேன், இல்லையே நானும் சாதாரணமாக எவ்வித தற்காப்புமின்றி வெளியிலுலாவிக் கொண்டுதானே இருக்கிறேன். நான் எப்பொழுதும் காரியாலயத்திலிருந்து எனதில்லத்திற்கு இரவில் தனியாகத்தானே செல்லுகிறேன். அவ்விதம் செல்லும்போது ஒருநாள் மறைந்திருந்து என்னைச் சுட்டுக் கொன்றுவிட்டோடிவிட முடியாதா? சே, சே, ஒருக் காலும் இவன் அக்கூட்டத்தைச் சேர்ந்தவனாயிருக்க மாட் டான். அப்படியானால் இவன் யார்?" என்று எண்ணி ஒரு முடி வான அபிப்பிராயத்திற்கு வரமுடியாதவராய் குழம்பிய மன துடன் சிறிதுநேரம் கழித்தார். "மாடசாமியை அழைத்து விசாரித்தால் அவனைப்பற்றி ஏதாவது உண்மை தெரிகிறதா பார்ப்போம்" என்று எண்ணியவராய் மேஜைமீதிருந்த மணியை அடித்தார். உடனே ஓர் வேலையாள் ஓடிவந்து நின்றான். "நீ போய் மாடசாமியை அழைத்து வா" என்று கட்டளையிட, அவனும் சென்று சில நிமிஷத்தில் திரும்பி வந்து "எஜமான்! அவர் எங்கோ வெளியில் போயிருக்கிறாரும்" என்றான்.

"சரி அவன் வந்ததும் நான் அவனைப் பார்க்க விரும்பு வதாகக் கூறி இங்கு அனுப்பு" என்று கூறிவிட்டு சோபாவில் அமர்ந்தார்.

அத்தியாயம் 7.

அவனுடைய குரலோலியைச் செவியுற்ற ஜெயா வின் வதனத்தில் ஓர் பிரகாசம் தோன்றியது. இவ்வளவு நேரமும் குனிந்த தலை நிமிராதிருந்த ஜெயா அவன்மேற் கண்டவண்ணம் கூறவும் நிமிர்ந்து அவனை நோக்கினாள். முகம் மாறுபட்டது. வதனத்தில் தோன்றிய பிரகாசம் மறைந்தது.

"என் இன்பவடிவே! என் மனதில் காதல் மரம் தழைத்தோங்கா திருந்தால்.......இந்த சமஸ்தானத்தின் அதிகார வர்க்கத்தினரை எல்லாம் என் துப்பாக்கிக் கிரையாக்கி இருப்பேன். உன் காதலுக்கு அடிமையாகி என் வீரத்தையும், பலத்தையு மிழந்தேன். உன் காத லொன்றே என்னைப் புனிதனாக்கியது. அதுவே என் கொடூர சிந்தையை மாற்றியது. நான் ஓர் புது மனிதனாகி விட்டேன்."

ஷண்முகபுரியில் எங்கு பார்த்தாலும் புதிதாக அவ்வூரில் திறவப்பட்டிருக்கும் "ஸில்க் பஜாரை"ப்பற்றிய பேச்சுகள் தான். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் கண்களைக் கவரும் பலவித ஸில்க் தினுசுகளைக் கொண்டுவந்து வியாபாரம் செய்து வந்தான் அதன் முதலாளியாகிய மோஹன்லால்.

ஒவ்வொருநாளும் ஏராளமான ஜனங்கள் வந்து தங்க ளுக்கு வேண்டியவற்றை வாங்கிச் செல்லலாயினர். நாளுக்கு நாள் வியாபாரம் விருத்தியடைந்து வந்தது.

இரவு 7-மணி இருக்கலாம். "ஸில்க் பஸாரில்" நூற்றுக் கணக்கான மின்சார விளக்குகள் ஆங்காங்கே நட்சத்திரம் போன்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. வேலையாட்க ளெல்லாம் பரபரப்புடன் காணப்பட்டனர். ஒரு வேலையாள் ஓடிவந்து பணம் வாங்குமிடத் (காஷில்) திலமர்ந்திருந்த மோஹன்லாலிடம் ஏதோ கூறவும், அவர் எழுந்து விரைந்து வெளியில் வந்து அங்கு அப்பொழுதுதான் காரில் வந்திறங்கிக் கொண்டிருக்கும் ஜெமீந்தார் விக்ரமசிங், அவரின் புதல்வி ஜெயா, பிரதானி உக்ரமசிங் முதலியோரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று அவர்களுக்காக போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமரச் செய்தபின், ஜெமீந்தாரை நோக்கி "பிரபோ! தங்களுடைய வருகையால் அடியேனுடைய இவ் வியாபார ஸ்தலம் பெருமையடைகிறது. நம் ஜெயா அம்மா வின் திருமணத்திற்கென்றே முழுதும் ஜரிகையினாலாக்கப் பட்ட பல சேலைகள் தருவித்திருக்கிறேன். இதோ கொண்டு வரச் சொல்லுகிறேன், பாருங்கள்." என்று மகிழ்ச்சியுடன் கூறி பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வேலையாளை நோக்கினர்.

அவ்வேலையாள் சென்று கண்ணாடிப் பீரோவில் அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்த பல சேலைகளை எடுத்துவந்து ஜெமீந்தாருக்கு முன் போடப்பட்டிருந்த மேஜையின்மீது வைத்தான்.

அவைகளில் ஆளுக்கொன்ருக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஜெமீந்தாரும் பிரதானியும்.

மோஹன்லால் ஒரு பச்சை நிறப்பட்டை எடுத்து ஜெயாவிடம் கொடுத்து "அம்மா! இந்த பட்டு எவ்வளவு

அழகாயிருக்கிறது பாருங்கள், இந்த பச்சை நிறத்திற்கும் ஜரிகைக்கும் ரொம்ப எடுப்பாக இருக்கிறது. இது பிடிக்கா விட்டால் வேறு எதேஷ்டமான கலர்களிருக்கிறது, பாருங்கள்.'' என்று கூறி அவளிடம் சிலவற்றை எடுத்துக் கொடுத்தான்.

அவனுடைய குரலொலியைச் செவியுற்ற ஜெயாவின் வதனத்தில் ஓர் பிரகாசம் தோன்றியது. இவ்வளவுநேரமும் குனிந்த தலை நிமிராதிருந்த ஜெயா, அவன் மேற்கண்ட வண்ணம் கூறவும் நிமிர்ந்து அவனை நோக்கினுள். முகம் மாறு பட்டது. வதனத்தில் தோன்றிய பிரகாசம் மறைந்தது.

அப்பொழுது ஜெமீந்தார் ஆசனத்தை விட்டெழுந்து ஜெயாவை நோக்கி "அம்மா! உனக்கு வேண்டியவைகளெல் லாம் மோஹன்லாலிடம் கூறி தனியாக எடுத்துவைக்கும்படி செய். நானும் பிரதானியும் இதைச்சுற்றிப் பார்த்து வருகி ரேம்'' என்று கூறி பிரதானியை அழைத்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியாகப் பார்வையிட்டு வரலானுர்.

மோஹன்லால் தன் காரியதரிசியை அவர்களுடன் அனுப்பிவிட்டு மீண்டும் பல ஜப்பர் ஸில்க்குகளைக் கொண்டு வந்து ஜெயாவிடம் காண்பித்துக் கொண்டிருந்தான்.

ஜெயாவின் மனம் எதிலும் செல்லவில்லை. அவன் கொடுப்பவற்றை எல்லாம் வாங்கிப் பார்த்துவிட்டு மற்ெருரு புறம் வைத்துவிட்டாள். அவள் பார்வையிட்டு வைத்த ஸில்க்குகளை எல்லாம் தனியாக எடுத்து வைத்துவிட்டு அவ ளிடம் ஏதோ கூற வாயெடுத்தவன் ஜெமீந்தாரின் வரவை யறிந்ததும் அதை மாற்றி "அம்மா! இவைகளை எல்லாம்

சிப்பங் கட்டிவிடவா" என்றான். "அவன் என்ன கேட்கிறான் நாம் என்ன எடுத்தோம் என்பதை எல்லாம் கவனியாது "உம்" என்று பதிலிறுத்தாள் ஜெயா. இதற்குள் ஜெமீந்தாரும் அங்கு வந்து மோஹன்லாலை நோக்கி "மோஹன்லால்! ஜெயா விரும்பியதெல்லாம் தனியாக எடுத்தாகி விட்டதா?" என்றார்.

"ஆம் பிரபோ! இதோ இருக்கிறது" என்று கூறி ஜெயாவால் பார்வையிடப்பட்ட ஸில்க்குகளைக் காண்பித்தான்.

"சரி, எங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் தனியாக எடுத்துவைத்திருக்கிறோம். இந்த சாமான்களை ஒரு பெட்டியிலும் அவைகளை வேறொரு பெட்டியிலுமாக வைத்து அரண்மனைக்கு அனுப்பிவிடும்" என்று கூறிவிட்டு ஜெயாவை அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அரண்மனை சேர்ந்ததும் ஜெயாவின் மனம் சொல்லொணு வேதனை யடைந்தது. ஆகாரமும் வேண்டாமென்று கூறி தனதறையிலிருந்த தோழிகளை வெளியிலனுப்பியதுடன் தனக்கு தூக்கம் வருகிறதாகவும், தன்னை யாரும் தொந்தரவு செய்யவேண்டாமென்றும் கூறியனுப்பினுள்.

அவர்கள் சென்றதும் ஜெயா எழுந்து சென்று அறையின் கதவை உட்புறம் தாளிட்டுவிட்டு தன் மஞ்சத்தில் வந்தமர்ந்தாள். மனம் தாமரை இலைத் தண்ணீர்போல் தத்தளித்தது. "உம்...அவ்விதமிருக்குமா? குரலில் கொஞ்சமும் வித்தியாசமில்லை...உருவம் நேர்மாறாக இருக்கிறது...அவர் என்னுடன் சம்பாஷித்த பொழுதெல்லாம் என் அன்பர் என்னுடன் பேசுவதுபோலவே இருந்தது. ஒருக்கால், அவரே

இவ்வித மாறு வேடம் புனைந்து வந்திருக்கப்படாதா? அதெப்படி முடியும்? இவர்களைப் பார்த்தால் பரம்பரை வியாபாரிகளைப் போலல்லவா தோன்றுகிறது. நமது அன்பரோ! வியாபாரஞ் செய்து பழக்கமில்லாதவர்......ஐயோ! அவர் உயிருடனிருக்கிறாரு? இறந்து விட்டாரு? என்பதைக்கூட அறிய முடியாது தவிக்கிறேனே" என்று பற்பல எண்ணங்களால் தாக்கப்பட்டு மனஞ்சோர்ந்தவளாய் மஞ்சத்தில் சாய்ந்தாள்.

அப்பொழுது வெளியில் யாரோ "அம்மா! அம்மா!!" வென்று கூவி கதவை இடிப்பதைச் செவியுற்று எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அங்கே நாலைந்து மனிதர்கள் தலையில் ஒரு கள்ளிப்பெட்டியைச் சுமந்துகொண்டு நின்றனர். அவர்களில் ஒருவன் "அம்மா! ஜெமீந்தாரய்யா, இந்த பொட்டியை இந்த அறையிலே வைக்கும்படி சொன்ணுங்க" என்று கூறினுன்.

அந்த பெட்டி ஸில்க் பஸாரிலிருந்து வந்திருக்கிறதென்பதை யறிந்த ஜெயா அதைக் கொண்டுவந்து உள்ளே வைக்கும்படி சைகை செய்ய, அவர்களும் அதைக் கொண்டுவந்து அவ்வறையில் ஒதுப்புறமாக வைத்துவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் அக்கள்ளிப் பெட்டியின் மேல் மூடியை அகற்றிவிட்டு அதிலிருந்த ஸில்க்குகளை ஒவ்வொன்ருய் எடுத்துப் பார்த்துக்கொண்டே இருந்தாள்ஜெயா. மேலே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பீஸ்களை எடுத்ததும், மீதியிருந்த பீஸ்களெல்லாம் தானுக ஒருபுறம் விலகியது. இதைக்கண்ணுற்ற ஜெயா ஆச்சரியமும், பயமும், கொண்டவளாய் அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்

தாள். இவ்விதமாக அந்த ஸில்க் பீஸ்களெல்லாம் ஒருபுறம் விலகி, அதன் மத்தியிலிருந்து ஒரு மனிதன் வெளிப்பட்டான்.

ஜெயா பயத்தால் சப்தமிட வாயை திறந்ததைக்கண்டதும் அம்மனிதன் "ஜெயா! நான் யாரென்பதை இன்னுமறியவில்லையா?" என்றான். அக்குரலொலியைச் செவியுற்ற ஜெயா திடுக்குற்று, அம்மனிதனை உற்றுநோக்கினாள்...'மோஹன்லால்' என்ற வார்த்தைகள் ஈன சுரத்துடன் அவள் வாயினின்று வெளிப்போந்தது. சிறிது தைரியங் கொண்டவளாய் "மோஹன்லால்! இந்த நேரத்தில் திருட்டுத்தனமாக ஏன் இங்கு வந்தீர்? மரியாதையாக வெளியில் சென்றுவிடும். இல்லையேல், உமக்கு ஆபத்தாக முடியும்" என்று கோபமாகக் கூறினாள்.

"ஜெயா! நான் எந்த இடத்திலும் மரியாதைக் குறைவாக நடந்துகொள்பவனில்லை. இப்பொழுதும், நான் எந்தக் கெட்ட எண்ணத்தோடும் இங்கு வரவில்லை."

"உம் மனதில் எவ்வித கெட்ட எண்ணமுமில்லையானால்? நீர் கௌரவமாக நடந்து கொள்பவரானால்? இவ்விதம் திருட்டுத்தனமாக வரவேண்டியதில்லையே......சரி நீர் வந்த காரணம் தான் என்ன? கூறும் பார்ப்போம்."

"ஜெயா! நான் யாரென்பதையும், நான் ஏன் இவ்விதம் திருட்டுத்தனமாக இங்கு வரவேண்டியதிருந்ததென்பதையும் நீ யறிவாய், இதோ பார்." என்று கூறிக்கொண்டே தன் மீசையையும், தலையில் வைத்திருந்த டோப்பாவையும்,

அகற்றினன். இப்பொழுதிருக்கும் அவனின் வடிவத்தைக் கண்ணுற்ற ஜெயா வியப்பும், திகைப்பும், ஆச்சரியமும், ஒருங்கே கொண்டவளாய் "அன்பரே!" என்று தன்னையு மறந்து கூறினள். கண்களில் நீர் அருவிபோல் ஓடியது.

"ஜெயா!"

"அன்பரே! மன்னிக்க வேண்டும். நீங்கள் தான் மோஹன்லால் என்பதை நான் அறியமுடியாத விதமாய் உங்கள் மாறுவேடம் அமைந்திருந்தது. ஆனல் ஒன்று, நான் உங்கள் குரலொலியை முதன்முதலில் செவியுற்றவுடனேயே சந்தேகங் கொண்டேனுயினும், உங்களுடைய தோற்றத்தில் பெருத்த வித்தியாசங்களிருந்ததாலும், நீங்கள் வியாபாரத்திற்கு முற்றும் புதியவரென்பதை நான் அறிவேனுகையாலும், வியாபாரத்தில் நிபுணராய் விளங்கிய மோஹன்லால் நீங்கள் தானென்று நான் எவ்விதம் நிச்சயிக்க முடியும்? காதலா! ஐயோ!!......உங்கள் தேகத்தில் அன்று விழுந்த அடிகளை நினைத்தாலும் என்மனம் நடுக்குறுகிறதே......பாபி...நான்... மகா பாபி...இப்பாபி என்னுலன்றோ நீங்கள் இவ்வளவு கஷ்டமடைய நேரிட்டது...என்னை மன்னிப்பீர்களா?......" என்று தழதழத்த குரலுடன் கூறினள் ஜெயா. கண்ணீர் மடைதிறந்து பல வாய்க்கால்களாக ஓடியது. அதற்குமேல் அவளால் ஒன்றுங் கூறமுடியவில்லை. கால்களும் தள்ளாடின. தனது சிரத்தை அவனின் மார்பில் புதைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழலானுள்.

தன்மேல் புதைந்துகிடக்கும் காதலியின் சிரத்தை தன் கரங்களால் நிமிர்த்தி, அவள் கண்களிலிருந்து வடியும் நீரைத் துடைத்து "நடந்துபோன விஷயத்தை நினைத்து வருந்து

வதிலும், அது உன்னுல் எற்பட்டதென்று கூறுவதிலும், எவ்வித அர்த்தமுமில்லை. வீணுக நீ என் வருந்துகிருய்? எங்கே என்னைப் பார்?' இதற்குக் காரணம் நீயுமல்ல? நானுமல்ல? நமக்குள்ளிருக்கும் எற்றத்தாழ்வே யாகும். அவ் வேற்றத்தாழ்வை நாம் கருதாவிட்டாலும், உன் தந்தையைப் போன்றதோர் வைதிகப் பித்தருக்கு, அதிகார வர்க்கத்தினருக்கு, இது பிரமாதமாகவே தோன்றும். தன் கௌரவமே போய்விட்டதாக ஓலமிடுவார். குலப்பெருமையே அழிந்து விட்டதாக கதறுவார். நம்மைப் பிரிக்க கொடிய வழிகளிலெல்லாம் பிரவேசிப்பார். இவ்விதமெல்லாம் நேருமென்று அன்று கூறியதற்கு "என்னகஷ்டம் வந்தபோதிலும் நான் சகித்துக் கொண்டிருப்பேன்" என்று கூறினுயல்லவா? அப்பொழுதிருந்த உன்மனேதிடம் இப்பொழுது எங்கு போய்விட்டது? அன்று நள்ளிருளில் ஆறுடையில் வந்து எனது ஆட்களுக்கு நிலைமையை அறிவிப்பதற்கு துணைபுரிந்தது எது? மனோதிடமல்லவா? நீ யன்று அதைரியத்துட னிருந்திருப்பாயாயின், என் கதி என்னவாயிருக்கும்? என்னை மீண்டும் இப்பொழுது சந்திக்க முடியுமா? இதிலிருந்து எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும், அஞ்சா நெஞ்சத்துடனிருந்தால் அக்கஷ்டத்தினின்று விடுபடலாம் என்பதை நீ யுணரவில்லையா? எங்கே? உனது நீல விழிகளால் என்னைப்பார், உனது துக்கம் ஒழிந்ததென்பதை புன்சிரிப்பால் தெரிவி பார்ப்போம்" என்று கூறி அவள் மனதுள்ளெழுந்த துக்கத்தை மாற்றினுன் காதலன்.

•

தன் காதலனுடைய தைரிய மொழிகளால் மனந்தேறிய ஜெயா, அதிக சிரமப்பட்டு புன்சிரிப்பை வருவித்துக்கொண்டு

"அன்பரே! நீங்களென்னமோ அவ்விதம் கூறுகிறீர்கள். ஆனால், எந்தப் பெண்தான் தன் காதலனடைந்த கொடிய தண்டனையைக் கண்டு சதறியழ மாட்டாள்? எனக்கு எவ்வித அதைரியமுமேற்படவில்லை. ஆனால் அதைநினைத்தால் என்னால் தாங்க முடிகிறதில்லை......உம்......அது போகட்டும், உங்கள் தேகத்தில் ஏற்பட்ட காயங்களெல்லாம் ஆறிவிட்டனவா? நீங்களெவ்விதம் இவ்வளவு தேர்ந்த வியாபாரியானீர்கள். உங்கள் தோழர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள்?" என்று பல கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கினாள் ஜெயா.

"ஜெயா! நான் எல்லாம் விபரமாக கூறுகிறேன். நீ அன்று எவ்விதம் என்னுடைய ஆட்களுக்குத் தெரிவிக்க முடிந்ததென்பதை சொல்லிவிடு."

"நான் பெரிய காரியத்தைச் செய்துவிட்டேன் அதை நீங்கள் கேட்டுத் தெரிந்துகொண்டுவிட வேணுமாக்கும்?"

"பெரிய காரியமா? பெரிய உதவி, மகத்தான உதவி என்று ஆயிரம்முறை கூறவேண்டும். உன்னால் ஒருவன் இறப்பதினின்று காப்பாற்றப் பட்டானென்றால்......அது சாதாரணமா.....?"

"போதும் போதும், அந்த விஷயத்தை மேலும் கூறாதீர்கள். எனக்கு என்னவோ போலிருக்கிறது. உம்...... நான் கூறத்தான் வேண்டுமோ?"

"ஆம்........என் உனக்கு அதை விவரிக்க இஷ்டமில்லையா?"

"உம்......ஹாம்.........அப்படி யொன்றுமில்லை........ நீங்கள்தான் உங்கள் ஆள் கூறித்தெரிந்து கொண்டிருப்பீர்களே"

"நான் அவனிடமிருந்து எவ்விதம் முழு விபரமும் தெரிந்துகொள்ள முடியும்? நீ ஆனுடை தரித்து அங்கு வந்து அவனுடன் சம்பாஷித்திருந்து வந்த அளவிற்கு, அவனிடமிருந்து தெரிந்துகொண்டேன். நாமிருவரும் சம்பாஷித்துக்கொண்டிருந்த சமயம் உக்ரமசிங்கன் தோன்றியதற்கு பின்னும், நீ இரவு என் ஆளைச் சந்தித்ததற்கு முன்னும் இடையில் என்ன நிகழ்ந்தது என்பதைத் தானே நான் அறிய விரும்புகிறேன்."

"அன்பரே! நமது சம்பாஷணையில் குறுக்கிட்ட உக்ரமசிங்கனைக் கண்டதும் நான் பயத்தால் மூர்ச்சையாகி விட்டேன். நான் மயக்கம் நீங்கி எழுந்தபோது என் அறையிலிருக்கக் கண்டேன்" என்று கூறி, தன் தகப்பனார் உக்ரமசிங்கனுக்கிட்ட கட்டளையைத்தான் அறிந்ததும், பின் கயிற்றின் உதவியைக் கொண்டு ஜன்னல் வழியாக அரண்மனையை விட்டு வெளிப்பட்டு, அவனின் ஆளைக்கண்டு விஷயத்தைக் கூறியதுமாகிய விபரங்களை ஒன்றுவிடாமல் கூறி முடித்ததும் "அப்ப......தெரிந்து கொண்டீர்களல்லவா?" என்றாள்.

"ஜெயா! ஏதேது, நீ ரொம்ப பிரமாதமான வேலைகளெல்லாம் செய்திருக்கிறாயே. இவ்விதமெல்லாம் கல்பனைக்கதைகளில்தான் படித்திருக்கிறேன், நீ கல்பனைக்கதையை மெய்ப்பித்து விட்டாயே! பேஷ்! உன் தைரியமே தைரியம்" என்று மகிழ்ச்சியுடன் கூறி மேலும் "என் அன்பே! எனது ஆட்களால் காப்பாற்றப்பட்ட 10 தினங்களில் முற்றும் குணமடைந்தேன். எழுந்து நடமாடவும் ஆரம்பித்தேன். முதன் முதலில் உன்னைப்பற்றித்தான் விசாரித்தேன். உன்னை தேவபுரி ஜெமீந்தாரின் குமாரன் பிரதாபனுக்கு மணமுடிக்க

நிச்சயித்து அதற்கான ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்து வருகின்றனவென்றும், சில தினங்களிலேயே திருமண வைபவம் நடைபெறக் கூடுமெனவும் கேள்விப்பட்டேன். ஏற்கனவே அவனையே அவர்கள் உனக்கு மணாளனாக வரித்திருந்தாலும், அன்றைய நிகழ்ச்சிக்குப் பின் இனிமேல் தாமதித்தால் எங்கு காரியம் கெட்டுவிடுமோவெனப் பயந்து, இவ்வளவு துரிதமாக ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்று எண்ணினேன். உன் மனதிற்கு முற்றும் விரோதமாகவே இந்த ஏற்பாடு செய்யப் படுகிறதென்பது நான் அறிந்தது தானே. அதோடு நீ அன்று கூறிய உறுதிமொழிகளைக் கொண்டு இந்தக் கட்டாயக் கல்யாணத்தினின்றும் உன்னை விடுவிக்க வேண்டிய பொருப்பு என்னைச் சேர்ந்ததன்றோ? ஆகவே, கொஞ்சமும் தாமதியாது உன்னை எவ்வழியில் இதிலிருந்து காப்பாற்றலாம் என்ற யோசனையிலாழ்ந்தேன். எனது சகாக்களுடனும் யோசித்து ஓர் முடிவிற்கு வந்தோம். நாங்களிதுவரையில் பல பணக்காரர்களிடமிருந்து கொள்ளையடித்து வைத்திருந்த ஏராளமான பணத்தைக் கொண்டு பெரும் நகரங்களுக்குச் சென்று ஸில்க்குகளை மொத்தமாக வாங்கிவந்து, வடநாட்டார் போல் வேடமணிந்து உன் தந்தையிடம் அனுமதி பெற்று ஓர் ஸில்க் பஸாரை ஏற்படுத்துவதென்றும், அதன்மூலம் உன் தந்தையின் சிநேகிதத்தைப் பெற்று சமயம்பார்த்து உன்னிடம் நான் யாரென்பதைத் தெரிவித்து, உன்னை இங்கிருந்து வெளியேற்றி விடுவதென்றும் தீர்மானித்து, அவ்விதமே செய்தேன். நான் வெளி ஜனங்களுக்கும் உன் தந்தை, பிரதானி முதலியோருக்கும் எப்பொழுதும் மோஹன்லாலாகவே இருந்து வரலாம். நீ காணாது போய்விட்டால் கள்வர் தலைவனாகிய என்னையும்,

என் கூட்டத்தாரையும்தான் சந்தேகிப்பார்களே தவிற மோஹன்லாலே சந்தேகிக்க மாட்டார்களல்லவா? நாங்கள் ஸில்க் பஸாரை ஏற்படுத்திய இந்த சொற்ப தினங்கட்குள் உன் தந்தையின் அன்பை பூரணமாகப் பெற்றுவிட்டோம். எங்களுடைய உத்தேசப்படி. இன்று உன்னைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஆனால் இந்த ஒரு வழியைத் தவிற உன்னைக் காப்பாற்றுவதற்கு வேறு வழியில்லையா? என்று நீ கேட்கலாம். வேறு எத்தனையோ வழிகளிருக்கின்றன. அவ்வழிகளில் நான் ஏன் பிரவேசிக்கவில்லை என்பதற்கு ஒரு காரணமுமிருக்கிறது. நான் எந்த நோக்கத்தோடு ஒரு கூட்டத்தைச் சேர்த்து, அதற்கு தலைமைப் பதவியை வகித்து வந்தேனோ, அந்தப் பழிவாங்கும் எண்ணம் என் மனதை விட்டகன்று விடவே, என் தோழர்களையும் வேறு துறையிலீடுபடச் செய்யவேண்டியது அவர்களின் தலைவனாகிய என் கடமையல்லவா? என்னின்ப வடிவே! என் மனதில் காதல்மரம் தழைத்தோங்கா திருந்தால்......இந்த சமஸ்தானத்தின் அதிகார வர்க்கத்தினரை எல்லாம் எனது துப்பாக்கிக் கிறையாக்கி இருப்பேன். உன் காதலுக்கு அடிமையாகி என் வீரத்தையும், பலத்தையுமிழந்தேன். உன் காதல் ஒன்றே என்னைப் புனிதனுக்கியது. அதுவே என் கொடூர சிந்தையை மாற்றியது. நான் ஓர் புது மனிதனாகிவிட்டேன். எனது ஆட்களெல்லாம் என்னிடம் அன்பு கொண்டவர்களாகையால், அவர்களும் வியாபாரத்தில் தேர்ச்சியடையட்டும் என்று எண்ணியே இந்த ஸில்க் பஸாரை திறுவினேன். எனது இந்தக் கம்பெனிக்கு பல கிளைகளை ஸ்தாபித்திருக்கிறேன்." என்று கூறி மேலும் கூறுவதற்குள் வெளியிலிருந்து "ஜெயா! ஜெயா!!" என்று ஜெயாவை

அழைக்கும் அவள் தந்தையின் குரலொலியைச் செவியுற்ற இருவரும் இடியுண்ட நாகம்போல் நடுநடுங்கினர். சில நிமிஷங்கள் வரை அவ்வறையில் நிசப்தம் குடிகொண்டது. இவ்வாபத்தினின்று தப்புவதற்கு ஏதாவது வழி இருக்கிறதாவெனச் சுற்றுமுற்றும் பார்த்தாள் ஜெயா. "பட பட"வெனக் கதவை இடித்தார் ஜெமீந்தார். ஜெயாவின் உடல் நடுங்கியது. இதற்கிடையே அவளின் கண்கள் அவ்வறையை ஆராயத் தொடங்கியது. திடீரென்று அவளது வதனம் மகிழ்வெய்தியது. தன் காதலனுடைய கரங்களைப்பற்றி இழுத்துச் சென்று ஸில்க்குகளிலிருந்த கள்ளிப்பெட்டிக்கு சமீபமாக இருந்த மறைவு தட்டி (Screen) யின் பின்புறம், அவனை மறைந்துகொள்ளும்படி செய்து, தன் அலங்காரங்களை எல்லாம் சிர்குலைத்துவிட்டு, தூக்கத்திலிருந்து அப்பொழுதுதான் விழித்தெழுந்தவள் போன்ற பாவனையுடன் சென்று கதவைத் திறந்ததும் "அப்பா!" நன்றாகத் தூங்கிவிட்டேன். எதற்காக அப்பா என்னை அழைத்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே கொட்டாவி விட்டாள்.

"என்னம்மா மணி 9 தானே ஆகிறது. அதற்குள்ளாகவா தூங்கிவிட்டாய், சரி நீ வேண்டுமானால் போய் தூங்கு, நாளை வேண்டுமானாலும் பார்த்துக் கொள்வோம். இப்பொழுதொன்றும் அவசரமில்லை" என்று கூறி திரும்பினர்.

"இல்லையப்பா, எனக்குத் தூக்கம் கலைந்துவிட்டது. உள்ளே வாருங்கள், எதற்காக என்னை எழுப்பினீர்கள்?" என்று வினவினள்.

"ஒன்றுமில்லே, வியாபாரி ஸில்க்குகளெல்லாம் அனுப்பி இருந்தானே, அவைகளைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன்." என்று கூறியவண்ணம் அறையினுட் பிரவேசித்தார் ஜெமீந்தார். அவரைத்தொடர்ந்தே உக்ரமசிங்கனும் உட்புகுந்தான்.

ஜெமீந்தார் உக்ரமசிங்கனிடம் கள்ளிப்பெட்டியிலிருக்கும் ஸில்க் பீஸ்களை வெளியிலெடுக்கும்படி கூற, அவன் கள்ளிப் பெட்டியைத் திறந்து ஒவ்வொன்ருக எடுத்து ஜெமீந்தாரிடம் காண்பித்துவிட்டு மீண்டும் அப்பெட்டியிலேயே வரிசையாக அடுக்கிவைத்து திரும்பியவன்,காலில் ஏதோ தட்டியதையுணர்ந்து குனிந்து அதுஎன்னவென்றுபார்த்தான். அது ஆண்களணியும் "பூட்ஸ்." ஜெபா அடிக்கடி ஆணுடை தரித்து வேட்டைக்குச் செல்வது வழக்கமாகையால், அது அவளுடைய பூட்ஸாகவே இருக்கலாமென்று நினைத்து அதை ஒரு புறமாக ஒதுக்கித்தள்ள எண்ணி, தன் கால்களால் வேகமாய் தள்ளினுன். அந்த வேகத்தில் கால்கள் மறைவு தட்டியில் பட்டு அது இவன்மேல் சாயவும், அதைத் தூக்கி சிறிது தூரத்தில் கொண்டுபோய் வைத்தான். இதைக் கண்ணுற்ற ஜெபா பயத்தால் தன்னையும்மறந்து வாய்விட்டலறி விட்டாள். அவளின் பயத்திற்குக் காரணமென்ன வென்பதை யறிய தங்கள் பார்வையை அந்த அறை எங்கும் செலுத்தினர். மறைவு தட்டி இருந்த இடத்தில் அசையாது கற்சிலேபோல நின்றுகொண்டிருந்த கள்வர்தலைவனைக் கண்ட பிரதானி, சட்டென்று தன் ரிவால்வாரை எடுத்து அவன் முகத்திற்கு நேரே பிடித்தவண்ணம் அவனை நெருங்கினுன். அவன் கள்வர்

தலைவன் எனக் கண்டதும், "பிரபோ! கள்வர் தலைவன்!!" என்றான்.

யார்? கள்வர் தலைவனா? என்றார் பயத்துடன் ஜெமீந்தார்.

"ஆம் பிரபோ! அவன் வலியவந்தகப்பட்டுக் கொண்டான். இனி அவன் தப்புவதேது."

"உக்கிரம! அந்தக் கள்ளிப்பெட்டியின் மேல் கிடக்கும் கயிற்றை சீக்கிரம் எடுத்து அவன் கரங்களைப் பிணைத்துவிடு. முன் உன் அஜாக்ரதையினாலேயே இவன் தப்பிச் செல்ல நேரிட்டது" என்று ஜெமீந்தார் கூறவும், உக்ரமசிங்கன் ரிவால்வாரை ஜெமீந்தார் கையில் கொடுத்துவிட்டு கள்ளிப் பெட்டிமேல் கிடந்த கயிற்றை எடுத்துக் கொண்டு நம் வாலிபனை அணுகினான்.

இவற்றை எல்லாம் கவனித்து நின்ற ஜெயாவின் தேகம் நடுங்கியது, மூளை சுழன்றது, பிரக்ஞை தவறி தடாலெனக் கீழே விழுந்தாள்.

நம் வாலிபன் அடித்துவைத்த சிலை என நின்றான். அவனுடைய வதனத்தில் எவ்வித மாற்றமுமில்லை தனது கரங்களை ஒன்றோடொன்று பிணைக்கவரும் பிரதானியை நோக்கி "உக்ரமசிங்கரே! என் ஒருவனைப் பிடிப்பதற்கு இவ்வளவு சிரமம் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? உங்களுடைய துப்பாக்கி முனைக்கு முன் என்னால் என்ன செய்ய முடியும்? இதோ என் கரங்களை சிரமமன்னியில் பிணைத்துவிடும்" என்றுகூறி தன் கரங்களை நீட்டினான்.

அவன் கூறியவற்றைக் கேட்ட உக்ரமசிங்கன் உண்மையிலேயே அவன் பணிந்து விட்டான் என்று நினைத்து, பெரு

மிதத்துடனும், சற்று அஜாக்ரதையாகவும் அவனை அணுகினன்.

அவன் தன் சமீபம் வரும்வரை புன்சிரிப்புடன் அவனை நோக்கிக் கொண்டிருந்த நம் வாலிபன் திடீரெனப் புலி போல் பாய்ந்து, உக்ரமசிங்கனைத் தன்னிரு கரங்களாலும் தூக்கி ஜெமீந்தாரின் மீது எறிய, ஜெமீந்தாரும் உக்ரமசிங்கனும், ஒருவர் மீதொருவர் விழுந்து புரண்டனர்.

மறு நிமிஷத்தில் வாய்விட்டு கலகலவென்று சிரித்த வண்ணம் மைதானத்தின் பக்கமாக உள்ள ஜன்னலின் வழியாக வெளியே பாய்ந்து விட்டான்.

இவ்விதம் நடக்குமென்று கனவிலும் எதிர்பாராத ஜெமீந்தாரும், உக்ரமசிங்கனும் ஒருவரை யொருவர் பார்க்கவும் வெட்கியவர்களாய் எழுந்து ஜன்னலின் பக்கமாக ஓடி வெளியில் நோக்கினர்.

சிறிது தூரத்தில் அவன் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டதும், ஜெமீந்தார் துப்பாக்கியால் பலமுறை அவனை நோக்கி சுட்டார். குண்டுகள் அவனை அணுக மறுத்து விட்டன.

அடுத்த நிமிஷத்தில் உக்ரமசிங்கன் தலைமையில் ஒரு குதிரைப்படை, கள்வர் தலைவனைத் துரத்திச் சென்றது.

அத்தியாயம் 8.

"இவனுடைய உதவினுலேயே, தான் அரண்மனை யில் பிரவேசித்ததாக இவன் தலைவனே என்னிடம்கூறி இருந்தும், இவன் அதுபற்றி எதுவும் கூற மறுக்கிறன். இவன் தலைவனின் பெயர்......"ராம்"......அவன்...... யார்?.....?

"பிரபோ! நமஸ்காரம்!"

"யார்? மாடசாமியா? வா வா. உன்னிடம் ஒரு விஷயம் கேட்பதற்காகவே யழைத்தேன்" என்ருர் தர்மஸீலர்.

மாடசாமி பயமும் ஆச்சரியமும் அடைந்தவனுய், "எஜமான்! என்னுகிட்டே என்னத்தே கேட்கப் போகிறீங்க, தெரிஞ்சுதுன்னு சொல்லுறேனுங்க எஜமான்."

தர்மஸீலர்:—உனக்கு "ராம்" என்னும் வாலிபனைத் தெரியுமா?

மாடசாமி:—(திடுக்குற்றவனுய்) யாருங்க "ராம்" எனக்கு அவுங்களே தெரியாதுங்களே.

தர்ம:—மாடசாமி நீ பயப்படுவதாகத் தெரிகிறது. என்னிடம் கூறுவதற்கு நீ ஏன் பயப்படவேண்டும்? நீ எந்த வேலையை கைக்கொண்டு இந்த அரண்மனையில் வேலைக்கு அமர்ந் திருக்கிருயோ அதில், நானும் உங்களுடன் சேர்ந்துழைக்கத் தயார். என்ன பேசாதிருக்கிருயே? இன்னும் உனக்கு என் மேல் நம்பிக்கை ஏற்படவில்லையா? இல்லை, என்னை ஏமாற்றி வேலைக்கமர்ந்ததிற்காக நான் உன்னைத் தண்டிப்பேன் என்ற

பயமா? இல்லேயேல், விஷயத்தை வெளியிடுவதால் உன் தலைவ னின் கட்டளையை உதாசினப் படுத்தியதாகுமென்று நினைக் கிருயா?

மாட:—எஜமான்!......மன்னிக்கனும்......நானு ஒருத் தருக்கும் கெடுதல்செய்ய வரலீங்க........என் எஜமான் யாருன்னு எனக்கே தெரியாதுங்க. எங்க கூட்டத்தாரிலே, ஒருத்தரும் இன்னும் எங்க எஜமான் முகத்தை பார்த்தது கூட இல்லீங்க. அவரு எப்பேபாபார்த்தாலும் முகமூடி போட் டுக்கிட்டே இருப்பாரு. இந்தஊரிலே கொஞ்சகாலமா பொம்பு ளேங்களே தூக்கிகிட்டுப்போய் அக்கிரமஞ் செய்கிற கூட்டத் தாரே புடிக்கிறதின்னு நாங்களெல்லாம் ஒருகூட்டமாய் சேர்ந் திருக்கிறோம். நாங்களெல்லோருமே அந்த முகமூடி சொல்லு றதுபோல தானுங்க நடக்கிறது. அவரு கட்டளேப்படி தானுங்க நானு இங்கேவந்து வேலேக்கமர்ந்தேன். நீங்க ஒரு பெயரு சொன்னீங்களே, அந்தப் பெயரை நானு இதுவரை கேட்டதே இல்லீங்க. சத்தியமாய் அவரு யாருன்னு எனக் குத் தெரியவே தெரியாது. இதுதானுங்க உண்மை." என்று கூறி நடுக்கத்துடன் அவர் வாயினின்று என்ன வருமோ வெனக் கலங்கிக் கொண்டிருந்தான்.

அவனின் மனநிலேயை அறிந்த தர்மஸீலர் அவனே நோக்கி, "மாடசாமி! நானும் உங்களேப்போல் அந்த கற்பழிக் கும் கூட்டத்தாரைக் கண்டுபிடிக்கவே பலவழியாலும் முயர்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு வழியும் தோன்ற வில்லே. இவ்விதம் குழம்பிக்கொண்டிருக்கும் போதுதான், நீயும் உன்னேச் சேர்ந்தவர்களும் இதில் ஈடுபட்டிருப்பதை

பறியும்படி நேரிட்டது. ஆகவே, உன்னிடம் கலந்தாலோசிக்கவே கேட்டேன். ஒரே விஷயத்தில் நாம் பிரிந்து வேலைசெய்வதைவிட சேர்ந்து வேலைசெய்தால் வெற்றி நிச்சயமல்லவா?" என்றார்.

மாட:—அப்பா.....நான் ரெம்ப பயந்துபோயிட்டேன், எஜமான் என்ன சொல்லுவீர்களோண்ணு நடுங்கிக்கிட்டே இருந்தேனுங்க, இதை அப்பவே சொல்லி இருக்கப்படாதுங்களா.....நான் என் எஜமான் கட்டளைப்படி இங்கே வந்திருந்தாலும், நீங்களும் என் எஜமான்தான். அதோடுகூட நீங்களே ஒதவி பண்ணுரேண்ணு சொல்றப்போ எங்க எஜமான் ரெம்ப சந்தோஷப்படுவாருங்க.நான் அவருகிட்டேயும் சொல்லுறேன்.

தர்மசீலர்:—சரி நீ வந்ததிலிருந்து ஏதாவது உளவு அகப்பட்டதா?

மாடசாமி:—இல்லீங்க. இங்கு யாரு அப்படிச் செய்யப் போறுங்க, எங்க எஜமான் என்னை ஏன் இங்கே அனுப்பி வைச்சாருண்ணு எனக்கே புரியலீங்க.

தர்ம:—காரணமில்லாமல் இங்கு ஏன் அனுப்பி வைக்க வேண்டும்? ஏதாவதிருக்கும், அது போகட்டும் நீ இங்கு வந்ததிலிருந்து உன் எஜமானர் இங்கு வந்து எத்தனை முறை கண்டிருப்பார்?

மாட:—யாருங்க? என் எஜமானரா? அவரு இங்கு வரவேஇல்லீங்க.

தர்ம.—உம்.....எனக்கு இப்போ உன்னுடைய உதவி ரெம்ப அவசியமா யிருக்கிறது.

மாட:—அப்படி என்ன உதவியிங்க செய்யறது?

தர்ம:—நான் சொல்வதைமட்டும் அதி ஜாக்ரதையாகச் செய்து முடிப்பாயல்லவா?

மாட:—அப்படி அஜாக்ரதையாக எதிலேயுமிருக்க மாட்டேனுங்க. விஷயத்தை சொன்னமாத்திரம் செஞ்சுபுடுரேனுங்க.

தர்ம:—உன்னை பெரிய ஜெமீந்தார் அவர்களின் மெய்க் காப்பாளனாகவும், தலைமை வேலைக்காரனாகவும், நியமித்திருக்கிறேனல்லவா?

மாட:—ஆமாங்க.

தர்ம:—அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாவண்ணம் காப்பாற்றவேண்டியது உன்னுடைய பொறுப்பல்லவா?

மாட:—அதென்ன, அப்படிக் கேட்கிறீங்க? நானிருக்கிற வரை அவருக்கு துளிகூட ஆபத்து வருங்களா? என் உயிரைக் கொடுத்தாவது அவரைக் காப்பாத்துவேனுங்க, உம்...அப்படி அவருக்கு என்ன ஆபத்துவரப் போறதுங்க?

தர்ம:—நான் இப்பொழுது சொல்லப்போகும் விஷயம் இரும்புப்பெட்டியில் அடைபட்டது போன்றிருக்கவேண்டும்.

மாட:—அந்த விஷயம் என் உடம்போடே ஒழியுமே தவிற ஒருக்காலத்திலும் வெளிவாராதுங்க.

தர்ம:—சரி......சில அயோக்யர்கள் நம் பெரிய ஜெமீந்தாரவர்களுக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிடுவதாக முடிவு செய்திருக்கிறார்கள்.

மாட:—(திடுக்குற்றவனாய்) யாருங்க? நம்ம பெரிய ஜெமீந்தாரய்யாவையா? ரெம்ப ஆச்சரியமா யிருக்குதுங்களே! அந்த மாதிரி நம் எஜமானரைக் கொலை செய்ய நினைக்கிறவங்க யாருங்க? சொன்னா ஒரு நிமிஷத்திலே ஒழிச்சுப்புடுறேன்" என்று ஆவேசத்துடன் கூறினான்.

தர்ம:—மாடசாமி! ஆத்திரப்படுவதால் நம் காரியம் கெட்டுவிடும், அவ்விதம் சதி செய்யும் மனிதர்கள் யாரென்பதை ஒருவாறு நான் அறிந்தே இருக்கிறேன். நிச்சயமாக யார்? என்பது தெளிவுரும்வரை நான் ஒன்றும் வெளியிட முடியாது. நீ எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்றால், ஜெமீந்தாரவர்களின் ஆகாரத்தை முதலில் ஒரு மிருகத்திற்குப் போட்டு, அது அருந்திய 10 நிமிஷத்திற்குப் பிறகு, ஆகாரத்தில் எவ்வித கெடுதலுமில்லை எனக் கண்டபின்தான், அந்த ஆகாரத்தை ஜெமீந்தாருக்கிடவேண்டும். நீ இவ்விதம் செய்வது வேறு யாருக்குமே தெரியலாகாது. இப்பொழுது ஜெமீந்தார் இராப்போஜனத்திற்குப் பிறகு பால் அருந்துகிறாரல்லவா? அந்தப்பாலை யார் கொண்டுபோய் அறையில் வைப்பது வழக்கம்?

மாட:—சமையல்க்காரரு கோபாலு நாயிருதான் கொண்டாந்து வைப்பது வழக்கங்க.

தர்ம:—நீ இரவு எத்தனை மணிக்கு அவரறைக்குப் படுக்கப் போவாய்?

மாட:—நானு சரியா 9-மணி அடிக்கிறப்போ எஜமானரு அறைக்குப் போயிடுவேனுங்க.

தர்ம:—நீ அங்கு சென்ற பின்தான் ஜெமீந்தார் பால் சாப்பிடுவாரு? அல்லது அதற்கு முன்பே சாப்பிட்டு விடுவாரு?

மாட:—நானு அங்கே போயி ரெம்ப நேரம் பொருத்துத்தான் அவர் பால் குடிக்கிற வழக்கங்க. என்னைத்தான் எடுத்துத்தரச் சொல்லுவாருங்க.

தர்ம:—உம். அதுவும் அவருக்கொரு நல்ல காலந்தான். இன்றைய இரவிலிருந்து அங்கு பரிசாரகன் கொண்டுவந்து வைக்கும் பாலை எடுத்துவிட்டு வேறு சுத்தமான பாலை அங்கு வைத்துவிடு. ஏனெனில், பரிசாரகன் கொண்டுவந்து வைக்கும் பாலில் விஷம் கலந்திருக்கும். அதுவும் அவனுக்குத் தெரியாது கலக்கப்படும். அதைக் கொண்டுவந்து வைப்பது அவனுக இருந்தாலுமிருக்கலாம், அல்லது வேறு யாராவதாகவுமிருக்கலாம். நீ தனியாகப் பால் வாங்கிக் காய்ச்சி தயாராய்க் கொண்டு போகவேண்டும். இன்று இரவு முதல் ஒவ்வொரு இரவும் அவர்களால் கொண்டுவந்து வைக்கப்படும் பாலை அந்தந்தஇரவே என்னிடம் கொண்டுவந்து விடவேண்டும். தெரிகிறதா? நான் சொன்னவைகளெல்லாம் ஞாபகத்திலிருக்கிறதா?

மாட:—எல்லாம் என் ஞாபகத்திலே இருக்குதுங்க எஜமான். அப்படியே செய்துடுறேனுங்க.

தர்ம:—நாம் இதில் தலையிட்டிருப்பதாக யாருக்குமே தெரியலாகாது.

மாட:—நானு ரெம்ப ரகஸ்யமாக நடந்துக்கிறேனுங்க.

தர்ம:—சரி, நீ போய் ஜாக்ரதையாக நடந்து கொள், என்று கூறவும், மாடசாமி அவ்விடம் விட்டகன்றான்.

அவன் சென்றபின் சோபாவில் சாய்ந்த வண்ணம் மீண்டும் யோசிக்கலானர். "ராம் என்னும் வாலிபன் கூறியபடி இந்த மாடசாமியிடமிருந்து எந்த விஷயத்தையும் கிரகிக்க முடியவில்லையே. இவனுடைய உதவியிலேயேதான் இந்த அரண்மனையில் பிரவேசித்ததாக இவன் தலைவனே என்னிடம் கூறி இருந்தும், இவன் அதுபற்றி எதுவும் கூற மறுக்கிறான். இவனைப் பார்த்தால் ஓர் உண்மையுள்ள ஊழியன் என்பது நன்கு விளங்குகிறது.........இவன் தலைவனைப்பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாதெனவும் கூறுகிறான். இவன் தலைவனே மாடசாமியை அழைத்து விசாரித்தால் எல்லாம் தெரியவரும் என்று தெரிவித்தான்........உம்...........எல்லாம் சர்வ குழப்பமாயிருக்கிறது" என்று பலவாறு எண்ணமிடலானர்.

அப்பொழுது வேலையாள் மீண்டும் வந்து "எஜமான்! நஞ்சப்பையா ஏதோ அவசரமாய் பார்க்க வேண்டுமாம் வெளியே காத்திருக்கிறார்" என்று கூறி அவரின் பதிலை எதிர்பார்த்து நின்றான்.

"உம்......நஞ்சப்பனா?" என்று கேட்டுவிட்டு கடியாரத்தைப் பார்த்தார், சட்டென்று ஏதோ நினைத்துக்கொண்டவராய் சோபாவில் அமர்ந்து அவனை அழைத்து வரும்படி சட்டளையிட்டார்.

அவ்வேலையாள் சென்ற 5-நிமிஷத்திற்கெல்லாம் நஞ்சப்பன் அவ்விடம் வந்து இருகரங்களையும் கூப்பி வணங்கி நின்றான்.

"நஞ்சப்பா! என்ன விசேடம்? ஜெமீந்தார் ஏதாவது கூறியனுப்பினரா?" என்று கேட்டார் தர்மசீலர்.

நஞ்சப்பன்:—இல்லை, ஒரு முக்கியமான விஷயம். நான் அறிந்ததை தங்களிடம் தெரிவித்து, வேண்டிய ஏற்பாடு செய்வதற்காகவே வந்தேன்.

தர்மஸீலர்:—அதென்ன விஷயம்? எதுபற்றியது?

நஞ்:—எல்லாம் அந்தக் கற்பழிக்கும் கூட்டத்தாரைப் பற்றியதுதான்.

தர்ம:—என்ன? அவர்களைப்பற்றியா? ஏதாவது உளவு அகப்பட்டதா?

நஞ்:—ஆம். அவர்கள் யாரென்பதை ஒருவாறு அறிந்தே இருக்கிறேன்.

தர்ம:—(ஆவலுடன்) அப்படியா! அவர்கள் யார்?

நஞ்:—அவர்கள் ஷண்முகபுரிக்கு அடுத்துள்ள காட்டிலிருக்கும் கள்வர் கூட்டத்தார்களேயர்கும். நம் ஜெமீந்தார் அவர்கள் அக்கூட்டத்தாரைப் பிடிக்கவேண்டுமென்று தங்களுக்கு கட்டளையிட்ட அன்றே, எனக்கும் கட்டளையிட்டார். நானும் பல ஆட்களை ஆங்காங்கே அனுப்பி யிருந்தேன். அவர்களில் ஷண்முகபுரியின் பக்கமாக நானனுப்பி யிருந்த ஆள் நேற்றிரவு என்னிடம் வந்து “ஷண்முகபுரியில் சுமார் 6-மாத காலங்களாக உலாவிவரும் கள்வர் கூட்டத்தாரே இவ்விதம் பெண்ணை பலாத்காரமாய்த் தூக்கிச் சென்று கற்பழித்து வருகின்றனரென்றும், ஷண்முகபுரியிலும் இதே மாதிரியான பல அக்ரமங்கள் நடந்திருப்பதாகவும், ஷண்முகபுரி சமஸ்தான அதிகாரிகளும் அக்கூட்டத்தாரைப் பிடிப்பதற்கு பெருத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்றும்” அவன் என்னிடம் கூறிக்கொண்டிருந்த சமயத்,

ஷண்முகபுரி பிரதானி உக்ரமசிங்கரும், சில சிப்பாய்களும் வெகு வேகமாக வந்தார்கள். எங்களைக் கண்டதும் நின்றார்கள். நான் ஓடி என்ன விஷயமென்று வினவினேன். அதற்கவர் தான் கள்வர் கூட்டத்தின் தலைவனைத் தேடி வந்ததாகவும், சிலகாலமாக அக்கூட்டத்தார் பெண்களைத் தூக்கிச்சென்று கற்பழித்து வருகின்றனரென்றும், இரவு அரண்மனையில் புகுந்து ஜெயாவைத் தூக்கிச் செல்லுந் தருணம், தான் போய் ஜெயாவைக் காப்பாற்றியதுடன், தப்பி இப்பக்கமாக ஓடிவந்த அக்கூட்டத்தினரைத் தேடி வந்ததாகவும் கூறியதுடன், ஷண்முகபுரி, தேவபுரி இரு எல்லைகளிலும் அவர்கள் வசிப்பதால், இருவரும் அவர்களைப் பிடிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஜெமீந்தாரிடம் தெரிவிக்க விரும்புவதாகக் கூறினர். பிறகு நாங்களெல்லோரும் "வெள்ளை மாளிகை"யை அடைந்தோம். உக்ரமசிங்கர் ஜெமீந்தாரிடம் இவ்விஷயத்தைக் கூறினர். ஜெமீந்தாரும் அவ்விதமே கள்வர்களைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்வதாக கூறினர். பின் பிரதானி விடைபெற்றுச் சென்றார். ஜெமீந்தாரவர்களும் அக்கூட்டத்தாரைத் தேடிக் கைதுசெய்யும்படி உங்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். திருமணம் இன்னும் மூன்றே தினங்களிருப்பதால் அது முடிந்ததும் உங்களுக்கு உத்திரவிடுவார்கள். இதை முன்னதாகவே உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றுதான் நான் இப்பொழுது வந்தேன்.

தர்ம:—நாம் எவ்விதம் அக்கூட்டத்தார்தான் இதைச் செய்து வருகிறார்கள் என்று நிச்சயிக்க முடியும்? தக்க சாக்ஷியம் வேண்டுமல்லவா?

நஞ்:—ஏன்? உக்ரமசிங்கர் பொய்யா சொல்லப்போகிருர் அதோடு "ஜெயா"வைத் தூக்கிச் செல்லும்போது அவரும், அவருடைய ஆட்களும் சென்று அவளைக் காப்பாற்றியதாக கூறுகையில். வேறு என்ன சாக்ஷி வேண்டும்?

தர்ம:—சரி, இக் குற்றத்தை அவர்கள் செய்திருந்தாலும், செய்யா விட்டாலும், கள்வர் கூட்டத்தினரைப் பிடிக்க வேண்டியது அவசியந்தானே. அவர்களைப் பிடித்த பின் இக்குற்றங்களை அவர்கள் செய்தார்களா? என்பதை கண்டறிவோம். இதற்கு ஜெமீந்தாரவர்களின் உத்தரவு வந்துதான் நான் அவர்களை கைது செய்ய வேண்டுமென்பதில்லை. நான் இப்பொழுதிருந்தே அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். நம் சமஸ்தான எல்லைக்குள் அவர்களிருந்தால், நம் கையிலகப்படாமலிருக்க முடியாது.

நஞ்:—ஆமாம், அதோடு அந்தமாதிரியான ஓர கூட்டம் இந்த சமஸ்தான எல்லைக்குள்ளிருந்தால், அவர்களை பிடிப்பது அவசியந்தானே. இதற்கு ஜெமீந்தாரவர்களின் உத்தரவை எதிர்பார்க்க வேண்டுமென்பதல்ல. இது சம்மந்தமாக அவ்வப்போது எனக்குக் கிடைக்கும் தகவல்களை உடனே வந்து தெரிவிக்கிறேன். என்று கூறி எழுந்தான்.

"சரி நீ போய் வா" என்று அவனுக்கு விடை கொடுத்தனுப்பியபின்,சோபாவில் சாய்ந்தவண்ணம் மீண்டும் யோசிக்கலானர்.

"ஷண்முகபுரியிலும் இவ்வக்ரமம் நடைபெறுகிறதா? அதுவும் ஜெயாவைத் தூக்கிச்செல்லும்போது உக்ரமசிங்கன்

சென்று சாப்பாற்றினனு? இவ்வக்கிரமத்தைச் செய்துவருவது அக்கள்வர் கூட்டத்தார்தானு? "ராம்" என்னும் வாலிபன் "பழிங்கு மண்டப"த்திற்கு வந்தால், அக் கூட்டத்தாரைக் காண்பிப்பதாகக் கூறினனே, அவன் கூறியது யாரை? இந்தக் கள்வர் கூட்டத்தைத்தானே? அதெப்படி முடியும்! கள்வர் கூட்டத்தைப் பிடிப்பதற்கு, அதுவும் காலை 8-மணிக்கு பளிங்கு மண்டபத்திற்கு, என் வரும்படி கூறவேண்டும்?...... கொள்ளையடிக்கும் கள்வர்களாகிய இவர்கள் அது சம்மந்தப் பட்டவரையில் எது வேண்டுமானுலும் செய்வார்களே தவிற, இந்த மாதிரியான அக்ரமத்தைச் செய்ய மனம் துணிய மாட்டார்கள்.........ஒவ்வொரு நிமிஷமும் கேள்விப்படும் புதுப்புது விஷயங்களால் மூளை குழப்பமடைகிறது......... கஞ்சப்பன்......ஓர் அயோக்யன், அவன் கூறியவார்த்தை எல்லாம் உண்மையாக இருக்க முடியாது. உம்........." என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தவர், ஏதோ நினைத்துக்கொண்டவருய் "சட்"டென்று எழுந்து தன் காரியாலயத்தை விட்டு வெளிப்பட்டார்.

அத்தியாயம் 9.

"கடவுளின் பிரதிநிதியாய்,தன் நாட்டு மக்களை ஞாய வழியில் கொண்டு செல்வதற்கு, அவர்களின் கஷ்ட நஷ்டங்களை அறிந்து உற்றது செய்வதற்கு என்றிருக் கும் ஓர் அதிபதி, தன் கர்மத்தை மறந்து, கடமையைத் துறந்து, தனது மக்கள், தனது சகோதரிகள், தனது தாய் மார்கள், என்ற எண்ணம் பதியவேண்டிய ஹிருதயத்தில், எல்லோரும் தன் காமக் கிளத்திகள்என்று, எந்த அயோக்யன் எண்ணினனே அந்த அயோக்யன் பிரதாபன், அந்தக் காமப்பேய் பிரதாபனுல் கற்பழிக்கப் பட்டு அகம்வெந்து, மனமுடைந்து, நடைப்பிணமாய் ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்த முனியம்மாள், இத் துர்ப்பா........"

சேவபுரியிலிருந்து ஷண்முகபுரிக்குச் செல்லும் ராஜப் பாட்டையில் 3 மைல் தூரம் வந்தோமானல், மேற்கே ஒரு ஒற்றையடிப்பாதை பிரிவதைக் காணலாம். அவ்வொற்றையடிப் பாதையிலிறங்கி, 1 மைல் தூரம் காட்டினுள் சென்ருல், நான்குபுறமும் பெரிய விருக்ஷங்களால் சூழப்பட்ட, ஒரு குடிசை தென்படும். அக் குடிசையில் ஓர் வயோதிகனும் ஓர் வாலிபனும் வசித்து வருகின்றனர். நாம் முன் அத்தியாயத் தில் கூறிய விஷயங்களெல்லாம் நடந்ததினத்திற்கு மறுதினம் காலே, அவ் வயோதிகனும் வாலிபனும் கிழ்கண்ட வண்ணம் சம்பாஷிக்கலாயினர். அவர்களுடைய சம்பாஷணை நம்கதைக்கு முக்கியமான தாகையால், அதை நாம் அறியவேண்டுவது அவசியமாகிறது.

"மாமா! நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. நீங்கள் கூறுவது உண்மையாயின் அவன், இப்பொழுது உயிருடனிருப்பானுயின், இதுவரை என் தன் சுதந்திரத்தை, உரிமையைக் கைப்பற்ரு திருக்கவேண்டும்?" எனக் கேட்டான் வாலிபன்.

வயோதிகன்:—இவன் உயிருடனிருப்பதை அவர்கள் அறிந்தால், இவனைக் கொன்றே தீருவார்கள். இவனுக்கு தக்க வயது வந்து பொறுப்பை ஏற்று நிர்வகிக்கக்கூடிய திறமையடைந்திருக்கிருன் என்பதை யறிந்தபின் தான், இவனுக்கு உதவிபுரிந்தவர்கள் ரகஸ்யத்தை வெளியிட வேண்டுமென்று எண்ணி இருக்கின்றனர்.

வாலிபன்:—அப்படியாயின், இப்பொழுது அவ்வாலிபனுக்கு வயதென்னவாகிறது?

வயோ:—22 ஆரம்பம்.

வாலி:—இவன் தான் தக்க வயதடைந்து விட்டானே, இன்னுமென்ன தாமதம்?

வயோ:—இவன் யாரென்பது இவனுக்கே தெரியாது. இவனின் பிறப்பின் உண்மையை நிரூபிப்பதற்கு வேண்டிய சாக்ஷிகளிருந்தாலும், இவன் தற்சமயம் இந்த நாட்டிலேயே இருக்கிருன் என்பதை, இவனைக்காப்பாற்றிய அந்த மனிதர்களுக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

வாலி:—மாமா! இந்த விபரங்களை எல்லாம் நீங்களெவ்விதம் அறிவீர்கள்? நாம் இந்த நாட்டிற்கு வந்து ஆறுமாதங்கள் தானே ஆகிறது, தவிரவும் நீங்கள் இந்தக் குடிசையை விட்டு வெளியே போவது மில்லையே.

வஸியோ:—நான் இவைகளெல்லாம் நடந்த காலத்தில் இந்த ஊரிலேயே வசித்து வந்தேன்.

வாலி:—இப்பொழுதும் அந்த வாலிபன் உயிருடனிருக்கிறான் என்பதை நீங்களெவ்விதம் அறிவீர்கள்? அவனை இருக்கிறானென்று வைத்துக்கொள்வோம், இப்பொழுது அவன் தன்னுரிமையைப் பெற முயற்சித்தால்......அவனின் எதிரிகள் இணங்குவார்களா? சகலமும் அவர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும்போது இவர்களால் என்ன செய்யமுடியும்?

வஸியோ:—அவ் வாலிபனின் எதிரிகள் எவ்வளவு பலம் பொருந்தியவர்களோ, அதேபோன்று இவ் வாலிபனை ஆதரித்துக் காப்பாற்றியவர்களும் பலம் பொருந்தியவர்கள்தான். அவர்கள் மறுக்கமுடியாத விதமாய் சாக்ஷியங்களெல்லாமிருக்கின்றன. உனக்கு ஒன்றும் விபரம் தெரியாததாகையால், இவ்விதம் கூறுகிறாய். விபரமாகச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேள்.

தேவபுரி ஜெமீந்தார் சாந்தலிங்கிற்கு வயது 40 ஆகியும் சந்ததி விர்த்திக்கு ஓர் ஆண்குழந்தை இல்லையே என்ற கவலை மலைபோல் பெருகியது. ஜெமீந்தாரின் மனைவி குணபூஷணி அம்மாள் இரண்டு குழந்தைகளைப்பெற்றும், அவைகளிரண்டும் உயிருடனிருந்து மனதை களிப்பிப்பதற்கில்லாமல் மறித்துவிட்டனவாகையால், அந்த அம்மாளுக்கும் மனோவியாகூலம் அதிகரித்தது. அதே ஏக்கமாக துரும்புபோல் மெலியலானார்கள். இவ்விதமே பல வருஷங்களும் கழிந்தது. அந்த அம்மாளுக்குச் சிறிது குணங்கண்டதானாலும், அவர்கள் மீண்டும் கருத்தரிக்கவில்லை. ஜெமீந்தாரின் நெருங்கிய

நண்பர்களெல்லாம் இரண்டாந்தாரமாக ஓர் பெண்ணை மணக்கும்படி ஆலோசனை கூறினர். குணபூஷணி அம்மாள் அப்பொழுதிருந்த துர்ப்பலநிலையில் கரு உற்பத்தியாகுமென்ற நம்பிக்கை இழந்தார் ஜெமீந்தார். ஜோதிடர்களெல்லாம் அவருக்கு ஆண்சந்ததி இருக்கிறதெனக் கூறியபடியால், ஒருவாறு இரண்டாம் மணம் செய்து கொள்வதற்கு சம்மதித்தார். குணபூஷணி அம்மாளும் தனக்கு குழந்தை இல்லாவிட்டாலும், புதிதாக வருகிறவளுக்காவது ஓர் குழந்தை பிறந்து சுகமாக இருந்தால் போதும், என்று பெரும்போக்காக நினைத்து, ஜெமீந்தாரின் இரண்டாம் மணத்திற்கு தடை சொல்லா திருந்தார்கள்.

ஜெமீந்தார் தன் உறவினருள் ஒருவளான "காந்தாமணி" என்னும் யுவதியை மணந்தார். அப்பொழுது அவளுக்கு வயது 20 அல்லது 21 இருக்கும்.

கல்யாணமான ஒரு வருடம்வரை எவ்வித விசேடமுமில்லை. ஜெமீந்தாரும், இருவரிடத்தும் அன்புடனேயே இருந்து வந்தார். குணபூஷணி அம்மாளும் காந்தாமணியை, சக்களத்தி என்றெண்ணுமல் அவளுக்கொரு குழந்தை பிறந்து நாம் சந்தோஷமடைய மாட்டோமா? அக்குழந்தையை வளர்க்கும் பாக்கியமாவது நமக்குக் கிடைக்காதா? என்று எண்ணி, தன் சொந்த சகோதரிபோல் பாவித்து வந்தார்கள். காந்தாமணிக்கோவென்றால், தான்சர்வாதிகாரியாயிருந்துவாழ்வதற்கு இடைஞ்சலாக ஒருவளிருக்கிறாளே என்று பொறாமை ஏற்பட்டாலும், தன்நோக்கத்திற்கு மாறுபாடாக குணபூஷணி அம்மாள் நடக்காத முறையில், ஒருவாறு மன அமைதியுட

னேயே இருந்துவந்தாள். இது இவ்விதமிருக்க, இருவரும் ஒரே மாசத்தில் கருக்கொண்டனர். அதிலிருந்துதான் காந்தாமணியின் மனதில் "பொறாமைத் தீ" புகைய ஆரம்பித்தது. தனக்கு குழந்தை பிறந்து அதுதான்ஜெமீனுக்கதிபதியாய், ராஜபோகமாக வாழப்போகிறது என்று கனவு கண்டுகொண்டிருந்த காந்தாமணி, மூத்தாளும் கருவுற்றிருக்கிறாள் என்பதை யறிந்ததும் என்ன பாடுபட்டிருப்பாள். ஒருக்கால், தன் வயிற்றில் பிறக்கும் குழந்தை பெண்ணாகவும், குணபூஷணிக்குப் பிறப்பது ஆணாகவுமிருந்து விட்டால்............. இந்த எண்ணமுதிக்கும்போது.............பொறாமை "தீ" கொழுந்துவிட்டெறிய ஆரம்பித்தது பல வழியிலும் யோசித்தாள். குணபூஷணி அம்மாளுக்குப் பிறக்கும் குழந்தையைக் கொன்றுவிட்டால்தான் தானும் தன் குழந்தையும் சுகமாய் வாழமுடியும் என்ற முடிவிற்கு வந்தாள் அந்த ராக்ஷஸி.

இவ்விதமானதோர் கொடிய காரியத்தைச் செய்வதற்கு ஆண் துணை அவசியமல்லவா? அந்தக் கவலையும் அவளுக்கில்லாது போய்விட்டது. எப்படியெனில், அவள் ஜெமீந்தாரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு காரணகர்த்தாவாயிருந்தவனும், இப்பொழுது சண்முகபுரி சமஸ்தானத்தில் பிரதானியாயிருந்து வருபவனுமாகிய, உக்ரமசிங்கன் அவளுக்கு ஒரு வழியில் உறவினனாக வேண்டும், அவனும் அடிக்கடி இங்குவந்து காந்தாமணியைப் பார்த்துப் போவான். உக்ரமசிங்கன் ஓர் மகா பாதகன் என்பதையும், எதற்கும் அஞ்சா வன்நெஞ்சம் படைத்தவன் என்பதையும் ஜெமீந்தார் அறிந்திருந்தாலும், காந்தாமணி வழியில் அவனும் தனக்குறவினனாகிவிட்ட படியால் அவன் இங்கு வருவதை தடை செய்ய முடியாதவராயிருந்தார்.

இவன் இங்கு வந்துபோவது பிரதானி தர்மஸீலருக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. இவர்களிருவரின் நடத்தையிலும் சந்தேகங் கொண்டார். இதன் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்றெண்ணியவராய் ரகஸ்யமாகத் துப்பறிவதற்கு ஆட்களை வைத்திருந்தார். அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து உக்ரமசிங்கனுக்கும்—காந்தாமணிக்கும் கள்ள நட்பு உண்டென்று நம்புவதற்கு இடமிருந்தது. தர்மஸீலர் மேலும் அவர்களுடைய காரியாதிகளை ஜாக்கிரதையாக கவனிக்கும்படி கூறியனுப்பினர்.

10 தினங்கட்குப் பிறகு உக்ரமசிங்கன் இங்கு வந்து சென்றான். அன்று அவர்கள் குணபூஷணிக்கு குழந்தை பிறந்ததும் அதை எவ்விதமும் ஒழித்துவிடுவதென முடிவு செய்திருக்கிறார்களென்பது தெரியவந்தது. அவர்களுடைய இந்தக்கொடிய எண்ணம் நிறைவேறாது செய்துவிட வேண்டுமென்று உறுதிகொண்டார் தர்மஸீலர்.

இந்த சமஸ்தான பிரஜைகளெல்லாம் தர்மஸீலரிடம் அன்பு கொண்டவர்கள். அவர் எது கூறினும் தேவவாக்கென மதிப்பர். அவரும் உண்மையிலேயே அருங்குணம் படைத்த ஓர் மனிதர்தான். ஜெமீந்தார்கூட அவர் வார்த்தைக்கு மறுத்துரைத்ததில்லை. கொஞ்சகாலமாக அதாவது, காந்தாமணியை மணம் செய்துகொண்ட பிறகு ஜெமீந்தாரின் மனம் சிறிது மாற்றமடைந்ததானாலும், அதற்காக தர்மஸீலர் வருத்தங் கொள்ளவில்லை.

அந்தக் காலத்தில் அரண்மனையில் வேலைபார்த்து வந்தவர்களில் முனுசாமி, கந்தசாமி என்ற இருவர் தர்மஸீலருக்கு

உற்ற துணைவர்களாவார்கள். தர்மஸீலர் அவர்களை அழைத்து சாந்தாமணியின் சதியாலோசனையைக் கூறி எவ்விதத்திலும் குணபூஷணி அம்மாளுக்குப் பிறக்கும் குழந்தையைக் காப்பாற்றியே தீரவேண்டுமென்றார். இதைச் செவியுற்ற இருவரும் சாந்தாமணியின்மீது வெறுப்புற்றதுடன், குழந்தையைக் காப்பாற்ற தங்கள் உயிரையும் த்யாகம் செய்வதாக வாக்களித்தனர். அதன்பின் மூவரும் குழந்தையை எவ்விதம் காப்பாற்றுவது என்று ஆலோசித்தனர்.

"விஷயம் வெளியானால் எதிரிகள் விழிப்படைந்து விடுவார்கள். ஜெமீந்தாரிடம் உண்மையைக் கூறிவிட்டாலுமென்றாலும், அவர் அப்பொழுதிருந்த நிலையில் முதலில் இதை நம்ப வேண்டும். அவர் அவ்விதம் நம்பி குழந்தைக்கு ஒரு தீங்கும் அணுகாவண்ணம் பாதுகாத்து வந்தாலும், அரண்மனையினின்று வெளியேற்ற ஜெமீந்தார் அனுமதிக்க மாட்டார். குழந்தை அரண்மனையிலிருந்தால் எதிரிகள் அதைக் கொன்றுவிடவே வழி பார்ப்பார்கள். எனவே, அக்குழந்தை காப்பாற்றபடவேண்டுமானால், எதிரிகளின் தீர்மானப்படி அக்குழந்தையை அவர்கள் கொன்றுவிட்டதாகவு மிருக்கவேண்டும், அதேபொழுது அக்குழந்தையும் காப்பாற்றப்பட வேண்டும்."

மேற்சொன்ன யோசனையைக் கூறியவன் கந்தசாமியே, அவன் மேலும் கூறியதாவது, "ஐயனே! இதுதான் சிறந்த யோசனையென என் மனதில் தோன்றுகிறது" என்றான்.

"கந்தசாமி! இது நல்ல யோசனைதான் இது எவ்விதம் காரிய சாத்யமாகுமென்பதுதான் எனக்கு விளங்கவில்லை?" என்றார் தர்மஸீலர்.

"ஐயனே! எவ்வித சிரமுமில்லாமல் நாம் முடித்து விடலாம். எப்படியெனில்? இப்பொழுது என் மனைவியும் கருவுற்றிருக்கிருள். குணபூஷணி அம்மாள், சாந்தாமணி அம்மாள், என் மனைவி, ஆகிய மூவரும் நாலு நாள், ஆறு நாள் முன் பின்னுகவே பிரசவிப்பார்கள். நான் வெகு காலமாக இந்த அரண்மனையில் வேலைபார்த்து ஜெமீந்தாருடைய உப்பைத்தின்று வளர்ந்தவன். ஆகையால் பிரபோ! குண பூஷணி அம்மாளின் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக என் குழந்தையை பலியிடுகிறேன்" என்முன் சந்தசாமி.

"என்ன? இவ்வளவு காலத்திற்குப் பிறகு உனக்குப் பிறக்கப்போகும் குழந்தையை குணபூஷணி அம்மாளின் குழந்தை காப்பாற்றப்படவேண்டு மென்பதற்காக பலியிடத் துணிந்தாயா? கந்தசாமி இது என்ன பயித்தியக்கார எண் ணம்! பல வருஷங்களுக்குப் பிறகு தவமிருந்து பெற்ற குழந்தையை இழக்கத் துணிவாளா உன் மனைவி?" என்ருர் தர்மஸீலர்.

"ஐயனே! எனது குழந்தை குணபூஷணி அம்மாளின் குழந்தையாக கொல்லப்பட்டுவிட்டால், அவர்களின் குழந்தை எங்கள் குடிசையில் வளரும் பாக்கியத்தைப் பெறுவேனல் லவா? எங்களுக்கு வேண்டியது எங்கள் மனதை களிப்பிப் பதற்காக ஒரு குழந்தைதான்" என்முன் கந்தசாமி.

"கந்தசாமி! மனத்தாலும் நினைக்கமுடியாத அவ்வளவு சிறந்த த்யாகத்தைச் செய்வதற்கு துணிவு கொண்டாய். இந்த சந்தர்ப்பத்திலே நமது கடமை யுமதுதான், இந்த உன் உதவியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்" என்று

கூறி வாஞ்சையுடன் அவனைத் தன்னிரு கரங்களாலும் தழுவிக்கொண்டார் தர்மஸீலர்.

மேலும் இவ்விஷயமாக அதிக நேரம்வரை ஆலோசித்திருந்து பிரிந்தனர்.

இவ்வித ஆலோசனைகளினிடையே, இரண்டு மாதங்கள் சென்றன. டாக்டர்களெல்லாம் இன்னும் நாலைந்து தினங்களுக்குள்ளாக குணபூஷணி அம்மாள் பிரசவிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றனவெனக் கூறினர்.

இந்த நிலையிலே, கந்தசாமியின் மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

மறுநாள் குணபூஷணி அம்மாள் ஓர் அழகிய ஆண் மகவை ஈன்றெடுத்தார்கள். இச்செய்தி நாட்டில் பெரும் மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. காந்தாமணிக்கோ, அப்...பா ......அவள் மனம் என்னபாடு பட்டிருக்குமோ?......ஈசனுக்குத்தான் தெரியும். கந்தசாமியின் குழந்தை "நாய்க்கணை" என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டு பிறந்த மூன்றாவது நாள் இறந்துவிட்டது. கந்தசாமி அதிகமாக வருந்தினனெனினும், குழந்தை உயிருடனிருந்தாலும் அது இறக்கவேண்டியது தானே என்றெண்ணி ஒருவாறு அமைதியுற்றான். மனமுடைந்து புலம்பிக் கொண்டிருந்த தன் மனைவிக்கு வேண்டிய ஆறுதல் மொழிகள்கூறி தாங்கள் செய்யவிருக்கும் காரியத்தை அவளுக்கு எடுத்துரைத்து, குழந்தை இறந்த விஷயம் வெளியாகாதிருக்க வேண்டிய ஏற்பாடு செய்துவிட்டு தர்மஸீலரைக் காண்பதற்காக அரண்மனை சென்றான். இஃது இவ்வாறிருக்க.

குணபூஷணி அம்மாளுக்கு குழந்தை பிறந்ததான சுப செய்தியை, விசாரித்துவிட்டுப் போவதற்காக வந்த உக்ரம

சிங்கன் காந்தாமணியிடம் அதிகநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்தான். அவன் சென்றபின் தர்மஸீலரால் இவர்கள் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஏவப்பட்டிருந்த ஆட்களில் ஒருவன் வந்து, "இன்றிரவு சரியாக 12-மணிக்கெல்லாம், உக்ரமசிங்கன் இங்குவந்து குணபூஷணி அம்மாளின் குழந்தை யின் சுவாசத்தை தடைப்படுத்தி அதைக்கொன்றுவிடுவதென முடிவு செய்திருக்கிறார்கள். அவன் அரண்மனையினுட் புகுவ தற்கு காந்தாமணியே கதவுகளைத் திறந்து விடுவதெனவும் முடிவு செய்திருக்கிறார்களென்று கூறிச்சென்றான்.

அவ்வமயம் கந்தசாமி அங்கு வந்தான். தர்மஸீலர் சற்று முன்பாக தானறிந்த விஷயத்தைக் கூறினார்.

அவர் கூறியவற்றைச் செவியுற்ற கந்தசாமி எல்லையற்ற மகிழ்ச்சி யடைந்தான். "பிரபோ! நான் அன்று வாக்களித்த படி இன்று நடக்கச் சித்தமாயிருக்கிறேன், ஐயனே! அந்த அயோக்யனின் கையாலிறப்பதற்கு முன் என் குழந்தை இறந்து விட்டது."

"என்ன? உன் குழந்தை இறந்து விட்டதா? எப்பொழுது?"

"இன்று மாலையில்"

"கந்தசாமி! நீ அன்று என்னிடம் வாக்களித்திருந்தா லும் எனக்கதில் கிஞ்சிற்றும் சம்மதமில்லை, எனவே, வேறு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று தான் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது உன்னுடைய குழந்தை இறந்துவிட்ட படியால் இறந்த உன் குழந்தையை இங்கும், இக்குழந்தை உன்னில்லத்திலுமாக மாற்றிவிடலாம். ஆனால், ஒரு விஷயம், உன் குழந்தை இறந்த விஷயம் வெளியாகா திருக்கவேண்டுமே?" என்றார் தர்மஸீலர்.

"பிரபோ! என் குழந்தை இறந்த செய்தி இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் நான் செய்யவேண்டியதைக் கூறினல், செய்துமுடிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்முன் கந்தசாமி.

"இப்பொழுதொன்றுமில்லை. நீ இரவு சரியாக 11-மணிக்கெல்லாம் குழந்தையுடன் இங்கு வந்துவிடு, வெளியில் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பான் முனுசாமி" என்று தர்மஸீலர் கூறவும், கந்தசாமி விடைபெற்றுச் சென்முன்.

அவன் சென்றபின் தர்மஸீலருக்கோர் யோசனை பலமாக எழுந்தது. மறுநாள் காலை குணபூஷணி அம்மாளின் குழந்தை இறந்ததென்ற செய்தி வெளிப்படும். இந்தச் செய்தி அந்த அம்மாளுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பது திண்ணம். ஆகவே, அவர்களுக்குப் பிரசவம் பார்க்கும் டாக்டர் சரோஜினி அம்மாளிடம் விஷயத்தைக் கூறி அவர்களின் மூலமாக குணபூஷணி அம்மாளுக்கு இந்த விபரங்களை எல்லாம் கூறி தான் எவ்விதமும் குழந்தையைக் காப்பாற்றி தக்க வயது வந்தவுடன் இந்த சமஸ்தானத்தை அவனடையும் படியான ஏற்பாடு செய்வதாக உறுதிகூறி அவர்கள் அதைரியமடையாது செய்ய வேண்டுமெனவும், எண்ணியவாறுய் சரோஜினி அம்மாளின் உதவியை நாடினர். அவர்களும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்க இசைந்து குணபூஷணி அம்மாளிடம் அவர்கள் அதிர்ச்சியடையா வண்ணம் விபரத்தைக் கூறி பிற்காலத்தில் அக்குழந்தை தன் உரிமையை யடைவதற்கு சாதகமாக, அவர்கள் கைப்படவே ஜெமீந்தாரவர்களுக்கு "காந்தாமணி தன் குழந்தையைக் கொல்லுவதற்கு சூழ்ச்சி செய்வதாக தர்மஸீலர், டாக்டர் சரோஜினி அம்மாள்

இவர்கள் மூலம் தான் அறிவதாகவும், இந்த சூழ்ச்சியி னின்றும் அவர்கள் தன் குழந்தையைக் காப்பாற்றி தக்க வயது வந்ததும் இந்த ஜெமீனை அடையச் செய்வதாகவும் உறுதி கூறுவதால், அவர்களிடம் தன் குழந்தையை ஒப்புவிப் பதாகவும் தன் குழந்தைக்கு இரு கால்களிலும் 6 விரல்களாக 12 விரல்களிருப்பதாகவும், இந்த அடையாள முள்ள தன் புதல்வனை, ஷியார்கள் கொண்டுவந்து ஒப்புவித்தால் ஒருக் கால் காந்தாமணிக்கும் ஆண் குழந்தையே பிறந்தாலும், தனது குழந்தைக்கும் இந்த சமஸ்தானத்தில் சரிபங்குண்டென்றும் இறந்ததாகக் கருதப்படுவது தன் குழந்தை அல்ல வென்றும் அக் குழந்தை ஏற்கனவே இறந்திருந்ததை இங்கு கொண்டு வந்து வைத்து தன் எதிரிகளை ஏமாற்ற மடையச் செய்தோ மென்றும், தன்புத்திரனுக்கு அவனுடைய பாட்டன் பெயரை யே சூட்டி இருக்கிறேன்" என்ற விஷயங்களடங்கிய ஓர்கடிதம் எழுதி அது தர்மஸீலரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

•

அன்றிரவு 11-மணிக்கெல்லாம் தர்மஸீலரின் ஏற்பாட் டின்படி கந்தசாமியினுடைய குழந்தை இங்கும், இக் குழந்தை அங்குமாக மாற்றப்பட்டது.

சரியாக 12-மணி அடித்ததும் ஒரு கருத்த உருவம் காந்தாமணியின் அறையிலிருந்து வெளிப்பட்டு குணபூஷணி அம்மாள் பிரசவித்திருந்த அறையினுட் புகுந்து சுற்று முற்றும் பார்த்தது. குணபூஷணி அம்மாளும் தாதிகளும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு பூனைபோல் மெதுவாக நடந்து சென்று கட்டிலில் கிடத்தப்பட்டிருந்த குழந்தையின் கழுத்தை நெறித்தது. சில வினாடிகள் சென்ற தும் அக்குழந்தையின் சுவாசம் நின்றுவிட்டதா? என்பதைக்

குனிந்து பரிசுசித்துவிட்டு சந்தோஷத்துடன் அங்கிருந்து சென்றது.

இங்கு நடந்தவற்றை எல்லாம் தூங்குவதுபோன்ற பாவனையுடன் குணபூஷணி அம்மாள். டாக்டர் சரோஜினி அம்மாள், தர்மலீலர், கந்தசாமி, முனுசாமி முதலியோர்கள் மறைந்திருந்து கவனித்தார்கள்.

அந்த அயோக்யர்களும் இன்றளவும் தங்கள் செய்கை வெளிப்படுவதற்கு மார்க்கமில்லை என்றே எண்ணி இருக்கிறார்கள்.

குணபூஷணி அம்மாளின் குழந்தை காப்பாற்றப்பட்டு, கந்தசாமியின் குழந்தையாய் வளர்ந்து வந்தது.

சொர்ண விக்ரகம் போன்ற தன் குழந்தை சதா சர்வ காலமும் தன்னுடனே இருந்து, அதனுடைய மழலை மொழிகளால் தன்னை மகிழ்வூட்டுவதற்கில்லாமல், இவ்விதம் மறைந்து வளர நேரிட்டதே என்ற வருத்தம் மேலோங்கி அதே ஏக்கமாக சிலகாலமிருந்து பின் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகேகினார்கள்.

அவர்கள் இறப்பதற்கு 15 தினங்களுக்கு முன் காந்தாமணியும் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை தான் பிரதாபன். குணபூஷணியின் குழந்தை இறந்ததால் அளவற்ற வருத்தங்கொண்டிருந்த ஜெமீந்தார், பிரதாபன் பிறந்ததும் ஒருவாறு மனசந்துஷ்டி அடைந்தார்.

மூன்று மாதங்கள் கடந்தன. குணபூஷணி அம்மாளின் குழந்தை கந்தசாமியின் இல்லத்தில் நாளொரு மேனியும்

பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஆனல், அக் குழந்தையை இங்கரிலேயே, அதுவும் சமஸ்தான ஊழியன் ஒருவனின் வீட்டில் வைத்திருப்பதில் விரும்பாத தர்மசீலர் எவ்வித ஏற்பாடு செய்யலாமென்று முனுசாமியிடம் யோசித் தார். குழந்தையை, எளிய குடும்பத்தில் வைத்திருந்தால் கிஞ்சிற்றும் சந்தேகத்திற்கு இடமில்லை என்றெண்ணினர்.

அப்பொழுது தர்மசீலரின் குடும்பத்திற்கு வண்ணுனக இருந்தான் சோலையப்பன் என்னும் வயோதிகன். அவன் தர்மசீலரிடம் அன்புகொண்டவன், அவர் கூறுவது எதுவா யிருந்தாலும் அதைச் செய்து முடிக்கப் பின்வாங்காதவன், பரம சாது, நம்பிக்கையானவன், அவனிடம் குழந்தையை ஒப்புவித்து எங்காவது வெளியூர் சென்று வசித்துவரும்படி ஏற்பாடு செய்வதென்றும், முனுசாமி அடிக்கடி சென்று கவனித்துக் கொள்வதென்றும் முடிவுசெய்து சோலையப்பனை அழைத்து விஷயத்தைக் கூறவும், அவனும் அதிக சந்தோ ஷத்துடன் இசைந்தான். அப்பையனுக்கு குணபூஷணி அம்மாளாலிடப்பட்ட பெயர் "ஜெயஸிங்" என்றும் ஆனல் இப் பெயரைக்கொண்டு அவனை அழைக்கலாகாதென்றும், அவ னின் குலத்திற்கேற்ற ஒரு பெயரை அவனுக்கிடும்படியும் கூறி குழந்தையின் போஷணைக்காக கொஞ்சம் பணமும் அவ னிடம் கொடுத்து, ஜெயஸிங் 21 வயதடைந்ததும் அவன் பிறப்பின் உண்மையை அவன் அறிந்து கொள்வதற்காக ஒரு கடிதமெழுதி, அதையும் சோலையப்பனிடம் கொடுத்து ஜாக்ரதையாக அப்பையனைக் காப்பாற்றி வரும்படியும் கூறி யனுப்பினர்.

சோலையப்பன் தன் குடும்பத்துடன் ஷண்முகபுரி சென்று தன் தொழிலைச் செய்து ஜீவித்து வந்தான். அவ

னுடைய முயற்சியினாலும், குணவொழுக்கத்தினாலும் அரண்மனை வண்ணானாக அமர்ந்தான்" என்று அவ்வயோதிகன் கூறி மேலும் கூறுவதற்குள், அவ்வாலிபன் இடைமறுத்து "மாமா! நீங்கள் குறிப்பிடுவது என் தந்தையையா?" என்று கேட்டான்.

"இல்லை, உன்னை தன் புத்திரன் போன்று வளர்த்து வந்தவன். உன்னை கலாசாலையினின்று அழைத்துக்கொள்ள வேண்டுமென்ற கொடிய உக்ரமசிங்கனின் கட்டளையை உதாசினப்படுத்தியதன் விளைவாக, அக்கொடியோனின் பயங்கர தண்டனைக்குட்பட்டு தன் உயிரை உன் கல்விக்காக தியாகம் செய்த தியாகி அவன்" என்று கூறினான் அவ்வயோதிகன்.

"மாமா.........." என்று கூறினான் வாலிபன். அதற்கு மேல் அவன் வாயினின்று எதுவும் வெளிவரவில்லை........ கண்களில் நீர் ததும்பியது.

சிறிது நேரம்வரை நிசப்தம் குடிகொண்டது.

அவ்வயோதிகன் மேலும் தொடர்ந்து கூறலானான்:— "நான் நீங்கள் நினைத்திருக்கிறபடி உங்கள் வளர்ப்புத் தந்தையின் மைத்துனனல்ல? உங்களைக் காப்பாற்றி உரிமையை அடையச் செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கும் பிரதானி தர்மஸீலரின் ஆக்ஞைப்படி நடப்பதாக வாக்குறுதி கொடுத்த "முனுசாமி"தான் நான்—உங்கள் ஊழியன், நீங்களென்னை "மாமா" வென்றழைத்த பொழுதெல்லாம் என் மனங்குன்றியது, சில சந்தர்ப்பங்களில் உண்மையை வெளியிட்டு விடலாமா? என்றுகூட நினைத்தேன். நாம் சிலோனிலிருந்து இங்கு வந்ததும், உங்கள் வளர்ப்புத் தந்தையாம் சோலையப்

பனைப் பழி வாங்கிய உக்ரமசிங்கனிடம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பிடிவாதத்துடன் ஒரு கூட்டத்தைச் சேர்த்து, பல பணக்காரர்களிடம் கொள்ளையிட்ட போது என்மனம் பட்டபாட்டை நான் எங்ஙனம் விவரிக்க முடியும்? நீங்களும் ஒரே பிடிவாதமாக இருந்தீர்கள் அதோடு 21-வயதை அடையும்வரை உங்கள் பிறப்பின் உண்மையை உங்களுக்குத் தெரிவிப்பதில்லை என்று நான் தர்மஸீலருக்கு வாக்களித்திருந்தபடியால், நானும் பேசாதிருக்கும்படி நேரிட்டது. இப்பொழுது உங்கள் கூட்டமும் "வியாபாரிகள்" கூட்டமாகிவிட்ட படியால், அதுபற்றியும் கவலையில்லை. இனி நீங்கள் "ஜெமீந்தார் ஜெயஸிங்கரா"கவேண்டும் அதுதான் எனது அவா" என்று கூறினன்.

தன்னைக் காப்பாற்றுவதில் தர்மஸீலருக்கு பெருந்துணைவனாய் இருந்த முனுசாமியே, இதுவரை தன் மாமாவாயிருந்தவன் என்பதையறிந்த ஜெயஸிங், (அவ்வாலிப்ன் குணபூஷணி அம்மாளின் மைந்தன் ஜெயஸிங் என்பது வெளிப்பட்டமையால், இனி நாமும் அவனை ஜெயஸிங் எனவே அழைப்போம்) வியப்படைந்தான். "மாமா! இன்று நான் ஓர் ஜெமீனுக்குரியவனுகிவிட்டால் நான் பெரிய மனிதனுகி விடுவேனே? என்னை, தாங்கள் "நீங்கள்" என்று குறிப்பிடுவதானது என்மனதை அதிக வேதனைக் குட்படுத்துகிறது. குழந்தைப் பருவமுதல், என்னை வளர்த்து எனக்கு "மாமா" வாக இருந்த தாங்கள் இன்றுமட்டும் எவ்விதம் என் ஊழியனுகிவிட முடியும்? என் ஹிருதயத்தில் தாங்கள் என்றும் "மாமா"தான் தயவுசெய்து இனிமேலும் தாங்கள் என்னை "நீ" என்ற ஏகவசனத்திலேயே அழைக்கவேண்டும்" என்று

வேண்டினான். முனுசாமியின் மனம் அதற்கு இடங்கொடுக்க வில்லையாயினும், ஜெயஸிங்கின் வேண்டுகோளுக்கிணங்கி ஒருவாறு சம்மதித்தான். ஜெயஸிங் மேலும் "மாமா! என்னை எதற்காக ஸிலோனிற்கழைத்துச் சென்றீர்கள்?" எனக் கேட்டான்.

"ஜெயஸிங்! உனக்கு 6-வயது நடக்கும்வரை எவ்வித விசேடமும் நடைபெறவில்லை. நீ சோலையப்பனின் புதல்வனாகவே வளர்ந்து வந்தாய். நீ ஓர் அடிமையின் புதல்வன் என்ற காரணத்தினால் சமஸ்தானத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டனர். ஆகவே, ஆரம்பத்தில் நான் சில வருஷங்கள்வரை உனக்கு கல்வி கற்றுக் கொடுத்து வந்தேன். பின்பு உயர்தரக் கல்வியைப் போதிய அளவு உனக்கு அளிக்கவேண்டுமென்று தர்மஸீலர் விரும்பியதாலும், முக்கியமாக துலவிலிருப்பதே சிறந்ததென்று எண்ணியதாலும், அவரின் உத்திரவுப்படி உன்னை அழைத்துச் சென்றேன். இனிமேலும் நாம் இம்மாதிரி மறைந்து வாழ வேண்டியது அவசியமில்லை. கடவுளுடைய கிருபையால் நமக்குதவி புரிந்தவர்களெல்லாம் உயிருடனேயே இருக்கிறார்கள். நாம் இன்றே தர்மஸீலருக்கு விஷயத்தைத் தெரிவித்து உன் பிறப்பின் உண்மையை வெளிப்படுத்தி, ஜெமீனில் உன் உரிமையை அடையச் செய்யவேண்டும். நம்முடைய வரவை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்திருப்பார்கள்" என்றான் முனுசாமி.

"மாமா! இப்பொழுது ஞாபகம் வருகிறது. நான் "ராம்" என்னும் மாறு பெயருடன் தர்மஸீலருடன் சம்பாஷித்திருந்தபோது "நான் இந்த அயோக்யர்களின் கீழ் வேலை

பார்க்க இஷ்டமில்லை. ஆயினும், சில காரணார்த்தமாகவே நான் உத்யோகம் வகித்து வருகிறேன். என் மனதில் புதைந்து கிடக்கும் அந்தக் காரியங்களெல்லாம் முடிவடையும் வரை நானிங்கிருந்துதானாக வேண்டும்" என்று கூறினார்" என்றான் ஜெயஸிங்.

"ஆம்! அவர் மனதில் புதைந்து கிடக்கும் ரகஸ்யம் உன்னைப்பற்றியதுதான். நீ கூறுவதிலிருந்து அவர் நம்முடைய வரவை ஒவ்வொரு நிமிஷமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது நன்கு தெரிகிறது. நாம் இப்பொழுதே சென்று அவரைப் பார்க்கவேண்டும்" என்றான் முனுசாமி.

"மாமா! ஒரு விஷயம், என்னைக் காப்பாற்றுவதற்காக தன் குழந்தையை பலியிடத் துணிந்த அந்த கந்தசாமி என்பவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?"

"கந்தசாமியா? இப்பொழுது இந்நகரிலேயே இருக்கிறான். உன்னை சோலையப்பனிடம் ஒப்புவித்த மறு வருஷம் அவனுக்கோர் பெண் குழந்தை பிறந்தது. அதன்பின் க்ஷேத்திர யாத்திரை சென்று இரண்டு வருஷத்திற்குப்பின் மீண்டும் இங்குவந்து தர்மஸீலரின் அனுமதி பெற்று ஜவுளி வியாபாரம் செய்து வருகிறான். நீ பிரதாபனிடமிருந்து காப்பாற்றிய கோகிலம் அவன் புதல்விதான்."

"அப்படியா!"

"ஆம்! அவன் உன்னைக் காப்பாற்றுவதன் நிமித்தம் தன் புதல்வனை இழக்கத் துணிந்தான். அதற்கு கைமாறாக

அவனின் அருந்தவப் புதல்வியாம் கோகிலத்தின் கற்பைக் காப்பாற்றியதுடன், அவன் குடும்ப கௌரவத்தையும், ஏன்? கோகிலத்தின் உயிரையும் காப்பாற்றி இருக்கிறாய். உம்...... கோகிலத்தை பிரதாபன் தூக்கிச்சென்றதும், நீ அவளைக் காப்பாற்றியதுமாகிய விஷயங்களெல்லாம் அந்தக் குடும்பத்தார் யாருக்குமே தெரியாதல்லவா?"

"தெரியாது, அவன் தூக்கிச்சென்ற அரை மணி நேரத்திற்குள்ளாக மீண்டும் நான் அவளை கொண்டுவந்து அவள் படுக்கையில் கிடத்திவிட்டு, கதவை சாத்திக்கொண்டு சென்றேன். அவர்கள் காலையில் எழுந்ததும் தாளிட்ட கதவு திறந்திருப்பதைக்கண்டு திடுக்குற்றிருப்பர். ஆனால், நாம்தான் கதவைத் தாளிட மறந்திருக்க வேண்டுமென்ற சமாதானத்தையே அடைந்திருப்பார்கள்."

"சரி......எழுந்திரு......நாம் நகருக்குச் செல்வோம்."

"நகருக்கா? எதற்கு?"

"எதற்கா? தர்மஸீலரைக் காணவேண்டாமா?"

'மாமா!......நான் ஒரு ஜெமீனின் அதிபதியாக விரும்பவில்லை. இந்த எளிய வாழ்க்கையையே விரும்புகிறேன். என் சகோதரன் பிரதாபனே ஏகபோகமாக அனுபவித்துவரட்டும். அதற்காகவல்லவா என்னைக் கொல்ல நினைத்தார்கள்? அவர்களின் மனோ பீஷ்டத்தை நாம் ஏன் கெடுக்கவேண்டும்? என்று வெறுப்புடன் கூறினான் ஜெயஸிங்.

"ஜெயஸிங் மனத்தாலும் நினைக்கமுடியாத கொடிய பாதகச் செயலைப் புரிந்துவரும் ஒருவனையா ஓர் சமஸ்தானதி

பதியாக்க நீ நினைக்கிறாய்? அவன் உன் சகோதரன் என்பதை யறிந்ததும் உன்மனம் அவன்பால் இரக்கமடைகிறதா? இவ்வளவு காலமும் கற்பழிப்பதான ஈனச் செயலைப் புரிந்து வருவது பிரதாபன் என்றறிந்து, எவ்விதமும் தக்க ஆதாரத்துடன் வெளிப்படுத்தி தண்டனைக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று சற்று முன்வரை அதிதீவிரமாய் எண்ணிய உன் மனம், சகோதர வாஞ்சையால் தளர்வடைகிறதா? அவ்வக்ரமஸ்தனை யொழிக்க முற்பட்ட நீ அவன் உன் தம்பி என்பதற்காக விட்டுக்கொடுப்பது ஞாயமா?'' என்றான் முனுசாமி.

''மாமா! ஞாயம், எல்லோருக்கும் ஒன்றுதான், அக்ரமம் புரிபவர் யாராயிருந்தாலும் அவர்கள் தண்டனையனுபவிப்பது திண்ணம், அவன் இதுவரை புரிந்த பல குற்றங்களுக்கு அவனுக்கு ஆயுள் தண்டனைதான் கொடுக்கவேண்டும். ஆனால், அவனுக்கு இத்தண்டனை கொடுக்கப்பட்டால், இவனால் கற்பழிக்கப்பட்டு தவித்துக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கை பாழாகிவிடும். அவனுடைய காமக்கண்ணுக்கு இலக்காகி தற்கொலை புரிந்துகொண்டவர்கள் நீங்கலாக, இப்பொழுது உயிரோடிருப்பது ''முனியம்மாள்'' என்னும் ஓர் யுவதியாகும்......அவள் எளிய குடும்பத்துப் பெண். அவள் வயோதிகத்தாயான ''தங்கம்'' என்பவளைத் தவிர இவளுக்கு வேறு துணையே இல்லை. அந்த முனியம்மாளின் தகப்பன் எங்கோ வெளிநாடு சென்றிருக்கிறானாம். மாதாமாதம் இன்ஷூரில் ரூபாய் இருபது வந்துகொண்டிருக்கிறதாம். ஆனால், அந்த ரூபாய் யார் அனுப்புகிறார்களென்று அவர்களுக்கே தெரியாது. அவர்கள் வெளிநாடு சென்றிருக்கும் முனியம்மாளின் தகப்பனே அனுப்பி வருவதாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணம்வந்த இன்ஷூர்கவர் ஒன்றை வாங்கிப்

பார்த்தேன். அதில் "அனுப்பு" எழுதி இருந்த விலாசத்தார் யார் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் தீர்மானப்படி வெளிநாடு சென்றிருக்கும் குடும்பத்தின் தலைவன் அனுப்பியதல்ல வென்பதை மட்டும் நிச்சயித்தேன். எப்படியெனில்? அவர்களுக்கு வந்த இன்ஷூர்களெல்லாம் தேவபுரி போஸ்டிலேயே சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஊரி லுள்ள ஒருவராலேயே அனுப்பப்படுகிறதென அவர்களிடம் கூறினேன், அதற்கு அவர்கள் தங்களுக்குப் பணம் அனுப்பக் கூடியவர்கள் இந்த ஊரில் ஒருவருமில்லை என்று கூறி விட்டார்கள். எப்படி இருப்பினும் நான் அதைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று தீர்மானித்தேன்" என்று ஜெயஸிங் கூறிக்கொண்டு வரும்பொழுதே, முனுசாமி இடைமறுத்து "முனியம்மாள்! அவள் தாயார் பெயர் தங்கம். அவர்கள் இருப்பிடத்தை அறிவாயா?" என்று ஆவலுடன் கேட்டான். கண்களில் நீர் ததும்பியது. இதைக் கண்ணுற்ற ஜெயஸிங் மனம் பதறியவனாய் "மாமா! நீங்கள் ஏன் கண் கலங்குகிறீர்கள் அவர்களைப்பற்றி உங்களுக்கேதாவது தெரியுமா?" என்றான்.

"ஜெயஸிங்! முனியம்மாள் இவ்வக்கிரமஸ்த்தனால் கற்பழிக்கப் பட்டாளா? ஐயோ! அவளுடைய கதி இவ்விதமாகவா முடியவேண்டும்" என்றுகூறி தன்னுள்ளெழுந்த துக்கத்தை அடக்கமுடியாது பொருமினான் முனுசாமி.

"அவர்கள் யார் என்பதை நீங்களறிவீர்களா? நீங்கள் ஏன் இவ்விதம் துக்கப்படுகிறீர்கள்? அவர்கள் யார்? சொல்ல மாட்டீர்களா? நீங்கள் மனங்கலங்குவதைக் காண என்னால் சகிக்க முடியவில்லையே!" என்று கண்கலங்கிய வண்ணம் கேட்டான் ஜெயஸிங்.

" அவர்களா............?...........கடவுளின் பிரதிநிதியாய், தன் நாட்டு மக்களை ஞாயவழியில் கொண்டு செல்வதற்கு,

அவர்களின் கஷ்டநஷ்டங்களை அறிந்து வேண்டுவன செய்வ தற்கென்றிருக்கும் ஓர் அதிபதி, தன் கர்மத்தை மறந்து, கடமையைத் துறந்து, தனது மக்கள், தனது சகோதரிகள், தனது தாய்மார்கள், என்ற எண்ணம் பதியவேண்டிய ஹிருத யத்தில், எல்லோரும் தன் காமக் கிளத்திகள் என்று எந்த அயோக்யன் எண்ணினானோ, அந்த அயோக்யன் பிரதாபன், அந்தக் காமப் பேயாம் பிரதாபனால், கற்பழிக்கப்பட்டு, அகம் வெந்து, மனமுடைந்து நடைப் பிணமாய், ஊசலாடிக் கொண் டிருக்கும் அந்த முனியம்மாள் இத் துர்ப்பாக்யனின் புதல்வி யேயாகும்" என்றான் முனிசாமி. அவனுடைய கண்கள் பயங் கரத் தன்மையை யடைந்தன. கோப மிகுதியால் ஒவ்வொரு அங்கமும் "கிடு கிடு" வென்றாடின.

"மாமா! உங்கள் புதல்வியா முனியம்மாள்? ஐயயோ! என்னாலல்லவா உங்களுக்கு இவ்வளவுகஷ்டங்கள் ஏற்பட்டன? நான் இப்பொழுது என்னசெய்வதென்பதே எனக்கு விளங்க வில்லை உங்களுடைய மனத்துயரை நான் எங்ஙனம் ஒழிப் பேன்?" என்றுகூறி சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழலானான்.

"ஜெயஸிங்! நடந்ததை நினைத்து வருந்துவதில் பய னென்ன? எங்களை இவ்வளவு துயரத்திற்குள்ளாக்கியது கடவு ளின் இஷ்டம்போலும். உன்னாலும், ஏன்? வேறு ஒருவராலும் எனக்குக் கஷ்டம் வரவில்லை. அவ்விதம் நீ நினைப்பாயானால் அது அறியாமையையே குறிக்கும். நடப்பவற்றை தடுப்ப தற்கு நமக்கு சக்தி ஏது? என்ன வந்த போதிலும் அவற்றை அனுபவிக்க வேண்டியவர்களே நாம்."

"மாமா! நடப்பதை தடைசெய்ய நம்மால் இயலாதென் பது உண்மையாயினும், அதற்காக நம் முயற்சியை விட்டு

விடுவது சிறந்ததல்லவே. தங்கள் புதல்வி கற்பிழந்தற்காக அவள் ஆயுள்வரை கஷ்டப்பட வேண்டுமென்பது விதியா? அவளுக்கு மயக்கம் கொடுக்கப்பட்டு, தன் நினைவிழந்திருக்கும் பொழுது தூக்கிச்செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டாள். அவளுடைய தேசம் கெட்டழிக்கப்பட்டது. அவளுடைய வாழ்க்கை பாழானதற்கு காரணஸ்தர் யார்? தங்கள் புதல்வியா? இல்லை......விதியா? நேரிடையாகக் கூறினால்...........அந்த அயோக்யன் பிரதாபன் என்றுதான் கூறவேண்டும் அவன் புரிந்த இக்குற்றத்திற்கு அவனுக்கு தண்டனை யளிப்பதை விட, அவன் தங்கள் புதல்வியை மணக்கும்படி செய்தால்...'' என்று வாக்கியத்தை முடிக்குமுன் முனுசாமி, "ஜெயஸிங்! இது நடைபெறக் கூடியதா? இது வீண் எண்ணம்'' என்றான்.

"இல்லை, இது நடைபெறக் கூடியதுதான். என்? நடைபெற வேண்டியதேதான், அவ்வித ஏற்பாடு செய்திருக்கிறேன். ஒரு சந்தேகம், நீங்கள் ஏன் உங்கள் மனைவியையும், புதல்வியையும் அநாதைகளாய் விட்டுச் சென்றீர்கள்?'' எனக் கேட்டான் ஜெயஸிங்.

"நான் உன்னை ஸிலோனுக்கு அழைத்துச் செல்லும் காலத்தில் முனியம்மாள் பிறந்து ஒரு வருஷமாயிருந்தது. பொதுவாக, உன்னைப்பற்றிய விஷயம் எதுவுமே தங்கத்திற்குத் தெரியாது. நான் ஸிலோனிற்குச் செல்வதாக யாரிடமும் பிரஸ்தாபிக்க வேண்டாமென்றும், மாதா மாதம் 20 ரூபாய் தங்கத்தின் பெயருக்கு இன்ஷூரில் அனுப்பிவிடுவதாகவும் கூறினார் தர்மஸீலர். ஆகவே, நான் தங்கத்தினிடம் வெளிநாடு செல்வதாகவும், சீக்கிரம் திரும்பி விடுவதாகவும் கூறியதுடன், மாதா மாதம் ரூபாய் இருபது போஸ்ட்டு மூலம் அனுப்புவதாகவும் கூறிச்சென்று விட்டேன். தர்மஸீலர் என்னிடம் கூறியதுபோல் இன்றளவும் அவர்களுக்குப்

பணம் அனுப்பிக்கொண்டு வருகிறார் என்பது நீ கூறுவதால் தெரிகிறது. நாம் இந்த நாட்டிற்கு வந்ததும், நான் இருமுறை நகருக்குள் போயிருந்தபோது விசாரித்தேன். அவர்களும் முன் வசித்த வீட்டில் இப்பொழுது இல்லாததால் காண முடியவில்லை. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கலாமென்றாலும் உனக்கு 21-வயது பூர்த்தியான பின்புதான் நாம் பகிரங்கமாக வெளிவரவேண்டுமென்பது தர்மஸீலரின் கட்டளை. ஆகை யால், அதிகமாக நகருக்குள் உலாவுவதற்கு முடியவில்லை...... உம்......இனிமேல் அவர்களைப் பார்த்தால்தான் என்ன செய்யவிருக்கிறது? நான் போய்ப் பார்ப்பதால் அவர்கள் மனத்துயர் அகன்றுவிடுமா? இல்லை......சரி அதைப்பற்றி பிறகு யோசிப்போம்" என்றான் முனுசாமி.

"மாமா! நீங்கள் இவ்விதம் சொல்லிவிடக் கூடாது. உங்களையன்றி அவர்களுக்கு ஆறுதலளிக்கக்கூடியவர்கள் வேறு யாரிருக்கிறார்கள்? அதோடு, நான் தங்கள் புதல்வியை பிரதாபன் மணம் புரிவதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கி றேன். ஆனால், நான் நிர்ப்பந்தப் படுத்தியதால்தான் அவன் ஒப்புக்கொண்டிருக்கிறானே தவிர மனமொப்பியல்ல. எவ்வித மிருப்பினும், பலவந்தமாகவாவது முனியம்மாளை மணம்புரியச் செய்து, அவன் இந்த சமஸ்தானாதிபதியாக இருந்து அனு பவித்து வரட்டும். நான் சிறுவயதிலிருந்து எழியவர்களி டையே வாழ்ந்து வந்ததால் ஆடம்பர வாழ்வையும், முத லாளித் தன்மையையும் விரும்பவில்லை. அதோடு பிரதாபன் புரிந்த கொடுஞ் செயல்களுக்கு தங்கள் புதல்வியை அவன் மணம்புரிந்து வாழ்க்கை நடத்துவதே நீதியாகும். அவ்வித மில்லாது அவனுக்கு வேறுவித தண்டனை அளித்தால் தங்கள் புதல்வியின் வாழ்வு பாழ்பட்டுவிடும். ஆகையால் மாமா!

நாமிருவரும் சென்று இந்த ஏற்பாட்டை தங்கள் மனைவி, புதல்வி ஆகிய இருவரிடத்தும் கூறி அவர்களின் மனத் துயரை மாற்ற வேண்டும்” என்றான் ஜெயஸிங்.

“என் புதல்வியின் வாழ்வைப்பற்றி நீ கவலைகொள்ள வேண்டாம். முதலில் நீ இன்னாரென்பது வெளிப்படுத்தப் பட்டு, உன் உரிமையை அடையவேண்டும். நீ ஜெமீனை ஏற்றுக் கொள்ள மறுத்தால், எங்கள் ஆவலும், பிரயாசையும் வீணாகி விடும். நீ ஜெமீனை ஏற்றுக்கொண்டபின் உன்னுடைய ஏற் பாட்டின்படி அவன் என் புதல்வியை மணந்தால்........... ஜமீனில் அவனுடைய பாகத்தை அவன் அடையட்டும்...... ஓ!......அதுகூட எவ்வழியிலும் ஞாயமில்லை......நீ அன்று “ராம்” என்னும் மாறு பெயருடன் பிரதாபனின் செய் கையை அறிவதற்கு அரண்மனையில் மறைந்திருந்த போது உன்னுடைய கையாளான “மாடசாமி”யால் காந்தாமணி— உக்ரமசிங்கன் கூட்டுறவை யறிந்து சந்தேகமுற்று அவர்களின் சம்பாஷணையை இயந்திர மூலமாகப் பதிவு செய்திருப்பதாக கூறி, அச்சம்பாஷணை முழுமையும் என்னிடம் கூறின யல்லவா? அந்த சம்பாஷணையிலிருந்து நாம் பல ரகஸ்யங்கள் அறிவதோடு, முக்கியமாக இந்த “பிரதாபன்” ஜெமீந்தாருக் குப் பிறந்தவனல்ல வென்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவர்களுடைய சம்பாஷணையைக் கொண்டே இந்த பிரதாப னுக்கு ஒன்றுமில்லை என்று செய்துவிட முடியும். ஆனால், அது பொதுவாக இந்த சமஸ்தானத்திற்கே அவமதிப்பை கொடுப்பதாகும். கூடுமானவரை பிரதாபனின் பிறப்பின் உண்மை வெளியாகாமலே நாம் காரியாதிகளை முடிக்கப் பிரயாசைப் படுவோம். அவர்கள் எதிர்த்தார்களானால்...... இவ்வக்கிரமஸ்தர்களை ஒழித்துத் தானாகவேண்டும். அப்பொ

முது இந்த சமஸ்தானப் பொருப்பை நீ தானே வகிக்க வேண்டும்" என்ருன் முனுசாமி.

"மாமா! இந்த சமஸ்தானத்தை நான் அடைவதால் இந்த சமஸ்தானம் மட்டுந்தான் எனதுடமையாகும். இந்த தேசமே எனதுடமை என்றுதான் கருதுகிறேன். இந்த தேசத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இத்தேசம் சொந்தம். இதையறியாது ஒருசிலர் குறிப்பிட்ட நிலப்பிரப்பை தம் சொந்தமாக்கிக் கொண்டு அதில் வசிக்கும் மக்களை துன் புறுத்தி, கொடுமைப்படுத்தி அவர்கள் உழைப்புக்குத் தக்க ஊதியம் கொடுக்காமல், வறுமை சொரூபங்களாக்கி அவர் களிடமிருந்து அதிக வரி வசூலித்து அதில் ஒரு சிறு பகுதியை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்திவிட்டு மீத மிருக்கும் பெரும் பகுதியான பணத்தைக் கொண்டு ராஜ போகமாக வாழ்கின்ற இந்த ஆடம்பரமான வாழ்வை நான் அறவே வெறுக்கின்றேன். ஓர் ஜெமீந்தாருக்கு நேரிய முறை யில் என்னென்ன அபிலாசைகளிருக்கின்றனவோ, எவ்வித உணர்ச்சி தோன்றுகிறதோ, அவைகளெல்லாம் ஓர் உழைப் பாளிக்கு மிருக்கிறது. மானிடவாழ்வு என்ற முறையில் இரு வரும் ஒருவரே. அதை யாரும் மறுக்கமுடியாது. அவ்வித மிருக்க லக்ஷக்கணக்கான மக்களின் உழைப்பைக்கொண்டு, ஒரு தனி மனிதன் பணக்காரனுகவும், ஆடம்பரமாகவும் வாழ்வது, அவன் அவ்விதம் வாழ்வதற்கு காரணகர்த்தாவான ஏழை உழைப்பாளிகள் கஷ்டப்படுவது என்ருல் அது எவ் வளவு அநீதம்? இதை எடுத்துக் கூறப்போனுல், அவரவர்கள் முன் ஜென்மத்தில் செய்த பாவபுண்ணியங்களுக்கு தக்கவாறு இந்த ஜென்மத்தில் அனுபவிக்கிருர்கள் என்று கூறப்படுகிறது.

ஏன்? ஜெமீந்தாருயிருக்கிறவர் சமஸ்தானத்தின் வரும்படியின் செலவுபோக மிகுதியை, அந்த உழைப்பாளிகளின் நலத்திற்கு செலவிட முடியாதா? அவர்கள் அபிப்பிராயப்பட்டால், பிரஜைகள் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று நினைத்தால், செய்ய முடியும். ஜனங்களின் உழைப்பும் அதிகரிக்கும். அவர்களின் மனப்பூர்வமான உழைப்பால் ஜெமீனில் அதிக வரும்படிக்கும் இடமிருக்கிறது. ஆனால், இவ்வித எண்ணம் எந்த ஜெமீந்தாருக்கும் உதிப்பதில்லை. காரணம் தான உயர்ந்த ஜாதியினர், அவர்கள் தாழ்ந்த ஜாதியினர் என்ற பிடிவாத மனப்பான்மையேயாகும். இந்த வேறுபாடு ஜெமீந்தாரின் மனதினின்று அகன்று விடுமாயின், அவனும் நம்மைப்போன்ற மனிதன் என்ற உணர்ச்சி ஏற்படும். இவ்வுணர்ச்சி அந்த ஜெமீந்தாரின் மனதில் ஏற்பட்டுவிடின், நாள் முழுதும் உழைக்கும் ஓர் உழைப்பாளி, அவன் உழைப்புக்குத் தக்க ஊதியம் அடையவேண்டுவது அவசியம் என்று எண்ணுவான். உழைப்பாளிகள் வேண்டுவது என்ன? முழு வயிறுக் கஞ்சிதான். அவர்கள் காலையிலிருந்து மாலை வரை உழைப்பதில் ஏதாவது குறைவிருக்கிறதா? இல்லை. நெற்றி வெயர்வை நிலத்தில்விழ உழைக்கிறார்கள். அதற்குத்தக்க ஊதியம் கிடைக்கிறதாவென்றால்? அதுதானில்லை. அதோடு இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. இதே நகரத்திலே நேற்று மாலை நான் கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, கட்டுமஸ்தான தேகத்துடன் கூடிய ஒருவன் வந்து என்னிடம் யாசகம் கேட்டான். நான் அவனிடம் "நல்ல தேகக் கட்டுடனிருக்கும் நீ ஏன் கூலிவேலை செய்து வயிறு வளர்க்கலாகாது. யாசகம் வாங்கி ஜீவிப்பதான சோம்பேறி வாழ்க்கையை அறவே

ஒழித்துவிடு" என்று கூறினேன். அதற்கு அவன் "சாமி! நான் இதுவரை ஒரு நாளாவது யாசகம் வாங்கி சாப்பிட்டவனில்லீங்கோ, இந்த ஊரிலே வந்து இரண்டு நாளாய் சுத்தித் திரியிரேனுங்கோ, ஒரு வேலையும் கிடைக்கலீங்களே, நான் என்ன செய்வேன்? நீங்க ஏதாவது வேலை கொடுங்களே நான் செய்யிரேன், எனக்கு பளஞ்சாதம் கொடுத்தாலும் போதும், இரண்டுநாளாய் பட்டினி கிடக்கிறனுங்க" என்றான். கண்களிலும் நீர் ததும்பியது. எனக்கு அவன்பால் இரக்க மேற்பட்டது. நான் இரண்டணு சில்லரை கொடுத்து ஏதாவது சாப்பிட்டுவிட்டு நம் கந்தனிடம் போயிருக்கும்படி அனுப்பி இருக்கிறேன்.

"மாமா! இவ்விதமாக எவ்வளவோ ஜனங்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், அவர்களை க்ஷேமமுறச் செய்யவும் ஜெமீந்தாரால் முடியும். அவரதற்கு என்ன செய்யவேண்டுமென்றால், எவனெவன் எந்தெந்த வேலைக்குத் தகுதியுடையவன் என்பதை நிர்ணயித்து, அவர்களுக்கு வேலை கொடுத்து, அவர்களின் உழைப்புக்குத் தக்கபடி, ஆனல் போதுமான அளவு கூலிகொடுக்கப்பட வேண்டிய முறையில் தன் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும். கட்டாயக் கல்வி முறையை நாடெங்கும் பரப்பவேண்டும். கல்வி வாசனையே யில்லாத தொழிலாளர்களுக்கு இராப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வெறும் புஸ்தகப்படிப்பைமட்டும் புகட்டுவதால் எவ்விதபிரயோஜனமுமில்லை. கைத்தொழில், விவசாயம் முதலியவற்றை நன்கு போதிக்க வேண்டும். அவர்களுடைய சுகதுக்கங்கள் தன்னுடையதேயென்று அந்த ஜெமீந்தார் எண்ணவேண்டும்.

குடிமக்களுடைய முன்னேற்றத்திலேயே கண்ணுங் கருத்து மாக எந்த ஜெமீந்தாரிருக்கிறாரோ அந்த சமஸ்தானம் உன்னத நிலையை எய்தும் என்பதில் என்ன சந்தேகமிருக்கிறது? சரி, இப்பொழுதிருக்கும் நிலையைக் கவனிப்போம். ஒருவனுடைய உழைப்பால் ஒரு ரூபாய் கிடைக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதில் அந்த உழைப்பாளிக்குக் கிடைப்பது மிகவும் சொர்ப்பந்தான். மீதியை ஜெமீந்தாரடைகிறார். வரும்படியில் பெரும் பகுதியை அடையும் அந்த ஜெமீந்தார் தன் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஏதாவது செய்கிறாரா? இல்லை. தானும் தன்னைச் சார்ந்தவர்களும் உண்டு உடுத்திக் களிக்கவேண்டும், சதாசர்வ காலமும் ஆனந்த சாகரத்திலேயே மிதக்கவேண்டும், அதுதான் தர்மமெனக் கருதுகின்றனர் போலும், அதோடுமட்டுமல்ல. அநேகர் வெளிநாடு சென்று அந்த நாட்டாரின் நாகரீக போகத்திலீடுபட்டு தன் நாட்டையும் மறந்துவிடுகின்றனர். இதுதான் இப்போதைய ஜெமீந்தார்களில் பலர் செய்து வருவதாகும் மாமா! குடிமக்கள் க்ஷேமமுற வேண்டுமானால், முதலில் நான் உயர்ந்த ஜாதியினன், அவர்கள் கடையர்கள் என்ற துவேஷப் புத்தி, அடக்கியாளும் மனப்பான்மை, இந்த ஜெமீந்தார்களை விட்டொழியவேண்டும். அடுத்தபடியாக விவசாயிகள், தொழிலாளிகள் தங்கள் தொழிலில் முன்னேற்றமடைவதற்கான தொழில் கல்வியை அவர்களுக்கு அளிக்கவேண்டும். அவர்களுக்குப் போதிய சாதனங்கள் செய்து கொடுத்தல் வேண்டும். இவ்வித மாறுபாடுகளுடன் ஜெமீனை நடத்துவது சாத்தியமானதேயாகும். மனுஷ சக்திக்குப் புறம்பானதுமல்ல. விதி, முன் ஜென்மத்தில் செய்த பாவபுண்ணியங்களெல்லாம் அவர்களை நசுக்குவதற்கு உபயோகிக்கும் வார்த்தைகளே

யாகும். இந்த மாறுபாட்டால் அவைகள் சென்றவிடம் தெரியாமல் மறைந்துவிடவும் கூடும். இப்பொழுது எனதுடைமையான இந்த சமஸ்தானத்தை இவ்வித மாறுபாடுகளுடன் நடத்திக்கொண்டு போகமுடியும். ஆனல், பிரதாபன் என் அபிப்பிராயத்துக்கு இணங்குவது சிரமமே. அதோடு எனக்கு இந்த உயரிய வாழ்வைவிட, நான் இப்பொழுதிருக்கும் எளிய வாழ்க்கையே பிடித்திருக்கிறது" என்று கூறிமுடித்தான் ஜெயஸிங்.

அவன் கூறியவற்றை எல்லாம் அதி உன்னிப்பாய் செவியுற்ற முனுசாமி "ஜெயஸிங்! இப்பொழுது நம் சமஸ்தானமிருக்கும் நிலேயில் குடிமக்களின் கஷ்டநஷ்டங்களே அறிந்து அவர்கள் துயரைத் தீர்த்து எங்கும் சந்தோஷம் நிலவி இருத்தல் வேண்டுவதற்கு நீ தான் ஜெமீந்தாராக வேண்டும். பிரதாபன் நம் ஏற்பாட்டிற்கிணங்கி, என் புதல்வியை மணம் புரிந்துகொண்டாலும் இந்த நாட்டில் வசிக்க இஷ்டப்பட மாட்டான் என்றே நம்புகிறேன். அவர்களின் சிலவிற்கு ஏதாவது பணம் கொடுத்து வெளிநாட்டிற்கனுப்பி விடலாம். இதுபற்றி பின் தர்மஸீலரிடம் ஆலோசிப்போம். முதலில் நாம் அவரைக் காணவேண்டுவது மிக மிக அவசியம். உம்...... எழுந்திரு" என்று கூறி எழுந்தான் முனுசாமி

"ஆம் மாமா! அவருடைய யோசனேயும் பயன்தரத் தக்கதாக இருக்கும்" என்று கூறியவண்ணம் எழுந்தான் ஜெயஸிங்.

இருவரும், தங்கள் குடிசையைவிட்டு வெளிப்பட்டு நகரை நோக்கி செல்லலாயினர்.

அத்தியாயம் 10.

ஒரு ஜெமீனின் அதிபதிதான், அக் கூட்டத்தின் தலைவன் என்று, அவ்வளவு சீக்கிரத்தில் அவர் அவன் மீது சந்தேகங் கொள்வதென்பது சாத்திய.........

தேவபுரியில், ஜெமீந்தார் சாந்தசிங், காந்தாமணி, மற்றும் சமஸ்தான உத்தியோகஸ்தர்கள், உறவினர்கள், குடிமக்கள், எல்லோரும் பிரதாபனின் திருமணத்தினிமித்தம், சண்முகபுரி சென்று விட்டனர். பிரதாபனும், நஞ்சப்பனும், மற்றும் அவர்கள் சிப்பந்திகள் மட்டும், தேவபுரியில் தங்கினர். திருமணத்தன்று காலையில், காட்டு மாளிகையில் ஓர் விருந்து ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதை முடித்துக் கொண்டு சரியாக 8½-மணிக்கெல்லாம், ஷண்முகபுரிக்கு வந்துவிடுவதாகவும் கூறி, அவர்களை, இரண்டு தினம் முன்பே, அனுப்பிவிட்டான் பிரதாபன்.

பிரதாபன் திருமணத்தன்று காலை 7-மணிக்கெல்லாம் ஏராளமான கனவான்கள், "காட்டு மாளிகை"யில் நிறைந்திருந்தனர். மேலும் பல கனவான்கள் வாகனங்களில் வந்திறங்கிக்கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில், ஓர் கார் வந்து பங்களாவின் முன் நின்றது அதிலிருந்து, முனியம்மாள், அவள் வயோதிகத் தாய், முனியம்மாளின் தகப்பன் முனுசாமி ஆகிய மூவரும், இறங்கினர். நஞ்சப்பன் ஓடோடியும் வந்து, அவர்களை வரவேற்று, அழைத்துச் சென்று, ஒரு சிறு ஹாலில் அமரும்படி செய்து, முனிசாமியை நோக்கி, "ஐயா! இன்னும் இரண்டொ

ருவர் வரவேண்டிய திருக்கிறது. அவர்கள் வந்ததும் நாம் காரியத்தை நடத்திவிடுவோம். நான் வந்து கல்யாணப் பந்த லுக்கு அழைத்துச் செல்லுகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்றான்.

முனுசாமியின் மனம் ஒரு நிலையிலில்லை. அங்கு அவர் கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்தால், வேறு விதமாக எண்ணுவதற்கு மில்லை. இருப்பினும், தன்னுள்ளெழுந்த சந்தேகத்தை கேட்டுத் தெரிந்துகொள்ள எண்ணியவனாய், நஞ்சப்பனை நோக்கி, "ஐயா! இளைய ஜெமீந்தார் ஜெயாவை மணம்புரிவதற்கான சகல ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருப் பதாகத் தெரிகிறது, ஜெமீந்தார் முதல் சகலரும் ஷண்முகபுரி சென்றிருக்கின்றனர், அம்மணத்தினின்று பிரதாபர் விலகிக் கொள்ளாமல், என் புதல்வியை மணம் புரிவது எங்ஙனம் சாத்யமாகும்?'' என்றான்.

"ஐயா! அவ்விதமல்ல, பிரதாபர், தன் மனப்பூர்வமாக அம்மணத்தினின்று விலகிக்கொண்டார். ஆனால், அதை இது வரை வெளிப்படையாக யாரிடமும் கூறவில்லை. ஏனெனில், ஓர் ஜெமீந்தார் தன் அந்தஸ்துக்குக் குறைவான, ஓர் பெண்ணை மணந்துகொள்வதென்பது சாதாரணமாக நடக்கக் கூடியது மல்ல, இழிசொல்லுக்கும் ஆளாகவேண்டும் பிரதாபர் முன்னமே, முனியம்மாளை மணந்துகொள்வதென முடிவு செய்திருக்கிறார். மணமுடிந்ததும் யாரிடமும் சொல்லிக்கொள் ளாமல், இப்படியே எங்காவது, வெளிதேசம் சென்று விடுவ தெனவும் எண்ணியுள்ளார். இதுதான், அவர்ஜெயாவின் திரு மணத்தை தடைசெய்யா திருப்பதன் காரணம்.'' என்று பதிலளித்தான் நஞ்சப்பன்.

அவன் கூறியதில் நம்பிக்கை கொள்ளவில்லை யாயினும் ஜெயசிங் தனக்கிட்ட கட்டளைப்படி, அவன் முகமூடி மனித னாகவந்து, கோகிலத்தைக் காப்பாற்றியபோது, பிரதாபன், அவனிடம் கூறிய உறுதி மொழிப்படி நடக்கிறார்களா? என்பதைக் கவனிப்போம், என்று மேலும் ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தான் முனிசாமி.

நஞ்சப்பன் அந்த ஹாலின் கதவை சாத்தி, உள்ளிருப் பவர்கள் அறியாவண்ணம் வெளியில் தாளிட்டுவிட்டுச் சென்றான்.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

தர்மஸீலர் "ராம்" என்னும் வாலிபனிடம் கூறியபடி பிரதாபனின் திருமணத்தன்று காலை 7½-மணிக்கே "பளிங்கு மண்டப"த்திற்கு வந்து அவனைக் கண்டார்.

"ராம்" யாரென்பதை அறியவேண்டு மென்ற ஆவல் பலமாக எழுந்தது தர்மஸீலருக்கு. ஆனால், தன்னைப்பற்றி எதுவும் கேட்கலாகாதென, அவன் முன்பே அவரிடம் கேட்டுக்கொண்டிருந்தபடியால், சிறிது தயங்கினர்.

அப்பொழுது, ராம் "ஐயா! என்னுடைய வார்த்தை களில், நீங்கள் சந்தேகங் கொண்டிருக்கிறீர்களென்று நினைக்கி றேன்" என்றான்.

ஆம்! அவர் "ராம்" என்னும் அந்த வாலிபன் யாரென்ப தையறிய வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த தருணம், அவன் இவ்விதம் கூறியதானது, உண்மையிலேயே அவரைத் திடுக்குறச்செய்தது. ஆனாலும், அவரதை வெளிக்காட்டிக் கொள்ளாது "ராம்! உன்னுடைய வார்த்தைகளில் சந்தேக மேற்பட்டிருந்தால், நான் இங்கு வந்தே இருக்கமாட்டேன்.

அதோடு, நான் கவனிக்கவேண்டிய அலுவல்கள் அதிகமா யிருக்கிறது. நான் அன்று உன்னை சந்திப்பதாக வாக்களித்து விட்டோமே என்றுதான், இப்பொழுது வந்தேன்" என்றார் தர்மஸீலர்.

"அப்படியானால், அந்த கற்பழிக்கும் கூட்டத்தார் யார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பவில்லையா?"

"என்ன! பின் எதற்காக, இன்று இங்கு வந்தேன்?"

"இல்லை......அன்று என்னிடம் வாக்களித்ததன் நிமித் தம், இப்பொழுது வந்ததாகச் சற்று முன் கூறினீர்களே, உண்மையிலேயே அக் கூட்டத்தாரைப் பிடிக்கவேண்டுவதில், உங்களுக்கு சிரத்தையில்லாவிட்டால்?......எனக்காக இங்கு வந்திருக்கவேண்டாமே, என்று தான் சொன்னேன்"

"ராம்! அக் கூட்டத்தாரைப் பிடிக்க வேண்டியதும் அவசியந்தான். இவர்கள் யாரென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அதைவிடப் பன்மடங்கு முக்கியமானது, எனது இதர அலுவல்களும். அது எவ்வித மிருப்பினும் சரி, இந்தக் கூட்டத்தாரைத் தெரிந்துகொண்ட பின்தான், அவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடனேயே இங்கு வந்தேன். சரி மேலே நாம் என்ன செய்யவேண்டும்?" என்றார் தர்மஸீலர்.

"இப்பொழுது நீங்கள் என்னைப் பின் தொடர்ந்து வரவேண்டும். வழிநடுவே என்னை எதுவும் கேட்கலாகாது" என்றான் ராம்.

தர்மஸீலர் சில நிமிஷங்கள்வரை யோசித்தார். முன்பின் தெரியாத ஒருவனுடைய வார்த்தைகளை நம்பி அவனைப் பின்

தொடர்ந்து செல்வதற்கு அஞ்சினர். ஆனால், அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. என்னதான் நடக்கிறது பார்த்துவிடுவோம் என்ற தைரியமும் ஒருபுரம் எழுந்தது. பின், அவ்வாலிபனை நோக்கி "நான் உன்னைப் பின் தொடர்ந்து வருகிறேன். ஆனால், நான் 10-மணிக்கெல்லாம் ஷண்முகபுரியிலிருக்கவேண்டும்" என்றார்.

"ஆஹா! அவ்வளவு நேரம் தாமதிக்க வேண்டிய அவசியம் நேரிடாது" என்று கூறிக்கொண்டே எழுந்து நடந்தான். தர்மஸீலர், தன் மோட்டாரோட்டியிடம் தான் மீண்டும் அங்கு வரும்வரை அவ்விடத்திலேயே காத்திருக்கும்படி கூறிவிட்டு ராமைப் பின்தொடர்ந்தார்.

அவருடைய வலதுகரம் இடையில் சொருக்கப்பட்டிருந்த ரிவால்வரின் மீதே இருந்தது.

ராம் முன்னும், தர்மஸீலர் பின்னுமாக 10 நிமிஷ நேரம் நடந்து "காட்டு மாளிகை"யின் சமீபம் வந்தனர். அப்பொழுது தர்மஸீலர் ராமை நோக்கி "ராம்! என்னை எங்கழைத்துச் செல்லுகிறாய்? இது எங்கள் ஜெமீன்தாரின் மாளிகையாற்றே" என்றார்.

"ஆம், அது எனக்கும் தெரியும் பேசாது என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள். இன்னும் சிறிது நேரத்தில் உங்களுக்கு எல்லாம் விளங்கிவிடும்" என்று ராம் கூறவும், தர்மஸீலர் மேலும் ஒன்றும் கேட்க வழியில்லாது, அவனைப் பின்தொடர்ந்தார்.

ராம், "காட்டு மாழிகை"யின் பின்புரமாகச் சென்று, மதிலைக்கடந்து செல்ல வழி இருக்கிறதாவென ஆராய்ந்தான். அப்பங்கிழாவின் மேற்குப்பக்கமாயுள்ள மதிலை யுராய்ந்து,

ஒரு பெரிய விருக்ஷத்தின் கிளையொன்று நீண்டிருப்பதைக் கண்டு சந்தோஷங்கொண்டவனுய், தர்மஸீலருடன் அவ்விடத்தை அடைந்து அக்கிளையின் உதவியால், மதிலைக் கடந்து, பங்களாவின் பின்புறத் தோட்டத்தில் பிரவேசித்தனர்.

அவர்கள் பங்களாவை நோக்கி பாதி தூரம் வந்ததும், பின்புறமிருந்து "எஜமான்!" என்றான் ஒருவன்.

இருவரும் பின்புறம் திரும்பி நோக்கினர். அங்கே நின்றுகொண்டிருக்கும் மனிதனைக் கண்டதும் தர்மஸீலரடைந்த ஆச்சரியத்திற்களவில்லை. ஏன்? அவன்தான் மாடசாமி.

ராமினுடைய ஏற்பாட்டின்படியே அவன் அங்கு வந்திருந்தபடியால், ராம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"மாடசாமி! உள்ளே செல்வதற்கு தடையொன்றுமில்லையே?" என்று தாழ்ந்த குரலில் வினவினுன் ராம்.

"இல்லீங்க நானு கதவை திறந்து வைச்சுபுட்டு, உங்களுக்காக ரெம்பநேரமா காத்துகிட்டு இருக்கிறேனுங்க" என்று கூறிய வண்ணம் முன் நடந்தான். இருவரும் தொடர்ந்து சென்றனர்.

மாடசாமியை அங்கு கண்டதும், தர்மஸீலருக்கு ராமின்பால் ஏற்பட்டிருந்த கொஞ்ச சந்தேகமும் அறவே மறைந்து விட்டது. ஆனல், ராம் காட்டு மாளிகைக்கு வரவேண்டிய காரணமென்ன? கற்பழிக்கும் கூட்டத்தார் காட்டுமாளிகையில்தானு இருக்கிறூர்கள்? அவ்விதமானல் அக்கூட்டத்தவர் யார்?" என்று தன்னையே கேட்டுக்கொண்டார். ஒரு ஜெமீனின் அதிபதிதான், அக்கூட்டத்தின்

தலைவன் என்று, அவ்வளவு சீக்கிரத்தில் அவர் அவன் மீது சந்தேகங்கொள்வதென்பது சாத்தியமில்லையல்லவா? நிற்க.

மாடசாமி, பங்களாவின் பின்புறக் கதவை திறந்து வைத்திருந்தபடியால், எவ்வித சிரமமுமன்னியில் உள்ளே பிரவேசித்தனர்.

அவர்கள் உள்நுழைந்ததும், மாடசாமி கதவைத் தாளிட்டு விட்டு, வேறுவழியாக பங்களாவின் முன் வாயலை அடைந்தான்.

ராமும் தர்மஸீலரும், பின்கட்டைத் தாண்டி வந்து கொண்டிருக்கும்போது, எதிரே உள்ள ஹாலில், இருவர் சம்பாஷித்துக் கொண்டுவருவதை யறிந்தனர். குரலொலி யால் அவ்விருவரும், பிரதாபனும், நஞ்சப்பனும்தான் என்பதை ஒரு நொடியிலறிந்து திடுக்குற்றனர். மறைந்து கொள்வதற்கு வேறுமறைவிடமில்லாமையால், பக்கத்தில் திறந்திருந்த ஒரு அறையினுட்ச் சென்றனர்.

தர்மஸீலர் அப்பங்களாவிற்கு அடிக்கடி வந்து போவா ராதலால், அப்பங்களாவின் ஒவ்வொரு பாகத்தையும், நன்ருய் அறிவார். தாங்களிருக்கும் அறை, பிரதாபனின் "உடுப்பறை" என்பதைக் கண்ட அவர், ராமிடம் அந்த அறை பிரதாபனின் உடுப்பறை என்றும், பிரதாபன் தன்னை அலங்கரித்துக்கொள்ள இங்கு வந்தாலும் வரக்கூடு மென்றும், கூறினர்.

ராம், அவ்வறையின் கதவை வெறுமனே சாத்திவிட்டு, மறைந்து கொள்வதற்கு ஏதாவது இடமிருக்கிறதாவெனச் சுற்றுமுற்றும் பார்த்தான். அவ்வறையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த கண்ணுடிப் பீரோக்களின் பின்புறத்தில்

அதாவது சுவற்றிற்கும் பீரோக்களுக்குமிடையில், ஒரு ஆள் செல்லக்கூடிய இடைவெளி இருந்தது. இதைக் கண்ணுற்ற ராம் சந்தோஷமடைந்தவனாய், தர்மஸீலரிடம் கூற இரு வரும் சென்று அவ்விடைவெளியில் புகுந்து மறைந்து கொண்டனர். அடுத்த நிமிஷத்தில், பிரதாபனும், நஞ்சப்ப னும், குதூகலமாகச் சம்பாஷித்த வண்ணம், அவ்வறையில் பிரவேசித்தனர்.

பிரதாபன்:— இன்னும் ஏன் அந்த முகமூடி மனிதன் வரவில்லை? ஒருக்கால் வராமலேயே இருந்து விடுவானா?

நஞ்சப்பன்:— அவனைப்பற்றிய கவலை நமக்கெதற்கு? அவன் வந்தாலென்ன? வராவிட்டாலென்ன? முக்கியமாக வரவேண்டியவர்கள் வந்து விட்டனர். இவர்கள் இன்றுடன் ஒழியப்போகின்றனர். இவர்களை ஒழித்துவிட்டால், அவ னால் என்ன செய்யமுடியும்?

பிரதாபன்:— நான் அன்று "ஜெயாவின் திருமணத் தினின்று விலகிக்கொண்டேன்" என்று ஜெயாவின் தந் தைக்கு எழுதிக்கொடுத்த லெட்டரை நாம் கைப்பற்ற முடியவில்லையே? நீ அன்று என்னிடம் கூறியபடி அந்த முகமூடி மனிதன் யாரென்றுகூடக் கண்டுபிடிக்க உன்னால் முடியவில்லை. உன் பேச்செல்லாம், வெறும் பேச்சாகத்தானி ருக்கிறது. ஒருக்கால், முனியம்மாளின் கூட வந்திருக்கும் மனிதனே, அந்த முகமூடி மனிதனாக இருக்கலாமோ?

நஞ்சப்பன்:— நீ என்ன என்னை இவ்விதம் நினைத்து விட்டாய்? அந்தக்கடிதத்தை கைப்பற்ற வேண்டியதவசியம், என்று எனக்குத் தோன்றி இருந்தால்...........இதுவரை அவன் யாரென்று கண்டு பிடித்து, கடிதத்தைக் கைப்பற்று

மலா இருப்பேன்? அந்தக் கடிதத்தால், அவன் நம்மை யொன்றும் செய்வதற்கில்லை. நம்மை பயப்படுத்துவதற்காகவே, இவ்விதம் செய்திருக்கிறான். உண்மையிலே அவன் அக்கடிதத்தைக்கொண்டு, கல்யாணத்தை தடைப்படுத்த எண்ணி இருந்தால், இதுவரை செய்யாமலிருக்கமாட்டான். அவ்விதம் அவன் செய்ததாகவும் தெரியவில்லை. அவன் அவ்வழியில் பிரவேசித்திருந்தால், நமக்கு உடனே தகவல் கிடைத்திருக்கும். நீ சந்தேகிப்பதுபோல் முனிம்மாள்கூட வந்திருக்கும் மனிதன் ஒருக்காலும் அம்முகமூடி மனிதனாயிருக்க முடியாது. ஏனெனில், அவனைப் பார்த்தபோது ஓர் வாலிப பருவத்தினன் போலத்தோன்றியது. இவனோ, தலைமுடியெல்லாம் நரைத்து, தோல் சுருங்கிய கிழவன். ஒருக்கால் இவனாக இருந்தாலும், இன்னும் சில நிமிஷத்தில் செத்தொழியப்போகிறான். ஆகையால், அதுபற்றி நாம் கவலையுற வேண்டியதே இல்லை.

பிரதாபன்:— ஆம், அவன் வாலிப பருவத்தினன் என்பது நிச்சயம். சரி அது எப்படியிருந்தால் என்ன? இவர்களைக்கொண்டுதானே அவன் நம் ரகசியத்தை வெளிப்படுத்த முடியும்? இவர்களை ஒழித்துவிட்டால், அவனால் ஒன்றும் செய்யமுடியாது......உம்......நீ கூறுவது போல் நேற்று வரை கடிதம் வெளியாக்கப்படவில்லை என்பது உண்மையாயினும், இன்று வெளிப்படுத்தி, திருமணத்தை தடைசெய்யலாமல்லவா?

நஞ்சப்பன்:— இன்று அவனால் ஒன்றுமே செய்யவியலாது. நாமோ இன்னும் இரண்டொரு மணி நேரத்தில் அங்கு போய்விடுவோம், அதற்குள் அக்கடிதம் வெளியாக்கப்பட்டாலும், நமக்கு உடனே தகவல் கிடைக்கும்படி ஏற்பாடு

செய்திருக்கிறேன். நாம் அங்கு போனதும், இது ஒரு புரட்டுக் கடிதமென்று, ஒரு போடு போட்டு விட்டால் போகிறது.

பிரதாபன்:—நஞ்சப்பா! அந்த முகமூடித் திருட்டுப் பயல் வந்திராவிட்டால், அன்று என் எண்ணம் பூர்த்தியாகி இருக்கும். ஜெயா என்னதான் அழகியாக இருந்தாலும், அந்தக் கோகிலத்திற்கிணையாக மாட்டாள். அவளை யடைந்து சுகிக்க வேண்டுமென்று என் மனம் தவிக்கிறது. நாம் ஷண்முகபுரி சென்று திரும்பி வந்தபின், கண்டிப்பாக கோகிலத்தை இங்கு கொண்டுவந்து விடவேண்டும்.

நஞ்சப்பன்:—முதலில் இந்தச் சனியன்களை ஒழித்து விட்டால், நம் காரியாதிகளுக்கு சாதகமாயிருக்கும். இன்றோடு இவர்கள் ஒழிந்தார்களென்றே கூறவேண்டும். உனது திருமணம் முடிந்து நாம் இங்கு வந்ததும், எவ்விதமும் கோகிலத்தைக் கொண்டுவந்து உன்னிடம் ஒப்புவிக்கிறேன்.

பிரதாபன்:—சரி, முனியம்மாள் வகையறாக்களை அந்த ஹாலிலிருக்கச் செய்து வெளியில் தாளிட்டுவிட்டாயே, இப்பொழுது அவர்களை என்ன செய்யப்போகிறாய்? அவர்களை ஒழிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?

நஞ்சப்பன்:—என்ன ஏற்பாடா? பேஷான ஏற்பாடுதான். இந்த அறையில் "ஸ்விச் பாக்ஸ்" இருக்கிறதே அதற்குப் பக்கத்தில் தனியாக ஒரு "ஸ்விச்" வைத்திருக்கிறேன். அந்த பொத்தானை அமுக்கினால் அவர்கள் அடைபட்டுக் கிடக்கும் ஹாலில், ஒருவித "க்யாஸ்" (விஷவாயு) வெளிப் பட்டு, அவ்வறை முழுதும் ஒரு நிமிஷத்தில் பரவிவிடும்.

அதை சுவாசித்த அவர்கள், மீண்டும் கண்விழிக்கப் போவதில்லை.

பிரதாபன்:—பேஷ்! நஞ்சப்பா, உன் புத்தியே புத்தி. இது சப்தமில்லாத ஏற்பாடு. சரி, நமக்கு நேரமாகிறது அந்த "ஸ்விச்"சை அமுக்கு.

நஞ்சப்பன்:—முதலில் நாம் போய் ஜெமீந்தார்கள் போலும், கனவான்கள் போலும் வேடமணிந்திருக்கும் நம் ஆட்களை, அவர்களுடைய வேடங்களைக் களைந்துவிட்டு புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படி கூறிவிட்டு வந்து, இந்த "ஸ்விச்"சைப் போடுவோம். இதைக் காண்பிப்பதற்காகத் தான் உன்னை இங்கழைத்து வந்தேன் என்று கூறி, பிரதாபனை அழைத்துச் சென்று, அந்த அறையில் போடப்பட்டிருக்கும் விளக்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த "ஸ்விச்" பெட்டியினடியில் தன்னால் பிரத்தியேகமாக பொருத்தப் பட்டிருந்த ஒரு "ஸ்விச்"சைக் காண்பித்தான்.

அதைப்பார்த்த பிரதாபன், மனமகிழ்ந்தவனாய், அவனின் சாமர்த்தியத்தை போற்றும் முறையில் பல புகழ் மொழிகளைக் கூறி, அவனை அழைத்துக்கொண்டு சென்றான்.

அந்த அறையில் மறைந்திருந்த 'ராம்', தர்மஸீலர், இருவரும் இவர்கள் சம்பாஷணையைச் செவியுற்று திடுக்குற்றனர்.

தான் அன்று, முகமூடி மனிதனாக வந்து கோகிலத்தைக் காப்பாற்றிய போது, தன்னிடம் வாக்களித்தபடி பிரதாபன் வசையாறு நடக்கப்போவதில்லை என்று தீர்மானித்தானாயினும், இவ்விதம் கொலை செய்ய நினைப்பானென்று எண்ணினானில்லை ராம். இவர்களுடைய சூழ்ச்சியினின்று முனுசாமி

குடும்பத்தாரை எவ்விதம் காப்பாற்றுவதென்ற யோசனை யிலாழ்ந்தான்.

தன்னை ராம் பிரதாபனின் மாளிகைக்கு அழைத்து வருவானென்றோ, பிரதாபனுக்கும், நஞ்சப்பனுக்கும் இவ்வித மானதோர் சம்பாஷணை நிகழுமென்றோ கனவிலும் நினையாத தர்மஸீலர், வியப்பும், ஆச்சரியமுமடைந்தவராய் கற்சிலை யாய் நின்றார். அவர்களுடைய சம்பாஷணையிலிருந்தே சில மாதங்களாக, அந்த வட்டாரத்திலுலாவி வந்த கற்பழிக்கும் கூட்டத்தார் யாரென்பது விளங்கிவிட்டது. வேறு யாராவது, அந்தக் கூட்டத்தின் முக்யஸ்தன் பிரதாபன் என்று கூறி யிருந்தால், அவர் நம்பியே இருக்கமாட்டார். ஆனால், இப்பொழுதோ தான் செவியுற்றவற்றை எவ்விதம் நம்பாம லிருக்கமுடியும்? இவனால் கற்பழிக்கப்பட்ட ஸ்திரீ ரத்னங்கள் எத்தனை? அவர்களில் தற்கொலை செய்துகொண்டவர்கள் எத்தனைபேர்? என்று அவர் எண்ணும்போது ஆத்திரம் பொங்கி எழுந்தது. அதோடு நில்லாது சிறிது நேரத்திற்குள் யாரையோ விஷவாயுவைப் பிரயோகித்து கொலை செய்யப் போவதை அறிந்து நடுங்கினார். இந்த நிலையிலே, ராம் அவரை நோக்கி "ஐயா! நீங்கள் இம்மறைவிடத்திலேயே இருங்கள், நான் சற்று நேரத்தில் திரும்பி வருகிறேன்" என்று கூறி மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு, அந்த அறையில் "ஸ்விச்" பெட்டியிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அதன் பக்கத்தில் தனியாக வைக்கப்பட்டிருந்த "ஸ்விச்"லிருந்து "மின்சாரக்கம்பி" எவ்வழியாக அந்த ஹாலுக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறதென்பதை ஆராய்ந்தான். அக்கம்பி அவனும் தர்மஸீலரும் மறைந்திருந்த இடத்திற்கு நேர் எதிராக வரிசையாக வைக்கப்பட்டிருந்த கண்ணாடி பீரோக்

களின் பின்புறமாகக் கொண்டுசெல்லப் பட்டிருப்பதையறிந்து, பீரோக்களுக்கும், சுவற்றிற்குமிடையே உள்ள வெளியில் புகுந்து கொஞ்ச தூரம் சென்றதும், தன்னிடமிருந்த ஆயுதத் தால் மின்சாரக் கம்பியைத் துண்டித்துவிட்டுத் திரும்பினன்.

அப்பொழுது பிரதாபனும், நஞ்சப்பனும் மீண்டும் அங்கு வருவதையுணர்ந்து அவ்விடத்திலேயே மறைந்து கொண்டான்.

அவ்வறையில் பிரவேசித்த நஞ்சப்பன், நேரே "ஸ்விச்" இருக்குமிடத்திற்கு சென்று, பொத்தானை அமுக்கியபின் "பிரதாப்! தொலைந்தார்கள் அவர்கள். நம்மை எதிர்ப்பவர்கள் கதி இதுதான். உம்......புறப்படு, நாம் விரைவாக ஷண்முக புரி செல்லவேண்டும்" என்று ஏதோ வெற்றிகண்ட வீரன் போல் பெருமையுடன் கூறி, பிரதாபனின் கரங்களைப்பற்றி இழுத்துச் சென்றுன்.

இவர்கள் அறையிலிருந்து சென்ற 5-நிமிஷத்திற்கெல் லாம், வெளியில் கதவுகளெல்லாம் சாத்தப்படும் சப்தம் கேட்டது. உடுப்பறையின் கதவும் சாத்திப் பூட்டப்பட்டது. அடுத்த நிமிஷத்தில் "படபட" வென்ற குதிரைகளின் குளம்புச் சப்தத்தைச் செவியுற்ற மறைந்திருந்த இருவரும், பிரதாபன் கோஷ்டியார் அங்கிருந்து கிளம்பி விட்டனர் என்பதை யறிந்து, மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு அங்குள்ள சோபாவில் அமர்ந்தனர். ஆனல், தர்மசீலருக்கு இருக்கைகொள்ளவில்லை, அவர் மனம் நடுக்கங்கொண்டது. "ராம்! நாம் இங்கு ஒரு நிமிஷமும் தாமதிக்கலாகாது. எழுந்திரு, பாவம் அந்த எளிய குடும்பத்தினரின் உயிர் போய்க் கொண்டிருக்கிறது. உம்......எழுந்திரு" என்று பதட்டத்துடன் கூறினர்.

"ஐயா! சற்று பொறுமையாகவிருங்கள். அவர்களை, ஒரு ஆபத்தும் அணுகாது. அந்த மடையர்களின் சூழ்ச்சியி னின்று, அந்த எளிய குடும்பத்தினர் காப்பாற்றப் பட்டனர். இதோ பாருங்கள்" என்றுகூறி எழுந்து சென்று, அறுபட்ட மின்சாரக் கம்பியை வெளியிலிழுத்துக் காண்பித்தான்.

'தர்மஸீலர், ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டார்.

இவருடைய மனோநிலையை ஒருவாறு யூகித்தறிந்த ராம், அவரை நோக்கி "இப்பொழுது அந்தக் கற்பழிக்கும் கூட்டத் தார் யாரென்பது விளங்குகிறதல்லவா?" எனக்கேட்டான்

தர்மஸீலர்:—ஆ! ஹா!! அவர்களுடைய சம்பாஷணையி லிருந்தே அறிந்தபின் இன்னுமென்ன சந்தேகம்? வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் எவ்விதம் உருப்படப் போகிறது பிரதாபன் ஓர் துஷ்டன், என்பதை நான் அறிவேன். ஆனால், என்னிடம் மகா யோக்கியன்போல், அந்தக் கற்பழிக்கும் கூட்டத்தினரை இன்னும் சில தினங்களுள் கண்டுபிடிக்க வேண்டுமென்று கட்டளையிட்ட இவனே, அக்கூட்டத்தின் தலைவன் என்று நான் எவ்விதம் நினைக்கமுடியும்? ஏதோ, உன்னுடைய பெரும் உதவியால், இப்பொழுது அறிந்தேன். இந்த அயோக்யனுடைய ஆயுட்காலம் குறுகிவிட்டது போலும். இல்லையேல், இவ்விதமான அக்ரமத்தை இவன், அதிலும், ஓர் சமஸ்தானாதிபதி செய்வானா? ராம்! உன்னு டைய உதவிக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும்? நாங்கள் விளம்பரஞ் செய்திருந்தபடியும், நான் உன்னிடம் கூறியபடியும் இதோ உனக்கு சன்மானமாக ரூ 15000ம் கொண்டுவந்திருக்கிறேன் பெற்றுக்கொள். அதோடு, பிரதாப னின் குற்றத்தை வெளிப்படுத்தி, தண்டனையடையச் செய் வதற்கு, உன்னுடைய உதவி எனக்குப் பூரணமாக இருக்க-

வேண்டும்" என்று கூறியவண்ணம் தான் கொண்டு வந்திருந்த கரன்ஸி நோட்டுகளை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

ராம் அவைகளைப் பெற்றுக்கொள்ளாது, "ஐயா! தயவு செய்து அதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள், நான் பணத்தைக்கருதி இதில் தலையிட்டவனல்ல. பிரதாபன் விஷயத்தில் நான் உங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன்" என்றுகூறி மறுத்துவிட்டான்.

அவனுடைய கௌரவ மனப்பான்மையை எண்ணி உள்ளூர மகிழ்ந்தார் தர்மஸீலர்.

ராம் மீண்டும் அவரை நோக்கி "பிரதாபன் வகையினர் விஷவாயுவைப் பிரயோகித்து கொல்ல நினைத்தார்களே, அவர்கள் யார்? உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

"அவர்களா........' முனியம்மாள் '...........என்று அவர்கள் கூறினார்கள்......இப்பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், யாரென்பதை நிச்சமாகச் சொல்ல முடியவில்லை. அப்பெயருடைய பெண் இவனின் வஞ்சக வலையில் சிக்கிய பெண்ணாகவே இருக்கவேண்டும். எவ்விதமிருப்பினும் முதலில் அவர்களை அந்த அறையிலிருந்து விடுவித்துவிட்டால், பின்பு அவர்களிடமிருந்து உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும்." என்று கூறிவிட்டு தர்மஸீலர் தன் ரிவால்வாரை எடுத்து, கதவின் பூட்டுத்துவாரத்தில் வைத்து சுடவே, அந்த அறையின் கதவு திறந்து கொண்டது. பின், இருவரும் உடப்பறையிலிருந்து வெளிப்பட்டு, பக்கத்திலுள்ள ஹாலின் சமீபம் வரும்போது, எங்கிருந்தோ மாடசாமி அங்கு தோன்றினான்.

ராம், மாடசாமியை நோக்கி, "மாடசாமி! அவர்கள் அடையப்பட்டிருக்கும் அறை எது?" எனக்கேட்டான்.

இதோ இந்த ஹாலிலே தானுங்க" என்றான் மாடசாமி.

"உம்...கதவு வெளியில் பூட்டப்பட்டிருக்கிறதோ" என்றான்.

"ஆமாங்கோ"

"உம், அந்தப் பூட்டை உடைத்து கதவை திற" வெனக் கட்டளையிட்டான் ராம்.

அடுத்த சிலநிமிஷங்களில் அந்த ஹாலின் கதவு, திறக்கப்பட்டு மூவரும் உட்சென்றனர்.

இன்னும் கொஞ்சநேரத்தில் வந்து மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்லுகிறேன் என்று நஞ்சப்பன் கூறிச் சென்று அதிகநேரமாகியும், அவன் வாராததால், முனுசாமியின் சந்தேகம் அதிகரித்தது. வெளியிலிருந்த சப்தம் வரவர குறைந்துகொண்டு வந்து, அடியோடு நின்றுவிட்டது எங்கும் ஒரே நிசப்தம் குடிகொண்டிருந்தது. நிலைமையை ஒருவாறு யூகித்தறிந்தான். எவ்விதமிருப்பினும் வெளியில் சென்று பார்த்து வருவோமென்றெண்ணியவனாய், சென்று கதவைத்திறந்தான். கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்த படியால் திறக்கவில்லை. இதையறிந்த முனுசாமி தாங்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா வென அங்குமிங்குமோடிப் பார்த்தான். அப்பொழுது, அந்த ஹாலின் கதவு உடைக்கப்படும் சப்தத்தைச் செவியுற்று வியப்படைந்தவனாய், கதவையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தான்.

அந்த ஹாலின் கதவு திறக்கப்பட்டு தர்மஸீலர், ராம், மாடசாமி ஆகியோர், அங்கு தோன்றினர்.

அங்கு தர்மஸீலரைக்கண்டதும் முனுசாமி ஓடோடியும் சென்று, அவர்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, "ஐயனே! என்று கூறினன். கண்களில் நீர் ததும்பியது. மேலும் ஒன்றும் கூறமுடியாதவாறு துக்கம் தொண்டையை அடைத்தது.

முனுசாமி, அங்கிருப்பான் என்று கனவிலும் நினையாத தர்மஸீலர், வியப்பும் திகைப்பு மடைந்தவராய் "யார்? முனுசாமியா! அதுயார்? உன் புதல்வி முனியம்மாள் போலி ருக்கிறதே" என்றார்.

ஆம் பிரபோ! நானும், நம் ஜெமீன்தார் ஜெயஸிங்கரும், அன்று வந்து உங்களைச் சந்தித்தபொழுது, இந்த ரகஸ் யத்தை தங்களிடம் கூற என்மனம் இடங்கொடுக்கவில்லை. இந்தவாலிபன் யார்........." என்று வாக்கியத்தை முடிக் காமல், ராமை எதிட்டுப்பார்த்தான், அவனுடைய வதனம் பிரகாசமடைந்தது. ஏதோ கூற வாயெடுத்தான். இதை யறிந்த ராம், உண்மையை வெளியிட வேண்டாமென்று கண் ஜாடையால் தெரிவித்தான்.

இதற்குள் தர்மஸீலர் "இந்த வாலிபன் என் அத்தி யந்த தோழன்" என்றார்.

அவர் கூறிய வார்த்தைகளாலும், ராம் உண்மையைக் கூறவேண்டாமென்று கண் ஜாடையால் தெரிவித்ததாலும், இவ்வாலிபன் யாரென்பதை தர்மஸீலர், அறிந்துகொள்ள வில்லை என்று தீர்மானித்தான் முனுசாமி "பிரபோ! நீங்கள் நம் எஜமானரின் சம்மந்தமாக, பல விஷயங்களில் தீவிரமாய்

ஈடுபட்டிருக்கும் தருணத்தில், துக்ககரமான ஓர் விஷயத்தை உங்கள் காதில் போட்டால், அதினால் நீங்களும் வருந்துவீர்களே என்று எண்ணியே அன்று உங்களிடம் இதைத் தெரிவிக்கவில்லை. இப்பொழுது தாங்களாகவே அறிந்து கொள்ளும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. பிரபோ! இந்த வஞ்சகன் பிரதாபனால், என் புதல்வி அழிந்தாள் என் புதல்விமட்டுமல்ல, இன்னும் எத்தனையோ யுவதிகள் இவனால் கற்பழிக்கப்பட்டனர். என் புதல்வி ஒருவள் நீங்கலாக, ஏனைய பெண்களெல்லாம் அவமானம் தாங்காது தற்கொலை செய்துகொண்டனர். என் புதல்வியும், தன் கிழட்டு அன்னைக்காக உயிர் வாழ்ந்து வருகிறாள். பிரதாபனின் காரியாதிகளையெல்லாம் அறிந்த ஓர் முகமூடி மனிதன், எங்களிடம் வந்து, ஜெயாவின் திருமணத்தினின்று பிரதாபன் விலகிக்கொண்டு, முனியம்மாளை மணம் புரிவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறரென்றும், இன்று காலை 7 மணிக்கெல்லாம் முனியம்மாளுடன் இங்கு வரும்படியும் கூறினான். அந்த முகமூடி மனிதன் யாரென்பதையறிய எவ்வளவோ முயற்சித்தேன். ஆனால், அவனைப்பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, நாங்கள் இங்கு வந்தோம். நாங்கள் இங்கு வந்ததும் நஞ்சப்பன் வந்து யாரோ இரண்டொருவருடைய வரவை எதிர்பார்த்திருப்பதாகவும், அவர்கள் வந்ததும் திருமணத்தை நடத்திவிடலாமென்றும் கூறினான். ஷண்முகபுரியில் கல்யாணத்திற்கான சகல ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருப்பதுடன், சகலரும் அங்கு சென்றிருப்பதால், அக் கல்யாணத்தை ரத்து செய்யாமல், பிரதாபன் எவ்விதம் முனியம்மாளை விவாகம் செய்து கொள்வதென்று நான் அவனைக் கேட்டதற்கு, அவன்

பிரதாபருக்கு ஜெயாவை மணம்புரியும் உத்தேசமில்லை என்றும், முனியம்மாளை விவாகம் செய்துகொண்டதும் இப்படியே எங்காவது வெளிதேசம் சென்று வசித்துவர எண்ணி இருப்பதாகவும், இதை முன்கூட்டியே பிரஸ்தாபித்தால் பல இடைஞ்சல்கள் ஏற்படுமாகையால் இதுவரை யாருக்கும் சொல்லவில்லை என்றும், மேலும் ஏதேதோ கூறினன். அவன் கூறிய சமாதானம் எனக்குப் பிடிக்கவில்லையாயினும், ஏதோ பொருத்துப் பார்ப்போம் என்று மௌனமாயிருந்தேன்.

நான் பல யோசனையிலாழ்ந்திருந்தபடியால், இந்த ஹாலின் கதவு பூட்டப்படுவதைக் கவனிக்கவில்லை. அரை மணி நேரம்வரை பொருத்தேன் நஞ்சப்பன் வரவில்லை, வரவர வெளியிலிருந்த சப்தம் குறைந்து எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. வெளியேபோய் பார்த்துவிட்டு வரலாமென்று வந்து கதவை திறந்தேன். கதவு வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் அவர்கள் மோசஞ் செய்துவிட்டார்களென்பது தெற்றெனை விளங்கியது. இங்கிருந்து தப்பிச் செல்வதற்கு ஏதாவது வழியிருக்கிறதாவென ஆராய்ந்துகொண்டு வரும்போதுதான் நீங்கள் பூட்டை உடைத்துத் திறந்துகொண்டு வந்தீர்கள். நீங்கள் வருவீர்களென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அவர்கள் ஒருவரும் இங்கில்லையா? நீங்கள் அவர்கள் சென்றபின்தான் இங்கு வந்தீர்களா?" என்று ஆவலுடன் கேட்டான் முனுசாமி

'முனுசாமி! உன் புதல்வியின் வாழ்க்கை அந்த அயோக்கியனல் பாழ்பட்டு விட்டது. உங்களுடைய உத்தேசப்படி. அவன் உன் புதல்வியை மணந்திருந்தாலும், அவர்கள் வாழ்வில் இன்பம் தழைக்காது. மேலும், அவளைக்

கொடுமைப் படுத்தியே வருவான். அடாடா! உன் புதல்வி யடைந்த இந்த பரிதாபத்தை இன்றுதான், அதுவும் சற்று முன்தான் அறிந்தேன். உங்கள் புண்பட்ட மனதிற்கு நான் எவ்விதம் ஆறுதல் கூறமுடியும்? ஏதோ உங்களுடைய நல்ல காலம் நாங்கள் இங்கு வந்தோம். நாங்கள் இங்கு வந்திரா விட்டால், இதுவரை நீங்கள் உயிருடனிருக்க முடியாது" என்றுகூறி மேலும் கற்பழிக்கும் கூட்டத்தாரை காண்பிப்ப தாக "ராம்" அவரை இங்கு அழைத்து வந்தது, இருவரும் உடுப்பறையில் மறைந்திருந்தது, பிரதாபன் — நஞ்சப்பன் சம்பாஷணை, அவர்கள் வேலையாட்களை தயாராயிருக்கும்படி கூற வெளியே சென்றதும், ராம் சென்று "மின்சார கம்பியை" வெட்டி விட்டது, ஆகிய விபரங்களைத் தெரிவித்ததுடன் "முனுசாமி! நாம் உடனே ஷண்முகபுரி செல்லவேண்டும் இல்லையேல் காரியம் மிஞ்சிவிடும்" என்றுகூறி ராமை நோக்கி "ராம்! தயவு செய்து நீயும் இப்பொழுது எங்களுடன் ஷண்முகபுரிக்கு வரவேண்டும். இந்தமாதிரியான அயோக்யன், ஜெமீந்தாரா யிருப்பதென்பது இனிமேலும் முடியாது. இக்கொடுஞ் செயலைப் புரிந்துவருவது பிரதாபன்தான் என்பதை நீ எவ்வித மறிந்தாய்? என்றார்.

"ஐயா! நான் முன்பே இதுபற்றி என்னிடம் ஒன்றும் கேட்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன் இப் பொழுதும் அதையே வற்புறுத்துகிறேன். அவனுடைய இவ்வநீத செய்கைகளை தக்க ஆதாரத்துடன் வெளிப்படுத்த நான் என்றும் தயாராயிருக்கிறேன். அதோடு, உங்களுடைய விருப்பப்படி ஷண்முகபுரிக்கு வருவதற்கு எனக்கொன்றும் ஆக்ஷேபணையில்லை" என்றான் ராம்.

அதற்குமேலும் அவனிடம் ஒன்றும் கேட்க முடியாத வருய் முனுசாமியிடம், உடனே எல்லோரும் ஷண்முகபுரி சென்று மேல்நடக்க வேண்டியவைகளை அங்கு யோசிக்கலா மென்று கூறவே, அவனும் அவருடைய அபிப்பிராயத்திற் கிணங்கினுன். பின் எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டு "பளிங்குமண்டபத்தை" அடைந்து அங்கு நின்றுகொண் டிருந்த தர்மஸீலரின் காரில், தர்மஸீலர், முனுசாமி, முனியம்மாள், அவளின் தாய், மாடசாமி ஆகியவர்கள் செல்வ தென்றும், அவர்களைப் பின் தொடர்ந்தே ராம் அவனுடைய புரவியில் செல்வதென்றும் தீர்மானித்து அவ்விதமே, எல் லோரும் புறப்பட்டனர். தர்மஸீலருடைய கார் முன்னும், ராமின் புரவி பின்னுமாக ஷண்முகபுரியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

அத்தியாயம் 11.

"ஒரு யுவனும் யுவதியும் மனமொத்து பூவும் மணமும் போல இணைபிரியா உள்ளன்புடன் வாழ வேண்டுமென்பதே மணச் சடங்கின் அர்த்தமாகும். ஆனால், இன்றைய நிலையில் உங்களைப் போன்றோர்கள் அதையெல்லாம் கவனிப்பதில்லை."

"வரட்டுப் பிடிவாதமும், உயர்குலத்தோர் என்னும் மமதையும், பணக்காரன் என்ற செருக்கும் சேர்ந்து உமது புத்திரியை நீர் இழக்கும்படி செய்ததென்பதை யுணர்வீராக."

ஷண்முகபுரியில் அன்று என்றும் கண்டிராதவாறு குதூகலம்நிரம்பிஇருந்ததுடன் எங்குபார்த்தாலும் பலவர்ணக் காயிதத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜெமீந்தாரின் மாளிகை தெய்வலோக மாளிகை போன்று ஜொலித்துக் கொண்டிருந்தது. வாத்திய கோஷம் வானைப் பிளந்தது. வாத்தியக்காரர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டுவதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்று கருதினர் போலும்.

"மாப்பிள்ளை வந்துவிட்டார், பெண்ணை அழைத்து வாருங்கள், முஹூர்த்த நேரம் நெருங்கிவிட்டது" என்றனர் மாப்பிள்ளை வீட்டார். பல சேடியர் ஜெயாவை அழைத்து வருவதற்கு உள்ளே சென்றனர். உட்சென்ற அவர்கள், அரை மணி நேரமாகியும் திரும்பிவரவில்லை. "பெண்ணெங்கே? பெண் இன்னும் வரவில்லையா?" என்று பல குரல்கள் எழும்பியது. இதற்கிடையே "பெண்ணைக் காணோம்" என்ற வார்த்தைகளும் ரகஸ்யமாக ஒவ்வொருவர்

காதிலும் விழுந்தது. இதைச் செவியுற்ற ஜெமீந்தார் விக்கிரமஸிங், திகிலடைந்தவருய் அங்குமிங்கும் ஓடி ஜெயாவைத் தேடலானர். இதற்குள் இச்செய்தி அங்கிருந்த சகலருக்கும் எட்டிவிடவே பரபரப்பும், குழப்பமும் அதிகரித்தது.

ஜெமீந்தார் ஜெயாவை எங்கும் தேடி காணுதவருய் இறுதியாக அவளின் படுக்கையறையினுட் பிரவேசித்து மூலை முடுக்கெல்லாம் தேடினர். ஜெயாவைக் காணவில்லை. மனக் குழப்பம் அதிகரித்தது. மாப்பிள்ளை வீட்டாருக்கு என்ன பதில் சொல்வதென்பதுதான் முக்கிய பிரச்னையாயிருந்தது. அவர்கள்முன் விழிப்பதற்கும் வெட்கியவருய், மனங்குன்றி, ஜெயாவின் மஞ்சத்தின் சமீபமாக கிடந்த நாற்காலியில் அமர்ந்தார்.

அங்கு மஞ்சத்தின்மீது இவர் பெயர் வரையப்பட்ட ஓர் கடிதம் கிடப்பதைக் கண்டு வியப்படைந்தவருய், அக் கடிதத்தை கையிலெடுத்தார். அது தன் புத்திரியால், தனக் கெழுதப் பட்டிருப்பதை யறிந்து ப்ரம்மிப்படைந்தவருய் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆவல்கொண்டார்.

கரங்கள் தானகவே கடிதத்தை உறையிலிருந்து எடுத்து அவரின் பார்வைக்கு கொண்டுவந்தது. கரங்கள் நடுங்க கடிதத்தை வாசித்தார்.

—: கடிதம். :—

தந்தையே!

இதுவே, எனது கடைசி வணக்கமாகும்.

நீங்கள் திருமண விஷயமாக முன் என்னிடம் சம்பாஷித்தபொழுது "உங்களுடைய முடிவைத் தொடர்ந்தே எனது முடிவும் வெளிப்படும்" என்று நான் கூறியதை,

இதற்குள் மறந்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். என் முடிவு என்னவென்பதை யறியவேண்டுமானால், பொருமையுடன் கடிதத்தை மேலே படியுங்கள்.

ஓர் பெண்ணின் வாழ்க்கையில் ஏற்படும் இன்பமும், துன்பமும், அவளின் கணவனைப் பொருத்ததேயாகும். தம் வாழ்வில் இன்பம் மல்கவேண்டுமென்பதுதான், பெண்களின் மனோபீஷ்டமாக இருக்கும். அதுபோலவே, தம் பெண்கள் சந்தோஷத்துடன் வாழவேண்டு மென்பதைத்தான் பெற்றோர்களும் எதிர்பார்ப்பர். ஆயினும், மணமகளும், மணமகனும் ஒருவரையொருவர் அறிந்து, அன்புகொள்ளும்படியான சந்தர்ப்பம் அவர்களுக்கு அளிக்கப்படாத வரையில், பெற்றோர்கள் தங்கள் கடமையில் தவறியவர்களே யாவார்கள். பெற்றோர்களால் தம் மக்களுக்கு முக்கியமான பொருத்தங்களைக் கவனியாது நிச்சயிக்கப்பெற்று முடிக்கப்படும் மணங்கள், மணங்களாகாது. அத்தம்பதிகளின் வாழ்வு சந்தோஷமற்றதாகவே இருக்கும். "மணமென்பதின்" அர்த்தமென்ன?

தந்தையே! உங்களுடைய உதிரத்தினின்றும் உதித்த ஓர் சிறுமி உங்களையே இக்கேள்வி கேட்பதால், அதிக கோபத்தையே அடைவீர்கள். தயவுசெய்து பொருமையுடனிருங்கள். நீங்கள் உலகானுபவம் நிறைந்தவர்கள்தான். உங்களுடைய அறிவையும், ஆற்றலையும், "தான்" என்ற மமதைக்கு அடிமைப்படுத்தி விட்டீர்கள். "பணம் பெருத்த ஜெமீந்தார்" என்ற ஆணவத்தினாலும், அதிகாரத்தினாலும், நீங்களிட்டதே சட்டமென, உங்கள் ஜமீனுக்குட்பட்டவர்களை அடிமையினும் கேவலமாக நடத்தவே உங்கள் "அறிவு" பயன் படுகிறது. மமதை நிறைந்த உங்கள் நெஞ்சத்தில், இரக்கம், தயை, சாந்தம், சிந்தனை, பகுத்தறியும் தன்மை ஆகியவைகளெல்லாம்

ஒரு சிறிதும் இடம்பெறவில்லை. ஆகவே, "மணம்" என்பதின் உண்மைத் தத்துவம் உங்களறிவிற்குப் புலனாகியிராது. உங்களுக்கது தெரிந்திருப்பின் என் மண விஷயத்தில், உங்களது அதிகாரத்தின் மூலம் என் சுதந்திரத்தைப் பறித் திருக்கமாட்டீர்கள். நிற்க,

ஒரு யுவனும், யுவதியும், மனமொத்து பூவும், மணமும் போல, இணைபிரியா உள்ளன்புடன் வாழவேண்டுமென்பதே மணச் சடங்கின் அர்த்தமாகும். ஆனால், இன்றைய நிலையில் அதையெல்லாம் உங்களைப் போன்றோர்கள் கவனிப்பதில்லை. இது இவ்வாறிருக்க, தனக்கு கல்யாணம் நடைபெறப் போகி றது, நல்ல பெண்ணும், மிக்க அழகுடையவளாம் என்று கேள்விப்பட்ட வுடனேயே அவனுடைய விரகதாபம் எல்லையைமீறி விடுகிறது. தன் காமத்தைத் தணிக்கும் சுட்டமுகி எப்பொழுது வருவாள், வருவாள் என்று ஒவ்வொரு நிமிஷத்தையும், ஒவ்வொரு யுகமாகக் கழித்துக் கொண்டிருக் கிறான் ஒருவன். அதேபொழுது, அவனை மணக்கவிருக்கும் பெண்ணின மனம் அதிக குழப்பமடைகிறது. வரப்போகும் தன் கணவனைப்பற்றிய நினைப்பால் உலப்பப் படுகிறாள். அவன் எவ்வித குணமுடையவனோ? தன்னை அன்பாக நடத்து வானோ? என்னவோ? நற்குணனோ? துர்க்குணனோ? அழகனோ? அழகற்றவனோ? என்ற எண்ணமெல்லாம் அவளின் மனதில் தோன்றி வதைத்துக் கொண்டிருக்கிறது. இவ்விருவரும் மணமுடிக்கப் பட்டார்களென்று வைத்துக்கொள்வோம்: இவ் விருவித மனப்பான்மை கொண்ட இத்தம்பதிகள், வாழ்க்கை யில் எவ்விதம் சுகம்பெற முடியும்? அக்கொடிய காமுகனின் அடிமையாய், கஷ்டப்பட்டு மனம் நொந்து, தன்னை அக் கொடியோனுக்கு மணமுடித்த பெற்றோரை, வாயார வாழ்த்தி,

இறுதியாக உயிர் விடவேண்டியதுதான் அவளின் முடிவாக இருக்கும்.

அதே பெண், ஒருவனைக் காதலித்து அவனையே மணந்து கொண்டாளானால்?................ஆக்காதல் தம்பதிகளின் வாழ்வில் எவ்வளவு இன்பம் தழைக்கும்? தன் கணவன் பணக்காரனாயினும், ஏழையாயினும், அவனது நிழல்போல் அவனைத் தொடர்ந்து, அவனுடைய இன்ப துன்பங்களில் தானும் பங்குகொண்டு, அவனுக்குற்ற துணைவியாய், இல்லறத்தை இனிது நடத்துவாள் என்பதில் ஏதேனும் சந்தேகமுண்டோ? இல்லவே இல்லை.

இக்காலத்திலும், பெற்றோர்கள் குலத்தையும், பணத்தையுமே பெரிதும் விரும்புகின்றனர். ஆனால், பெண்கள் அழகையும், அன்பையுமே விரும்புவர் என்பதை இனிமேலாகிலும் நீங்கள் உணருங்கள்.

என் காதலர், கள்வராயினும், தாழ்ந்த குலத்தோராயினும், ஏழையாயினும் சரி, எனக்கதுபற்றி கவலையில்லை. ஈவு, இரக்கம், தயை, சாந்தம் ஆகியவைகளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற அன்னாரின் கெம்பீரத் தோற்றமும், பரிசுத்த ஹிருதயமும், அவர் என்மேல் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பும், என்னை அவரின் அடிமையாக்கி விட்டது. "காதல்" அவ்வளவு வலிமையுடையது. அதன் சக்தியை நீங்களறிய மாட்டீர்கள். என் காதலனை அடைய முடியாது தடை செய்யப் படுமேயானால், காதலுக்காக என் உயிரையும் தியாகஞ் செய்வதென்ற முடிவிற்கு வந்தேன். இது என், திருமண விஷயமாக, நீங்கள் கொண்ட முடிவையறிந்த அன்றே என்னுள்ளெழுந்த முடிவாகும். இதையேதான் அன்றும் உங்களிடம் கூறினேன்.

அடக்கியாளும் மனப்பான்மைகொண்ட ஆண்கள் மத்தியில், பெண்கள் படும் அல்லல்களோ கொஞ்சமல்ல, பெண்கள் என்றாலே ஒரு இழிவு, ஆண்களுக்கு அடங்கி நடக்கவேண்டியவர்கள், வெறும் அடுக்களைப் பூனைகளாகவும், பிள்ளைப்பெரும் இயந்திரங்களாகவும் மதிக்கப்படுகிறவர்கள். ஆண்கள் செய்யும் அக்ரமத்தை எல்லாம் பார்த்து சகித்துக்கொண்டு, உத்தம பத்தினியாய் வாழவேண்டியவர்கள், கணவனையே தெய்வமென மதித்துக் கொண்டாட வேண்டியவர்கள், சுதந்திரமற்றவர்களாய் வாழவேண்டியவர்கள், சிறு பிராயத்தில் பெற்றோருக்கும், பின் கணவனுக்கும், தன் முதிர்ந்த வயதில் பிள்ளைக்கும் அடங்கி நடக்கவேண்டியவர்கள் என்ற நியதிகளை எல்லாம் ஏற்படுத்தி, அடக்கியாளப்பட்டு வருபவர்கள். ஆனால், இன்றைய நிலையில் பெண்கள் மனதில் பரிசுத்தமான சுதந்திர உணர்ச்சி தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. தற்போதைய உலக முற்போக்கில் பெண்களும் பங்கு கொண்டுவிட்டனர். பல துறையில் பெருத்த வெற்றியையும் அடைந்து வருகின்றனர். இனி அவர்களது ஞாய உணர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தடைசெய்ய முடியாது என்பதை நீங்களறிந்து கொள்ளவேண்டும். அடுத்தபடியாக, என் காதலரைப்பற்றிய சில உண்மைகளை விளக்கி இக்கடிதத்தை முடித்துவிடுகிறேன்.

சில வருஷங்களுக்கு முன் சோலையப்பன் என்னும் ஒருவனுடைய குடிசையை தன் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை என்ற குற்றத்திற்காக நடுநிசியில், அவனும், அவன் மனைவியும் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது, உங்கள் பிரதானி உக்ரமசிங்கன் நெருப்புக்கிரையாக்கியதும், அதைச் செவியுற்ற நீங்கள் பிரதானியின் செய்கைக்கு அவனைப்

புகழ்ந்ததையும், இதற்குள் மறந்திருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன்.

சோலையப்பன் என்பவரின் குமாரன் இலங்கையில் கல்வி கற்றதினால், இந்த சமஸ்தானத்தின் அடிமை, தாழ்த்தப் பட்டவன் கல்வி கற்று மேதாவியாவதா? என்ற அகங்காரத் தாலும், பொறாமையினாலும், சோலையப்பனை அழைத்து இலங்கையிலிருக்கும் அவன் குமாரனை உடனே அழைத்துக் கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டான் உங்கள் பிரதானி.

பாவம்! சோலையப்பன் எளியவனாயினும், இந்த சமஸ்த் தானத்தின் கொடூர சட்ட திட்டங்களில் சிக்கி, தன் வாழ் நாளின் பெரும் பகுதியைக் கஷ்டப்பட்டே கழித்த அவன், தன் குமாரனையும் கஷ்டத்திற்குள்ளாளாக்க நினைக்கவில்லை. அவனுக்குப் போதிய கல்வியை அளித்து, வேறு துறையி லீடுபடும்படி செய்யவேண்டுமென்பது அவனது தடுக்க முடியாத ஆவலாயிருந்தது. ஆதலால், உங்கள் பிரதானியின் சட்டளையை உதாசினப் படுத்தினான். இதையறிந்த உக்ரமசிங் சினங்கொண்டு குடிசையை நெருப்புக்கிறையாக்கினான். அதைக்கேட்ட நீங்களும் சந்தோஷங் கொண்டீர்கள். மனித னுடைய உயிர் உங்களுக்கு கேவலம் வெள்ளரிக்காய் போல் தோன்றியது. இவ்வளவும் செய்த நீங்கள் அவன் குமாரனை யும் கொன்றே இருப்பீர்கள். ஆனால், அவர் அப்பொழு திருந்த தேசம் வேறாகிவிட்டது. ஒருக்கால், தந்தையின் முடிவையறிந்த தனையன், பயந்து இந்த நாட்டிற்கே வராது ஓடிவிடுவான் என்பது, உங்கள் பிரதானியின் எண்ணமாக இருக்கலாம். ஆனால்...........அதே வாலிபர்தான் எனது காதலர் என்பதை நீங்கள் எங்ஙனம் அறிந்திருக்க முடியும்.?

நீங்கள் நினைத்திருப்பதுபோல், என் காதலர் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக கொள்ளையடிக்கும் கள்வரல்ல. அவர் உயர்தரக் கல்வி பயின்றவர். பல தொழில் முறைகளிலும் தேர்ச்சி பெற்றவர் என்பதை இப்பொழுதாவது அறிந்து கொள்ளுங்கள். தவிற,

என் காதலர், இரண்டாம் முறையாக உங்கள் கையிலகப் பட்டு தப்பிச் சென்றவர் மீண்டும் வந்து என்னை அழைத்துச் செல்வார் என்று சற்று முன்வரை எதிர்பார்த்தேன். அவர் வரவில்லை. இனிமேலும் தாமதித்தால், பலவந்தமாகவாவது இழுத்துச் செல்லப்பட்டு மணமுடிக்கப் படுவேன் என்பதை நான் அறிவேன். என் ஹிருதயத்தில் உங்கள் மணமகனுக்கு இடமில்லை. என் உயிர் காதலுக்காகத் தியாகம் செய்யப் பட்டது என்பதை நீங்கள் உணருங்கள்.

வரட்டுப் பிடிவாதமும், உயர்குலத்தோர் என்னும் மமதையும், பணக்காரன் என்ற செறுக்கும் சேர்ந்து உமது புத்திரியை, நீர் இழக்கும்படி செய்ததென்பதையுணர்வீராக.

"ஜெயா"

என்றிருந்த நீண்ட கடிதத்தை படித்துக்கொண்டு வரும்போதே, ஜெமீந்தாரின் கண்களில் நீர் ததும்பியது. ஒருவழியாக கடிதத்தை முற்றும் படித்து முடித்தார். அறிவு மயங்கியது. தன் வாழ்நாளில் அறியாமையால் புரிந்த ஒவ்வொரு செயல்களும், அவர் மனக்கண்முன் ஒரே சமயத்தில் தோன்றி ஞாயம் கேட்பது போல்த்தோன்றியது. அத்துடன் புத்திரியின் பிரிவும் சேர்ந்து கொள்ளவே, அவரின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. கண்களிலிருந்து வடியும் நீரையும் துடைக்க எண்ணாது, செயலற்று, அம் மஞ்சத்திலேயே அமர்ந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

தேவபுரியிலிருந்து புறப்பட்ட தர்மஸீலர் முனுசாமி ராம், முதலியோர் முகூர்த்தகோத்திற்குள் ஷண்முகபுரியை அடையவேண்டுமென்று விரைந்துசென்று கொண்டிருக்கின்றனர். தாங்கள் ஷண்முகபுரி சென்று அத்திருமணத்தைத் தடைசெய்யவேண்டியது அவசியமாயிருந்தபடியால், தர்மஸீலரின் கார் அதிகவேகமாகவே சென்றது. ராமின் புரவியும் தன் எஜமானரின் மனோவேகத்தையறிந்தது போல், காரைத்தொடர்ந்து சென்றது. கதிரவனின் கொடூரஞ் சகிக்கமுடியாததாயிருந்தது. ராமினுடைய புரவியின் தேகத்தில் வெயர்வை வெள்ளம் புரண்டோடியது. அதன் வேகமும் குறைந்து தன் சோர்வை யஜமானனுக்கறிவித்தது. இதையறிந்த ராம் சற்று தங்கி சிரம பரிகாரம்செய்து செல்லலாமென்று எண்ணியவனுப் தன் புரவியை நிறுத்தி கிழிறங்கி, பக்கத்திலுள்ள ஆற்றில் புரவியை தண்ணீர் பருகச்செய்து ஒரு மரத்தில் கட்டிவிட்டு தானும் ஆற்றிலிறங்கி தண்ணீர் அருந்தி நிமிர்ந்தவன், தன் எதிரில், 10, 15 அடி தூரத்தில் ஒரு பெண்ணுடல் மிதந்து செல்வதைக் கண்டு திடுக்குற்று அதைக் கரைசேர்ப்பதன் நிமித்தம் ஆற்றில் பாய்ந்தான்.

காரில் சென்று கொண்டிருந்த தர்மஸீலர், ராம் பின் தங்கிவிட்டதை யுணர்ந்து, காரணமறியாது காரைத் திருப்பிக்கொண்டு ராமின் புரவி நின்ற இடத்தை அடைந்தார். அப்பொழுது ராம், ஒரு பெண்ணுடலைச் சுமந்து கொண்டு கரை ஏறுவதைக் கண்ணுற்ற தர்மஸீலர், முனுசாமி, காரிலிருந்த பெண்கள், ஆகியோர் வியப்பும், திகைப்பும், அடைந்தவர்களாய், காரைவிட்டிறங்கி ஓடி அவனுக்குதவி புரிந்தனர்.

ராம், தான் தூக்கிவந்த அப்பெண்ணை ஒரு மரத்தினடியில் கிடத்திவிட்டு, அப்பெண் யாரென உற்று நோக்கினன். "ஜயா!" என்ற வார்த்தைகள் அவனையுமறியாது அவன் வாயினின்று வெளிப்போந்தது.

"யார்? ஜெயாவா!" என்று ஏககாலத்தில் தர்மஸீலரும் முனுசாமியும், கேட்டுக்கொண்டே, குனிந்து நோக்கினர். அப்பெண் "ஜெயா" தான் என்பதைக்கண்டு சொல்லொணு வேதனையடைந்தனர். அவள் ஆற்றில் மிதந்துவந்த காரண மறியாது திகைத்தனர். அவளின் பரிதாப முடிவிற்காகத் துக்கித்தனர்.

ராம், ஜெயாவை பரீக்ஷித்து பார்த்தான். அவள் தேகத்தில் சிறிது உஷ்ணமிருந்தபடியாலும் அந்த இடம் ஷண்முகபுரிக்கு மிகவும் சமீபத்திலிருந்ததாலும் ஜெயா சில நிமிஷங்களுக்கு முன்தான் ஆற்றில் அமிழ்ந்திருக்கவேண்டு மென்று நிர்மானித்தவனுய், அவள் உட்கொண்டிருந்த தண்ணீரை வெளிப்படுத்தி, தேகத்திற்கு உஷ்ணத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய சிகிச்சையின் பயனுய் ஸ்தம்பித்திருந்த சுவாசம், மீண்டும் ஓடத்தொடங் கியது.

ஜெயாவின், உயிரற்ற வெறுங்கட்டைதான் அது, என்று எண்ணி அளவிலா வருத்தங்கொண்டிருந்த தர்மஸீல ரும், ஏனையோரும், ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஜெயா சிறிது நேரத்தில் புரண்டு படுத்தாள்.

இதைக் கண்ணுற்ற அவர்கள் அடைந்த சந்தோஷத்தை அளவிடமுடியாது.

ராம், அவர்களை நோக்கி "ஜெயாவின் நிலைமை அபாயகரமானதேயாகும், நாம் அதிக ஜாக்கிரதையாக நகருக்கு எடுத்துச்சென்று தக்க டாக்டர்களைக்கொண்டு சிகிச்சை செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்" என்று கூறவும், தர்மஸீலரும் அதை ஆமோதித்து ஜெயாவைத் தூக்கிவந்து காரில் வைத்து அதிக ஜாக்கிரதையாக ஷண்முகபுரிக்கு கொண்டு வந்தனர்.

ஷண்முகபுரியை அடைந்ததும் ராமின் யோசனையின்படி "ஸில்க்பஸாரி"ன் முதலாளியாகிய "மோஹன்லாலின்" இருப்பிடத்திற்கு கொண்டுசென்று ஒரு டாக்டரை வரவழைத்து ஜெயாவிற்கு சிகிச்சைசெய்ய ஏற்பாடு செய்தனர்.

அவர்கள் அங்கு சென்றதும் தர்மஸீலர் மோஹன்லாலைப்பற்றி விசாரித்ததில், அவர் வெளியூர் போயிருப்பதாக வேலையாட்கள் மூலமறிந்தார். அவர் வீட்டிலில்லாத சமயத்தில் ராமிற்கு அங்கு நடந்த மறியாதையைக் கண்டு வியப்படைந்தார்.

ராமின் காரியாதிகளெல்லாம் மேலும் மேலும் அவருக்கு வியப்பையளித்துக்கொண்டிருந்தது. அவனைப்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவல்கொண்டார். ஆனால், அவன் தன்னைப்பற்றி எதுவும் கேட்க வேண்டாமென்று முன்பே கேட்டுக் கொண்டிருக்கிறபடியால் அவனிடம் எதுவும் கேட்கத்துணியவில்லை.

டாக்டர் வந்து ஜெயாவிற்கு மருந்து கொடுத்துச்சென்றபின், ஒரு வேலையால் வந்து ஒரு கடிதத்தை ராமிடம் கொடுத்து பணிந்து சென்றான்.

ராம் கடிதத்தை வாங்கிப்பார்த்து, அது தர்மஸீலருக்கு வந்திருக்கிறதென்பதைக்கண்டு அவரிடம் அக்கடிதத்தைக் கொடுத்தான்.

வியப்புடன் கடிதத்தைக் கையில் வாங்கிய தர்மஸீலர் பிரித்துப்படிக்கலானர்.

கடிதம்

—0—

அன்புடைய பெரியீர்!

வணக்கம்.

தேவபுரியில் உலாவிவந்த, கற்பழிக்கும் கூட்டத்தாரை உங்களுக்கு தெரியப்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்த "ராம்" என்னும் வாலிபனும், நானும், ஈருடலும் ஒருயிரும் போன்ற அவ்வளவு நெருங்கிய தோழர்கள். நானும் முனுசாமி மாமாவும், முதன் முதலாக உங்களைச் சந்தித்த பின்பு, நான் ராமைச் சந்தித்தேன். அவன் அந்தக்கற்பழிக்கும் கூட்டத்தின் தலைவன் பிரதாபன்தானென்றும், அவனல் கற்பழிக்கப்பட்டபெண்களில் நம் முனுசாமி மாமாவின் புதல்வி முனியம்மாளும் ஒருவள் என்றும், ஸில்க் வியாபாரி கந்தசாமி பிள்ளையின் புதல்வியை பிரதாபன் கோஷ்டியார் மயக்கமடையச் செய்து காட்டுமாளிகைக்குக் கொண்டுசென்ற போது, தான் முகமூடி மனிதனகச் சென்று அவளைக் காப்பாற்றி அவளின் இல்லத்தில் சேர்த்ததாகவும், தன் புத்திரி தூக்கிச்செல்லப்பட்ட விஷயம் கந்தசாமிபிள்ளைக்கோ மற்றவர்க்கோ தெரியாதென்றும், இன்று காலையில், பிரதாபன் ஜெயாவின் திருமணத்தினின்று விலகிக்கொண்டு முனியம்மாளை காட்டு மாளிகையில், பல பிரமுகர்கள் முன்னிலையில் மணம்புரிய ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறினன். இதைச்

செவியுற்றதும், முன் நான் கொண்டிருந்த அபிப்பிராயம் மாறியது. எவ்விதமும் பிரதாபன் புரிந்த கொடுஞ்செயல் களுக்குத் தக்க தண்டனையை அவனடையவேண்டும் என்ற முடிவிற்கு வந்தேன். தாங்கள் நான் ஜெமீனை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியதாலும், பயங்கர குற்றங்கள் பலவற்றைச் செய்திருக்கும் பிரதாபனுக்குத் தக்க தண்டனை அளிக்கவேண்டியது அவசியமாகையாலும் தங்களுடைய அபிப்பிராயமே என் முடிவெனக்கொண்டேன். அதோடு பிரதாபன் கூறியபடி ஜெயாவின் திருமணத்தி னின்று விடுபடாமல் குறிப்பிட்டநேரத்தில் ஜெயாவை மணப்பதற்கு இங்கு வந்திருக்கிறபடியால், இன்று காலை பிரதாபன் காட்டுமாளிகையில் முனியம்மாளை மணப்பதென் பது வெறும் ஏமாற்றுகவே முடிந்திருக்கவேண்டும்.

ஆகவே, இந்நகரிலேயே, பல பிரமுகர்கள் முன்னிலையில், அவனுடைய குற்றத்தை வெளிப்படுத்தவும், அதோடு தங் களையும், ஜெமீந்தாரவர்களையும் கொலை செய்யமுயன்ற உக்ரம சிங்கன்—காந்தாமணி இவர்களுடைய குற்றத்தை வெளிப்படுத் தவும், நான் யாரென்பதை சகல ஜனங்களும் அறியும்படியான எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன்.

இப்பொழுது ஜெயாவைக் காணும் என்ற வதந்தி எங்கும் பரவிவருகிறது அவள் இக்கட்டாயக்கல்யாணத்தி னின்றும் விடுப்பட்டிருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன்.

தாங்கள் இக்கடிதத்தைப் பார்த்தும் ராமை வடக்கு ராஜவீதியிலுள்ள பிரதாபனின் ஜாகைக்கு அனுப்பிவிட்டு 15 நிமிஷங்களுக்குப் பின் முனுசாமி மாமா, அவர் மனைவி, புதல்வி, ஆகியோரை அழைத்துக்கொண்டு பிரதாபனின் ஜாகைக்கு வந்து சேருங்கள்.

நீங்கள் மோஹன்லாலின் இல்லத்திலிருப்பதையும், உங்களுடன் யார் யார் இருக்கிறார்கள் என்பதையும், நான் எங்ஙனமறிந்து கொள்ளமுடிந்ததென்று யோசிப்பீர்கள். அதன் விபரம் பின்பு தெரிவிக்கிறேன்.

விபரங்கள் நேரில்
தங்கள்
ஜெயஸிங்

என்றிருந்த கடிதத்தைப் படித்து முடித்ததும் ராமிடமும், முனுசாமியிடமும், காண்பித்தார் தர்மஸீலர்.

கடிதத்தைப் படித்த ராம் தர்மஸீலரை நோக்கி "ஐயா! இப்பொழுது என்னைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பீர்களென்று நினைக்கிறேன்" என்றான்.

"ராம்! தெரிந்துகொண்டேன். இதை நீ முன்பே என்னிடம் தெரிவிக்காததினால், நான் உன்னைப்பற்றி பலவிதமாக நினைக்கும்படி நேர்ந்தது. சரி நம் ஜெமீந்தாரவர்கள் உடனே உன்னை அனுப்பும்படி எழுதி இருப்பதால் நீ சென்று அவர்களைப்பார், நாங்கள் இன்னும் 15 நிமிஷத்திற்கெல்லாம் அங்குவந்து விடுகிறோம்" என்று தர்மஸீலர் கூறவும் ராம் அங்கிருந்து சென்றான்.

ஜெயஸிங்கின் கடிதத்தைக் கண்ணுற்ற முனுசாமியும் ஆச்சரியமடைந்தானென்றே கூறவேண்டும். எவ்விதமெனில்? காலையிலிருந்து ஜெயஸிங் "ராம்" என்னும் மாறு பெயருடன் அவர்களுடனேயே இருந்திருக்கிறான். அவ்விதமிருக்க, பிரதாபனின் ஜாகையில் குற்றவாளிகளின் குற்றத்தை வெளிப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்து, தர்மஸீலருக்கு ஒரு கடிதமும் அவன் அங்கிருக்கும் போதே வந்ததென்றால் அவனின் துரிதமான காரியாதிகளை நினைத்து ஆச்சரியமடையாமல் என்ன செய்வான்?

அத்தியாயம் 12.

தன் சம்மதத்தை "ஆம்" என்ற ஒருவார்த்தையில் தெரிவித்துவிட எண்ணினாள். ஆனால், இவ்வளவு ஆண் பிள்ளைகள் மத்தியில் தன் சம்மதத்தைத் தெரிவிக்க சங்கோஜப்பட்டாள். பெண்களுக்கு இயற்கையாயுள்ள நாணம் வந்து குறுக்கிட்டது. வதனத்தில் புன்னகை ததும்ப, சிரங்கவிழ்ந்து, தன்னுடையின் முந்தியைத் திரித்துக்கொண்டே.........................

"ஜெயா"வைக் காணவில்லை என்ற தகவல், கல்யாணத்திற்கு வந்திருந்த சகல ஜனங்களுக்கு மட்டுமல்ல, நகரெங்கும் பரவிவிடவே, அவர்கள் ஒவ்வொருவரும் ஜெயாவைக் கண்டுபிடிப்பதில் முனைந்தனர்.

அதே நேரத்தில் வடக்கு ராஜவீதியில், பிரதாபனின் ஜாகையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம்.

பிரதாபனின் ஜாகை ஓர் அழகிய மாளிகையாகும். அம்மாளிகையின் முன் ஹாலில் எங்கு பார்த்தாலும் குஷன் சோபாக்கள் போடப்பட்டும், தரையில் ரத்னக்கம்பளம் விரிக்கப்பட்டுமிருந்தது. செந்தாமரை மலரைப்போன்று, ஆங்காங்கே தொங்கிக்கொண்டிருந்த மின்சார லஸ்த்தர்களும், சுவற்றில் நான்குபுறமும் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும், இயற்கைத் தோற்றங்களை சித்தரித்துக்காட்டும் பல வர்ணப் படங்களும், ஹாலின் மேல்புறச் சுவற்றில் ஒரு ஆள் உயரத்தில் பதிக்கப்பட்டிருந்த கடியாரமும், அந்த ஹாலுக்கு ஒரு தனி அழகைக்கொடுத்துக் கொண்டிருந்தன.

அந்த ஹாலில் பிரதாபனும், நஞ்சப்பனும், வருத்தந் தோய்ந்த முகத்தினராய் வீற்றிருந்தனர்.

"கஞ்சப்பா! என்ன ஆச்சரியம்!! அவள் எவ்விதம் காணுது போயிருப்பாள்? ஒருக்கால், வேறு யாராலாவது தூக்கிச் செல்லப்பட்டிருப்பாளோ? அவ்விதம் எப்படி இருக்கமுடியும்? இவ்வளவு ஜனங்கள் நிறைந்த, கல்யாண வீட்டில் அதிலும், பட்டப்பகலில், எவன் அவ்விதம் துணிந்து செய்துவிட முடியும்? இல்லை.........அவளாகவே வெளியேறி இருக்கக்கூடுமா? அவ்விதம் நினைப்பதற்கும் மார்க்கமில்லையே. எனெனில். என்னை மணப்பதற்கு அவளுக்குப் பூரண திருப்தி என்று நாம் உக்கிரமலிங்கரின் மூலமாகக் கேள்விப்பட்டோம். அதோடு இங்குள்ளவர்கள் இன்றுகாலையிலெல்லாம் அவள் குதூகலமாகவே இருந்ததாகச் சொல்லுகிறுர்கள்.........உம்.........ஒன்று அவள் யாராலோ தூக்கிச்செல்லப்பட்டிருக்கவேண்டும் அல்லது அவள் தானுகவே வெளியேறி இருக்கவேண்டும். இந்த இருவழிகளில், எது உண்மை என்பதுதான் தோன்றவில்லை...............அப்பா ......எல்லாம் சர்வ குழப்பமாகவே இருக்கிறது." என்றுன் பிரதாபன்.

கஞ்சப்பன்:—ஆம் பிரதாப்! நீ கூறிய இருவழிகளைத் தவிற அவள் காணுதுபோனதற்கு வேறு வழியே இருக்க முடியாது. இவ்விரண்டில் அவள் எவ்வழியால் மறைந்தாள் என்பதுதான் எனக்கும் தோன்றவில்லை. அதுமட்டும் தெரிந்துவிட்டால், நான்.........இவ்வளவு நேரம் இங்கா இருப்பேன்? எப்படியாவது நிமிஷத்தில் கொண்டுவந்துவிட மாட்டேனு? அடடா! நாம் நினைத்ததென்ன? நாம் செய்து முடித்த காரியங்களெல்லாமென்ன? நம்முடைய ஏற்பாடுகள் தானென்ன? உம்......என்ன செய்வது, அதிர்ஷ்டமில்லை. ஆனல் ஒன்று, காணுதுபோன ஜெயா கண்டுபிடிக்கப்பட்டு

நீ மணந்துகொண்டால், நீ இந்த சமஸ்தானத்தின் அதிபதியாகிவிடுவது திண்ணம்.

பிரதாபன்:—கண்டுபிடிச்சப் பட்டபின்பல்லவா கல்யாணம்? கல்யாணம் முடிந்த பின்னல்லவா ஜெமீந்தாராவதைப் பற்றி யோசிக்கவேண்டும்? பேராசை பெரும் நஷ்டமாகவே முடிந்தது. அதுபோகட்டும், உக்ரமசிங்கர் தன்னை உடனே இந்த பங்கிளாவில் சந்திக்கவேண்டுமென்று கடிதமெழுதியதின் காரணம் என்னவாயிருக்கும்?

நஞ்சப்பன்:—வேறென்ன விஷயமிருக்கிறது? இது விஷயமாக ஏதாவது கூறவே நம்மை அழைத்திருக்க வேண்டும்.

என்று நஞ்சப்பன் கூறியதும், பிரதாபனின் தாயான சாந்தாமணி வெகு வேகமாக அந்த ஹாலில் பிரவேசித்தாள். அங்கு தன் புதல்வனையும், நஞ்சப்பனையும் கண்டதும் அவளது வதனம் மாறுபட்டது. ஆனால், தன் முக மாறுபாட்டை வெளிப்படுத்திக் கொள்ளாது, பிரதாபனை நோக்கி "பிரதாப்! சரி நாமெல்லாம் ஊருக்குப்போக வேண்டியதுதான். இந்த அவமானத்தை என்னால் தாங்க முடியவில்லை. ஆனால், உக்ரமசிங்கர் ஏதோ சில முக்கியமான விஷயங்கள் கூறவேண்டு மென்றும் உடனே இங்கு வரும்படியாகவும் கடிதம் எழுதி இருந்தார். எங்கே அவர்? இங்கிருக்கிறாரா? அவரைப்பார்த்ததும் நாம் நம் ஊருக்குப் புறப்படவேண்டும். இந்தமாதிரி நடக்குமென்று நான் கனவிலும் நினைத்தவளல்ல?" என்று மூடுக்காகக் கூறினாள்.

நஞ்சப்பன்:—பார்த்தாயா பிரதாபா! ஜெயா காணாது போனதுபற்றி ஏதாவது சமாதானம் கூறவே நம்மை அழைத்திருக்க வேண்டுமென்று நான் அப்பொழுதே கூறவில்லையா?

அவ்விதமில்லாவிட்டால் அம்மாவை எதற்காக இங்கு வரும் படி எழுதவேண்டும்?

சாந்தாமணி:—அப்படியானால், உங்களுக்கும் கடிதம் எழுதி இருக்கிறாரா உக்ரமசிங்கர்?

பிரதாபன்:—ஆமம்மா, நான் அரண்மனையிலிருக்கும் போது ஒரு ஆள் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அவருக்காகவே நாங்களும் காத்திருக்கிறோம்.

என்றிவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தபொழுது பிரதாபனின் தந்தை சாந்தலிங்கை மாடசாமி அழைத்து வந்து ஒரு சோபாவில் அமரச் செய்தபின், பிரதாபனிடம் சென்று உக்ரமசிங்கரை ஜெமீந்தார் பார்ப்பதற்காக வந்திருக் கிறாரென்றும், அவர் இங்கிருக்கிறாரென்றும் விசாரித்தான்.

இதைச் செவியுற்ற அம்மூவரும் தங்களுடைய அபிப் பிராயம் சரியாகவே இருக்க வேண்டுமென்று நினைத்து தாங்க ளும் அவருடைய வருகைக்காகவே காத்திருப்பதாகவும், இப் பொழுது வந்துவிடக் கூடுமென்றும் தெரிவித்தான் பிரதாபன்.

சாந்தாமணி எழுந்துசென்று, இன்று தங்களுக்கு நேர்ந்த அவமானத்தைப்பற்றி ஜெமீந்தாரிடம் பிரமாதமாசக் கூறிக்கொண்டிருந்தாள்.

இது இவ்வாறாக, ஜெயஸிங்கின் கடிதத்தைப் பார்த்த 15 நிமிஷங்களில், முனுசாமி, அவன் மனைவி, புதல்வி முதலி யோரை அழைத்துக்கொண்டு தம்முடைய காரில் ஜெயஸிங் குறிப்பிட்டிருந்த பிரதாபனின் ஜாகையின் சமீபம் வரும் போது அங்கு ராம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு காரை நிறுத்தினார் தர்மஸீலர்.

ராம் இவரை அணுகி "ஐயா! உங்கள் ஜெமீந்தார் மற்றவர்களெல்லாம் அந்தப் பங்களாவின் முன் ஹாலிலிருக்கிறார்கள். உங்களைமட்டும் அங்கு வரும்படி கூறியதோடு, இவர்களை (முனுசாமி குடும்பத்தாரை) தனியாக அழைத்துக்கொண்டு வரும்படியும் ஜெயலிங்கர் என்னை இங்கனுப்பினர்" என்றான்.

இதைச் செவியுற்ற தர்மஸீலர், முனுசாமி, முனியம்மாள், தங்கம் ஆகிய மூவரையும் ராமின்கூட அனுப்பிவிட்டு, பிரதாபன் தங்கியிருக்கும் பங்களாவை யடைந்தார்.

அப்பொழுது ஒரு கார் வேகமாக ஓடி வந்து பங்களாவின் முன் நின்றதும் அதிலிருந்து கீழிறங்கிய உக்கிரமஸிங்கன் தர்மஸீலரைக்கண்டு "அண்ணா! ஜெமீன்தார், காந்தாமணி அம்மாள் இவர்களெல்லாம் உள்ளே இருக்கிறார்களா? எனக்கேட்டான்.

"நான் அவர்களைப் பார்க்கவில்லை இங்கு இருப்பதாகத் தான் கேள்விப்பட்டேன்" என்று பதிலளித்தார் தர்மஸீலர்.

பின் இருவரும் பங்களாவின் முன் ஹாலையடைந்தனர்.

தாங்களெல்லாம் அதிக நேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த உக்ரமசிங்கன் வருவதைக்கண்ட பிரதாபன். "உக்ரமசிங்கரே! ஏன் இவ்வளவு தாமதம்? எங்களை எல்லாம் இங்கு வரும்படி சடிதமனுப்பிவிட்டு நீர் எங்கு சென்றிருந்தீர்?" என்றுகேட்டான்.

அப்பொழுது ஜெமீன்தார் விக்ரமஸிங் அங்குவந்து "என் புதல்வி எங்கே? இங்கு இருக்கிறாளாமே? இங்கெங்கிருக்கிறாள்? சொல்லமாட்டீர்களா?" என்று அங்கிருந்த ஒவ்வொருவரையும் கேட்டார். அவருடைய அப்போதைய நிலைமை பரிதாபகரமாக இருந்தது. ஒரு பைத்தியக்காரன் போன்றே இருந்தார்.

தர்மஸீலர் நீங்கலாக அங்கிருந்த மற்றவர்களெல்லாம் ஜெபாவின் பிரிவால் விக்ரமஸிங்கருக்கு பயித்தியம் பிடித்து, பிதற்றுகிறார் என்றே எண்ணினர்.

தர்மஸீலர், ஜெபா இங்கிருப்பதாக ஜெயஸிங் விக்ரமசிங்கனுக்கு தெரிவித்ததினுல்தான், விக்ரமஸிங் இவ்விதம் பிதற்றிக்கொண்டு வந்திருக்கவேண்டுமென்று யூகித்தார்.

உக்ரமஸிங்கன் ஜெமீந்தார் விக்ரமசிங்கையணுகி "பிரபோ! ஜெபா இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவள் எங்கிருந்தாலும் நான் கண்டுபிடித்து உங்களிடம் கொண்டு வந்து ஒப்புவிக்கிறேன். நீங்கள் கவலையற்றிருங்கள் மனதை இவ்விதம் பேதலிக்க விட்டுவிட்டால் ஆபத்தாகவே முடியும்" என்று கூறி அவரை அழைத்துச் சென்று ஒரு சோபாவில் அமரச்செய்தபின் பிரதாபனிடம் வந்து "பிரதாபரே! என்னமோ கடிதம் அனுப்பினேன் என்று கூறினீரே என்ன விஷயம்?" என்றான்.

"என்ன விஷயமா? எங்களை எல்லாம் இங்கு வரும்படியாக கடிதம் அனுப்பிவிட்டு என்ன விஷயம் என்று எங்களையே கேட்பது வேடிக்கையாகத்தானிருக்கிறது" என்றான் பிரதாபன்.

"என்ன? நானு உங்களை எல்லாம். இங்கு வரும்படி கடிதமனுப்பினேன்!" என்று வியப்புடன் கேட்டான் உக்ரமசிங்.

"என்னய்யா இது முழு மோசமாக இருக்கிறது. இதோபாரும்" என்றுகூறி தனக்குவந்த கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தான் பிரதாபன்.

அக்கடிதத்தைப்படித்து பார்த்த உக்கிரமஸிங் பிரம்மிப்படைந்தவனுய் "பிரதாபரே! இது என்கையெழுத்தைப் போன்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர உண்மையில் நான் இது போன்ற கடிதம் எழுதவே இல்லை. நான் ஜெயாவைத் தேடியலைந்துவிட்டு இப்பொழுதுதான் வந்தேன். ஒரு ஆள் ஓடிவந்து நீங்களெல்லாம் இங்கு காத்திருப்பதாகவும் உடனே என்னை நீங்கள் அழைத்துவரச் சொன்னதாகவும் சொன்னுன். நான் இங்குவந்தேன். இதுதான் உண்மை இதை எல்லாம் பார்க்க ஆச்சரியமாகவல்லவோ இருக்கிறது" என்று கூறி வாய் மூடுமுன் "எல்லாம் ஆச்சரியந்தான்!" என்றொரு கனத்த குரல் (மனிதனுடைய குரலொலிக்கும் பன்மடங்கு அதிக சப்தத்தை உடையது) ஒலித்தது.

இவ்வார்த்தைகளைச் செவியுற்ற அனைவரும் திடுக்குற்று சப்தம்வந்த திக்கை நோக்கினர். அவ்விதம் கூறியது யார் என்பதை யறியமுடியாது திகைத்தனர்.

"இனி நடக்கப்போவதும் ஆச்சரியமாகவே இருக்கும்" என்று அதே குரல் மீண்டும் ஒலித்தது. அப்பொழுதுதான் அச்சப்தம் எங்கிருந்து வருகிறதென்பதை யறிந்தனர். வியப்புடன், அவர்களது கண்கள் அந்த ஹாலில் மாட்டப்பட்டிருந்த பெரிய கடியாரத்தின்மேல் வைக்கப்பட்டிருக்கும் "ஒலி பரப்பும்" கருவியையே நோக்கி நின்றன. ஒலிப்பரப்பின் மூலம் பேசிய மனிதன் "ஜெமீந்தார்களே! மற்றுமுள்ள கனவான்களே!! உங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் கூடும்படி செய்யவேண்டுமென்று எண்ணிய எங்கள் எண்ணம் நிறைவேறியதுபற்றி சந்தோஷமடைகிறோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த கடிதங்களெல்லாம், உக்ரமசிங்கர் எழுதியதல்ல. அவர் கையெழுத்துப் போன்று நாங்கள்

எழுதியதேயாகும். நாங்கள் அவ்விதம் எழுதியிராவிட்டால் நீங்களெல்லோரும் இவ்விதம் ஒரே இடத்தில் கூடும்படியான சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்க மாட்டீர்கள். எதற்காக இவ்விதம் கடிதம் எழுதும்படி நேரிட்டதென்றால்?...நீங்களெல்லாம் எதிர்பாராத பலரகஸ்யங்களை வெளியிடுவதற்காகத்தான்.

இப்பொழுது இந்த ஒலிப்பரப்பில் வெளியாகும் இருவர் சம்பாஷணையை அமைதியுடன் கேளுங்கள். அது முடிந்ததும் மேலும் விஷயத்தை விபரமாகக் கூறுகிறேன்'' என்றான்.

சில நிமிஷங்கள்வரை நிசப்தம் குடிகொண்டிருந்தது, அவன் கூறப்போகும் ரகஸ்யம் என்னவாயிருக்கும்? அவன் யார்? ஒலிப்பரப்பில் வெளியாகப்போகும் சம்பாஷணை எதைப் பற்றியது? என்பனபோன்ற கேள்விகள் ஒவ்வொருவர் மனதுள்ளும் எழுந்தன. அக்கேள்விகளுக்கெல்லாம் பதிலறியாது மனங்குழம்பிக் கொண்டிருந்த தருணம் ''பிரதாபன் திருமண சம்பந்தமாக தங்களுடைய முடிவைத் தெரிவிப்பதற்காக உக்ரமசிங்கன் தேவபுரி வந்து காந்தாமணியிடம் சம்பாஷித்த அந்த சம்பாஷணை முழுமையும்'' ஒருவித மாற்றமுமில்லாமல் ஒலிப்பரப்பில் வெளியாகியது

கனவிலும் நினைக்கமுடியாத விதமாய் தங்கள் சம்பாஷணை அப்படியே வெளியானதைக்கண்டு உக்ரமசிங்கும், காந்தாமணியும் மனங்குன்றியவர்களாய் சிரங் கவிழ்ந்தனர்.

அவர்களுடைய மனோநிலையை விவரிப்பது சாத்தியமின்மையேயாகும். ஆனாலும் தைரியத்தை முற்றும் இழந்து விட்டார்களென்று கூறுவதற்குமில்லை.

இந்த நிலையில் மீண்டும் ஒலிப்பரப்பில் பேசிய மனிதன் ''பிரபுக்களே! இப்பொழுது இந்த சம்பாஷணையில் சம்பந்தப்

பட்ட இருவரில் ஒருவர் சாந்தாமணி அம்மாளென்றும், மற்றவர் இந்த சமஸ்த்தானத்தின் பிரதானி உக்ரமசிங்கர் என்பதையும், நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள்'' என்றான்.

யார்? நாங்களா? இல்லை......இல்லை எங்களை அவமானம் செய்வதற்காகவே இவ்விதம் செய்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விதமானதோர் சம்பாஷணை எங்களுக்குள் நிகழ்ந்ததே இல்லை'' என்று கோபத்துடனும், தடுமாற்றத்துடனும் ஏகோபித்துக் கூறினர் இருவரும்.

ஒலிப்பரப்பில் பேசியமனிதன் "இந்த சம்பாஷணையை இருவரும் மறுக்கிறார்கள். ஆனால், இவர்களுடைய மறுப்பை பின்பு வைத்துக்கொள்ளட்டும். நான் சமூகத்தில் தெரிவிக்க வேண்டியவைகளை எல்லாம் கூறி முடித்துவிடுகிறேன். ஒரு விஷயம், இந்த சம்பாஷணையை எல்லோரும் ஸ்பஷ்டமாக அறிந்து கொள்வதற்காகவே இவ்வொலி பரப்பும் கருவியை ஏற்பாடு செய்தோம். இனி நான் உங்கள் முன்னிலையில் வந்து பேசுவதற்கு எவ்வித ஆக்ஷேபணையுமில்லை'' என்று கூறிய மறு நிமிஷம் அந்த ஹாலின் தென்கோடியிலுள்ள ஒரு அறையின் கதவு திறக்கப்பட்டு 'ராம்'' அந்த ஹாலில் தோன்றி தேவபுரி ஜெமீந்தார் சாந்தஸிங் இரண்டாம் மணம் செய்துகொண்டதிலிருந்து ஆரம்பித்து இறுதியாக ஜெயஸிங் தர்மஸீலனைக் கண்டதுவரை இடையில் நடந்த விஷயங்களை (கற்பழிக்கும் கூட்டத்தாரைப் பற்றிய விஷயங்களைத் தவிர்த்து) மட்டும் கூறி முடித்தான்.

முற்றும் ஆச்சரியகரமான இந்த விருத்தாந்தங்களைச் செவியுற்ற அனைவரும் (உக்ரமசிங்கன், சாந்தாமணி, தர்மஸீலர் முதலியோர் நீங்கலாக) ப்ரமித்துவிட்டனர்.

தேவபுரி ஜெமீந்தார் சாந்தஸிங், தானிருக்கும் பலவீனமான நிலையைக்கவனியாது, ஓட்டோடியும் சென்று தர்மஸீலரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு "தர்மஸீலரே! முன்பு குணபூஷணிக்கு பிறந்து இறந்ததாக நான் நம்பிய அக்குழந்தை உண்மையில் குணபூஷணியின் குழந்தையில்லையா? குணபூஷணிக்குப் பிறந்த அக்குழந்தை, என் புதல்வன் இன்னும் உயிருடனிருக்கிறானா? அவன் இப்பொழுது எங்கே இருக்கிறான்? இந்த சண்டாளி காந்தாமணி, இவளுக்குப் பிறக்கவிருந்த குழந்தை வாழ்வதற்கு, என் குணபூஷணியின் குழந்தையைக் கொல்லத் துணிந்தாளா? என்ன ஆச்சரியம்! தர்மஸீலரே! இந்த விபரங்களை எல்லாம் முன்னமேயே என்னிடம் தெரிவித்திருக்கலாகாதா?" என்று ஆவலுடன் கேட்டார்.

"பிரபோ! இந்த வாலிபர் இப்பொழுது கூறியவற்றில் ஒரு அணுவும் பிசகில்லை. அவர் கூறியவைகளெல்லாம் உண்மையில் நடந்தவைகளேயாகும். அதோடு தங்கள் திருப் புதல்வனையும் இதே இடத்தில் இன்னும் கொஞ்ச நேரத்தில் தாங்கள் காணுவீர்கள். நான் இந்தவிபரங்களை எல்லாம் தாங்களிடம் கூறாதிருந்ததற்கு தக்க காரணமிருக்கிறது. தாங்கள் காந்தாமணி அம்மாளிடம் அதிக அன்பாயிருந்தீர்கள், அன்பின் மிகுதியால் அவர்களுடைய அபிப்பிராயப்படியே நடந்தும் வந்தீர்கள். கொஞ்சநாட்களில் அவர்களுடைய வார்த்தையை தடுத்துரைக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டதென்பதை நான் அறிவேன். இந்த நிலையில், நான் இவர்களுடைய சதியாலோசனையை தங்களிடம் கூறி இருந்தால் அதை நீங்கள் நம்பியேயிருக்கமாட்டீர்கள். அவ்விதமே தாங்கள் நம்பி குழந்தைக்கு எவ்வித ஆபத்தும் நேரிடாது பாதுகாக்கப்பட்டாலும், எப்பொழுதும் அக்குழந்தையைக்

சொல்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பார்கள் இவர்கள். இதை எல்லாம் உத்தேசித்துத்தான் தங்களிடம் தெரிவிக்காது, இவ்வித ஏற்பாடுகளெல்லாம் செய்தேன். இன்றை நிலையில், தங்கள் புதல்வர் புஜபல பராக்ரமம் நிறைந்த வாலிபனாகிவிட்டபடியாலும், இனி எதிரிகளைப்பற்றி பயமில்லை எனக்கருதியதாலும், அதோடு இந்த அம்மாள் உங்களுக்கே விஷம்கொடுத்து கொல்ல நினைத்ததாலும், இனிமேல் தாமதித்தால் ஆபத்தாய் முடியுமென்று எண்ணி, இப்பொழுது இந்த உண்மைகளை எல்லாம் வெளியிடத்துணிந்தேன்" என்றார் தர்மசீலர்.

"தர்மசீலரே! நீங்கள் செய்த இப்பெரும் உதவிக்கு என்ன கைமாறு செய்யமுடியும்? கொண்டகணவனைக்கொலை செய்யத்துணிந்தாள் இந்தச்சண்டாளி. புதுமணத்திலீடுபட்டு அவளின் வாக்கையே தேவவாக்கென மதித்து, என்மதியை இழந்தேன். இவள் பெண்ணுருவெடுத்த பேய் என்பதை இப்பொழுதுதானறிந்தேன். தர்மசீலரே! மறைந்து வளர்ந்த என்மாணிக்கமெங்கே?" என்று பதட்டத்துடனும் ஆவலுடனும் வினவினர் ஜெமீந்தார் சாந்தலிங்.

"பிரபோ! அவரைத்தான் நானும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் தர்மசீலர்.

"இதோ நிற்கும் (ராமை சுட்டிக்காட்டி) வாலிபன் யார்?" எனக்கேட்டார் ஜெமீன்தார்.

"இவர் தங்கள் புதல்வரின் உற்றதோழர்" என்றார் தர்மசீலர்.

ஜெயலிங்கின் பிறப்பின் உண்மையை ராம் எவ்விதம் தெரிந்துகொண்டான் என்பதையறியாது முதலில் திகைத்து

விட்டாராயினும், பின், ஒருக்கால் ஜெயஸிங்கே அவனிடம் கூறி இருக்கலாமென்றெண்ணி சமாதானமடைந்தார் தர்ம ஸீலர்.

உக்ரமசிங்கன் - காந்தாமணி, இருவரும் தாங்கள் பரம ரகஸ்யமாகச் செய்து முடித்த காரியாதிகளெல்லாம், முன் நடந்தபடியே வெளியானதைக் கண்டு இன்னது செய்வதென் பதை யறியாதவர்களாய், அடித்துவைத்த கற்சிலைகளென அமர்ந்துவிட்டனர்.

இந்த நிலையிலே, ராம் மீண்டும் பேசலானான் "பிரபுக் களே! இப்பொழுது குற்றஞ்சாட்டப்பட்ட இருவரின் முகங் களையும் பாருங்கள் அவைகளில் பிரேதக்களை தாண்டவமாடு கிறது. அவர்கள் எவ்வளவுதான் தாங்கள் குற்றவாளி களல்லவென்று சாதித்தாலும், அவர்களுடைய மனச்சாக்ஷி மட்டும் அதற்கு இடங்கொடுக்கவில்லை என்பது விளங்கு கிறது. ஒருவருடைய முகத்தோற்றத்தைக்கொண்டு அவரைக் குற்றவாளியெனத் தீர்மானிப்பது ஞாயத்திற்கு ஒத்ததாக இல்லை. ஆகவே, இவர்களுடைய குற்றத்தை மெய்யாக்க வேண்டியது குற்றஞ்சாட்டிய எங்களுடைய பொறுப்பாயிருப் பதால், அதற்கு முக்கிய சாக்ஷிகளில் ஒருவரான டாக்டர் சரோஜினி அம்மாள் அவர்கள் இங்கு வந்து இந்த விஷயத்தில் தனக்கு தெரிந்த உண்மைகளைக் கூறுவார்கள்" என்றான்.

டாக்டர் சரோஜினி அம்மாளைப்பற்றி அப்பகுதியில் தெரியாத மனிதரே இருக்கமுடியாது. எல்லோருடைய நன் மதிப்பையும் பெற்றவர். அவரே நேரில் வந்து சாக்ஷியம் கொடுக்கப்போகிறார்கள் என்பதை யறிந்த காந்தாமணியும்- உக்ரமசிங்கனும், தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை

மறுப்பதால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது என்பதை யறிந்தனர் தாங்கமுடியாத அவமானத்தால் காந்தாமணி யின் தேகம் நடுங்கியது. அங்குள்ளவர்களைப் பார்க்கவும் வெட்கியவளாய் சிரம் கவிழ்ந்தாள்.

அப்பொழுது சரோஜினி அம்மாள் அந்த ஹாலில் தோன்றி, தர்மசீலர் முதலில் குணபூஷனி அம்மாளின் குழந்தையைக் காப்பாற்றுவதில், தன்னுடைய உதவியைக் கோறியதும், தான் அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி, குணபூஷணி அம்மாளிடம் எதிரிகளின் சதியாலோசனையைக் கூறி, தாங்கள் எவ்விதமும் அவளுடைய குழந்தையைக் காப்பாற்றி தக்க வயதடைந்ததும் அவன் ஜெமீனின் உரிமையை அடையச்செய்வதாகவும் உறுதிகூறி அக்குழந்தை பிற்காலத்தில் ஜெமீனை அடைவதற்குச் சாதகமாக குணபூஷணி அம்மாளின் கைப்படவே ஒரு கடிதம் எழுதி வாங்கியதாகவும், அந்தக் கடிதத்திற்கு இரண்டு போட்டோ காப்பிகள் எடுத்து ஒன்று தன்னிடமும், மற்றொன்று அக்குழந்தையை போஷித்து வந்த சோலையப்பனிடமும், அசல் கடிதம் தர்மசீலரிடமிருப்பதாகவும், அந்தக் காலத்தில், அரண்மனையில் வேலை பார்த்து வந்த கந்தசாமியின் இறந்த குழந்தையைக் கொண்டுவந்து வைத்து, குணபூஷணி அம்மாளின் குழந்தையைக் காப்பாற்றியதாகவும், அக்குழந்தைக்கு குணபூஷணி அம்மாளிட்டப் பட்டபெயர் "ஜெயஸிங்" என்றும், எதிரிகள் ஜெயஸிங்கைக் கொன்று விடுவதெனத் தீர்மானித்த அன்று இரவு, குணபூஷணி அம்மாள் பிரசவித்திருந்த அறையில், மறைந்திருந்து உக்ரமசிங்கன் வந்து குணபூஷணி அம்மாளின் குழந்தை என்றெண்ணி இறந்து கிடந்த கந்தசாமியின் குழந்தையின் தொண்டையை நெறித்துவிட்டு சந்தோஷத்துடன் திரும்பிச்

சென்றதை தானும், தூங்குவது போன்று பாசாங்கு செய்த குணபூஷனி அம்மாளும் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் கூறி மேலும் "ஜெமீந்தாரவர்களே! சில தினங்கள் முன்பாக தர்மலிலர் என்னிடம் வந்து, சாந்தாமணி ஜெமீந்தாருக்கு விஷங்கொடுத்துக் கொல்ல நிச்சயித்திருப்பதாகக் கூறி பால் நிறைந்த ஒரு கிளாஸை என்னிடம் கொடுத்து பரிசோதிக்கச் சொன்னார்கள். நானும் அதைப் பரிசோதித்து அப்பாலில் விஷங் கலந்திருப்பதைக் கண்டேன். அதில் கலந்திருந்த அதே விஷ மாத்திரைகளைக் காந்தாமணி இங்கு கொண்டு வந்திருப்பதாகச் சற்றுமுன்பு அறிந்தேன்" என்று கூறி முடித்து, ஒரு கடிதத்தை ஜெமீந்தார் சாந்தலிங்கரிடம் கொடுத்தார்கள் அக்கடிதத்தை பிரித்துப்படித்து அது குண பூஷனி அம்மாளால் எழுதப்பட்டதுதான் என்பதை நிச்சயித்தார் சாந்தலிங்.

ராம் பக்கத்திலிருந்த அறையினுட் சென்று ஒரு பெரிய உடுப்புப் பெட்டியை எடுத்துவந்து ஜெமீந்தார் சாந்தலிங்கின் முன்னிலையில் வைத்து "பிரபோ! இந்த உடுப்புப் பெட்டி யாருடையதென்பதை நீங்களறிவீர்களல்லவா?' என்றான்.

சாந்தலிங் அப்பெட்டியைக் கூர்ந்து கவனித்து ஆச்சரிய மடைந்தவராய் "இது காந்தாமணியின் பெட்டியல்லவா? இது உங்களுக்கு எவ்விதம் கிடைத்தது" எனக்கேட்டார்.

"இதை அவர்களுடைய ஜாகையிலிருந்து இப்பொழுது தான் எடுத்துவந்தோம்" என்று கூறிவிட்டு, காந்தாமணி யிடம் சென்று "அம்மா! இந்தப் பெட்டியின் திறவுகோலைத் தயவுசெய்து இப்படிக் கொடுங்கள்" என்றான்.

காந்தாமணிக்கு திறவுகோலைக் கொடுப்பதற்கு இஷ்ட மில்லையாயினும், பலவந்தமாகவேனும் திறவுகோல் அவளிட

மிருந்து கைப்பற்றப்படும் என்பதை அவளறிவாள். ஆகவே, தன்னிடையில் சொருகி இருந்த திறவுகோலை எடுத்து அவன் முன் வீசியெறிந்தாள். ராம் அத்திறவுகோலை எடுத்துவந்து சாந்தலிங்கரிடம் கொடுத்து அப்பெட்டியைத் திறந்து அதிலுள்ள சாமான்களை பரிசோதிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

சாந்தலிங்கரும் அப்பெட்டியைத் திறந்து அதிலுள்ள சாமான்களை யெல்லாம் ஒவ்வொன்றாக வெளியிலெடுத்து வைத்தார். அவர் ஒரு சிறிய டப்பியை எடுக்கும்போது ராம் அதை வாங்கி திறந்துபார்த்து அதுதான் அவரைக் கொல்வதற்காக அவள் உபயோகிக்கும் விஷமாத்திரைகள் அடங்கிய டப்பி என்பதைக் கண்டு ஜெமீந்தாரை நோக்கி "பிரபோ! இதோ இருக்கிறது நாம் தேடிய விஷமாத்திரைகள்' என்று கூறி அவரிடம் காண்பித்து பின் அதை சரோஜினி அம்மாளிடம் கொடுத்து "நீங்கள் பாலில் கலந்திருந்ததாகக் கூறும் விஷம் இதுதானே?" என்றான்.

சரோஜினி அம்மாள் அதைவாங்கி பரிசோதித்தார்கள். அவர்களுடைய நீண்ட பரிசோதனைக்குப்பின் பாலில் கலந்திருந்ததும் கையிலிருப்பதும் ஒன்றுதான் என்பதைக்கண்டு "ஆம் இதுதான் சந்தேகமே இல்லை" என்றார்கள்.

அதன்பின் ராம் "பிரபுக்களே! இவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மைதானென்பதைத் தக்க ஆதாரத்துடன் வெளிப்படுத்தி விட்டோம் இனி அவர்களுடைய எதிர்வாதத்தைக் கூறலாம்" என்றான்.

சில நிமிஷங்கள் வரை நிசப்தம் குடிகொண்டிருந்தது.

ஜெமீந்தார் விக்ரமஸிங் அடைந்த ஆத்திரத்திற்கு அளவேஇல்லை. தான் யோக்கியன் எனக்கொண்டவனும், தன்

உற்ற தோழன் என அளவளாவியவனுமாகிய தன் பிரதானி, கொலைபுரிய எத்தனித்த குற்றத்தையும், ஒருவன் தன் தேசம், சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் இழந்து தூர தேசம் சென்று வாழக்காரணகர்த்தாவாயும் ஒரு ஜெமீந்தாரணியின் கள்ளக்காதலனுகி அவனுக்குப்பிறந்த குழந்தைக்கு, மோசக்கருத்தாக தன் புதல்வியை மணமுடிக்க எத்தனித்ததான பல குற்றங்களைப் புரிந்திருக்கும் பெரும் பாதகன் என்பதையறிந்து, அவன்மீது அளவற்ற வெறுப்பும் கோபமுங் கொண்டார்.

சாந்தாமணியும், உக்ரமஸிங்கனும் எதுவும் கூறுது மௌனமாயிருப்பதைக்கண்டு ராம், "இவர்கள் புரிந்த குற்றங்களை மறுக்கவேண்டுமென்ற உத்தேசம் இவர்களுக்கு இல்லை என்று எண்ணுகிறேன். அதுவரையில் சந்தோஷந்தான். நீங்களெல்லாம் திடுக்கிடும்படியான மற்றொரு சமாச்சாரமிருக்கிறது, அதையும் கூறிவிடுகிறேன். கடந்த சிலமாதங்களாக தேவபுரியில் உலாவிவந்த கற்பழிக்குங் கூட்டத்தார் யாரென்பதைக் கண்டுபிடித்திருக்கிறோம் என்ற சந்தோஷச் செய்தியேயாகும். அக்கூட்டத்தார் வேறொருவருமில்லை. இதுவரை தேவபுரி இளையஜெமீந்தாராயிருந்துவந்த பிரதாபரும் அவருடைய சிப்பந்திகளுந்தான்" என்றான்.

"என்ன? யார்? பிரதாபனு இந்தக்கொடிய காரியத்தைச் செய்துவந்தது?" என்று ஆச்சரியத்துடனும், ஆத்திரத்துடனும், வினவினர் ஜெமீந்தார் சாந்தஸிங்.

"ஆம் பிரபோ? அவர்தான்" என்றான் ராம்.

அங்கிருந்தவர்களெல்லாம் பிரதாபனின் முகத்தையே நோக்கினர். அவனின் முகத்தில் அசடு தட்டியது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு "யார்? நானு? இல்லைவேஇல்லை. எங்கள்

எல்லோரையுமே தொலைத்துவிட வேண்டுமென்ற கருத்துடன், சட்டுப்பாடாய் குற்றம் சுமத்துகிறார்கள்" என்று அதிக சிரமத்துடன் கூறினான்.

ராம்:- யார்மீதும் வீணான ஒரு குற்றத்தைச் சுமத்துவது எங்கள் நோக்கமல்ல. கற்பழிக்கும் கூட்டத்தின் தலைவர் இவர்தானென்பதை நான் எவ்விதம் கண்டறிந்தேன் என்ற விபரத்தைக் கூறுகிறேன்.

தேவபுரியிலே கடந்த 6 மாதங்களாக யாரோ குடும்பத்துப் பெண்களைத் தூக்கிச்சென்று கற்பழித்து வருகின்றனர் என்றசெய்தி நகரில் பரவி பெருத்த பரபரப்பையும் பீதியையும் உண்டுபண்ணியது. நான் தேவபுரி வந்திருந்த சமயம் இச்செய்தி என்காதிலும் விழுந்தது. எவ்விதமும் அக்கூட்டத்தாரைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். இந்த நிலையில் ஜனங்களெல்லாம் கூடி இந்த அக்ரமத்தைப்பற்றி ஒரு மகஜரைத் தயாரித்து, கொஞ்சகாலமாக பிரதாபரே ஜெமீனின் காரியாதிகளைக் கவனித்து வந்தபடியால் இவரிடமே அந்த மகஜரை சமர்ப்பித்தனர் மகஜரைப் பார்த்த இவர் பிரதானி தர்மஸீலரை அழைத்து உடனே அக்கூட்டத்தாரை கண்டுபிடித்து கைதுசெய்யும்படி கட்டளையிட்டார்.

இந்தக் கூட்டத்தாரால் கற்பழிக்கப்பட்ட பெண்களில் ஒருவள் தவிர ஏனையோரெல்லாம் அவமானம் தாங்காது தற்கொலை புரிந்துகொண்டனரென்று நான் விசாரித்து அறிந்துகொண்டேன். அந்த ஒரு பெண்ணும் நடைப்பிணம் போன்று இப்பவோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று சந்தேகிக்கும் துர்ப்பல நிலையிலேயே இருந்தாள். நான் அவர்

களிடம் சென்று வேண்டிய தேர் ல் மொழிகள் கூறியதுடன் அவளின் வாழ்க்கையைப் பாழாக்கியவனைக் கண்டுபிடிப்பதாக வும் உறுதி கூறினேன்.

அதிலிருந்து ஒவ்வொரு இரவும் இந்தக்கூட்டத்தாரைப் பற்றி எதாவது உளவு அகப்படாதாவென ஊர் முற்றும் சுற்றித் திரிந்தேன். ஒருநாள் இரவு நான் மிட்டாய்க் கடைத் தெருவில் ஸில்க் வியாபாரி கந்தசாமி பிள்ளையினுடைய வீட்டின் சமீபம் வரும்போது ஒரு கார் வேகமாக ஓடிவந்து அவர் வீட்டின் முன் நின்றது. அப்பொழுது இரவு மணி 11 இருக்கலாம். ஜனசந்தடியேயில்லை. அக்காரிலிருந்து நாலைந்து முக மூடி மனிதர்கள் கீழே குதித்தனர். இவர்களைக்கண்டு நான் சந்தேகங்கொண்டு, அந்த வீட்டின் எதிரே இருந்த ஒரு பெரிய மர மறைவில் மறைந்துகொண்டு இவர்களைக் கவனித்தேன். அம்முகமூடி மனிதர்களில் ஒருவன் சென்று "அமிர்தம்! அமிர்தம்!! என்று கூவி கதவைப் பலமாகத் தட்டினான். சிலநிமிஷங்களில் ஒரு பெண் வந்து கதவு திறந்தாள். கதவை தட்டிய அம்முகமூடி மனிதன் திடீரெனப் பாய்ந்து அப்பெண் சப்தம் போடாவண்ணம் வாயில் துணிப் பந்தத்தை வைத்து அடைத்துவிட்டு, அவளை மயக்கமுறச் செய்து தூக்கிவந்து காரில் வைத்ததும் கார் புறப்பட்டது. நானும் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு அந்தக்காரின் பின்புறத்தில் தொத்திக்கொண்டேன்" என்றுகூறி மேலும் கோகிலம் பிரக்ஞையற்றிருக்கும்போதே பிரதாபன் அவளை கெடுத்துவிட உத்தேசித்ததையும் அத்தருணம் தான் சென்று அவளின் கற்பைக் காப்பாற்றியதுடன், பிரதாபன் ஜெயாவை மணம் புரிவதினின்று விலகிக்கொண்டதாக ஒரு கடிதம் ஜெமீந்தார் விக்ரமஸிங்கரவர்களுக்கு எழுதி வாங்கிய

தும், அதே சுபதினத்தில் அவனால் கற்பழிக்கப்பட்ட முனியம்மாளைக் "காட்டுமாளிகை"யில் பலர் முன்னிலையில் மணம் புரிய ஏற்பாடு செய்திருந்ததையும் விபரமாகக் கூறி மேலும் "ஜெமீந்தாரவர்களே! பிரதாபர் என்னிடம் வாக்களித்தபடி இன்றுகாலையில் சகல ஏற்பாடுகளும் காட்டுமாளிகையில் நடந்துகொண்டிருந்தன. முனியம்மாள், அவளின் பெற்றோர்கள் ஆகியவர்களும் காட்டுமாளிகைக்கு வந்து விட்டனர். ஆனால், பிரதாபர் முனியம்மாளை மணந்தாரா? அதுதானில்லை. அவர்களை ஒரு ஹாலில் போட்டு பூட்டி, விஷவாயுவை அந்த ஹாலுக்குள் செலுத்திவிட்டு, இவர்கள் ஜெயாவை மணம் புரிவதற்கு இங்கு வந்துவிட்டார்கள். இவர்கள் உத்தேசப்படி முனியம்மாளும் அவளின் பெற்றோர்களும் விஷவாயுப் பிரயோகத்தால் இறந்திருந்தால் இவர்கள் புரிந்த குற்றத்தை ருசுப்படுத்துவது சிரமமாக இருக்கும். ஆனால், அவர்கள் இன்னும் உயிருடனேயே இருக்கிறார்கள். இப்பொழுது நீங்களெல்லோரும் அவர்களைக் காணுவீர்கள்" என்று கூறியதுடன் தான் தர்மஸீலரிடம் கற்பழிக்கும் கூட்டத்தாரைக் காண்பிப்பதாக கூறி அவரை அழைத்துச் சென்றதும், முனுசாமி குடும்பத்தாரைக் காப்பாற்றியதுமாகிய விபரங்களையும் கூறி முடித்தபின் ஜெமீந்தார் விக்ரமஸிங்கிற்கு பிரதாபன் கைப்படவே எழுதி வாங்கியிருந்த லெட்டரை சாந்தஸிங்கிடம் கொடுத்தான். அதைப்பார்த்த சாந்தஸிங் அது பிரதாபனால் எழுதப்பட்டதுதான் என்பதையறிந்து அதை விக்ரமஸிங்கினிடம் கொடுத்தார். விக்ரமஸிங் அக்கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது தர்மஸீலர் ராமை நோக்கி "ராம்! காந்தாமணி அம்மாள்—உக்ரமஸிங்கர் சம்பாஷணையை நீ எவ்விதம் இயந்திரமூலமாகப்பதிவுசெய்ய முடிந்ததென்பதையறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன்" என்றார்.

"அப்படியா! அதையும் கூறிவிடுகிறேன், பிரதாபரிடமிருந்து கோகிலத்தைக் காப்பாற்றியபின் அவருடைய நடவடிக்கைகளை யறிவதற்காக காட்டுமாளிகையிலும், அரண்மனையிலும் எனது ஆட்களை வைத்திருந்தேன். பிரதாபருடைய குற்றத்தை வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் பிரதாபர்—நஞ்சப்பன் சம்பாஷணை முக்கிய சாக்ஷியமாகுமென்று கருதி அவர்களுடைய சம்பாஷணையை தொனிப் பதிவு செய்யும் இயந்திரத்தின்மூலம் பதிவுசெய்யக் கருதி கிரகிக்கும் கருவி, இயந்திரம் முதலியவற்றுடன் அரண்மனைக்கு வந்து. பிரதாபரின் அறை எனக்கருதி அவருடைய அறைக்குப் பக்கத்திலிருந்த அறையான சாந்தாமணியின் "வாசகசாலை" அறையினுட் சென்று அங்குள்ள மின்சாரக் கம்பியுடன் என் இயந்திரத்தின் கம்பியை எவரும் எளிதில் கண்டுகொள்ளா வண்ணம் இணைத்துக் கொண்டிருக்கும்போது வெளியில் யாரோ இருவர் சம்பாஷித்துக்கொண்டு வந்தது என் செவியில் விழுந்தது. ஒருக்கால் பிரதாபரும் நஞ்சப்பனுமாகவே இருக்குமென்று நினைத்து அதிக பரபரப்புடன் என் வேலையை முடித்துவிட்டு அவ்வறையிலேயே மறைந்து கொண்டேன். அடுத்த நிமிஷத்தில் சாந்தாமணி அம்மாளும், உக்ரமசிங்கரும் அவ்வறையினுள் நுழைந்தனர். இவர்களிருவருக்கும் நடந்த சம்பாஷணையை நானும் நேரில் கேட்டேன், எனது இயந்திரமும் பதிவு செய்துவிட்டது. இந்த விபரத்தை நான் மாடசாமியிடம் சொன்னபோது அவன் நான் சென்ற அறை பிரதாபருடையதல்லவென்றும், சாந்தாமணி அம்மாளின் "வாசகசாலை" அறை என்றும் சொன்னான். நான் தவறுதலாக அவ்வறையில் சென்றாலும் அதுவும் ஒரு முக்கியமான ரகஸ்யத்தை வெளிப்படுத்து

வதற்கு பெரும் உதவியாக முடிந்தது" என்று கூறி முடித்தான் ராம்.

இவன் இவ்விதம் கூறி முடித்ததும் ஜெமீந்தார் சாந்தலிங் பிரதாபனை நோக்கி "பிரதாபா! இந்தக்கடிதம் நீ எழுதிக் கொடுத்தது தானே?" எனச் சற்று கோபத்துடன் கேட்டார்.

பாவம்! அவன் என்ன பதில் சொல்லுவான்? எதுவும் சொல்ல முடியாதவனாய் மௌனமாயிருந்தான்.

இந்த நிலையில் அந்த ஹாலிலுள்ள அறையின் கதவு திறக்கப்பட்டு, முனியம்மாள், தங்கம், முனுசாமி ஆகிய மூவரும் வந்து ஹாலின் மத்தியில் நின்றனர்.

ராம், "ஐயன்மீர்! இதோ நிற்கும் (முனியம்மாளைச் சுட்டிக்காட்டி) பெண்தான் பிரதாபரால் கற்பழிக்கப்பட்ட முனியம்மாள்" என்றான்.

முனியம்மாளின் பரிதாபகரமான தோற்றம் அங்கிருந்தவர்களை எல்லாம் துக்கத்திலாழ்த்தியது.

சாந்தலிங், பிரதாபனை நோக்கி "அடே துஷ்டப்பேயே! உனது பிறப்பின் உண்மை ஒருபுறமிருக்கட்டும். நேற்றைய வரையில் ஒரு சமஸ்தானத்தின் பொறுப்பை வகித்துவந்த நீ எவ்விதமடா இவ்வித அடாத செய்கையைச் செய்ய முற்பட்டாய்? உன்னுடைய கொடுஞ்செயலால் பல பெண்கள் தற்கொலை புரிந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது. அந்த முறையில் நீ பல தற்கொலைகளுக்கும், பெண்களுக்கு உயிரினும் சிறந்ததான கற்பென்னும் பூஷணத்தைப் பலவந்தமாக கொள்ளைகொண்ட மா பெருங் குற்றத்தையும் செய்து வந்திருக்கிறாய் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது ....உம்.........உன் தாய்.........அதைச் சொல்லவும் என் வாய் கூசுகிறது.........அவள் கொண்ட

கணவனையும் கொலை செய்யத் துணிந்தாள். கள்ளக்காதலனுடன்கூடி உன்னைப் பெற்றெடுத்தாள். அவர்களுக்குப் பிறந்த நீயும் அவர்களைப் பின்பற்றியே பல பெண்களைக் கெடுத்தாய். நீங்கள் புரிந்த குற்றங்களுக்கெல்லாம் நரக வேதனையாகிய தெய்வ தண்டனையை அனுபவிப்பது திண்ணம்" என்று அளவற்ற வெறுப்புடனும், மனக்கசப்புடனும் கூறினர்.

காந்தாமணி, உக்ரமசிங்கன், பிரதாபன் இம்மூவருடைய மன நிலைமையை எங்ஙனம் விவரிக்கமுடியும்?

தன்னுடைய சொல்லுக்கு இரண்டில்லை இதுவரையில், ஜெமீந்தாரை தன்னுள்ளடக்கி வைத்திருந்தோம், இப்பொழுது வெளியில் தலைகாட்டினல் சின்னப்பையனும் காரியுமிழும்வண்ணம் ஏற்பட்டுவிட்டது. பலரும் தன்னை உதாசினமாக பேசி ஏசுவார்கள், இந்த நிலைமை ஏற்பட்டபின் உயிர் வாழ்வதா? இல்லை...தங்களுடைய மனக்கோட்டையை உடைத்தெறிந்து தங்கள் குற்றங்களை வெளிப்படுத்தி அவமானமடையும்படி செய்த எதிரிகளைமட்டும் உயிருடன் விட்டுவிடுவதா? அதுவுமில்லை......அவர்களைச் சந்தோஷமாக வாழவிட்டு தன்புதல்வனைக் சஞ்சிக்கவிடுவதா? கள்ளநட்பால் பெற்ற பிள்ளை என்று பலரும் அவனைக் கேவலமாகப் பேசினல் அப்பொழுது அவனுடைய மனம் எவ்வளவு வேதனையடையும்? அவன் என்னையும் அவன் தாயையும் சதாசர்வகாலமும் சபித்துக்கொண்டிருப்பானல்லவா? அதோடு அவனும் பல குற்றங்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறன். அதற்குப் பெரும் தண்டனை அவனுக்கு கிடைப்பது நிச்சயம்........என் புதல்வனுக்கு இவர்கள் தண்டனை கொடுப்பதா? சேச்சே ஒருக்காலுமில்லை..........

எங்களுடன், எங்கள் எதிரிகளும் செத்துமடிய வேண்டியதே என்றெண்ணி மனந்துடிதுடித்திருந்தான் உக்ரமஸிங்.

பிரதாபனே தன்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டி னின்று தப்ப முடியாதென்ற முடிவையடைந்தான். தன் இளைய ஜெமீந்தார் என்ற பட்டம், ராஜபோகமான வாழ்க்கை, இவற்றை யெல்லாமிழந்து தன் பிறப்பின் உண்மையையறிந்த பலரும் எள்ளி நகையாடும் வண்ணம் நடைப்பிணமாய் உயிர் வாழ்வதைவிட தற்கொலை செய்துகொள்வதே மேல் என எண்ணினான். தன் குற்றத்தை மறைக்கவேண்டுமென்ற எண் ணம் கிஞ்சிற்றும் அவனுக்கில்லை. எனவே, ஜெமீந்தாரை நோக்கி "ஐயா! எனது குற்றத்தை மறைக்க நான் விரும்ப வில்லை. அதற்கேற்ற தண்டனையை அடைய வேண்டுவது ஞாயமெனினும், நீங்கள் கொடுத்தல்ல. நீங்கள் எனக்குத் தண்டனை கொடுப்பதற்கு முன், எனது கொடுஞ் செயல் களுக்கோர் முடிவைக் காண்கிறேன்" என்று கூறி தன் னிடையில் சொருகி இருந்த ரிவால்வரை எடுத்து தன் மார் பிற்கு நேரே வைத்துச் சுட்டுக்கொண்டு பூமியில் சாய்ந்தான்.

இவ்விதம் நடக்குமென்று கிஞ்சிற்றும் நினையாத அங் கிருந்த அனைவரும் ப்ரம்மித்து விட்டனர்.

உக்ரமசிங்கனும் தன் ரிவால்வாரை எடுப்பதையறிந்த ராம் திடீரெனப் புலிபோல் பாய்ந்து ரிவால்வார் வைத்திருந்த அவனுடைய கரத்தை இறுகப் பிடித்துக்கொண்டான். இரு வருக்கும் சிறிதுநேரம் போராட்டம் நடந்தது. உக்ரமசிங் அதிக ஆக்ரோஷத்துடன் ரிவால்வாரின் குதிரையை அழுத்தி னான். அவனுடைய அபிப்பிராயம் ராமைக் கொல்லவேண்டு மென்பதுதான். ஆனால், குண்டு மனங்குன்றி ஓர் மூலையில்

நின்று கொண்டிருந்த சாந்தாமணியின் மீது பாய்ந்து "ஹா" வென்ற சப்தத்துடன் கிழே சாய்ந்தாள்.

இதையறிந்த ராம் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து ரிவால்வாரைத் தட்டவே அது வெகு தூரத்தில் போய் விழுந்தது.

முனுசாமியும் ராமிற்குதவியாக வந்து உக்ரமசிங்கை பலமாகப்பிடித்துக் கொண்டான்.

பின் ராம் தன் கரங்களைத் தட்டவே நாலைந்து முரடர்கள் அங்கு தோன்றி ராமின் கட்டளைப்படி நஞ்சப்பனையும், உக்ரமசிங்கையும் இழுத்துச்சென்றனர்.

இறந்துகிடந்த சாந்தாமணி, பிரதாபன், இருவருடைய உடலையும் அப்புறப்படுத்தியபின் ராம் மீண்டும் அங்கு வந்தான்.

முனுசாமி அவ்விரு சமஸ்தானாதிபதிகளையும் நோக்கி "எஜமானரவர்களே! நீங்களெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் தேவபுரி இளையஜெமீந்தாரவர்கள் இதோ நிற்கும் வீரதீர பராக்ரமம் நிறைந்த வாலிபர்தான்" என்று ராமைச் சுட்டிக் காட்டிக்கூறினான்.

ராம், தன் அழகிய மீசையையும், தலை டோப்பாவையும் அகற்றித் தன் சுய உருவில் நின்றான்.

சாந்தஸிங் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையுண்டோ? அவருக்கேற்பட்ட ஆனந்தப் பெருக்கால், தன்னுடல் நிலையையும் மறந்து ஏதோ புதுப்பலத்தை யடைந்தவர்போன்று குடுகுடுவென்றோடி ஜெயஸிங்கைத் தன்னிரு கரங்களாலும் சேர்த்தணைத்துக் கொண்டார்.

தான் முன்பொருமுறை ஜெயஸிங்கைச் சந்தித்து அதிக நேரம் சம்பாஷித்திருந்தும் அவன் "ராம்" என்னும் மாறு

வேடத்தில் தன்னுடன் சம்பாஷித்தபோது அவனுடைய முகத் தோற்றத்திலாவது குரலொலியிலாவது அவன்தான் ஜெபஸிங் எனக் கண்டுகொள்ள முடியாது போயிற்றே என ஆச்சரியமடைந்தார் தர்மஸீலர். ராம் என்னும் வாலிபன்தான் ஜெயஸிங் என்பதை முனுசாமி அறிந்திருந்தும், அதை தன்னிடம் அவன் வெளியிடாதன் காரணம் மட்டும் அவருக்கு விளங்கவில்லை. பின்பு கேட்டுத்தெரிந்து கொள்வோம் என்று பேசாதிருந்தார்.

ஜெயஸிங், ஜெமீந்தார் விக்ரமஸிங்கை நோக்கி "ஐயா! நீங்கள் இங்கு வந்தால், உங்கள் புதல்வியைக் காணலாம்" என்று காங்கஸெழுதிய கடிதத்தைக் கண்ணுற்ற தாங்கள் அதை உண்மை என நம்பி மிகுந்த ஆவலுடன் "ஜெயா! ஜெயா!!" வென்று பிதற்றிக்கொண்டுவந்தவர்கள், இங்கு நடந்த ஆச்சரியமான சம்பவங்களால் தங்கள் புத்திரியைப்பற்றி மறந்துவிட்டீர்களென்று நினைக்கிறேன். ஆம், இனி நீங்கள் புத்திரியை இழந்துவிட்டதாக எண்ணியிருக்கும் அந்த எண்ணத்தை மறந்துவிடுங்கள். உங்கள் புத்திரி உயிருடனேயே இருக்கிறார்கள்" என்றான்.

உண்மையிலேயே இங்கு நடந்த எதிர்பாராத சம்பவங்களால் தன்னையுமறந்திருந்த விக்ரமஸிங், ஜெயஸிங் இவ்விதம் கூறவும் எல்லையில்லா மகிழ்ச்சியுடன் "என் புதல்வியை உயிருடன் நீங்கள் பார்த்தீர்களா? எங்கே இருக்கிறாள்?" என்று பதட்டத்துடன் கேட்டார்.

"ஆம் நாங்கள் நேரிலேயே உங்கள் புதல்வியைப் பார்த்தோம். அவர்கள் எங்களுடைய பாதுகாப்பிலேயே மோஹன்லாலின் இல்லத்தில் இருக்கிறார்கள்" என்று கூறி தாங்கள் ஜெயாவைக் காப்பாற்றியதை விவரித்துக் கூறினான்.

இவன் கூறியவற்றைச் செவியுற்ற விக்ரமஸிங் ஆனந்த பரவசமடைந்தார். என்ன சொல்வதென்பதையு மறந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. ஜெயஸிங்கின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு "வாலிபரே! என் வாழ்க்கையின் ஜீவாதாரம் அவள்தான். அவளில்லையேல் நானில்லை. என் உயிருக்குயிரான என் ஜெயாவைக் காப்பாற்றி எனக்குப் புத்துயிரளித்த உங்களை நான் எவ்விதம் ஸ்தோத்தரிப்ப தென்பதே எனக்கு விளங்கவில்லை" என்று தழதழத்த குரலுடன் கூறினர்.

"நான் ஒன்றும் அதிகமாகச் செய்துவிடவில்லை. என் கடமையைத்தான் செய்தேன். ஜெயா இன்னும் பூரணகுண மடையவில்லை. வாருங்கள் நாமெல்லோரும் அங்கு போவோம்" எனக் கூறினன் ஜெயஸிங்.

பிறகு எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டு மோஹன் லாலின் இல்லத்தை நோக்கிச் சென்றனர்.

ஃ ஃ ஃ ஃ ஃ

மோஹன்லாலின் இல்லத்தில் ஜெயாவின் உடல் நிலை சிறிது அபிவிருத்தியடைந்து கண் விழித்தாள். தான் ஒரு அறையில் படுக்கையில் படுத்திருப்பதையறிந்து கனவோ நினைவோவென்று சந்தேகித்தாள். அதிக சிரமத்துடன் எழுந்து படுக்கையில் சாய்ந்தபடி சுற்றுமுற்றும் பார்த்தாள். அப்பொழுது படுக்கையின் சமீபம் நின்று கொண்டிருந்த பணிப்பெண் ஜெயா எழுந்துவிட்டதைக்கண்டு "அம்மா! உடம்புக்கு சௌகரியமாக இருக்கிறதா? என்ன ஒரு மாதிரியாகப் பார்க்கிறீர்களே?..............இன்னும் கொஞ்சநேரம் நிம்மதியாகப்படுத்திருந்தால்......பூர்ண சௌக்கியமடைந்து

விடுவீர்கள். இதோ இந்த கஞ்சியைச் சாப்பிட்டுவிட்டு சிறிது ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்" என்று பணிவுடன் கூறி தயாராய் காய்ச்சிவைத்திருந்த கஞ்சியை எடுத்துக்கொடுத்தாள்.

ஜெயா அதைக்கையில் வாங்கிக்கொண்டே "அம்மா! இது யாருடைய வீடு? நீங்கள் யார்? நான் யாரால் இங்கு கொண்டுவரப்பட்டேன்." என்று பல கேள்விகளை ஒன்றன் பின் ஒன்ருய் அடுக்கினுள்.

தற்கொலை புரிந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு ஆற்றில் குதித்ததன்னை யார் எவ்விதம் கொண்டு வந்தார்கள்? என்பது தான் அவளுக்கு விளங்கவில்லை.

பணிப்பெண்:— அம்மா! இது மோஹன்லாலின் வீடு நான் உங்களுக்குப் பணிவிடை செய்வதற்காக அவருல் ஏற்படுத்தப்பட்ட பணிப்பெண். இன்று காலையில் அவரும் இன்னும் இரண்டு மூன்று பேரும் காரில் உங்களைக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது நீங்கள் மயக்கமுற்றிருந்தீர்கள்." என்று கூறினுள்.

அவள் "மோஹன்லால்" எனக்கூறியதும் ஜெயாவின் சோர்வுற்றிருந்த வதனம் தெளிவுற்றுப் பிரகாசமாய் விளங்கியது. அவளுக்கு ஏற்பட்டிருந்த பலஹீனம் மறைந்து எழுந்து படுக்கைமீது உட்கார்ந்துகொண்டு பணிப்பெண்ணை நோக்கி "அம்மா! உங்கள் எஜமானர் பெயர் "மோஹன்லாலா"? இந்த ஊரில் "ஸில்க்பஸார்" வைத்திருக்கிருரே அவர்தானே!" என்று ஆச்சிரியத்துடன் வினவினுள்.

"ஆமம்மா! அவர்தான்."

"அப்படியா! அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்கமுடியுமா?" என்று அவனுடன் கேட்டாள் ஜெயா.

"அவர் இப்பொழுது வெளியே போயிருக்கிறார். அவர் வந்ததும் உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கிறேன்" என்று பணிப்பெண் கூறி முடிப்பதற்குள், ஜெயஸிங், சாந்தீஸிங், விக்கிரமஸிங், தர்மஸீலர், முனுசாமி, முதலியோர் அவ்வறையில் பிரவேசித்தனர்.

ஜெமீந்தார் விக்ரமஸிங், தன் புதல்வியைக்கண்டதும் "கண்ணே! ஜெயா!!" வென்றலறியவண்ணம் ஓடி வந்து ஜெயாவைத் தன்னிருகாங்களாலும் சேர்த்தணைத்துக்கொண்டார்.

அவரது ஆனந்த வெள்ளம் கரை புரண்டோடியது என்பதை நாம் ஈண்டு குறிப்பிடவும் வேண்டுமோ!

தன் தந்தையின் வரவால் அவள்மனம் சந்தோஷமடையவில்லை. அவளது கண்கள் அங்கு வந்தவர்களை ஒருமுறை நோக்கியது.

அங்கு ஜெயஸிங்கைக் கண்டதும் ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். ஜெயஸிங்கும் புன்முறுவலுடன் அவளை நோக்கினான்.

தன் காதலன், தன் தந்தையின் கொடூரத் தண்டனைக்குட்பட்ட காதலன், கள்வர் தலைவனாக உலாவிவந்த அதே உருவத்தில் தன் தந்தையுடன் வந்திருப்பதைக்கண்டு அவளின் ஆச்சரியம் பன்மடங்கு பெருகியது.

ஆம்! ஜெயஸிங்கின் பிறப்பின் உண்மையையறியாத அவள் இந்நிகழ்ச்சியால் ஆச்சரியமடையாமல் என்ன செய்வாள்?

இந்த நிலையில் தர்மஸீலர் ஷண்முகபுரி ஜெமீந்தாரை நோக்கி "பிரபோ! எல்லாம் சந்தோஷகரமாக முடிந்துவிட்டது. நம்முடைய முந்திய ஏற்பாட்டின் படியே அடுத்த சுபவேளையில் ஜெயஸிங்கிற்கு தங்கள் புதல்வியை மணமுடிப்பதற்கு ஏதும் ஆக்ஷேபணை இராதென்றே எண்ணுகிறேன்" என்றார்.

"யார்? எனக்கா? எவ்வித ஆட்க்ஷேபணையுமில்லை. என் புதல்வியைக்காப்பாற்றிய வீரரும் அவரே. அதோடு பல அறிய காரியங்களையும் செய்து நம்மை சந்தோஷ சாகரத்தில் மிதக்கச் செய்தவரும் அவரே. அவர் என்னுடைய மருகராவது நான் முன் செய்த பூஜாபலனென்று தான் சொல்ல வேண்டும். இருந்தாலும், எனது புதல்வியின் அபிப்பிராயத்தையும் அறிய வேண்டியவனாக இருக்கிறேன்'' என்று கூறி தன் புத்திரியை நோக்கினர்.

விக்ரமஸிங்கரிடம் தர்மஸீலர் கூறிய வார்த்தைகளையும் அதற்கு அவர் பதில்விடுத்ததையும் செவியுற்ற ஜெயாவிற்கு ஒன்றுமே விளங்கவில்லை. "தன் முந்திய கல்யாண ஏற்பாடு எக்கதியாயிற்று? தனக்குப் புதிதாகத் தேர்ந்தெடுத்திருக்கும் "ஜெயஸிங்" என்பவர் யார்? தன்னைக்காப்பாற்றியது "மோஹன்லாலா'' "ஜெயஸிங்கா"? தன் தந்தை முதலானோர்கள் சந்தோஷ சாகரத்தில் மிதக்கும்படியான, அந்த ஜெயஸிங் செய்த காரியங்கள் என்ன? இம்முறையும் நம் காதலனை அடைய முடியாது நிர்ப்பந்திக்கப்படுவோமா?"

என்று தன்னுள்ளெழுந்த இக்கேள்விகளுக்கெல்லாம் பதிலறியாது தத்தளித்துக்கொண்டிருந்த தருணம், விக்ரமஸிங், "ஜெயா! உனக்கு மணாளனாக நிச்சயிக்கப் பட்டிருந்த பிரதாபனின் பிறப்பின் உண்மை சிறிது நேரத்திற்குமுன் வெளிப்படுத்தப்பட்டு அவனும் தற்கொலை செய்துகொண்டான். அந்த விஷயம் ஒருபெருங்கதை. அதை பின்பு விபரமாகத் தெரிவிக்கிறேன். நம் சமஸ்தானத்தில் பிரதானியாயிருந்த உக்ரமஸிங்கனும் பல குற்றங்களைச் செய்திருக்கிறான். இதுவரை நான் அவனுடைய வார்த்தைகளில் சிக்கி மோசம் போய்விட்டேன். சுருங்கக்கூறினல் பிரதாபன் தேவபுரி ஜெமீனுக்குரியவனல்ல, தேவபுரி ஜெமீந்தாரின் புத்ரனுமல்ல. இதோ நிற்கும் (ஜெயஸிங்கை சுட்டிக்காட்டி) வாலிபர்தான். ஜெமீந்தாரின் உண்மைப்புதல்வன். இவருடைய பெயர் ஜெயஸிங். இவர்தான் இந்த உண்மைகளை எல்லாம் வெளிப்படுத்தியவர். அதோடு, உன்னை ஆற்றின் பிரவாகத்தினின்றும் காப்பாற்றியவர். இத்தகைய வீரபுருஷரை உன் கணவராக்க எண்ணுகிறோம். உன் அபிப்பிராயமென்ன வென்பதைத் தெரிவி" என்றார்.

"கள்வர் தலைவனாகிய தன் காதலன், ஒரு ஜெமீந்தாரின் புதல்வனானது எப்படி? பிரதாபனைப்பற்றிய உண்மைகள் என்ன? உக்ரமஸிங்கன் புரிந்த குற்றங்களென்ன?" என்ற விபரங்களெல்லாம் ஜெயா அறியாவிட்டாலும், அவள் காதலனை மணம்புரிவதற்கு அவளுக்கென்ன ஆக்ஷேபணை இருக்கப்போகிறது!

தன் சம்மதத்தை "ஆம்" என்ற ஒருவார்த்தையில் தெரிவித்துவிட எண்ணினாள். ஆனால் இவ்வளவு ஆண்

பிள்ளைகள் மத்தியில் தன் சம்மதத்தைத் தெரிவிக்க சங்கோஜப்பட்டாள். பெண்களுக்கு இயற்கையாயுள்ள நாணம் வந்து குறுக்கிட்டது. சிரங்கவிழ்ந்தவண்ணம் தன்னுடையின் முந்தியை திரித்துக்கொண்டே இருந்தாள். வதனத்தில் புன்சிரிப்பும் தவழ்ந்தது.

முனுசாமி சண்முகபுரி ஜெமீந்தாரை நோக்கி "பிரபோ! இவ்விதம் திடீரென்று கேட்டால் பெண்கள் சீக்கிரம் பதில் சொல்லிவிட மாட்டார்கள். அவர்களுடைய சம்மதத்தை முகம் நன்றாக விளக்கிக்காட்டிவிடும். இப்பொழுது ஜெயா அம்மா ஜெயலிங்கரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு பூரண சம்மதத்துடனேயே இருக்கிறார்கள் என்பதை புன் சிரிப்புடன் கூடிய அவர்கள் முகம் வெளிப்படுத்துகிறது. கரும்புதின்னக்கூலியா வேண்டும்? அடுத்த சுபவேளையை நிச்சயிக்கவேண்டியதுதான்" என்று ஹாஸ்யமாகக் கூறினான்.

முனுசாமி கூறியதுதான் உண்மை என்பதை வெளிப்படுத்துவது போலிருந்தது அவளுடைய அப்போதைய முகத்தோற்றமும், பார்வையும். அதோடு முனுசாமி இவ்விதம் கூறியதற்கு ஜெயா எதுவும் பதில் கூறவில்லையாகையால் ஜெயாவிற்கு ஜெயலிங்கை மணம் புரிவதற்கு இஷ்டந்தான் எனக்கண்டனர் இரு ஜெமீந்தார்களும்.

பின் எல்லோரும் ஜெயாவை அழைத்துக்கொண்டு அரண்மனை சேர்ந்தனர்.

அன்றிரவு ஒருவரும் தூங்கினார்களில்லை; அன்று காலை நடந்தவைகளெல்லாம் ஆதியோடந்தமாக ஜெயாவிற்கறிவிக்கப்பட்டது. அதையே திருப்பித் திருப்பி பல பலவிதமாக பேசலானார்கள் ஜெயலிங்கின் சமர்த்தியத்தைப் பற்றி வெகுவாகப்புகழ்ந்தனர். தேவபுரியிலுள்ள லில்க்வியாபாரி கந்தசாமி பிள்ளைக்கு இந்த விஷயம் அறிவிக்கப்பட்டு அவரும் சண்முகபுரி வந்துசேர்ந்தார். இந்த விஷயங்களெல்லாமறிந்த அவர் வியப்பும் திகைப்பும் ஆச்சரியமும் ஒருங்கே அடைந்தார்.

அத்தியாயம் 13.

இவனது சங்கீதத்தின் வயப்பட்டு மதிமயங்கியது போன்று அங்குள்ள மரங்களின் இலைகள்கூட ஆடாது அசையாது நின்றன. இக்கானத்தின் இன்பத்தை செவியுற்று மகிழத்தோன்றுபவன் போல சந்திரன் தனது ஒளியை நாலாபக்கமும் வீசிக்கொண்டு வான வெளியில் தோன்றினன்.

மறுதினம் காலை, மணி 9 இருக்கும். ஜெயஸிங் ஒரு அறையில் தனிமையில் வீற்றிருந்தான். அப்பொழுது புன்னகைததும்பும்முகத்துடன் தர்மஸீலர் அவ்வறையில் பிரவேசித்தார். அவருடைய வரவையறிந்த ஜெயஸிங் எழுந்து வந்து "தர்மஸீலரே! வரவேண்டும்!! நீங்கள் இங்கு வருவீர்களென்று நான் நினைத்துக்கொண்டு தானிருந்தேன்" என்று கூறியவண்ணம் அவரை அழைத்துச்சென்று ஒரு சோபாவில் அமரச்செய்தபின் அவருக்கு நேர் எதிராகவுள்ள மற்றொரு சோபாவில் தானும் அமர்ந்தான்.

"அப்படியா! நான் இங்குவருவேனென்று நீ எக்காரணத்தைக்கொண்டு நினைத்தனையோ?" எனக்கேட்டார் தர்மஸீலர்.

"நான் என்னுடைய காரியாதிகளை உங்களிடம் கூறுது மறைக்கவேண்டிய அவசியமில்லாதிருந்தும் "ராம்" நான் தான் என்பதை உங்களிடம் கூறுது திகைக்கச்செய்த காரணத்தை அறிய ஆவல்கொண்டு இங்கு வருவீர்களென்று நான் எதிர்பார்த்தேன். அவ்விதமே நீங்களும் இங்குவந்து விட்டீர்கள். இந்த ஒரு காரணத்தைக்கொண்டு மட்டும்

நீங்கள் இங்கு வந்ததாக நான் கூறுவதற்கில்லை" என்ருன் ஜெயஸிங்.

தர்மஸீலர்:— ஆம் நீ நினைத்தது சரிதான். நேற்றை யிலிருந்து இதைக்கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். நேற்றுமாலையில் இதை உன்னிடம் கேட்கவும் எண்ணினேன். ஆனல், ஜெமீந்தார் முதல் சகலரும் உன்னுடைய காரியாதிகளை எல்லாம் நான் அறிந்திருக்கிறேன் என்று நம்பிக்கொண்டிருக்கும்போது நாம் ஏன் இதை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்தே அப்பொழுது கேட்கவில்லை

ஜெயஸிங்:— இந்த உண்மைகளை முன்பே நான் உங்களிடம் வெளியிடாததற்கு ஏதோ தக்ககாரணமிருக்கவேண்டுமென்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனல், உண்மையில் அவ்விதம் ஒன்றுமில்லை. என்னுடைய பிறப்பின் உண்மையை நான் அறிவதற்கு முன்பே "ராம்" என்னும் மாறுவேடத்தில் உங்களைச் சந்தித்து கற்பழிக்கும் கூட்டத்தாரைப்பற்றியும் காந்தாமணியின் சூழ்ச்சியைப்பற்றியும் சம்பாஷித்தேன், அறிந்த பின்பும், ராமே அக்கூட்டத்தாரை வெளிப்படுத்தி ராமை நீங்களொருவரும் அறிந்துகொள்ளாத முறையிலேயே "ராம்"மறைந்துவிட வேண்டும் என்பதுதான் எனது அவாவும் எண்ணமுமாகும். மனிதனுடைய எண்ணம் வரையறைக்குட்பட்டதல்ல. ஆனல், அவனுடைய எண்ணங்கள் பூர்த்தியாவதுதான் கஷ்டம். அதேபோன்று, நான் எண்ணியது வேறு, நடந்தது வேருகமுடிந்தது. முனுசாமி மாமா மட்டும் சிறிது நேரம்வரை பேசாதிருந்திருந்தால், என் எண்ணம் நிறைவேறி இருக்கும். ராமை நீங்களெல்லாம் வெகு சீக்கிரத்தில் மறந்துவிடும்படியும் செய்திருப்பேன். ஆனல்,

அவரைக் குறைகூறுவதற்குமில்லை. எதிரிகளெல்லாம் ஒழிந்தார்கள் என்ற மனக்களிப்பிலே, எனது "ராம்" என்னும் மாறுவேடத்தைப்பற்றி வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டிருந்தும், அவரதை மறந்துவிட்டார். நான் ஏதோ பிரமாதமாக செய்துவிட்டதாக நீங்களெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களே இச்சிறு சம்பவங்கள், இவைகளை நான் வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாததே நான் உங்களிடம் கூருததற்குக் காரணம்.

தர்மஸீலர்:—ஜெயஸிங் இதனால் உன் நேர்மையான குணம், பெருமையற்ற குணம் வெளிப்படுகிறது. இன்னும் ஒரு விஷயம், உனக்கும் மோஹன்லாலுக்கும் எவ்விதம் பரிச்சியம் ஏற்பட்டது? நீ "ராம்" என்னும் மாறுபெயரில் மோஹன்லாலின் இல்லத்தில் எங்களுடனே இருக்கும்போது நீ எவ்விதம் எனக்கு கடிதம் எழுத முடிந்தது?

ஜெயஸிங்:—ஐயா! நாம் முதலில் மோஹன்லாலின் இல்லத்திற்குச் சென்றவுடன் எனது ஆளை அங்கு கண்டேன். அவன் என்னுடைய ஏற்பாட்டின்படி பிரதாபனின் ஜாகையில் எல்லோரும் ஒன்று கூடும்படியான ஏற்பாடுகள் செய்திருப்பதாய் தெரிவித்தான். அதன் பின் தங்கள் பெயருக்கு ஒரு கடிதம் எழுதி அவனிடம் கொடுத்து, கொஞ்சநேரம் சென்றபின் கடிதத்தைக் கொண்டுவரும்படி கூறினேன். அவனும் அவ்விதமே செய்தான். இதிலென்ன பிரமாதமிருக்கிறது. மோஹன்லாலுடைய கடைக்கு நான் அடிக்கடி போய் வருவேனுதலால் அவருக்கும் எனக்கும் சாதாரண பரிச்சியமேற்பட்டு நாளடைவில் நாங்களிருவரும் அத்யந்த தோழர்களாகி விட்டோம். அவர்கூட நேற்று இரவு அவர் சொந்த ஊருக்கு போயிருக்கிருர்" என்ருன் ஜெயஸிங்.

தர்மஸீலர்:—மோஹன்லால் அவருடைய ஊருக்குப் புறப்பட்டுவிட்டாரா? அடடா! நான் அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேனே. மீண்டும் அவர் எப்பொழுது திரும்புவார்.?

ஜெயஸிங்:—கூடியவிரைவில் வந்துவிடுவதாகவே கூறிச் சென்றிருக்கிறார்.........அது போகட்டும், முனிசாமி மாமா நம்மையெல்லாம் காணும்போது சந்தோஷமாயிருப்பதாகக் காணுகிறாரே தவிற,உண்மையில் அவர் மனம் இடிந்து சகர்ந்து விட்டதெனவே கூறலாம். என் பொருட்டாக என் வளர்ப்புத் தாய்தந்தையரும் நெருப்பில் வெந்து மடிந்தனர். என்னை தன் கண்ணிற்கருமணி போன்று காப்பாற்றிவந்த முனுசாமி மாமாவின் புதல்வியின் வாழ்க்கை பாழ்படுத்தப்பட்டு, அதனால் அவர்கள் நீரா வேதனையடையும்படி நேரிட்டுவிட்டது... அவர்களுடைய துக்கத்தைக்கண்டு என்னால் சகித்திருக்கவே முடியாது............அவர்களுடைய மனோவேதனை யகலும் படியான ஒரு வழியைக் கண்டுபிடித்தாலல்லாது என்மனம் அமைதியுறாது......எதாவது வழி இருக்கிறதா?........... யோசியுங்கள்...........

தர்மஸீலர், நீண்டநேரம் யோசித்தபின் "ஜெயஸிங்! நீ கூறுகிறபடி ஆகவேண்டுமெனில் முனியம்மாள் ஒருவனை மணந்துகொள்ள வேண்டும். இந்த ஒரு வழியைத் தவிற எனக்கு வேறொன்றும் தோன்றவில்லை" என்றார்.

"இது ஒரு சிறந்த வழியாகத்தானே தோன்றுகிறது. ஏன் அவள் ஒருவனை மணந்துகொள்ளலாகாது?"

"மணந்துகொள்ளலாம்......ஆனால், மணமகன் வேண்டுமல்லவா? இவ்விதமானதோர் அபவாதத்தை சுமத்தப்பட்

டிருக்கும் ஒரு பெண்ணை எவன் மணம்புரிய இஷ்டப்படுவான்?"

"தர்மசீலரே! அவ்விதமானால்......அவள் வாழ்க்கையில் முற்றுப் புள்ளிவைக்க வேண்டியதுதானா?.........இதென்ன ஞாயமோ!......இவள் நடத்தையில் பிசகியவளா?............ அல்லது இவளிஷ்டப்பட்டுதான் கற்பை இழந்தாளா?......... அதுவுமில்லை. மயக்கமடையச் செய்து, பலவந்தமாகத் தூக்கிச்செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டாள். இது யாருடைய குற்றம்? இதை இவளுடைய குற்றமெனக்கொள்வது பொருந்துமா? ஒரு அயோக்கியனால் கற்பழிக்கப்பட்டதற்காக இவளுடைய வாழ்க்கையை பாழாக்கிவிடலாமா?... ..... ஒருவன் 1, 2, 3, 4...........என்று பல யுவதிகளை மணப்பதற்கு எவ்வித ஆக்ஷேபணையுமில்லை! அவனுடைய முந்திய மனைவிகளெல்லாம் வாழாவெட்டிகள் போன்றிருக்க வேண்டும் அவர்களுடைய உணர்ச்சிகளை எல்லாம் மூட்டைகட்டி ஒரு மூலையில் போட்டுவிடவேண்டும். இதுதான் ஞாயம்? அந்தப்படியாக ஆண்களுடைய கொடுமைக்குள்ளாகிறவர்கள் விதவைப்பெண்மணிகளாவார்கள். அவர்களுடைய கஷ்டங்களைகூற முற்பட்டால் இன்றும் பூராவும் கூறலாம். இரண்டொரு விஷயங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுகிறேன்: பெண்கள் பெரியவர்களாவதற்குமுன்பே கல்யாணம் செய்யவேண்டுமென்ற வழக்கம் சிலசமூகத்தாரிடையே இருந்து வருகிறது. இந்தப் பால்ய மணமிகுதியினால் பால்யவிதவைகளும் மலிந்து விட்டனர். அதிகபால்யவயதினரான இவர்களை விதவைகள் என்ற பெயரைக் கொடுத்துக் கொடுமைப்படுத்தலாமா? என்று கேட்டால் "அவர்கள் தலையெழுத்து அவ்விதம் அமைந்திருக்கிறது" என்று கூறுகிறார்கள். கணவனுடைய உருவத்தை மனதில் பதியவைக்கக் கூடாத நிலை

யிலும், கணவனை ஒருமுறையேனும் நன்றாகப்பார்த்தறியாத நிலையிலும், கணவனுடன்கூடி வாழ்க்கை நடத்தாத முறையிலும், விதவையர்களாகி இயற்கை உணர்ச்சிகளைத் தீயிலிட்டுப் பொசுக்கி பரிதபிக்கத் தக்க நிலையில், விதவையர் சமூகம் என்னும்படியாக, உலகமக்களுடைய வாழ்க்கையினின்று பிரிந்து தனியான ஒரு துக்ககரமான வாழ்க்கை நடத்துவதை நம் கண்முன்னே கண்டு வருகிறோம். இவ்விதம் விதவைப் பட்டம் சூட்டப்பட்டு தவிக்கும் பெண்களுக்கு விடுதலையளித்து, அவர்கள் மறுமணஞ்செய்துகொண்டு உலக இன்பவாழ்வில் பங்குகொள்ள ஆண்கள் உதவிசெய்யவேண்டும். அது ஆண்களுடைய கடமையுமாகும். ஆனால், சமூக சம்பிரதாயங்களுக்கு அஞ்சியே அவர்கள் விதவைப் பெண்களைப் படுகுழியில் தள்ளுகிறார்கள். நாகரீகம் முதிர்ந்தகாலமென்று சொல்லப்படும் இந்த நாளிலே புராண காலத்தில் பெண்களுக்கு கொடுக்கப்பட்டுவந்த சுதந்திரமும், கௌரவமும்கூடக் கொடுக்கப்படவில்லை. இது ஒருபுறமிருக்கட்டும், மக்களுக்கு கல்வியறிவு வளர வேண்டுவதோ மிகவும் முக்கியம். இந்த அயிட்டத்தை எடுத்துக்கொண்டால், பெண்கல்வி நாட்டில் மிகவும் குறைவுபட்டிருக்கிறது. பெண்களுக்கு போதிய கல்வியளிக்கப்பட்டுவந்தால் அவர்களின் முன்னேற்றத்திற்கு சாதகமாக இருக்கும். பெண் பிள்ளை கல்வி கற்று எந்த உத்யோகத்திற்கு போகப்போகிறாள், என்ற குறுகிய எண்ணத்தால் அவர்கள் பெண்களுக்கு கல்வியறிவையூட்டாது, தற்குறிகளாக வைத்து விடுகின்றனர். எவ்வளவு காலந்தான் இந்த சமூகத்தை இவ்வித நிலையிலே வைத்திருக்க முடியும்? ஏதோ படித்த சிலபெண்களால் ஆங்காங்கே கிளர்ச்சி செய்யப்படுவதின் பயனாய், பெண்கள் மனதில் சிறிது துணிவு

லகாட்ட ஆரம்பித்திருக்கிறது. ஆண்களிடமிருந்து ஆதரவையோ, உதவியையோ, விடுதலையையோ பெறமுடியா தென்பதைக் கண்ட பெண்கள் தங்கள் சொந்த முயற்சியில் முன்னேற ஆரம்பித்துவிட்டனர். ஆம்! இது ஞாயந்தானே? சமூகப்பெரியார்களால், தங்கள் வாழ்க்கை புதுப்பிக்கப்படா தென்பதையுணர்ந்த விதவை சகோதரிகள் தங்கள் சொந்த முயற்சியில் தமக்கேற்ற கணவர்களை தேர்ந்தெடுத்து சட்டப் படி மணஞ்செய்துகொண்டு வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டனர். அச்சகோதரிகளை மணம் புரிந்துகொள்வதற்கு சிலவாலிபர்களும் இப்பொழுது முன் வந்திருக்கிறார்கள். சமூக சம்பிரதாயங்களினால் அந்த சமூகத்தாரில் ஒரு பகுதி யினர் துயரடையும்படி நேரிடுமானால், சமூகத்திற்கு நன்மை யளிக்காத அந்த சம்பிரதாயங்களை ஒழித்து மக்கள் சுபீக்ஷ மடையும்படியான சீர்திருத்தங்கள் செய்யவேண்டுவது மிக வும் முக்கியம். தர்மசீலரே! முனியம்மாளைப்பற்றிக் குறிப் பிட்டால், அவள் விதவையுமல்ல. எவ்வித குற்றமும் புரிந்த வளல்ல. ஆகவே, அவள் ஒருவனை மணந்துகொள்வதற்கு நம்மாலியன்ற உதவியை நாம் செய்யத் தயங்கலாகாது. முனியம்மாளை மணம் புரிவதற்கு எந்த வாலிபன் முன் வரு வான்? என்று கேட்டீர்களல்லவா? எத்தனையோ வாலிபர்கள் தயாராயிருக்கின்றனர். அவர்களில் முனியம்மாளின் கண வனைத் தேர்ந்தெடுக்கவேண்டிய வேலை நம்முடையதல்ல. அது அவளைச் சார்ந்ததாகும். சமூக சீர்திருத்தத்தில் ஆர்வங் கொண்டவர்களும், கிரியாம்சையில் செய்து காட்டக் கூடியவர்களுமாகிய, பல வாலிபர்களிருக்கின்றனர். அவர் களெல்லாம் நல்ல சம்பாத்தியமுடையவர்கள்தான். அவர் களிலெல்லாம் எல்லா வழியிலும் சிறந்தவன் நம் மாடசாமியே

யாகும், அவனும் அவளை மணப்பதற்கு இஷ்டப்படுகிறான். நாம் முனுசாமி மாமாவிடம் இதை எடுத்துரைப்போம்.'' என்று கூறிமுடித்தான் ஜெயலிங்.

"ஜெயலிங்! உன்னுடைய அபிப்பிராயம் சிறந்ததுதான். ஆனால், வைதிகமனப்பான்மை கொண்ட ஜனங்கள் மத்தியில் இவ்விதமானதோர் சீர்திருத்தத்தைப் புகுத்துவதென்பது சாதாரணமல்ல, இருப்பினும், உன்னுடைய முயற்சியில் நீ வெற்றி காணவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம், அதற்கு என்னாலியன்ற உதவியைச் செய்ய நான் தயாராயிருக்கிறேன். முனுசாமியிடம் இதைப்பற்றிக் கூறுவோம். அவர்களபிப்பிராயம் தெரிந்தபின் மேல்நடக்கவேண்டியதைக்கவனிப்போம். மாடசாமியும் நல்லவன்தான். இருவருக்கும் நல்ல பொருத்தமுங்கூட'' என்று தர்மசீலர் கூறி வாய்மூடுமுன் முனுசாமி அவ்வறையில் பிரவேசித்தான். அவனைக்கண்டதும் ஜெயலிங் சந்தோஷங் கொண்டவனாய், தர்மசீலரை நோக்கினான். அக்குறிப்பையறிந்த அவர், முனுசாமியை நோக்கி "முனுசாமி! நமது கோரிக்கைகளெல்லாம் சந்தோஷகரமாக நிறைவேறியது. ஆனால், நாம் எதிர்பாராதவிதமாய் சில அசம்பாவிதங்களும் நேரிட்டுவிட்டது. அதற்காக வருந்திக்கொண்டிருப்பதில் பிரயோஜனமென்னவிருக்கிறது? அந்த வருத்தமும் ஒழிந்து எல்லோரும் சந்தோஷமாக வாழ்வதற்கு ஜெயலிங் கூறும் யோசனை உதவியாக இருக்குமென்று நினைக்கிறேன். உன் புதல்வியைப் பற்றியே, எல்லோரும் பரிதபித்திருக்கின்றனர். அவள் மீதேற்பட்ட அபவாதத்திற்கு அவள் பொறுப்பாளியாவெனலும்?......இல்லை......எவனோ ஒரு அயோக்யனால் ஏற்பட்ட இந்த அபவாதத்திற்காக, அவள் வாழ்க்கையைப் பாழாக்குவ

தென்பது அறிவுடைமையாகாது. எனவே, அவள் ஒரு கணவனை அடைந்து வாழ்க்கை நடத்தவேண்டுமென்பது தான் ஜெயஸிங்கின் அபிப்பிராயமாகும். என் அபிப்பிராய மும் அதுதான்.'' என்றார்.

“என்ன எஜமான்! நீங்கள் கூறுவது நடைபெறக் கூடியதா? அவளை மணந்து அவள் வாழ்க்கையில் சந்தோஷ மும், எங்கள் மனதிற்கு நிம்மதியும் உண்டுபண்ண எந்த ஆண் முன் வருவான்? இது நடவாத விஷயம். யாராவது அவ்விதம் துணிந்துவந்தாலும் சமூக சம்பிரதாயம் அவனுக்கிடம் கொடாது'' என்று நம்பிக்கையற்றவன்போல் கூறினான் முனுசாமி.

“முனுசாமி! சமூகத்தின் எதிர்ப்பு ஒருபுறமிருக்கட்டும். மக்கள் வாழ்க்கையிலும், முன்னேற்றத்திலும் அந்த சமூகம் குறுக்கிட்டு தடையாயிருக்குமானால்?........நாம் அதுபற்றி கவலையுறவேண்டுவதே யில்லை. நம் மாடசாமி இருக்கிறானல் லவா? அவனைப்பற்றி நீ நன்றாக அறிவாய், அவனும் கல்யாண மாகவேண்டியவன். அவன் இஷ்டப்பட்டால், உன் புதல்வி யும் அவனை மணப்பதற்கு மனங்கொண்டால், இருவரும் தம்பதிகளாவதற்கு என்ன ஆக்ஷேபணை இருக்கிறது?''

“மாடசாமி என் புதல்வியை மணப்பதற்கு எண்ணு கிறானா? அவ்விதமானால் எனக்கென்ன ஆக்ஷேபணை இருக்கப் போகிறது'' என்று எல்லையில்லா மகிழ்ச்சியுடன் கூறினான் முனுசாமி.

“சரி, இனி உன் மனைவி, புதல்வி இருவரின் அபிப் பிராயங்களையும் அறிய வேண்டுவதுதான் பாக்கி'' என்றார் தர்மஸீலர்.

"இதோ நான் போய் தெரிந்துகொண்டு வந்து விடுகிறேன்" என்று கூறியவண்ணம் எழுந்து அவ்வறையை விட்டுச் சென்றான்.

ஜெயஸிங், தர்மஸீலர் இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

வெளியில் சென்ற முனுசாமி சுமார் 15 நிமிஷங்களில் திரும்பவும் அங்கு வந்து "பிரபோ! நான் இவ்விஷயத்தை அவர்களிடம் கூறியதும் அவர்களடைந்த சந்தோஷத்திற் களவே இல்லை. அவர்கள் பூரணமாக சம்மதித்து விட்டனர். ஆனால், முனியம்மாள் தான் நேரில் மாடசாமியிடம் தனக் குற்ற அபவாதத்தைக் கூறி அவன் தன்னை முழுமனதுடன் நேசிக்கிறானா? வென்பதை யறிய ஆவல்கொண்டிருப்பவள் போல் தோன்றுகிறாள்" என்றான்.

"சந்தோஷம்! அதுவும் உண்மைதான். நமது ஜெயஸிங் திருமணம் முடிந்ததும், நாம் தேவபுரி சென்று இவர்கள் திருமணத்தை நடத்திவிடுவோம் அதற்குள் தம்பதிகள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்கும் போதிய சாவகாச மிருக்கிறது" என்று தர்மஸீலர் கூறவும், அவர் கூறியதை ஜெயஸிங்கும் ஆமோதித்தான். முனுசாமியும் அவ்விதமே செய்யலாமெனக் கூறவும், மூவரும் தனித்தனியே பிரிந்து சென்றனர்.

இப்பொழுது மோஹன்லாலை அடிக்கடி காண முடிகிற தில்லை. "மோஹன்லால்" தான் தானென்று பகிரங்கப்படுத்தி பெருமையடைய எண்ணாத ஜெயஸிங், அதை வெளியிட வேண்டாமென்று இந்த ரகஸ்யமறிந்த முனுசாமி, மாடசாமி முதலியோரிடம் கட்டளையிட்டான். அவனுடைய தோழர் களில் பாக்கிப் பேர்களுக்கெல்லாம் மோஹன்லால்தான்

ஜெயஸிங் என்பது தெரியாதாகையால் இந்த ரகஸ்யம் வெளி வாராது செய்வதற்கு முடிந்தது. இது நிற்க,

உக்ரமசிங்கனுக்கும், நஞ்சப்பனுக்கும் அவர்கள் புரிந்த குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

அடுத்த ஓர் சுபதினத்தில் ஜெயஸிங்கிற்கும், ஜெயாவிற்கும் ஆடம்பரமெதுவுமின்றி திருமணம் நடைபெற்றது.

ஃ ஃ ஃ ஃ ஃ

திருமணம் முடிந்த இரண்டு தினங்கட்குப்பின் ஒருநாள் மாலை மணி 6 இருக்கலாம். அவள் அரண்மனைப் பூங்காவில் ஒரு சலவைக்கல்மேடைமீதமர்ந்திருக்கிறாள். அஸ்தமன சூரியனின் கிரணங்களால் அவள் ஆடை பொன்னிறம்பெற்று தகதகவென மின்னிக்கொண்டிருக்கிறது அவள் அன்று மோஹன்லாலின் கம்பெனியிலெடுத்த அதே பச்சைநிற ஜரிகைப் பட்டாடையைத்தான் கட்டிக்கொண்டிருக்கிறாள். அவள் அவனின் வரவையே ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. தனிமை. எவ்வளவு நேரந்தான் தனிமையா யிருக்கமுடியும்? அவள் தேகம் தனிமையில் வீற்றிருந்தாலும் அவள் மனம் மட்டும் தனிமையை நாடவில்லை. எங்கெங்கோ சென்றது. கள்வர் தலைவனான தன் காதலன் இன்று ஓர் ஜெமீனின் அதிபதி, இது எவ்வளவு பெரிய மாற்றம். இவ்விதமானதோர் பெரிய மாறுபாட்டை அவள் எதிர்பார்த்ததே யில்லை. ஏன்? கனவில்கூட நினைத்திருக்கமாட்டாள்........சென்றகால நிகழ்ச்சிகளில் மனஞ்சென்றது. அப்பொழுது எதிரிலிருந்த ஒருமரத்தில் சலசலவென்ற சப்தம் கேட்டது. அவளது கண்கள் அம்மரத்தை

நோக்கின. அம்மரத்தின் கீழாக உள்ள ஒரு கிளையில் ஒரு அணில் பதுங்கிக்கொண்டு நின்றது. அதன் கண்களில் திருட்டுத்தனமும், இன்பவெறியும் கலந்திருந்தன. அதே சமயத்தில் சிறிது உயரத்திலிருந்து பிரியும் மற்றொரு கிளையில் ஒரு அணில் கத்திக்கொண்டிருந்தது. அதனுடைய குரலில் எதையோ பறிகொடுத்த உணர்ச்சி ததும்பிற்று. திடீரென அது கத்துவதை நிறுத்திவிட்டு, மின்னல்போல் பாய்ந்து அடிக்கிளையை அடைந்தது. அக்கிளையில் பதுங்கிக் கொண்டிருந்த அணிலைக் கண்டதும் விரட்டிற்று. பிறகு, அது ஓட, இது ஓட முடிவில் ஒன்றை மற்றொன்று முன்னங் கால்களால் பற்றிக்கொண்டது. காதலின் லீலை! திருட்டுக்கண்கள் இன்பத்தில் மூடின—ஒரு இமைப்பொழுது, எங்கிருந்தோ வேறொரு அணில் அங்கு வந்து எட்டிப்பார்த்தது. காதல் நாடகம் கண்களில் பட்டதுதான் தாமதம் ஒரு மின் வெட்டு! ஆண் அணில்மீது விழுந்து, இரண்டுமாய் கட்டிப் புரண்டன. பெண் அணில் ஒதுப்புறமாய் நின்று வெற்றி யாருக்கு என்று கேட்பதுபோல் முன்காலை தூக்கி நின்றது. அடுத்த நொடியில் புதிதாக வந்த அணில் ஓடிவிட்டது. ஆனல், அங்கிருந்த ஆண் அணிலின் உடலினின்றும் நாலைந்து சொட்டு ரத்தம்மட்டும் கீழே விழுந்தது. அதை அது பொருட்படுத்தவில்லை. சொகுசாய் நடந்து பெண் அணில் இருக்குமிடத்தை அணுகியது.

இக்காதல் காக்ஷியின் வயப்பட்டு தன்னையுமறந்தாள் அவள். தன் காதலனிடம் இப்படியெல்லாம் செய்யவேண்டுமென்று எண்ணினள். அத்தருணம் அவளது கண்களிரண்டும் இறுக மூடப்பட்டது. தன் கண்களை மூடினது யாரென்பதை

அவள் அறிவாள். மெல்ல பளிங்குக்கல்லை விட்டெழுந்து தனது கரங்களால் அக்கரங்களை விலக்க பிரயாசைப்பட்டாள். உம்......ஹூம்......முடியவில்லை.........“கையை எடுத்திடுங் கோன்னு, யாராவது பார்த்திடப்போரு” என்று சற்று பிகுவுடன் குயிலினுமினிய குரலில் கூறினள் அப்பாவை அவன் தன் கரங்களைச் சிறிது தளர்த்தினன். இதுதான் சமய மென்றுணர்ந்த அவள், அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டு “கலீர்” என்று நகைத்தவண்ணம் ஓடினள். அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். சிறிதுநேரம் காதல் விளையாட்டு. அதிக நேரம் அவளால் அவனை ஏமாற்றமுடியவில்லை களைப்பு மேலிட்டால் பசும்புற்றரையில் ‘அப்பாடா’வென்றமர்ந்தாள். யார் முதலில் பேசுவது? எதைப்பற்றிப் பேசுவது? இந்தப் பிரச்சனை அவர்களிடையே அதிக நேரம் நீடித்திருக்கவில்லை

“கள்வர் தலைவரவர்களே!” என்று குறுநகையுடன் கூறி குறும்பாக நோக்கினள்.

“உம்......ஹூம்!”

“ஸில்க் பஸாரின் முதலாளியாக்கும்”

“உம்......ஹூம்!”

“துப்பறியும் நிபுணர் “ராம்” ”

“உம்......ஹூம்!”

“சரி, சரி தேவபுரி ஜெமீந்தார்தானே?”

“நீ தேவபுரி ஜெமீந்தாரின் மனைவிதானே?’

“உம்.........ஹூம்! நான் கள்வர் தலைவனின் மனைவி யாக்கும்......”

“அப்படியா! ஒரு கள்வர் தலைவனின் மனைவியிடம் எனக்கென்ன வேலை இருக்கிறது?” என்று கூறியவண்ணம்

எழுந்து நடந்தான். கொஞ்சதூரம் சென்றிருப்பான், அவளும் எழுந்து வேகமாக அவனை அணுகினாள். அவள் வரவை அறிந்து அவனின் நடையின் வேகம் அதிகரித்தது. அவள் ஓடிவந்து அவனது கரங்களைப் பற்றிக்கொண்டே "என்மீது உங்களுக்கு இவ்வளவு கோபமாக்கும்?" என்றாள்.

"எனக்கு உன்மீது என்ன கோபம்? கள்வர் தலைவனின் மனைவியின்மீதுதான் கோபங்கொண்டிருக்கிறேன்."

"நான்கூட கள்வர்தலைவன் மீதுதான் கோபங்கொண்டிருக்கிறேன்."

"அப்படியானால், என்மீதில்லையே?"

"உம்......ஹூம்........என்று கூறியவண்ணம் மனிதனை மயக்கும் திருட்டு நகைப்புடன் அவன் தோளில் சாய்ந்தாள். அவனின் காதல்வெள்ளம் கரைபுரண்டோடியது. இவ்வுலகையே மறந்தான். அவனின் வாயினின்று வெளிவந்த கானத்தின் மகிமைதானென்னே! அதனுடைய இனிமைதானென்னே!! இவனது சங்கிதத்தின் வயப்பட்டு மதிமயங்கியது போன்று அங்குள்ள மரங்களின் இலைகளெல்லாம் மெல்ல மெல்ல அசைந்து, இனிய காற்றை கானத்துடன் கலந்து எங்கும் பரப்பியது. இக்கானத்தின் இன்பத்தை செவியுற்று மகிழத்தோன்றுபவன் போல சந்திரன் தனது கிரணங்களை நாலாபக்கமும் வீசிக்கொண்டு வானவெளியில் தோன்றினான்.

காதலரிருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்.

முற்றிற்று.

ஏமது வந்தனம்.

அன்புடையீர்!

இதுவே எமது முதல் நவீனமாகையால், இதில் பலவிடங்களிலும், சொற்குற்றம், பொருட்குற்ற மிருக்கக்கூடும். ஆயினும், அன்பர்கள் அன்னத்தைப் போலேற்று, எமது முயற்சிக்கு ஆதரவளிக்க வேண்டுகிறோம்.

மக்களுக்குப் பலவழியிலும் பயன் தரத்தக்க இந்நவீனம் வெளிவரவேண்டி, நன்முயற்சி செய்து வெளியிட்ட அன்பர் **அரு. வி. வினைதீர்த்தான் செட்டியாரவர்களுக்கு**, யாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அன்னாரின் விருப்பத்தின்படி இந்நவீனத்தின் 2000 பிரதிகளை மட்டும் புத்தக ரூபமாக அச்சிட்டுக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இந்நவீனத்தை வெளியிட்ட அன்னாருக்கும் வாசக நேயர்களாகிய உங்கட்கும் எமது வந்தனம்.

இந்நவீனத்திற்கு முன்னுரை அளித்த வித்துவான் **கு. மாணிக்கம் பிள்ளை** அவர்கட்கு எமது வணக்கம் உரித்தாகுக.

இக்கதையை நாடக ரூபமாக நடிக்கவோ, அன்றி வெள்ளித்திரைக்குக் கொண்டுவரவோ, அன்றி வேறு உரிமைகளைப் பெறவோ விரும்பும் அன்பர்கள் எமது அனுமதி பெறவேண்டுமென்பதை வலியுறுத்துகிறோம்.

வந்தனம்.

தங்களன்புள்ள,

(Sd.) N. சோமசுந்தரம்,

ஷண்முகநாதபுரம்.

ஸ்வர்ணலதா

அல்லது

சேற்றில் செழுங்கமலம்

சென்னை ராஜேந்திராபிலிம் கம்பெனியாரின்
முதலாவது தமிழ் பேசும் படம்

வெளிவரும் தேதியை
எதிர்பாருங்கள்

தேசீயம், சமூக சீர்திருத்தம், ஹரிஜன முன்னேற்றம், முதலிய உயர்ந்த கொள்கைகளைக்கொண்டது.

நடிப்பிற்சிறந்த ஸ்ரீமான்களும், ஸ்ரீமாட்டிகளும் இதில் நடிக்கிறார்கள்.

விபரத்திற்கு

ராஜேந்திரா பிலிம் கம்பனி லிமிடெட்

15, மௌபரீஸ் ரோடு, மயிலாப்பூர்,

சென்னை.

தந்தி:- INDRA.

Phone 8444
Post Box 609

Rajeswari Press,
Palace Road,
Madura-37.